“ஸுகண-ஃயஹாஹுவெமஸாஸாஹ-ஸாவதிவ்ஸ ஸாஹிஷ்ஸ-ஸி
ம-ஃதஃயதமிண-ஃம ஸஅவொஸஷெதஜ்ஜ்ஸ்ரஸாஹஜம்வஸ்ஸி ஸவுவஸுகுஸ
ஷ்ஸ்ர” இ—ள்: உமாபதியானவர் விஷ்ணுவாதிதேவர்கள் விஷ
வேகத்தைச் சகிக்கமுடியாமல் அலறுவதைச் சமீபத்திற்கேட்டு
ஆலாலசுந்தராகியருத்திரரை யேவியருளினர். அவர்இரக்கமிகுதி
யால்விரைந்துசென்றுஅதிகோரமானவிஷத்தைக்கைவிரல்நுனியி
னல்நாவற்கனிபோல்கிரகித்தாரென்பதாம். அவ்வாறு கிரகித்து
வந்தவிஷத்தை ஓலமிட்டலறியவிஷ்ணுமுதலியஎல்லாரும் உய்யும்
பொருட்டுப்புறத்தும்விடாமல் உள்ளும்புகுத்தாமல்அவரையெல்
லாம் காத்தருளுந்தலைவன் சிவனொருவனேயென்னுமுண்மையை
மறந்தவருங்கண்டுதெளிகவெனக்கண்டத்தில் வைத்தருளினரென்
றுபின்கூறுகின்றது. இச்சுந்தரர் சிவாலோகனதர்ப்பணத்தின்
(கண்ணுடியின்) நின்றும் சிவரூபியாய்வந்தவராதலால் மேற்காட்
டியசுருதியில் ருத்திரரென்று விளக்கப்பெற்றார்.

(விஷபானசுருதியின்எதார்த்தத்துக்குப்பாகவதப்பிரமாணம்)

இதுவும், கங்காதாரணத்தினுண்மைவிளக்கியபாகவதத்தில்
விஷ்ணு கடல்கடையப் புகுந்தமைகூறுமிடத்துக் கடலில்விஷம்
வந்தவுடனே, அதுஅதிஉக்கிரமானது எங்கும்பரம்புவது மேலெ
ழும்புவது சகிக்கமுடியாதவீரமுள்ளது; அதனால் பிரசைகள்எல்
லாரும் விஷ்ணுவாதிதலைவருடன்சேர்ந்து,(அரக்ஷமாஞ்சரணம்
ஸதாசிவம்)காக்கப்படாமற்பயந்து சதாசிவனையேபுகலாகத்துணி
ந்துஓடினார்கள்; பின்அத்தலைவர்கள், கிருத்திர, எவனுக்கு ரஜசுத
மசுசத்துவமுக்குணங்களில்லையோ, எதுபேதங்கடந்தபிரமமோ,
அத்தகையஉனதுபரஞ்சோதி, சகலலோகபாலவிரிஞ்சிவைகுண்ட
சுரேந்திரர்களால் அடையத்தக்கதன்றெனத் துதித்தார்களென்று
விளக்குதலாலும், விஷ்ணு கேசியல்லரென்பதுதெளிவாய் அவர்
ருத்திரபாத்திரத்தால் விஷத்தைகுடித்தாரென்றமூழ்ப்புரட்டுமடி
யோடுதொலைந்தமைகாண்க.

(சிவன்விபூதிஎன்புமுதலியவணிந்ததனுண்மை)

கடல்கடையும்போது இலக்குமி இந்திராணிமுதலியபெரு

ள்கள் தோன்றக்கண்டநிமிஷமே எனக்குளனக்கென்று விஷ்ணு முதலியோர்கிரகித்ததுபோல, விஷம்வந்தபோதுஒருவரும்எனக்கென்று கிரகிக்கமுடியாமற்பயந்தோடிமுறையிட்டதற்கிரங்கிச், சிவன் அதையுண்டு காத்தருளினதொன்று பாகவதாதிகள் கூறுவதும்நோக்காமல், துர்அர்த்தம்பண்ணுகிறவர்கள், சிவன்வெண்ணீற்றை அங்கராகமென்றுதான், எலும்பு ஆமையோடு பன்றிக்கொம்பு மீனக்கண்தலைமாலைசர்ப்பமுதலியவைகளை ஆபரணமென்றுதான், புலித்தோல்முதலியவற்றை ஆடையென்றுதான்தரித்தானென்றுங் கூறுவர்போலும். அவற்றினுண்மையுணராரியல் பைவிரிப்பானேன். வெண்ணீற்றுண்மைமுன்விளக்கினேம். எலும்புஆமையோடுமுதலியன விஷ்ணுஅவதாரங்களிற்கொண்டகெர்வநீக்கி அடையாளமாகத் தரித்தானென்பதைப் புராணங்கள் விளக்குகின்றன. பலகோடிஅண்டங்கள் புவனங்கள் புவனத்தலைவர்களை ஆங்காங்குவைத்து ஐசுவரியாதிகளுங்கொடுத்து நியமித்துநடத்துகின்றசர்வைசுவரியசம்பந்த பரமகர்த்தாவாகிய சிவன், ரத்னபரணாதிகளுக்குமுட்டுப்பட்டு எலும்புமுதலியவைகளைத்தரித்தவனல்லனதலால், அவையெல்லாம் விருப்புவெறுப்பில்லாதவனென்றுஅவனதுவைராக்கியாதிகளையேவிளக்குவனவாம்.

இனி அவர்கள் வாணசுரயுத்தத்தில் ருத்திரனைத் தோற்றோடச்செய்தமையால் விஷ்ணுவேமேலானவனென்கிறார்கள். அதனையும்விசாரித்தொழிப்பாம். (வாணசுரன்சரித்திரம்)

வாணசுரன் காஞ்சியிற்சிவலிங்கந்தாபித்துப்பூசித்துஅருந்தவஞ்செய்தான். அவன்முன் சிவன் எழுந்தருளிநடனஞ்செய்யக்கண்டுமத்தளமடித்துநின்றுதுதித்தான். சிவன்அவனுக்கு ஆயிரங்கைகளுண்டாகச்செய்து நீ வேண்டியதியாதென்றருள,அளவிலாவல்லபமும், செல்வமும், மூன்றுலகையும்ஆளும்வெற்றியும்,என்ஊருக்குஅக்கினிமதிலும், இடைவிடாதபத்தியுந் தந்தருளுக என்றான். அப்படியேகொடுத்துமறைந்தருளினார். வரணன்மூவுலகையும்வசப்படுத்திஆளுங்காலத்தில்கயிலைசென்று(கூ)கைகளால்குடமுழாவாத்தியஞ்செய்யச் சிவன் நீ வேண்டியதென்னென்றருள, வாணன்தினமுந்தெரிசிக்கும்படி என்அரண்மனைமுகப்பில் விரா

யகர் சுப்பிரமணியர் பார்வதிதேவியாருடன் வீற்றிருந்தருளு என்றுவணங்க, அங்குவீற்றிருந்தருளினர். அவனுங்காலந்தோ றும்வணங்கிமேலும்வலியனுய்வாழ்ந்தான்

பின்புவாணன், சிவனே வணங்கி என்புயங்களில்தினவுமிகு கின்றது, யுத்தஞ்செய்துமாற்றியருளுகஎன்றுவேண்டினுன். சிவ ன்நகைத்துபிருகுசாபத்தால் யதுகுலத்துவந்த கண்ணன்மாற்று வானென்றருள, வாணன். அக்கண்ணன் முப்பதுமுறையெனக் குத்தோற்றோடினவனல்லவா? என்றுகூற, உபமன்னியுமுனிவ னையடைந்துபெற்றசிவதீக்ஷை சிவலிங்கபூசனையால்மிகுவலியனுயி னுன்முந்தியகண்ணனுகனேயாதே. அவன்உன்மகளுக்குஒருபழி ப்புவரும்நாளில் வருவானென்றருள, வாணன் வணங்கிச்சென் றுன்.

பின்புஅவன்மகள் உஷை, கண்ணன் பேரனைத்தழுவினதாக் கனவுகண்டுதோழியையனுப்ப, அவள்கட்டிலோடுதூக்கிவர, அவ னைக்கலந்து கருப்பமுற்றுள். வாணன் அவனைச் சிறையில்வைத் தான். அவன்கொடியற்றுவிழுந்தது. பேரனைத்தேடியகண்ணன் நாரதரால்தெரிந்துசேனையங்களுடன் வாணனதுநகர்க்குள்வரும் போதுசிவபிரான்வில்லேயேந்திநின்றுர். கண்ணன்வணங்கி அடி யேன்உட்புகும்படியருள்க என்றுவேண்டச் சிவன்புன்முறுவல் காட்டி நம்மைவென்றுட்புகுவாயென்றருளக் கண்ணன் நடுங்கி உன்அருளால்வலிபெற்றநான்உன்னுடன்எதிர்க்கவல்லவனுவனு? எதிர்த்துயிர்பிழைத்தவருண்டா? சர்வாண்டங்களையும்ஒருநிமிஷ த்தில்தகிப்பதுன்கண்ணில்வரும் அக்கினிப் பொறியன்றே? சிரித் தளவிலே முப்புரமுழுதும் நீறுக்கினை; ஒரு தரும்பினுல் எல்லாத் தேவரையும்கொவ்பங்கஞ்செய்தனை; யாவரையும் வசமாக்கும்ம ன்மதனைக்கட்பொறியால்தகித்தனை; இராவணனை ஒருவிரலால்நசு க்கினை; இயமனையுதைத்தனை; நகதுனியாற் பிரமசிரங்கொய்தனை அடங்காதகங்கையை ஒருதுளியளவாக அடக்கினை; மீன் ஆமை பன்றி நரசிங்கவடிவங்களில்உன்புத்திரர்களாலேநான்தண்டிக்கப் பட்டேன்; தக்கன்யாகத்தை வீரன்அழித்தபோது என்னுடன் தேவரெல்லாரும் பட்டபாடு சொல்வானேன் என்னைத்தண்டிக்க

வேண்டில் வில்லெடுக்கவும்வேண்டுமா? நினைப்புமாத்திரம் போதாதா? உனக்குப்பாணமும் ரிஷபமும் பத்திகியுமாகிய அடியேனையெதிர்ப்பது அருளுக்கழகாகுமா? என்னைமுதலியயாவரையும் தரத்திய விஷத்தையுண்டுகாத்தருளிய நீலகண்டனே! இரங்கியருளென்று வணங்கினன். சிவன், கண்ணனே! நீ, மைநாகபர்வதத்தில் நம்மைநோக்கித் தவஞ்செய்தபோது ஒருசமயம் நம்மையும்வெல்லும்படி நாம் தந்தவரத்தைமறந்துவிட்டாயா? அர்ச்சுனன் நம்முடன்செய்த யுத்தத்தை நமதிளங்குமரன் விளையாட்டிற்சிறந்ததாகக்கொண்டதுபோல்உன்னுடன்செய்கின்றோம். பகையாகச்செய்திலோம் பயப்படாதேயென்று வில்லை வணைத்தருளினர். கண்ணனும் உய்ந்தேனென்றுவணங்கி ஒருபாணத்தைச் சிவபதத்தில் பூசனைமுறையாக விழச்செய்தான். இப்படி இருவரும் யுத்தஞ்செய்யும்போது தேவர் முனிவர்முதலியோர் நடுங்கினர். கண்ணனும் இனி ஆற்றிலேன் என்றுவணங்கச் சிவன் பாராமுகமாயினர். விறகுசுமந்தும், மண்சுமந்தும், பிரம்படி வில்லடிபட்டும்,தூதுசென்றும் அடியரெண்ணம்முடித்தருளும்சிவபிரான் கண்ணனுக்கு வெற்றிகொடுப்பது புதிதன்று. அப்பெருங்கருணைநோக்கிக் கண்ணன் மேலும் வணங்கியுட்சென்றான். பின் வாணனுடன் போர்செய்து புயங்களையரியும்போது சிவன் கண்ணனே வாணன் உன்போலஅன்புள்ளவன் நம்மைப்பூசித்த இரண்டுகைகளை விட்டுவிடுவாயென்றருளினர். கண்ணன் எம்பெருமானே! வேதம் எப்பொருளும் ருத்திரனேயென்று கூறுதலால் மரத்தின் வேரில்விடும்நீர் எங்குங்குளிர்வித்தல்போல உன்னைப் பூசித்தவாணன் எங்களையும் பூசித்தவனாகின்றான். ஆதலால் நாலுகைகளை விடுகின்றேன். என்று அவ்வாறுவிட்டு உறவாகி வாணன்மகளைத் தன் பேரனுக்கு விவாகஞ்செய்து துவாரகைக்குச்சென்றான்.

இவ்வாறு தோற்றவனைக்கொண்டே வாணன் செருக்கையொழித்தஇதனாலும் ஒன்றைச்செய்தல் செய்யாதுவிடுதல் வேறொன்றுசெய்தலாகிய கர்த்திருத்துவம் அகர்த்திருத்துவம் அந்நிதாகர்த்திருத்துவம் மூன்றுமுள்ள பரமகர்த்தா சிவனொருவனேயென்பதுதெளிவாயது. இச்சரித்திரம் வியாசவாக்காகிய காஞ்சிமா

ன்மியத்தில்விரிவாயுள்ளது. இங்கேசுருக்கிக்கூறினேம். பாகவத விஷ்ணுபுராணதிகளிலுமுள்ளன. (பாகவதம்)

"மாபலியின்நூறுபுத்திரருள் மூத்தவனுகியவாணன் (சிவனுகிய)மிருடனேத்தாண்டவத்தில் (மத்தள) வாத்தியத்தினுல்மகிழ்வித்து ஆயிரம்புயங்களேப் பெற்றுன். பகவான் கேட்டவரங்களேக் கொடுத்துமகிழ்வித்தான். வாணன்அசுரசாதியினியல்பால் தூர்ப்புத்தியுடையனுய் மஹாதேவனே என் ஆயிரம்புயங்கள் சுமைமாத்திரமேயாயின; உன்னேத்தவிரஎன்னேடுபோர்செய்யவல்லவனேமூவுலகினுங்கண்டிலேன்; புயத்தின்தினவினுற் பர்வதங்களேப் பொடிபடுத்தித் திக்குயானேகளோடு யுத்தஞ்செய்யச்சென்றேன் பயந்துஓடின; ஆதலால்நீயேயுத்தஞ்செய்து என்புயத்தினவைமாற்றவேண்டுமென்றுவேண்டினன். பகவான்உனதுகொடிஅற்றுவிழும்போது உனக்கு யுத்தமுண்டாகும்என்று கூறினர்." என்பது பாகவதவசனம். (விஷ்ணுபுராணம்.)

"வாணன் திரிலோசனன்முன்வணங்கி மஹாதேவ- ஆயிரம் புயங்களினல் யுத்தமின்றி வருந்துகின்றேன், யுத்தமுண்டாகுமா? இப்புயங்கள் பாரத்துக்கேயுளவாயின என்றுகேட்கச், சிவன் உன்மயூரத்துவஜம் அற்றுவிழும்போது யுத்தமுண்டாகுமென்று கூறினர்" என்பது விஷ்ணுபுராணவசனம், இவ்வசனங்களுஞ் சுருக்கிக்கூறப்பட்டன. இவற்றில் உன்னேத்தவிர என்னுடன் யுத்தஞ்செய்யவல்லவனே மூன்றுலகினுங்கண்டிலேனென்று வாணன் கூறிய பாகவதவசனமே தோற்றேடியகண்ணனுக்கு வலிகொடுத்து வெல்லச்செய்தானென்பதை விளக்குகின்றது. இன்னும் இவ்வுண்மைவிளக்கும்பிரமாணங்கள் பலவுள்ளன.

{கண்ணனுக்கும் வாணனுக்கும் சிவன்செய்த அநுக்கிரகம் அவர்தகுதியளவென்பது.)

சிவன், கண்ணனும் வாணனும் தன்னேயே பூசிக்கின்றவர்களாயிருக்கக் கண்ணனுல் வாணனேப் பங்கப்படுத்தியது முறையோவெனில், கண்ணன் அடிமைத்திறத்தின் முறைதவறுதவனுதலாற் பராமுகனுயட்புருத்தினன். வாணன் அடிமைத்திறத்தின்

முறைதவறி நேரில் யுத்தத்திற்கு அழைத்த அவ்வளவு கெர்வ முடையவனுதலால், அவனுக்குத்தோற்றவனேக்கொண்டேஅவன் கெர்வத்தை மாற்றினன். வாணனும் பின் சத்துவகுணத்தனுய் முத்திவேண்டிமேன்மைபெற்றுனுதலால்சிவபிரான் இருவருக்கும் செய்தது அதுக்கிரகமேயாமென்க,

(மாபலியிடம் விஷ்ணுசெய்த வஞ்சனை.)

விஷ்ணு, தன்னைப்பூசிக்கின்ற மாபலியிடத்துள்ள அக்கிரம த்தைமாற்ற வேறொன்றுஞ்செய்யமுடியாமல், மூன்றடிமண் யாசி க்கின்றவர்போல அவன் இக்குறுகியவடிவின் மூன்றடி மண்தா னேயென லகுவாய்நினைக்கட்டுமென்றவஞ்சனையால் நெடுமாலா யிருந்தும் குறுகியவடிவுடன் சென்றுயாசிக்க,அவ்வஞ்சனை தெரி யாமல் தாராதத்தஞ்செய்யப்புகும்போது, சுக்கிராசாரியர் இவர் விரோதஞ்செய்யவேவந்தனர்கொடாதேஎன்றுதடுக்கவும்,எதுவரி னும் வருகவென்று சொற்றவரும்மற்கொடுத்த உத்தம தாதாவின் தலையில் அடிவைத்தழுத்திப்பாதலத்தில்வீழ்த்திய வஞ்சனையாரறி யாதார். இதனைத்திருவடி சூட்டியதென்பரேல்அது, (பாதமஸ்தக சம்யோகம்) பாதத்தைச்சிரசில்மெல்லவைத்து அருளுவதன்றிப், பாதலத்திற்றள்ளி இழிவுசெய்வதன்றென்க. விஷ்ணுவை வைஷ் ணவரும் கபடநாடகரென்றுகொண்டாடுவர். (திருவாய்மொழி) " கைச்சக்கரத்தண்ணல் கள்ளம்பெரிதுடையான், மெய்ச்சப ம்பிறர்க்கு மெய்போலும் பொய்வல்லான்" என்று தெளிவிக் கின்றது.

வைஷ்ணவர்செய்யும் சிவநிந்தைவிஷ்ணுவின்கோபத்துக்கிடமாம்

மேற்கூறிய பிரமாணங்களால் சிவன், கண்ணன் துதித்து வேண்டியதற்கிரங்கியே யுத்தத்தில் (ஔதாசீனியம்) பராமுகஞ் செய்தானென்பது தெளிவாயிருக்கவும், அவ்வுண்மைநோக்குமு ணர்வின்றி நிந்தைசெய்து அதற்குஇம்மையிலும் தண்டனையாகச் சிவவாகனமாகிய மாடுகுத்திச் செத்தஒருவர், கண்ணன் வாண யுத்தத்தில் ருத்திரனைப்புறகிட்டோடச் செய்ததாகக் கூறினர். அப்பாதகத்தை "மோடியோட வங்கிவெப்புமங்கியோட வைங்க ளன்மூடுகியோடமுருகனோட முக்கணீசன் மக்களைத்தேடியோட"

என்பது முதலியவற்றுற்காண்க. அவையெல்லாஞ் சுருதியாதார மில்லாத அபத்தங்களே. இவர்கூறுதலிய சிலகொடியவைஷ்ணவர் விஷ்ணுவையுள்ளதுகூறித்துதிக்காமல், இல்லதுகூறிச்சிவநிந்தனை செய்தலால், சிவபக்தராகியவிஷ்ணுவின் அருக்கிரகமிழந்து கோபத்துக்கேபாத்திரராய் மீளாநரகுக்கும் ஆளாவது போகூழின் புணர்ப்பேயாம். அவர்கள் விஷ்ணுவைஉயர்த்தக்கருதியே சிவநிந்தைசெய்கின்றார்கள். உள்ளதுகூறிஉயர்த்தினால் என்றும் நிலை பெறும். இல்லதுகூறின் அது சுருதிப்பிரமாணங்களின்முன்னர் இடியேற்றின் முற்பட்டபாம்புபோன்றொழியும். விஷ்ணுவாகிய நரசிங்கம் சிவனுகியசரபத்தை அடித்துவென்றதாகக்கூறுதல்முதலியயாவும்இல்லதுகூறலேயாம். பிரமவிஷ்ணுக்களாகியஎங்களைச் சிவனிலும்மேலானவர்களென்று வழிபடுகின்றபாதகர்கள் மீளா நரகடைவர்கள். அவ்வாறன்றி எங்களைச் சிவனுடன் ஒத்தவர்களென்றுகூறுகின்றவர்கள் எங்களையுந் துன்பக்கடலில்வீழ்த்துகின்றார்கள். எங்களைச் சிவனுக்கு அடிமைத்தொண்டுசெய்கின்ற சிவபக்தர்களாகவேநினைத்து வழிபடுவார்க்கு அருள்புரிவோம். அப்படி நினையாதவர்களைப் பகைவர்களாகவே நினைக்கின்றோம் என்று பிரமதேவர் கூறுகின்றார். இதனை,

(கந்தபுராணம் உபதேசப்படலம்.)

நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைகொ ணெஞ்சர் தீரா வீழுமவெங் கிரயம் வீழ்வர்
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்க
ளெம்மையுந் துயர மென்னு மிருங்கடற் படுப்ப ரன்றே.

தானுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்ப
ரானவ ரென்று மன்றற் கடிதொழில் புரிந்து வாழும்
வானவ ரென்று மெம்மை வழுத்தினர்க் கருள்வோ மல்லா
லேனையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே யிருத்தும்யாமே.

என்னும் உண்மையாற்காண்க. இனி விஷ்ணுமூர்த்தி தம்மிடத்து வரம்வேண்டித் தவஞ்செய்த மூதேவியைநோக்கி நீ என்னைத்துதித்துச் சிவனைநிந்திக்கின்ற பாதகர்களிடத்தில் எப்போதும் இருந்துகொண்டு அவர்கள் பொருள்களைக் கவர்ந்துண்பாயாக, என்

றும் அப்பரமசிவன் அருளினுலன்றே நானும்பிரமனும்நன்மை மிகவாழ்கின்றேமென்றுங்கூறிச் சிவநிந்தைசெய்யும் வைஷ்ணவ நிடத்துள்ள கோபக்குறிப்பை விளக்கினர். இதனை,

(இலிங்கபுராணம் முகடிதோற்றமுரைத்த அத்தியாயம்.)

முகடி—மூதேவி.

என்றலுமிங் கெனைவணங்கி யீர்ஞ்சடையண் ணலேயுமையோ டிகழ்ந்து நாளும், ஒன்றியுறை வோர்பொருள்க ளொன்றறவே வவ்வியவ ணுற்றே நின்று, மன்றவருந் திடுதியான் மற்றவன்ற னருளினு லன்றே வானின், நன்றுமிகவாழ்கின்றே மலரோனும் யானுமென நவின்றுபோனன். என்றுணர்மையாற்காண்க.

சைவராகிய எம்மவர்கள், சிவபூஜாதிகளில் விஷ்ணுவைச் சிவனுக்கொருசத்தியாகப் பரிவாரங்களில்வைத்து வழிபடுகின்ற வராதலால், சிவனேத்துதிக்குமிடத்துச் சாஸ்திரப்பிரமாணமுள் ளனகூறித்துதிக்கின்றாரன்றி இல்லதுகூறி விஷ்ணுவை நிந்தனை செய்வாரல்லர்.

விஷ்ணுமுதலியயாவரையும் ஒடிஒடுங்கச்செய்த திரிபுரத்த வர்சலந்தரன் அந்தகாசுரன்மன்மதன் விஷமுதலியபகையை ஆயு தாதியின்றிச் சிரிப்புமுதலியவற்றால் ஒடுக்கி அத்தேவர்களைப்பா துகாத்தவன் சிவனேயென்று வேதமுதலியநூல்கள் விளக்குகின்ற னை. (இருக்குவேதம்.)

விஷ்ணவெ நமோவாகமாஹிமாநஸ்திவிதாயரஜ
ஸஹஸ்ரஸம்ஸதாகுஷ்ணுவாஹமெஷ்ணவமரோஹகூவா
கூவெவாதாவிகூவெவவிதாவிகூவெவூதாவிகூவெவ
ஜ்யெஷ்டாவிகூவெவமரெஷ்டாவியவாவம்ஹிரோநம்வெஷ
ஷ்டாஹவதிவிஜ்ஞாதாஹவதிகூதாஹவதிகூராயிதாஹவதி
யவாவம்வெஷவிவவாயஜ்யோவ்ரதாதிவிவவாயஜ்யோவ்ரதாதி

இ—ள், விஷ்ணு பன்றியாய்ப்பூமியைக்கிழித்துச்சென்று ஆயிரம்வருஷங்களாகியும் சிவபாதங்காணப்பெறாமல் வருந்தி, முன்பு நானேபிரமமென்றுகூறிய அகந்தைநீங்கி வணங்கின்று அப்பாதங்காண்டற்கு ஆசைமிகுந்து, சிவபிரானே மனசால்நோ

க்கி அடியேனுக்கு மாதாவும்நீயே பிதாவும்நீயே உடன்பிறந்தவனும்நீயே மூத்தவனும்நீயே உயர்ந்தவனும்நீயே என்று துதித்தனர். இம்மகிமையை அறியவல்லவன்எவனே அவனே சிவசாயுஜ்யத்தையடைகின்றன் என்றும், (பைப்பலாதோபநிஷதம்.

யொஉக்ஷயஜ்ஞேஷுரவம்மாநு விஜிதூவிஷ்ணவெவம் யொரவாயொநவீரஃ ॥

இ—ள், தக்கன் யாகத்திலே வீரபத்திரர் விஷ்ணுவைப்பாசத்தினற்கட்டியுருட்டினர் என்றும் விளக்கமாகின்றன.

இவ்வாறு திரிபுரத்தவர்முதலியோரால்வருந் துன்பநீக்கிப் பாதுகாத்தவன் சிவனேயென்றும், சாக்ஷாத்விஷ்ணு அகந்தையால் (கூ) வருஷந்தேடியும் சிவபாதங்காணப்பெறாது அகந்தையொழிந்து துதித்துய்ந்தாரென்றும் சிவனால் ஏவப்பெற்றவீரபத்திரர் சாக்ஷாத்விஷ்ணுவைப் பாசத்தினற்கட்டியுருட்டினரென்றும் வேதோபநிஷதங்கள் செவ்வே விளக்கவும் விஷ்ணுவின் அம்ஸரான கிருஷ்ணருக்குச் சிவன் தோற்றுஓடினனென்று பிரமாணம்நிக்கூறுகின்ற மூடவசனம் அறிஞர் சபையில் தலையெடுக்குமா? (சிவன்சர்வவியாபகன்.)

சிவனொருவனே பிரகிருதிமாயாபுவனவாசிகளாய் அம்மட்டினுள்ள ஏகதேசவியாபகர்களாகிய விஷ்ணு பிரமாதிசகலஜீவர்களேயுந்தனக்கு அடிமைகளாகக்கொண்டு அவரவர்பருவத்துக்கிசைய அருள்புரிகின்ற ஆண்டவனும், அதனைவிளக்கும் ஈசநாமந் தனக்கேயுடையவனும், அப்பிரகிருதிமாயைக்குமேலுள்ள அசுத்தமாயை சுத்தமாயைகளையுங்கடந்துநிற்கும் மாயாதீதனுமாகிய சர்வவியாபகனென்பதைப் பாண்டியன் பிரம்படி அர்ச்சுனன் வில்லடி முதலியவைகளாலுந்தெளியலாம். இதனை, (ஆலாஸ்யமான்மியம்)

திறப்படி மூலக மெல்லாம் வியாபியாய்ச் சிறந்து நிற்கும்
அறப்பெருங் கடவுள் சோம சுந்தர னதனை லன்றே
கறைக்கதிர் வடிவேற் றென்னன் கையிற்பொற் பிரம்பு பட்ட
புறத்தடித் தழும்பு மூன்று புவனமும் பட்ட தன்றே,

துண்ணென மாயோன் விழித்தனன் கமலச் சோதியும் யாதென வியந்தான், விண்ணவர் பெருமான் வெருவினன் வாளேர்

வேறுளார் மெய்ப்பனிப் படைந்தார், வண்ணயா ழியக்கர் சித் தர்சா ரணர்தம் வடுப்படா வுடம்பினிற் பட்ட, புண்ணையா தென் றுதத்தமிற் காட்டி மயங்கினர் புகுந்தவா றறியார்.

(பாரதம்.)

விண்ணினுறை வானவரில் யாரடிப டாதவர்வி ரிஞ்சனரி யேமு தலினோர், மண்ணினுறை மானவரில் யாரடிப டாதவர்ம னுக்கண்முத லோர்க ளதலக், கண்ணினுறை நாகர்களில் யாரடிப டாதவர்கள் கட்செவிம கீபன் முதலோர், எண்ணில்பல யோனியி லும் யாவடிப டாதனவி ருந்துழியி ருந்துழியரோ.

வேதமடி யுண்டனவி ரிந்தபல வாகமவி தங்களடி யுண்டன வொசைம், பூதமடி யுண்டனவி நாழிகைமு தற்பகல்செய் பொழு தொடுச லிப்பில் பொருளின், பேதமடி யுண்டனபி றப்பிலியி றப்பிலிபி றங்கலர சன்றன் மகளார், நாதனம லன்சமர வேடவடி வங்கொடுந ரன்கையடி யுண்ட பொழுதே. என்பனவாதிகளாற் காண்க: இதிற்பிறப்பிலியிறப்பிலிநாதன் அமலன் என்று வைஷ்ணவர் வில்லிபுத்தூரருங்கூறிய உண்மைநயங்கவனிக்கத்தக்கது.

(வில்லிபுத்தூரர்பாரதம் தமிழில் பாடியதற்குக் காரணம்.)

வில்லிபுத்தூரர் பிரபலவித்துவானுய் விஷ்ணுபத்தராயிருந்தவர். இருந்தும், அடக்கம் பொறைமுதலிய சாத்துவிககுணம் வாய்க்கப்பெற்றிலர். அக்குணம் பூர்வதவவிசேஷத்தாலன்றிக் கல்வித்திறனுல் வருவதன்று. கல்வீவிசேடமுள்ளதேனும் அதுசார்ந்து நிற்குஞ்சீவனீலநோக்கி நன்மைதீமைஇரண்டுக்கும் உதவியாகிறது எப்படியெனில்? பூர்வபுண்ணியவிசேடத்தால் திருவருட்பூர்த்தி பெற்று எல்லாம் இறைவன்செயலே எமக்கொருசுதந்திரமுமில்லை இறைவனே எம்மைஅறிவித்துநடத்துகின்ற சுதந்திரகர்த்தாவென்றுள்ளபடிதுணிந்து அகந்தாதிதுர்க்குணங்களின்நீங்கி அடங்கி நின்று யாவுந்திருவருளேமுன்னிட்டேசெய்து அவ்வருள்வழியினின்றொழுகும் உத்தமரிடத்துள்ளகல்வி மேலும்மேலும் நன்மைக்கே உதவியாகும். இக்குணங்களைச்சாராமல் பூர்வபாவவிசேடத்தால் அகந்தைவசப்பட்டுத் தம்மைக் கல்வியிற்பெரியனென்று யாவருமதிக்கவேண்டுமென்ற ஆசைமேலிட்டினுல் தமது சாதிஆச்சி

ரமங்களுக்குரிய நியமானுஷ்டானாதிகளிலும் பராமுகராய் அவ்வாசைஒன்றிலேயே உன்முகராயிடையறாதுமுயன்று நூலாராய்ந்து தாமறிந்த உண்மையைப் பிறர்க்கறிவித்தால் அவருந்தமக்குச் சமமாய்வருவரொன்றபொருமையாலுண்மைகூறுது "சுரவாகிய கல்வியுளார்" என்றஅனுபூதிவாக்கியலக்ஷியர்களாய்வித்துவசபாவெகுமானமதிப்பொன்றையே வேண்டிநிற்பாரிடத்துள்ள கல்வி மேலும்மேலும் அகந்தையேவளர்த்து அதன்வசப்பட்டுநிற்றலால் அறிந்துசெய்பாதகங்களுக்கும் பிராயச்சித்தமுண்டென்று அறிவு மயங்கி துணிந்து அஞ்சாதபுரிதீமைகளுக்கும்உதவியாகும், இதுகத்தி ஒன்றே திருத்தொண்டுபுரியுமுத்தமரிடத்திருந்தால் திருமாலத்தொண்டுமுதலியநன்மைகளுக்கே உதவியாதலும் கள்ளுக்காமாதிவசப்பட்ட அதமரிடத்திருந்தாற் கொலையாதிதீமைகளுக்கே உதவியாதலும்போலாம்.

மேற்கூறிய வில்லிபுத்தூரரிடத்திருந்தகல்வி எதிர்வந்தவித்துவான்களின் காதுகளே அறுத்தற்கு உதவியாயிருந்து அகந்தையை வளர்த்துவந்தது. இவர்கல்விச்செருக்கினால் வித்துவான்கள் முன்னர் நாமிருவருஞ்செய்யும்வாக்குவாதத்தில் வென்றவர்கள் தோற்றவர்களுடைய காதைஅறுத்துவிடுவது அவ்வாதநிபந்தனையென்று பேச்சுறுதிசெய்து வாதித்துவென்று காதுகளே அறுத்துவருவாராயினர். அது தெரிந்த நமது ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் அவர்முன்வந்து மேற்கூறியநிபந்தனைக்குஒத்துக்கொண்டு கந்தரந்தாதிபாடிவருங்கால் 54வதுபாட்டின்பொருள்கூறமுடியாமல் வில்லி—ர் நான் தோற்றுவிட்டேன் காதை அறுத்துவிடுக. என்று கூறியபின்னும் நமதுசுவாமிகள் உத்தமசத்துவகுணசீலராதலால் அவரைநோக்கி உலகத்தவர் அவரவர் வினைக்கீடாக இறைவன் அறிவித்தமட்டிலறிபவராதலால் அவர்களே அம்மட்டிலாவது கற்றுவந்தார்களேயென்றுமகிழ்ந்து மேலும் அவரறிவுவளர்தற்குபாயஞ்சொல்லி நன்மைசெய்வதேஉத்தமகுணமாகவும் நீர் அங்ஙனம்புரியாவிடினும் காதுகளேஅறுத்துவருத்துவது பெரும்பாதகமாதலால் இனிமேல்இப்பாதகஞ்செய்யேனென்றுஉறுதிகூறின்உமதுகாதைஅறுக்காதுவிடுகின்றேனென்றுஅவரிடத்து உறுதிமொழிவாங்கிக்கொண்டு அவருக்கும் உலகர்க்கும் நன்மை

செய்துவந்தனர். இதனால் வில்லிபுத்தூரர் அகந்தையழிந்தும் சிவத்துவேஷம்நீங்காமையால் ஒருநாள் திருவண்ணமலைசமீபத்தில் தெரியக்கூடியவழியில் வரும்போது அம்மலையைப்பார்க்கப்படாதென்று மறைத்துக்கொண்டு சென்றனர். அதுதெரிந்த நமது அருணகிரிநாதசுவாமிகள்,

புரத்தைநர சிங்கத்தைப் போர்வேளைக் கூற்றை
எரித்தவற்குத் தாத னிணையோ—விரித்தபுகழ்த்
தேன்கட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்றுமல்
ஏன்கெட்டுப் போரு னிவன். என்ற பாசுரத்தைப் பாடியருளினர். இப்பாசுரத்திற்கூறிய சிவபரத்துவம் சுருதிவிளக்கமே என்பதனை,

யொம்மையெவதீவாஸஹூஹாஹகாரஂகாமஂவொரவஸ்ரு
ரூராஹ்மிநெதஃ। ஸவெடுதெவாரிவமஸ்தாரிவாவஸ்ரேயஂத
வாதிமஸ்வகிவடுஹஸ்வ தவெஸ்ரஸ்ரூராயநமோகஸ்து ॥

என்ற சரபோபநிஷத்முதலியவற்றால் நன்கு தெளியலாம். இத்திருப்பாசுரம்பாடியஅளவிலே வில்லிபுத்தூரருடைய கண்கெட்டு ஒளிமறைந்தது. உடனே வில்லி...ர் தமது மதசம்பந்தமந்திராதிவைத்தியாதிகள்செய்தும் சாத்தியப்படாமையால் மிகவருந்தி வேதனைப்படுங்காலத்தில் ஆகூழ்வசத்தால் நமதுசுவாமிகள் திருப்பாசுரம்பாடியதுதெரிந்து திருவண்ணமலையில்வந்து சுவாமிகளை அடுத்து வணங்கி அடியேன்செய்தஅபசாரம் பொறுத்துக் கண்ணெனிதந்தருளுகளன்றுபிரார்த்தித்தனர்சுவாமிகள் நீசெய்த அபசாரமிகப்பெரிதாதலால் சிவபரத்துவவிளக்கமாகஒருநூல்செய்வாயெல்சிவத்துவேஷத்தால்மறைந்தகண்ணெளிபூர்த்தியாகுமென்றருளியதுகேட்டு வணங்கிச்சென்று சுவாமிகளின்செயற்கரிய அற்புதச்செயலும் அருள்வலியும்நோக்கி அவர்கட்டளைப்படிசெய்தாற்றான் கண்ணெளி கைகூடுமென்றுள்ளபடி துணிந்தவராய் சிவபரமானநூல் எதைச்செய்வோமென்றுயோசித்துத் தனிச்சிவநூலில் சிவபரத்துவம் விளக்குதலைக்காட்டிலும் விஷ்ணுசம்பந்தமுள்ளநூலில் விளக்குதலே மிகமேலாகும். அதுவேபுறநோக்களவில் நம்மதத்தருக்குஞ்சம்மதமாகுமெனச் செவ்வேதெளிந்து,

விஷ்ணு பிரான்டவர்க்கு எப்போதும் உடனிருந்து உபாயங்கூறி உதவிபுரிந்ததும் அவ்வுதவியால் அவர்கள்சிவபூஜாதிருத்தொண்டுகளேசெய்துவந்துசிவனருள்வலியாலேயே ஆபத்துநீங்கிப்பகைவென்று வாழ்ந்ததுங்கூறுகின்ற பாரதத்தைத் தமிழில் சொன்னயம் பொருணயமுதலிய பன்னயங்களுஞ்செறியவைத்து சிவபரத்துவமகிமைகளே திகழப்பாடிமுடித்துக் கண்ணெளிபூர்த்திபெற்று வாழ்ந்தனர்.

இதனை அருணகிரியார்புராணத்தில் விரிவாய்க்காணலாம்.

நாராயணனை ஆராதித்தல் சுருதிசம்மதமே. வைஷ்ணவர்கள் அம்மட்டினில்லாமல் சிவநிந்தனைசெய்வது சுருதிவிரோதமேயன்பதை, நூலுணர்ச்சியால் நோக்காதவரும் இவ்விஷ்ணு—ர் சிவநிந்தனையாற் கண்ணிழந்து சிவமகிமைகூறிக் கண்பெற்றுச் சிவபத்தராய் வாழ்ந்தகதைநோக்கியாவது சிவநிந்தனையின்றி ஆராதித்துய்வாராக. (பிரமவிஷ்ணுவாதியர் ஏகதேசவியாபகர்கள்.)

பிரமவிஷ்ணுவாதியர்க்குப் பிரகிருதிமாயாபுவனவியாபகமாத்திரமன்றிச் சர்வவியாபகமில்லையென்பதை,

எண்கணனைக் குட்டியகுட் டெங்கேனும் பட்டதோ
மங்கையர்மத் தாலடித்த மத்தினடி—எங்கேனும்
பட்டதோ கைப்பிரம்பு பார்த்தனுர் வில்லினடி
பட்டதே யண்டமெலாம் பார்.

கண்ணன் றனையுரலிற் கட்டிமணித் தாம்பினுற்
புண்ணுறவவ்வாய்ச்சி புடைத்தவடு—வண்மை
பொருத்தினருக் கெல்லாம் பொருந்தாமை பான்மால்
பரத்துவனென் றெண்ணப் படான். என்றும் வருவனவாதிகளாலுந் தெளியலாம். (வைஷ்ணவர்கூறும் சிவநிந்தனைகளும் அவைமுழுதும் அசாஸ்திரிகமெனவிளக்குமுண்மையும்.)

வைஷ்ணவர்கள் குருபரம்பராப்ரபாவத்தில் நம்பிள்ளைவைபவத்தில் சிவபஞ்சாக்ஷரமுதலான கூஷ்மாண்டமந்திரங்களெனவும், இளையாழ்வார் (இராமானுஜர்) வைபவத்தில் "வேதவிருத்தமான கள்ளப்பொய்ந்நூலாகிய சைவாகமத்தை" எனவுந்தூஷித்தனர்

இதற்குப்பிரமாணம் எந்தமூலியிலாவதுஒன்றுங்காட்டிலர். இவர் (கஅ) புராணத்தில் ஒன்றுகிய கூர்மபுராணத்தில்,

சாறு வாகங் காபாலஞ் சாற்றும் பாஞ்ச ராத்திரநூல்
மாறு செய்யும் வாமமுள்ள மயங்கச் செய்த நூலாகுந்
தேறி யிந்நூற் படிநின்றே ரிவற்றை யுலகிற் செப்பிடுவோர்
பாறு தொடரு நரகத்தி னளப்பில் காலம் படிந்திடுவார்.

என்றும், சூதசங்கிதைஞானோற்பத்தியில்லாமைக்கு ஏதுவின்ற அத்தியாயத்தில், " பாமரரேகொள்ளும்பாஞ்சராத்திரம் " என்றும், ஷிமோசகனேஉரைத்தவத்தியாயத்தில்,

மறைமூ லகமா காதலகின் மருவு பாஞ்ச ராத்திரநூற் [றோர்
றுறைபோ மவர்கள் யாரேனுந் தொலையாப் பாவத் துறைசென்
கறையார் மலின சித்தரே கைக்கொள் வார்க ளந்நூலை
யறைகோ டிகற்ப மாபிடினு மன்னோர் முத்தி யடைவரிதே.

என்றும் கூறுகின்ற வியாசவாக்காகிய பிரமாணத்துக்கு என் சொல்லுவர்.

இனி, அர்ச்சுநன் கண்ணன்காலிலிட்டபூக்களை ருத்திரன் சிரசிலணிந்தானென்றிழித்துக்கூறுவர். அதுஅவரதறியாமையே. அர்ச்சுநன்கண்ணன்சொற்படிபிரமவிஷ்ணுவாதிதேவாயுதங்களாற் சயத்திரதனை வெல்லமுடியாதென்றெண்ணிப் பாசுபதாஸ்திரம்பெறக் கைலைக்குச் செல்லும்போது, கண்ணனையே (சரீரம்) மூர்த்தியாகவைத்துச் (சரீரி) மூர்த்திமானுகிய சிவனை ஆவாகித்துப் பூசித்தானுதலால், அவனுடைய அன்பின்திடத்தை உலகர்க்குக் காட்டும்பொருட்டும், "ஆரொரு வருள்குவா ருள்ளத் துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்" என்ற திராவிடசுருதிப்படி எவ்வுருவில் யார்யார்வழிபட்டாலும் அங்கங்கே விளங்கிநின்றருளுவன் சர்வவியாபகனுகியசிவனென்றுசுருதிகூறுதலே, உபமன்யுரிடம் சிவதீக்ஷைபெற்றுப் பூசித்து அநுபவத்திற் தெளிந்தகண்ணன் "என்னையே சிவமூர்த்தியாகப்பாவித்துப் பூசிப்பாயென்று அர்ச்சுநனுக்குக்கூறியது பழுதாகாமல் விளக்கும் பொருட்டும், கண்ணன்மேற் சிவபாவனையால் அணிந்தபுட்பங்களை அவ்விருவருங்கைலைசென்று பன்முறைவணங்கித்துதித்து நிற்கும்போது சிவபிரான்றன்மேனியிலுள்ளனவாகக்காட்டி

யருளினாரன்றி, அர்ச்சுநன் கண்ணன்காலிலிட்டபூக்களைச் சிவன் அங்குவந்து விஷ்ணுவின் நிர்மாலியம்கிடைக்கவேண்டி வாங்கியணிந்தாரல்லர். இதனை விரிவாக வைஷ்ணவராகிய வில்லிபுத்தூரரும் பாரதத்தில் விளக்குகின்றனர். (பாரதம்.)

என்றரி யியம்பலு மிருமருங்கினு
நின்றநன் மலர்கொய்து நிகரில் கேள்வியான்
மன்றலந் துழாய்முடி மாயன் மேன்மன
மொன்றியே சிவாகம வுரையிற் சாத்தினன். இதில் அர்ச்சுநன் சிவாகமவிதிப்படி பூசித்தானென்பது தெளிவாயது. சிவாகமவிதிப்படிபூசிப்பது சிவனேயாவிஷ்ணுவையாவென்பதையாவதறியாதார். இதனையும் அறியாது மாறுபட்டுநிற்பார்க்குமேலும் அறைவாம். (பாரதம்.)

கண்ணன்மே லணிமல ரணைத்துங் காயெரி
வண்ணன்மேற் காண்டலு மகிழ்ந்து மேதினி
யுண்ணுமா தவன்சிவ னுருவ மென்றுணர்ந்
தண்ணலு முடல்புள கரும்பி னனரோ. இதில் மாதவன் சிவனுருவமென்றது, சரீரம்கண்ணன்என்றும், சரீரி சிவன் என்றும் மேற்கூறியதைத் தெளிவித்தது. இப்படியே பொய்கையாழ்வாரும்,

பொன்றிகழு மேனிப் புரிசடையெம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தாற்றிரிவ தோனு மொருவன்
ஒருவனங்கத் தென்று மூளன். என்று கூறினர்.

(பாரதம்.)

செந்திரு மடமயில் கேள்வன் சென்னிசெவ்
வந்திவா னிறத்தின னருள்செய் வாய்மையா
னந்தியுள் விடுத்திட நரன்ற னுடுதன்
புந்தியின் மகிழ்ந்துமந் திரத்துட் போயினன்.

புரகைய ாலெரி புராரி தன்முன
நரனெடு நாரண னணுகி யன்பினூற்

சரணபங் கயமுறத் தாழ்ந்து பன்முறை
கரனுற முகிழ்த்தது கழறன் மேயினர்.
பொங்கரா வெயின்மணிப் பூணும் பேணுநீற்
றங்கரா கமுமுவந் தணியு மேனியாய்
சங்கரா மேருவெஞ் சாபம் வாங்கிய
செங்கரா சிவசிவ தேவ தேவனே.

விண்ணிடைத் திரிபுரம் வெந்து நீறெழப்
பண்ணுடைச் செந்தழல் பரப்பு மூரலா
யெண்ணுடைக் காமனை யெரித்த பேரழற்
கண்ணுடைக் கடவுளே கால காலனே.

தருவது முயிரெலாங் காக்குந் தன்மையு
முருவுற வொழித்தலு முன்ற னுடலே
கருவரா தொழிந்தவர் கருத்திற் கண்டுதே
ரொருவனே யெம்மனோர்க் குரைக்கற் பாலையோ.

நித்தனே நிமலனே நிகழ்நின் னுமனே
யத்தனே யடியவர்க் கெளிய வண்ணலே
பித்தனே யாதியந் தங்கள் பேசொணு
முத்தனே யுயிர்தொறு முலாய முன்பனே. என்னுஞ்

செய்யுட்களாற் கண்ணனும் அர்ச்சுநனுமாகிய இருவரும் கைலாயத்திற் சிவாக்ஞைப்படி நந்திதேவர்உள்ளேவிடப்பச்சென்றுபன்முறைவணங்கி யெம்பெருமானே படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழில்கள் உமது அருள்வலியாலாகின்றனவன்றி வேறில்லையென்பதுமுதலியவாகத் துதித்தார்களென்பது விளக்கமாகின்றது. (சிவலிங்கமகிமை.)

ஒரு வைஷ்ணவர் லிங்கமதகண்டனமென்றொன்றெழுதி, அதில் சிவலிங்கம் ஆண்குறியும், அதன்பீடம் பெண்குறியுமாமென்பதுமுதலிய நிந்தனை செய்தனர். சிவலிங்கசொரூப மகிமை சிறிதுமுணராதமூடத்தால், அது நிரண்டுநீண்டுள்ளவடிவமாதிரம் புறப்பார்வையால் நோக்கி ஆண்குறியென்றிகழுமவர்கள் கோபுரத்தைத் தூலலிங்கமென்றும், பலிபீடத்தைப் பத்திரலிங்க

மென்றும், பூசிக்கின்ற சிவாசாரியரை ஞானலிங்கமென்றும் சிவ சாஸ்திரங்கூறுகின்றபடியாலும், இனித் (தைத்திரியம் ஆருணசா கை) "சிவலிங்காயநம:" என்றபின். ஆத்மாயநம: ஆத்மலிங் காயநம:' என்று கூறுகிறபடியாலும் கோபுரம் பலிபீடம் ஞா னலிங்கம் ஆத்மலிங்கமென்பவைதனவும் ஆண்குறியென்பரோ? அவரதறிவின்மையை விரிப்பானேன். சிவலிங்கமகிமை பின்வரு ஞ் சுருதியாற்கண்டுண்மைதெளிக.

(இருக்குவேதம் சிவஜ்யோதியுபநிஷதம்.)

ஸதயம் வரம்வரம்நிதயம்ஒம்ஸ தயாஜ்ஞரிக்ஷம் ஒம்ஸதயம் ஒம்ஸதெய நஜாதம் ஸஜ்ஞாநம்ஒயம் ஸ்ரூணரூபிவம் சிதெ கரூபிவம் ஸுதஸவஸ்ரூவ்ரூவ்ரூதம் தஜ்ஜெவஜ்ஜிமாகாரம் ॥

இ—ள்; உண்மைப்பொருளாயும் மிகமேலானதாயும் நித் தியமாயும் சிதாகாசமாயும் சத்தியத்தினுல் தோன்றுவதாயும் சச் சிதாநந்தமயமாயும் ஸ்தாணுரூபமாயும் பூதபௌஷ்ய (வர்த்தமா னகாலத்திரயங்களிலும் எல்லாப்பொருள்களுக்கும்) ஆஸ்பதமா யும் உள்ளதுவோ அது சிவலிங்காகாரம். அது ஏகரூபமாயு மூள்ளதென்பது விளக்கமாகின்றது.

யகாரம் லிங்கமா நாளம் வகாரஞ்
சிகாரமேற் பீடந் தெரிக்கின்—மகாசுந்தரன்
கண்டமே யாகுங் கவினு ரடிப்பீடம்
பண்டிகழு நஃகான்மெய் பார். என்ற சைவசுருதி

சிவலிங்கம் பஞ்சாக்ஷரரூபமென்பதை விளக்குகின்றது.

காட்டு மோமெனு மெழுத்துநிட் களசிவன் றன்னை
யீட்டு மைம்பெரும் பிரமமாந் தனுவுடை யிறையைக்
கூட்டு மஞ்செழுத் துபயமா மொருபொருள் கொடுக்கு
மோட்டு றும்பவப் பிரணவ மஞ்செழுத் தொன்றி.இதனுற்

பிரணவம் நிட்களசிவமென்பதும் அப்பிரணவமும் பஞ்சாக்ஷரமு மாகிய இரண்டும் ஒன்றினின்றுபயமே சகளநிட்கள சதாசிவமா கிய சிவலிங்கமென்பதுந் தெளிவாகின்றது.

இச்சிவலிங்கத்திலே (உ)ஆகிய ஆத்மதத்துவமான பிரம பாகமும் (எ) ஆகிய வித்தியாதத்துவமான விஷ்ணுபாகமும் (ஈ)

ஆகிய சிவதத்துவமான ருத்திரபாகமும் தோன்றும். இதனை,

(ஆலாஸ்யமான்மியம்.

ஆதியி லான்ம தத்துவ மான வலர்மகன் பாகமு நடுவில்
நீதியில் விச்சா தத்துவ மான நெடியவன் பாகமு முடிவில்
ஓதிய சிவதத் துவமென லான வருத்திர பாகமு முதிக்கும்.
என்றதாற்காண்க.

இதில் சிவலிங்கத்தின்மத்தியம் விஷ்ணுரூபம் என்று வியாசபகவான் விளக்குதலால் சிவலிங்கத்தை ஆண்குறியென்றதினை, விஷ்ணுவையுஞ் சார்தல் காண்பாராக.

மேற்காட்டிய இருக்குவேதமுதலியபிரமாணங்களால் சச்சிதாநந்தமயமுதலியசிறப்புவாய்ந்தசிவலிங்கம்சாதாக்கியதத்துவாதிபதியாகிய சதாசிவரூபமாகும். இச்சதாசிவமே பிரம விஷ்ணுருத்திர மகேசுர சதாசிவவித்தாதாதசத்திசிவமென்னும்ஒன்பதின் மத்தியதாய்க் கீழுள்ளரூபநான்கையும் மேலுள்ளஅரூபநான்கையும் தன்னுட்கொண்டு ரூபாரூபமாய் விளங்குகின்றது. இது சிவசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம். மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம் கர்மசாதாக்கியமென ஐந்துவகையாம். இவ்வைந்துந்திரண்டது கர்மசாதாக்கியம். இதனை,

(சதாசிவரூபம்.)

சாதாக் கியவகை தாஞ்சிவ மமூர்த்தி
மூர்த்தி கருத்தா கருமமெனவைந்
தோதிய பரைமுத லைந்திலுற் பவமே-
சிவசா தாக்கியஞ் சிவன்றனை யாதரித்
ததுமுத லொன்றை யொன்று சரித்தலி
லணிசா தாக்கிய மைந்துந் திரண்டது
தணிவில் கருமசா தாக் கியமே
யினமில் பொருள்க ளெவைக்குமா தாரந்
தானே கருமசா தாக் கியமே" என்றும் வருவனவற்றாற் காண்க. இக்கர்மசாதாக்கிய சிவலிங்கரூபமே சிவபக்தர்கள் செய்யும் திபானஜ்ஞாதிகளுக்குரித்தாயுள்ளது. இதனை,

(சதாசிவரூபம்)

" சத்தி படைப்பினி யொத்துணா செய்யின்
யோகிக ளதிதிகள் ஞானித விவர்க
ளாகிய தியானத் தளவிடற் பொருட்டாய்
நிட்கள மதனிற் சகள நிறைந்திடு
மப்பெயர் சாதாக் கியமென லாகும் " என்றும்,

(ஆலாஸ்யமான்மியம்.)

"முதனுகர் ரோற் சினைகுழைந் தாங்கிம் முழுமுதற் கருத்து நல்லவியின், பதமிவன் வடிவப் பண்ணவர் பிறர்க்குந் திருத்தி யாம் பரனிவன் முகத்தின், விதமுறு நித்த மாதிமூ விணைக்கும் வேண்டியாங் குலகவர் போகங், கதிபெற வியற்றுஞ் சிவார்ச் சனை விணைக்குங் காரண மிச்சிவ கோசம்."

என்றும் வருவனவற்றாற்காண்க. இதனாற்சிவபூஜாதி செய் வோர்க்கு மற்றைய சிவமூர்த்திகளைக் காட்டிலும் சிவலிங்கமூர்த் தியே சிறந்ததென்பது தெளிவாயது, இதனை:

"பலபலசட் டகநிழவிப் பூசித்து வருவதினும் பண்பு மேவி யிலகுசிவ லிங்கநிறீஇப் பூசித்து வருதிறனே யேற்ற மாகு, மலருதவி ரக்குறிப்பூ சனையினுயர்ந் தவரோமா லயன்முன் னோரு, முலகுபுக முதுபோலப் பயன்கொடுப்ப தொன்று மிலை யுண்மை யீதால்."

என்பதனாற்காண்க. இதிற்கண்டபடி விஷ்ணுமுதலியோரும் சிவலிங்கபூசனையாலேயே சிறப்புற்றார்களென்பதை மேலும்

(பாரதம் துரோணபர்வம்.)

"ஜெயவிஜெவ்ஷ அம்தர்தாகஜயெர்விஷ்ணவயுஃ
வவ்ஷ மவ்ம்லவ்ஜாக்வாஜிம்மெஜ அயுதிதம்வ ஹ்ழ ॥

என்னும் வசனத்தாலும்காணலாம். இதில் தேவர்களுக்குத் தெய்வமாய்ச்சிந்தனைக்கெட்டாத ஆத்மபாவராய்ப் பிறராற்செ யிக்கமுடியாதவராய் அழிவில்லாதவராய் விளங்கும் விஷ்ணுவா னவர் சிவனைச்சார்வதுபோனத்திரிந்து பிரபுவாகிய அவரைச் சிவலிங்கத்தின்கட் பூசிக்கின்றனரென்பது விளக்கமாகின்றது.

இங்கே விஷ்ணுவுக்கு அழிவில்லாதவனென்பதுமுதலிய விசேடணங்கள் கூறியது மேற்காட்டிய பிரமாணங்களின்படி அவ்விஷ்ணு உபமந்நிபுபகவானேயடைந்து சிவதீக்ஷாதி சிவசம்ஸ்காரம் பெற்றுச் சிவலிங்கபூஜாதி சத்பாவனையினால் சிவத்துவப்பேறு பெற்றவராதலாலென்க.

'லிங்க' என்னுஞ்சொல் சித்திரித்தலென்னும் பொருட்டாதலாற் படைத்தல் காத்தல்முதலியவற்றால் சர்வலோகத்தையுஞ் சித்திரிப்பதென்பதுவிளக்கமாம். இனி, லிங்கம் எனப்பிரித்து, லயம், தோற்றம் எனப்பொருள்கொண்டு பிரபஞ்சமுழுதுந் தன்னிடத்தில் ஒடுக்கித்தோற்றுவிப்பதெனப் பொருள்கொள்ளுதலுமாம். லிங்—லயம். கம் —தோற்றம்.

பரிபூரணம் பராபரம் விஞ்ஞானம் நிராமயம் என்பனவாதி மேலானவாக்கியங்களால் வேதசிவாகமாதிகள் விதந்தெடுத்துக் கூறுகின்ற பரப்பிரமசொரூபமே வேதார்த்தமயமாகிய சிவலிங்கமாகும். இதனை; (ஆலாஸ்யமான்மியம்.)

நிறைபரா பரம்விஞ் ஞான நிராமய மென்று நூல்க
ளறைபரம் பிரம மாகு மிதனுரு வாகு மேக
மறையிதன் பொருளே யிந்தச் சுந்தர வடிவா யிங்ஙன்
உறைசிவ லிங்க மொன்றே யென்பர்நூ லுணர்ந்த நல்லோர்

என்பதனுற்காண்க. இத்தனைப்பெருஞ்சிறப்பினதாகிய சிவலிங்கத்தை நிந்திக்கின்ற அறிவிலாப்பேதைகளில் உய்யுங்கருத்துடையார் சிவலிங்கத்தின்பீட சத்திவிஷ்ணுவென்று வேதசிவாகமாதிகள் கூறுதலையும், ஆதிசைவர்முதலிய எம்மவர்கள் அப்பீடத்தை விஷ்ணுவாகவே தினந்தோறும் பூசித்துவருதலையும் கேட்டறிந்தாவது நாம் சிவலிங்கநிந்தையிற்புகுந்தது அதன்பீடமாகியவிஷ்ணுதலைபிலும்வந்துமுடிந்ததேயென்றுபரிந்துபிராயச்சித்தம்செய்துகொண்டுய்வாராக- சைவர்களாகிய எம்மவர்கள் சிவனே பரமென்றிறைப்பற்றிநின்று பூசிக்கும்போதும் விஷ்ணுவையும் சிவபீடமாகவும் சப்தகுருக்களில் ஆறாவதுகுருவாகவும் தினந்தோறும் பூசித்துவருதல்போலாவது சிவனையும் பூசிக்காமலொழிவதுமன்றி தூஷித்தலையே மேற்கொண்டபாதகர்கள் மீளாநரகுக்கே ஆளாவார்கள்.

இனி இச்சிவலிங்கம்தாருகவனத்துமுனிவர்சாபத்தால் அற்றுவிழுந்த (சிவனது) ஆண்குறியென்றிகழும் மூடவசனத்தையும் விவேகிகள் பின்வரும் பிரமாணம்நோக்கிஉண்மை தெளிவாராக.

(வியாசவாக்காகியகந்தபுராண்ம்.)

நிற்றலு மதனைத் தீயோர் நெருப்பெழ விழுயா வின்னு
முற்றனன் பரம னந்தோ வுஞற்றியா முய்த்த வெல்லா
மிற்றன கொல்லோ வென்றே யிரங்கியே பெண்ணில் சாபஞ்
சொற்றன ருலக மெல்லாந் தொலைப்பவன் றெலைப வென்றே.
சங்கையின் முனிவர் யாருஞ் சாற்றிய சாபம் யாவு
மெங்கடம் பெருமான் முன்னு மெய்திய தில்லை யன்றே
தங்கவன் றன்பா லுய்க்கு மளவையி லிறுதி நாளிற்
பொங்கெரி யதன்மேற் செல்லும் பூளைபோன் மாய்ந்த வன்றே.

இ—ள், தாருகவனத்துமுனிவர்கள் சிவனுல் தம்பத்தினிகளின் கற்புப்பழுதானதாகநினைத்து மாரணயாகஞ்செய்து அதில் வந்த புலிமுதலியவைகளைச் சிவனைக்கொல்லும்படி ஏவ, அவைகள் சிவன்முன் வலியிழந்தமையால் மீண்டுசென்று ஏவியமுனிவர்க்காவது பிறர்க்காவது இடர்செய்யாதபடி கருணையினுலே அப்புலித்தோல்முதலியவற்றை ஆடைமுதலியவாக்கொண்டுகின்றனர். நின்றஅளவிலே தீயாகிய அம்முனிவர்கள் நெருப்பெழவிழித்து இன்னுமிவனிறவாதிருக்கின்றனன். நாம் ஏவியனவெல்லாம்வீணுயினவென வருந்தி உலகெலாஞ் சங்கரித்தொழிக்குமுருத்திரன் இறந்தொழியக்கடவனென்றளவில்லாதசாபமிட்டார்கள். அளவில்லாமுனிவர்கூறியசாபமுழுதும் எம்பிரான்முன்னுஞ்செல்லாமல், உகாந்தகாலாக்கினியிற்பட்ட பூளைப்பூவைப்போல்அழிந்தனஎன்பதாம். வியாசவசனமிவ்வாறுண்மைகூறுதலேநோக்காது மனம்போனபோக்கிலேகின்றுபிதற்றும் பேயரினியைதத்தான் கூறுதற்கஞ்சுவர். இவர் உண்மை நூற்பிரமாணங்களையுள்ளபடிநோக்கிப் பழிபாவங்களுக்கஞ்சி அவற்றினீங்கிஅவைகூறும் நன்னெறியினிற்றலைழிந்து, முருட்டுப்பிடிவாதத்தால் நீதிகடந்து சிவநிந்தனைமுதலிய தூர்ச்செயலேசெய்கின்றராதலால் இங்கேபேயரென்றுகூறப்பெற்றார். இக்கொடுமைபற்றியே.

(ஸ்ரீவாகீசசுருதி.)

தாயி னுங்கல்ல சங்கர னுக்கன்ப
ராய வுள்ளத் தமுதருந் தப்பெரூர்
பேயர்-பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துட் பட்ட மனத்தரே. என்று

விளக்கி ஒதுக்குகின்றது: இவர் அஞ்சாது கூறும் நிந்தாதியெல்லாம்எஞ்சாதழுந்தியலக்கணுறுமருநரகிற்கேஎதுவர்மென்க. சிலர் 'ப்ரசண்டமதசபேடிகை' என்றுஎழுதி அதில் 'சாம்பற்பொதிசுமக்குஞ்சைவகரங்கள்' எனவும், 'இச்சைவக்கழுதைகளெல்லாதகாலுகாற்கழுதைகளைக்காட்டிலும் மேன்மைபுடையனவாக'என்னவும் பலவாறுகவைகின்றனர். விஷ்ணு சிவதீக்ஷைபெற்றவர் விபூதிருத்திராக்ஷதாரணர் என்பதும், பிருங்கைசாம்பரிற்புசண்டவிசொன்பதும் மேற்காட்டியபிரமாணங்களால் விளக்கமாதலால், அந்நிந்தனை விஷ்ணுவைபுஞ் சாருமென்றுணர்திலர்.

ஆழ்வார் பாடல்கள் புராணங்கள் ஒன்றினுமில்லாத பஸ்மாசுரன்கதை என்றொன்று இவர்களாற் பாகவதத்திற் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டுள்ளது. அதுவும், விஷ்ணுவைப்பெண்ணென்றும் சிவனை ஆணென்றும் கூறுகின்றஅம்மட்டிலேயே அவர்பக்கத்துக்கு இழிவைவிளைப்பதறிந்திலர். இம்மட்டோ! இதற்கு அடித்த அத்தியாயத்திலே மூவரிற்சத்துவகுணத்தர்இன்னொன்று பிருகுமுனிவர் பரீக்ஷித்தறியப்புகுந்து, ருத்திரனும் உமையும்எழுநாளளவும் புணர்ந்துகொண்டிருத்தலை ஞானக்கண்ணற்கண்டு அவ்விருவர்க்கும் பகலிங்கங்கள் அறும்படிசாபங்கொடுத்துவிட்டுப் பிரமலோகத்திற் பிரமன் செருக்கைக்கண்டிகழ்ந்துவிட்டு வைகுண்டஞ்சென்றுவிஷ்ணுவின்தலையிலுதைத்தாரென்றும், விஷ்ணு அவரைப்புகழ்ந்துநிற்ப அவர் விஷ்ணுவை சாத்துவிககுணசர் வேசுரனென்றறிந்தாரென்றும் எழுதப்பட்டன. முன்தாருகவன முனிவர் சாபத்தால் அற்றுவிழுந்ததாகக்கூறியதை மறந்து இப்போது பிருகுமுனிவர் பகலிங்கங்கள் அறும்படிசபித்தாரென்று கூறினர். இப்பொய்யும் பொருத்தமில்லையேலென்பதும் யோசியாமற் பகரும் அறும்படிசபித்ததாக்கூறினர். அவர்மனம்சிவநிந்தை

யிலேமுனைத்துநிற்றலாற் பகும் அறிவதெப்படியெனமோசித்தற் கிடந்தராமல்அம்மட்டிலே யேபொய்யைவெளிப்படுத்திவிட்டது. இனி, ஞானக்கண்ணால் ஏழுநாட்புணர்ச்சிகண்டதுண்மையர்ஞல் மற்றவைகளும் ஞானக்கண்ணுற் காணலாம். இன்னதுணர்ததொன்று அங்கங்கேபோய்ப்பார்க்கவேண்டாவாதலால் இப் பெரும் புரட்டை விவேகிகள் உணர்வார்கள். ஆனுற் பிருகுமுனிவர் விஷ்ணுதலையிலுதைத்ததைதற்கோவெனில்? அவர்பத்தினியைக்கொன்றதனல்வந்தகோபம் முன்சாபங்கொடுத்தமட்டிலமையாமல் வைகுண்டஞ்சென்றுதலையிலுதைத்து அக்கோபமாறினரென்பதே உண்மையாமென்க. தாருகவனமுனிவர்சாபம்ஒன்றும்பலிக்காத ருத்திரனையும் உமையையுஞ் சபித்தனரென்று எழுதியவர், பிரமனையுஞ் சபித்தாரென்றெழுதாமல் ஓதுக்கியதென்னையோ? கரியநிறஞ் செயல்வகைகளீனும் தாமசகுணவியல்பு காட்டும் விஷ்ணுவுக்குச் சாத்து விகமகிமை கூற ஆசைப்பட்டவர்கள், அதற்குரிய சுருதிப்பிரமாணங்காட்டமுடியாமல், விஷ்ணுதலையில் முனிவர் உதைத்தஉதையே பிரமாணமாகக் கூறிய பெருமை வியக்கத்தக்கதே. சாபமும்உதையும் பெற்று வருந்தும் விஷ்ணு உதையைப் பொறுக்காமல் என்செய்வர். இதுதானு சாத்விககுணச்செயலாகியபொறுமை. "செல்லிடத்துக்காப்பான் சென்றிடத்துக்காப்பான் அல்லிடத்துக்காக்கிலென் காவாக்கா லென்" என்னுந் தேவசுருதியை உற்றுநோக்கியுண்மைதெளிவாராக.

சிலர் ஒருபிரமாணமுமின்றிச் சரபருபியாய்வந்தருத்திரனரசிங்கரூபவிஷ்ணுவை அடித்து வென்றதாக உளறுவர். இதனை நிருசிம்மதாபினியுபநிஷத்தமாவது வேறு எந்தநூலாவது கூறியதுண்டா. இந்தப் புரட்டையும் பின்வருஞ் சுருதியிற்றெளிக.

(சரபோபநிஷதம்.)

ஹ்ரொவொரம்வெஷ்ரோவ்ஷாயஸ்ரஹாவ்ரூம்ஹெஹ்ரூஸ்ரூம்
நரஸிஹ்ம்ரொகஹதாரூம்ஸ்ம்ஜவாநம்ஹாவேஷ

இஃள், பயங்கரமான சரபவேஷந்தரித்து லோகபீடதமாயிருந்த நரசிங்கத்தை அடித்தவர் சிவபிரானென்பதாம் இம்மட்டோ. (க்ஷுரிகோபநிஷதம்.)

யொதுக்கிவராஹவிஹாநுவிஷ்ணுஹதம்
வாகநசோஷிஷெவஃ। விவிகலுவீயுசாநடி॥

இ—ள், விஷ்ணுவையும் அவரவதாரங்களான மீனகூர்ம நரசிம்மாதிகளையும் வாட்டிப்பீடித்து இரக்ஷித்தவர் சிவபிரான் என்பதாம்.

இராமதத்துவதீபிகையென்றொருசுவடியெழுதினவர், ராமேசுரத்தை ரோமேசுர்மென்றும் ராமலிங்கத்தைரோமலிங்கமென்றும் எழுதிஅப்பாதகம் அந்நிந்தையை ராமர்தலையிலேற்றியதறியாது மகிழ்கின்றனர். அவரைவிவேகிகள், பேதாய் நீயெழுதியதில், ராமசப்தம் ரோமமாகமாறி விஷ்ணுநிந்தையாய்முடிந்ததையும், ஈசுரசப்தமும் லிங்கசப்தமும் மாருமலுள்ளபடிவிளங்குதலையுமினியேனுமறிவாயென்றிடித்துரைத்து, நீ இன்னுஞ்சிவநிந்தை செய்யப்புகின் அது விஷ்ணுநிந்தையாகவேமுடியுமாதலால் அவ்வழியிற் புகாதெழிவாயென்றுண்மைவிளக்கி, இவ்வாறே சிவபக்தநிந்தனைசெய்த வைஷ்ணவர்கள் அகஸ்தியமுனிவர் தண்டனைக்குஞ்சற்றுமல் அவர்பாதத்தில்வீழ்ந்து வணங்கிநிந்தனீங்கி வந்தனைசெய்து உய்ந்ததகதையும் எடுத்துக்காட்டுவாராக.

அக்கதையாதோவெனில்? திருக்குற்றுலமாகிய சிவஸ்தலம் முன்பு திருமுற்றமென்னும் பேருற்று விஷ்ணுஸ்தலமாய் வைஷ்ணவர்களாற் சூழப்பட்டிருந்தது. அக்காலத்தில் அகஸ்தியமுனிவர் அங்குவரும்போது வைஷ்ணவர்கள் முனிவரது சிவவேடமும் சிவநாமோச்சாரணமுங்கண்டு கேட்டு அவைபாதகமாமெனக்கொண்டமூடபுத்தியால், நீ இங்கே வரப்படாதென்று தடுத்தார்கள். முனிவர், மூடர்காளே உங்கள்விஷ்ணு பத்துப்பிறப்பிலும் சிவபிரானது அனுக்கிரகமும் நிக்கிரகமும் பெற்றதும், கண்ணையிடந்து பூசித்துச்சக்கரம்பெற்றதும், பிருந்தாதேவி உடல் எரிந்தளலும்பு சாம்பரிற்புரண்டமூதகாமமோகப்பிணிநீங்கும்படிஉமாதேவியார் தனபமாகிய பச்சிலைமருந்துதவிக்காத்ததும், விஷம் எழுந்தபோது தேவர்யாவரும் பயந்தோடவும் விஷ்ணு ஓடாது சிறிதுநேரம்நின்று விஷவெப்பத்தால் உடல்கருகப்பெற்று வருந்தி அவர்க்குமுன்னேடிக் கயிலையடைந்து ஓலமிட்டலறச் சிவபி

ரான் இரங்கி அவ்விடத்தையுண்டு காத்ததும் முதலிய சிவமகிமை களை, நீலகண்டன் விஷ்ணுநேத்திரார்ச்சிதபாதன் சக்கரப்பிரதன் முதலியசிவநாமங்களே விளக்கவும், அவற்றைக்கேட்டுமறியாத பாதகர்களாகிய நீங்கள், எம்பிரான் விஷத்தையுண்ணவிட்டால் யாவரும் இறந்தொழிவரே அப்போது ஆரோடுசேர்த்திருப்பீர் கள் பலமுனிவர் சாபத்தாற்பாதகரானீர்களென்று கூறிவிட்டு வடபாற்சென்று இலஞ்சிநகரில் மூருகனைப்பூசித்துத் திரும்பிப் பாகவதவேடம்பூண்டுவந்து அவ்வைணவர்கள்வணங்கியழைப்பக் கோயிலுட்சென்று பெருமாள்வடிவத்தின்சிரசில் கையைவைத்த ழுத்திச் சிவலிங்கமாக்கிச் சிவவேடத்துடன் பூசித்தலைக் கண்டு வைஷ்ணவர்கள் முனிவரைக் கொல்லும்படிநெருங்க, முனிவர் கோபித்து ஒருதருப்பைப்புல்லைவ, அதுகோபாக்கினியுடன்சென் றது அவர்கள் ஓடோடத்துரத்தி வெதுப்புதலைச்சகிக்கமுடியா மல் நெடுங்காலம் பூசித்துவந்த அவ்விஷ்ணுவானும்காக்கப்படா மல் வேறுபுகலின்றி ஓடிவந்து அம்முனிவர்காலில்விழுந்தலற, அவர்சாந்திசெய்து சிவநிந்தனைபின்றி இக்கோயிலுள்ளே தென் மேற்கில் விஷ்ணுவைஆராதித்து வாழுகவென்றுஆஞ்ஞாபித்தன ரென்பதாம். இதனை,

(திருக்குற்றாலப்புராணம் திருமால் சிவனைசரணக்கம்)

நிலைகிளர்ந்த கோபுரங்கள் பலசிகர மெனநிரைத்து நெடிய மேரு, மலைகிளர்ந்த தெனக்கிளர்ந்த வலம்புரிச்சங் கணிக்கோயில் வருங்கால் வேதக், கலைகடந்த பெரியதமிழ்க் குறுமுனியை வட்டி சையிற்கடைகாப் பாளர், இலைகிடந்த சூலத்தா னடியார்க்குத் தலைவனெனவந் தெதிர்த்தார் மன்னே.

பன்னுமறை வேதியரே பரந்ததடுப் பதுநோக்கிப் பரிவிலீர்காள் மன்னுறுபத் தவதாரத் தனுக்கிரக நிக்கிரக மறந்தீர் கொல்லோ.

களபமெதிர் காத்தபிரான் கண்ணிடந்து சாத்தியநாட் கயி லையாளி, யளவறுசீர்ச் சலந்தரனே யடர்த்தபடை கொடுத்தவரு ளறிந்திலீரோ, தளவகிகர் குறுமுறுவற் பிருந்தைமயற் பிணிநீங் கத் தம் பிராட்டி, தளவகறும் பச்சிலைமா மருந்தளித்து மாற்றி யதுந் தோற்றிடாதோ.

பாரோடும் விண்ணோர்கள் பரந்தோடப் புரந்தரனுர்பதிவிட் டோடத், தேரோடுங் கதிரோட மதியோட விதியோடத் திருமா ல்மேனி, காரோடத் தொடர்ந்தோடுங் கடல்விடத்தைப் பரமனு ண்டு காவா விட்டாலீ, ஆரோடு நீரிருப்பீ ரெங்கோடி யுயிர்பிழை ப்பீ ரறிவிலீர்காள்.

ஒன்றுபல நூலுணர்ந்து முணர்வினீ ருமக்குவிரித் துணர் த்தி னலும், என்றுமுணர் ரிருமது நேமியா னறிவனெங்க ளிறைவ ன் சீர்த்தி, யன்றியுட லுயிர்போல மாலுமீ சனுமிருப்ப தறியீ ரீண்டு, மன்றுளா ரடியாரையோ தடுக்கின்றீர் மாயனையே மறுக் கின் றீர்கள்.

கோதண்கண் ணுவன்பிருகு தீருவாசன் புரந்தரற்குக் கூசை மீந்த, மாதவனே முதலோர்கள் சாபத்தாற் பகுத்துணர்ர் மடவீ ரென்று, போதமிலா மறையவர்கள் கடைதடுப்பப் புறம் போனுன் புவனமூன்றில், ஆதிபரா மமரரொரு தட்டுநிற்பத்தா னிலுரு தட்டமையநிற்பான்.

இலஞ்சிநகர்சென்றுமுருகனைப் பூசித்துத்திரும்பிவரும்போது துளசிமாலை முதலியதூண்டு பாகவதவேடமுடையாராய் அவ்வை ஷ்ணவர்கள் வணங்கிப்புசரிக்கக் கோயிலினுட்சென்று கதவைத் தாழிட்டு விஷ்ணுமூர்த்தி தலையிலே தமது கையைவைத்து

மூறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப் பெரியதுழாய் மூடி யின்மீது, சிறியமதிக் கலைகுறுகத் திலகதுதல் விழிகுறுகச் செழு ம்பூண்மார்பி, னிறையரவப் பணிகுறுக் நிகில்வுல கமுநிறைந்து நீண்டமேனி, குறுகுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறுமு னிவன் குறுகுகாலை

தவம்பெருக வறம்பெருகப் பொருள்பெருகத் தெருள்பெரு கச் சைவ மோங்கிச், சுவம்பெருக மனுநீதித் துறைபெருக நிறை பெருகச் சுருதிவாய்மை, நவம்பெருகச் சரியாதி சதுட்ட யங்க ணனிபெருக ஞால மெல்லாஞ், சிவம்பெருகக் குறுகியருள் பெ ருங்கிணன் குற்றலத் தேவதேவன்.

இவ்வாறு முனிவர், விஷ்ணுமூர்த்தியைச் சிவலிங்கமாக்கிப்

பூசித்துத் திருக்கதவைத்திறந்துவிட்டுத் துதித்துநிற்றலைக்கண்ட வைஷ்ணவர்கள்,

நறுமணித் துளவமாலை நம்பியை நம்புனக்குங்
கறுவுகொண் மனத்தி னானைக் கடைகட்டுந் தேகா மூன்னம்
இறுகுறப் பிணிப்போ மென்ன வெழுத்தண்டு பாசத்தோடு
சூதகினர் வலியான் முன்னர்க் கொக்கினத் திரள்போற்கூடி.

ஒல்லென வருகைநோக்கி யொருகையிற் றருப்பை வாங்கிச்
செல்வனைத் திருக் குற்றலத் தேவர்நா யகனை யுன்னி
யல்லலைத் தீரண்ட காக மாயிர கோடிக் காங்கோர்
கல்லென விடுத்தான் மூர்நீர்க் கடலினை யடக்குங் கையால்.

விடுத்ததோர் தருப்பை போந்து வேதிய ரடர்ந்து தாக்கும்
படைக்கெதிர்படைபாய்மோதிப்படர்தலும்பனவரோங்குந்
தொடிக்கரம் வியாதன் மேனட் சூருறுங் கரம்போனிற்ப
வடைக்கலம் பரம் யோகி யருளுனக் கபய மென்றார்.

போக்கிலா தலமந்தோடிப் புகலென்றார்க் கஞ்ச லென்று,
தாக்குமந் திரத்தால் விட்ட தருப்பையைச் சாந்தி யென்னு
நோக்குமந் திரத்தா லாற்றி நூல்புனை மறையோர் தம்மைக்
காக்குமந் திரத்தாற் காத்தான் கடலுண்டு மலயங்காத்தான்

பன்னவர்தங் குழாங்க ளெல்லாம் பனிமதி தெரடர்ச தோரத்
தினமெனப் பின்செல்வாரை யியற்றமிழ் முனிவ னோக்கி.

நாதனார் சங்க வீதி நயந்துறை தென்மேல் பாலின்
மாதலன் றனைப்பூ சித்து வாழுமின் ... என்றான்.

என்று சுருக்கிக்கூறிய செய்யுள்களாற்காண்க.

வைஷ்ணவர்கள், கூறுநிந்தைகள்பற்பல. அவைகளும் சைவர் களாகியநம்மவர்கள்பிரமாணத்துடன்கூறும் சிவமகிமைகளைநோக்கித்துராசையாற்பொறுமைகொண்டுஅவற்றிற்கு எதிரியாகப்பிரமாணமின்றித் தம்மனம்போனபடிக் கூறும்அபத்தங்களே யாம். இது பின்வருஞ்சரித்திரங்களால் விளக்கமே.

முன்னொருகாலத்தில் நந்திதேவர், அற்புதாகூஷ்ன் என்னுஞ் சிறுக்கனைத் தலைவனைச் சிவகணங்களுடன் எங்குஞ்சென்றுதேவர்

கள் செய்கைகளைப் பார்த்துவரும்படி ஆஞ்ஞாபித்தனர். அவ்வாறு எங்கும் பார்த்துவருகிற அற்புதாசூரன் பிரதோஷகாலத்தில் வைகுண்டத்தில் விஷ்ணு மனுஷரூபியாய் இலக்குமியைப் புணர்ந்துகொண்டிருத்தலைக்கண்டு மிக்கசோபங்கொண்டும் நந்திதேவராஞ்ஞை பார்த்துவரும்படியே ஆதலால் அவ்விஷ்ணுவை ஒன்றுஞ்செய்யாமல் கயிலைபில்வந்துதெரிவித்தான். அதுகேட்ட நந்திதேவர், அவ்விஷ்ணு, தன்னேவசப்படுத்தி அதிகரித்தெழுந்து அடங்காதபெருங்காமத்தால் மனுஷரூபியாய்ப் பிரதோஷகாலத்தில் கலவிசெய்து பிறப்பார்க்கும்போதும் எழும்மாமல்அழுந்திக்கிடந்த பெரும்பாதகத்தால் அவன் அப்பொழுதுகொண்ட மனுஷரூபனுப்பூமிபிற்பிறந்து தன்மனைவியை ராக்ஷதன் கொண்டுபோகவருந்தியலையக்கடவன்என்றுசபித்தனர். இதனை,

(சிவரகசியம் (கூ) அம்சம் (உ) காண்டம்(சகூ.)அத்தியாயம்)

மூன்முகுந்தனுமையாள்கேள்வன், றனைப்பணிந்த வரத்தினில் வைகுண்டலோகத்தனக்கரசாம் பாக்கியத்துட் சார்ந்துற்றனால்.

மற்றவன்றன் பிரதோட காலந் தன்னின் மானுடரூ பங்கொண்டுமாமா தோடும், பொற்றடந்தோளவட னங்கண் ஞெமுங்கப் புல்லிப்புணர்ந்துற்றன் சிவபூசை புரிய கில்லா, றுற்றதனை நந்தீசன்கணங்கள் கண்டே யுயர்கயிலே வரைச்சென்று ரவர்கட் கெல்லாங், கொற்றவனு மவன்றனையே பரமன் தோயிற் கோபுரவா யிலிற்கண்டார் குழைந்து தாழ்ந்தார்.

கணங்குகணங் களைநந்தி தேவர் நோக்கி மற்றுநீ செவ்வுலகிற் போய்வந்துற்றீ, ரிணங்குறுமெவ் வுலகங்க டம்மிற் றேவர் யாவரவர் யாதுசெய்துற் றார்க ளென்னக், குணங்கொளாற்பு தாக்கண்ரு வணங்கி நின்று கூறுவா னடியனேயெவ் வுலகுஞ் சென்று கணங்கொளுந்தே வர்கள்புரி சரித மெல்லாங் கண்டுவரப் பணித்தனையாற் கடவு ணீயே.

அந்தந்த வுலகுதொறுஞ் சென்று பார்த்தே னச்சுதனையன்றி மற்றைத் தேவ ரெல்லாந், தந்தமுறை தவறிலார் பரமன் பூசை தனிற்பிரிய நாயிருந்தார் வைகுண் டத்தே, வந்தனனப் போதுபிர தோட காலம் வந்ததுகோ. விந்தனைந்தை பூசை யாற்றுன்,

மூந்துமா னுடவடிவாய் விந்தை யேறடு மோகமூற்ற கந்தமூவீழ
கண்டேன் யானே.

அவனீ யாவனடா வென்று கேட்டே னம்புயப்பெண் ணைத்
தழுவ னீங்க கில்லா, னெவணமா தூடன்கூடி யிலச்சை யின்றி
யென்னீ யாவனடா வென்று கேட்டான், கவன்முறு மிவன்றா
ர்த்த னென்று கண்டேன் கருத்திலவன் றனைத்தள வல்லே
னெம்மான், சிவனருள்சே ருனதாணை குறித்து மீண்டேன் றேவ
ரிலீ தொருபுதுமை யவன்பாற் கண்டேன்.

என்னையே யிவ்வா றுரியு மன்னேற் கினிமேல்வந் திடுங்கதி
தா னேதோ வீது, தன்னையே யெனக்கறிய வியம்பா யென்று சா
ற்றுமற்பு தாக்கனைப்பார்த் துரைப்பா னந்தி, யன்னவன்முன்
பூலோகந் தன்னின் மிக்க வயோத்திநகர்த் தசரதனென்ன றோது
மரண்மை,மன்னவன்றன் மைந்தனு மிராம னெனி வந்து பிறந் திட
க்கடவ னெகு மன்றே.

ஆங்கவன்றன் மனைவிதனை யரக்கர் வேந்த னடவிபுகுந் தே
கொடுபோந் திடவ வன்று, னேங்கியே யிலவன்.என்னுமுண்மை
யாற்காண்க.

பின்னும்அவ்விஷ்ணு வைகுண்டத்தில் பிரதோஷகாலத்தில்
இலக்குமியைப் புணர்ந்துகொண்டிருக்குஞ் சமயம், அங்குவந்த
பிருகுமுனிவரை வாயிலிலிருந்தகருடன் அதிபரிசுத்தமுனிவரே
உள்ளேவிஷ்ணு இலக்குமியைப் புணர்ந்துகொண்டிருப்பதால்
அங்கேதாங்கள் போவதுநியாயமாகுமா என்றதுகேட்டமுனிவர்
சிரிப்பக்கருடன் சாம்பராகஅவர் உட்செல்லும்போது விஷ்ணு
இலக்குமியைப் புணருமின்பமுற்றுப் பெருதமனத்துடன் அம்
முனிவரை இங்குவாராதொழிக என்னுங் குறிப்பினால் கைநீட்டி
விலக்கச், சிவதரிசனபூசாதிக்குரிய இப்புண்ணியகாலத்தில் அறி
வீனருஞ்செய்யாத அநுசிதகாரியஞ் செய்தனையென்றுகூறி இப்
பிரதோஷகாலத்தில் உன்னைத்தரிசிப்பவரும் உனது நாமபசனை
செய்பவரும் கொடியநரகடைவரென்று சபித்துச் சென்று அப்
போது அவ்விஷ்ணுவைப் பார்த்தபிரதோஷத்தைக் கார்தெரிசனத்
தால் நீக்கிக்கொண்டார். இதனை,

(சிவரகசியம் இவ்வண்டிவனபாலன்முத்திபெற்றசருக்கம்.)

முன்ன ரோங்குசிவபத்தனும்பிருகுவென்னு, மாதயாநிதி யுலகமெங்குஞ்செல்வான்வைகுண்டலோகமதில்வாத்துற்ருலல்.

மாயனுர் கோயின்மணி வாயி றன்னில் வந்தானைத் தியில்வியீன் தேயன் கண்டான், மாயனு முனிவதிரு வடண்மாஞ் மாலாம்ச் சரதலீ லைகள்புரிவா லுங்குத் துன்னன், ஞாயமா வெனப்புகுன் ருன் வார்த்தை கேட்டு ஞானமா தவன்பிருகு நதைதான்கொ ண்டா, ரியதேசர் தடைசொல்புள்ளின் வேந்தைச்சாம்ப ராக்கி ணு ஜட்புகுத்தானரியைக் கண்டான்,

முனிமுனிவி னேடுமப் போது மாயன் மொய்குழலா ளின்பமன முற்ரு முன்னன், தனியெழுந்து மஞ்னமாய்ந் கைகொ டுங்குச் சார்ந்திடே லெனவுன்ரக்குந் தன்மை கண்டா, னினிய சிவ பூசைசெயும் பிரதோ டத்தி னிப்போதின் மாதரா னின்பஞ் செய்வாய், தனியிழைக்கு முன்னுடைய மோகந் தன்னைச் சூட வேண்டா வோவெனவிட் டேசு சொல்வான்.

பிரதோட வேளையிற்பெண் கொடியைச் சேரும் பேதையர் ஞனப்போல்யாங் கண்டி லோமா, ஸரனுடல் புனிதருமிவ் வே ஷ தன்னி லிவையர்க ளுடன்புணர்ந்தா லினிய துன்பம், வரு மெயென் பதனுன்னை மறந்து ளாயோ மற்றுனக்குப் புத்தி வந்த தேது சொல்வாய், திருமேவு வோரந்திப் போது தன்னிற் சிவபூசை தனிற்காலம் போக்கு வாரே.

என்னரு மினியவந்தி வேளை தன்னிலேந்திழையைப் புணர் வரோ வுனக்குப் புத்தி,செனன்னரா ருன்மத்த மூண்டோ வென்று தூயமா தவன்முன்மா தவனை நோக்கிப், பன்னரும் பிரதோடந் தனிலுன் னுமம் பகர்துளோர் தெளிந்தோர் பரவல் செய்தோர், துன்னுத நிரயத்திற் புகுவாரென்று சூழ்கோபத் தூற்சுடுஞ் சொல்லிப் போனன்.

தெரிசனஞ்செய் பாவமது நீரக் காசித் திருக்கதந் தனிற்செ ன்றுன் கண்ட போதிற், கரியவனைப் பிரதோட காலந் தன்னிற் கண்டதுன்ப மொழிந்தின்பங் கலந்தான், என்னும் உண்மை வாக்கியங்களாற்காண்க.

விஷ்ணு அம்பரீஷன்மகள் ஸ்ரீமதிமேல் ஆசைமிகுதியால் முன்னமே சுயம்வரத்தில் அழைக்கப்பட்டிருந்த பருவதன் நாரதன் என்னுந் தமது அடியார்களைக் குரங்குகளாகவுந் தன்னைச் சுந்தரகுமாரனாகவுங் காணச்செய்து, அவளை மறைவாகத்தூக்கிச் சென்று புணர்ந்தின்புறுதல்தெரிந்த அவ்விருவரும் இவ்வஞ்சனை செய்யலாமா என்றுகேட்ப, அந்தோ நான் இச்செயலைநினைக்கவு மில்லையே என்றுபொய்கூறினர். உடனே அவ்விருவரும் இவ்வஞ்சகனை வழிபடுவதுதீமையேயென்று விலகிச்சிவபிரானையேவழிபட்டுப் பெண்ணைசைமுதலிய குற்றம்நீங்கிஉய்ந்தார்கள். இதனை,

(இலிங்கபுராணம் உத்தரகாண்டம் (சுவது) அத்தியாயம்)

குரங்க தாக்கிமற் றெங்களைக்கொடிபுரை மருங்குல்
இரங்கு மேகலை யேழையைக் கொணர்ந்திவண் வைகி
விரும்பு மாறெவ னென்னலும் விழுமணி கொழிக்குந்
தரங்க வாரிதிப் பள்ளியா னவர்க்கிது சாற்றும்
உரைத்தமாற்றரம் முளத்திலு முணர்ந்திலே மென்ன,
இன்றுதொட்டுநர மாமையிக் கியற்றிடு மிவனைச்
சென்று போற்றுத நீதென வொழிந்துதேன் பிலிற்றுங்
கொன்றை வேணிபன் குரைகழற் கன்புபூண் டேர்ந்தே
யன்று மாதவ ரிருவரு மாசற வுறைத்தார்.

என்னும் உண்மையாற் காண்க.இப்படியே விஷ்ணு மாதராசைமயக்கமிகையால் நீதிகடந்து புரிந்தவஞ்சச்செயல்கள் பற்பலஉள்ளன. விரிவுநோக்கிவிடுத்தாம். இவ்வாறு விஷ்ணுசெய்த மாதர்கலவிகளை நூற்பிரமாணத்துடன் கூறுதற்கு எதிரியாகச் சிவன்கைலையில் ஏழுநாள் இடையறாமல் உமையைப்புணர்ந்து கொண்டிருந்தானென்று கூறுகின்றனர். இதனுண்மை மேற்கூறினும், அன்றியும் சிவகுமாரர்கள் பிரணவசித்திரம் நெற்றிக்கண் முதலியவற்றில்தோன்றியமேன்மையும், விஷ்ணுகுமாரர்கள் சிவரேதசுமூலம் விஷ்ணுவினிடம்தோன்றிய கிழ்மையும், கணைசர் முதலியர் சிவாலயத்தில் உரியராய் வசித்தலும், பிரமாமுதலியர் அங்குவசிக்கப்பெறாமையுமுதலியஉண்மைநோக்கியுந்தெளியலாம்

வரம்புபடாமற்கிடந்த வேதங்களைத் திருவுளால் வரம்பு செய்தவரும் (கஅ)புராணங்களையுஞ் சனற்குமாரருருமுகமாயுணர்ந்து சூதர்க்கு அறிவித்தவருமாகியவியாசபகவான், தாம்சகுணத்தைத் தாலோ; தண்டிக்கப்பட்டாவது சிவபாத்துவம் விளக்குங் கருத்தாலோ, காசியிலே விசுவேசசந்நிதியிலே நாராயணனே பரமென்று கையெடுத்துக்கூற, உடனே திருநந்திதேவர் உங்காரத்தொனியால் அக்கையும் நாக்கும் அசைக்கமுடியாமல்வருந்துஞ் சமயம், நாராயணன்வந்து அறிவில்லாதவனே என்னைப் பரமென்றசிவத்துரோகத்தால் கையும் நாக்கும் தம்பிக்கப்பட்டாய் சிவனேபரமென்றுள்ளபடிதுதித்துய்வாயென்று செவியில் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக்கூற, அப்படியேதுதித்துவாழ்ந்தனர். இதனை,

(கந்தபுராணம்)

ஐயிரு புராணநூலமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூழ்புகல் வியாத னீட்டிய
கையடை நந்திதன் கழல்கள் போற்றுவாம்

(காசிகாண்டம்)

எண்டிசையி னுள்ளோருங் கேண்மின்க ணிறையாவான்
புண்டரிகக் கண்ணெனைக் கையெடுத்துப் புகன்றனனால்
அருவுருவா யேகமா யனேகியாய் நிறைந்தருளும்
பொருவரிய சிவனல்லாற் புண்டரிகக் கண்ணுனே
பிரமமென மயக்குற்றுப் பிதற்றுகின்ற பிழையதனால்
உரைபயில்நாக் கையசையா தூமனென முனியிருந்தான்
அத்தலையிற் பிழைகூறி யஞரெய்து முனிவரன்பால்
மைத்தசெழும் புயலனைய மணிவண்ணன் வந்தெய்திப்
பித்தரின்யா னிறையென்னப் பிதற்றியதென் மதியில்லோய்
எத்திறத்தா லெனையாளு மீசனைநீ மறந்தனையோ
முக்கண்ணன் சேவடியில் விழிமுளரி பெய்தன்றே
சக்கரமு மலர்மகளுந் தனப்பருஞ்செல் வமுமடைந்தேன்
அக்கடவு ளருள்சிறிது மடையாசேற் றம்பதத்தில்
எக்கடவு டேவென்றுங் கேமாப்புற் றிருக்குமால்.

ஊனமுறு சடமொருவ னுணர்ற்றினன்றி யாடாதால்
யானுலக மனிப்பதுவு நான்முகத்தோ னியற்றுவதுர்
ஆனிவருஞ் செஞ்சடையோ னட்டுவித்த லாமதனால்
வானவர்தஞ் செயலெல்லா மரப்பாவைக் கூத்தாமால்.
தண்ணிலவு மதிக்கண்ணித் தாழ்சடையோன்ருள்போற்றும்
புண்ணியநற் சிவகணங்கள் பூங்கழலிற் கிடப்பதெல்லாம்
எண்ணிறந்த வரிபிரமர் தலையன்றே வெனிற் சிறிதும்
தண்ணறிவி லாயெனையேன் பிரமமென தவல்கின்ருய்
கிண்ணயிற்சேர் கொடியபிழை மொழிசெவியி னேர்படலும்
என்வயிற்றி னெரிதவழ வளம்வெருவி யீண்டடைந்தேன்
பொன்னகலச் சிலைகுனித்துப் புரமூன்று மழலூட்டும்
மூன்னவனே யானறியா முழுமுதலைப் போற்றென்ருன்.

அண்ணன்மால் விடையூர்ந்த வரும்பொருளைப்பழிச்சுதற்கு
மண்ணிடந்தோ யெனதுநா வழங்கவருள் வழங்கென்று
கண்ணினுல் முனியுரைப்பக் கண்ணுதல்போ செவியினிசைத்
தொண்ணிறநே மியங்கடவுள் விசும்பிலெளித் தேகினனுல்

நீறணிந்த செம்மேனி நீலகண்ட னண்ணுமங்
கூறியது செவிப்புலத்திற் குறுகுதலு மருமுனிவர்
தேறிமுதுக் குறைவெய்திச் செழுமறைதேர் வியாதமுனி
யாறணிந்த செஞ்சடையெம் மந்தணனை யேத்துவனுல்

என்னும் உண்மையாற்காண்க. இவ்வாறு விஷ்ணுமூர்த்தி நேரேவந்துநானும் பிரமனும் தேவர்யாவரும் சிவனடியார்களே-இவனொருவனே பசுக்களாகிய எமக்கெல்லாந்தலைவனுகிய பசுபதியென்றுவியாசபகவானுக்குவிளக்கியதுமன்றி அச்சிவமூர்த்தியைவர்க்குஉபதேசமுடிவில் எனதுஅடியவர்செருக்கினுல் சிவனைவணங்காமல் இகழ்வரேல் மீளாநரகடைவரென்றுகூறினர். இதனை,

(காசிகாண்டம் விந்துமாதவன்மேன்மியஅத்தியாயம்)

அருமறைமுனிவவெம்முடையடியாரெனுமனச்செருக்கினுலரனைப்
பரவிடாதிகழ்ந்தோருலப்பிலாக்கொடியபாழ்நரகினடச்சூடியிருப்பார். என்றதனுற்காண்க.

சுபன்என்னும்அரசன் கோபமிகையால் தீதிருமுனிவரைவச் சிராயுதத்தால் வெட்ட, அதுமுனிமழுங்கி விழக்கண்டு பயந்து விஷ்ணுவை வேண்ட, அவர்வந்து சக்கிராயுதத்தைஏவ, அது திரும்பிவிட, முனிவர், இச்சக்கரம் எமது இறைவன் உனக்குந் தந்ததாதலால் என்னை விரோதியாது திரும்பியது. நீ வேறுவிடுக என்றுகூற, விஷ்ணு வேறுஆயுதங்கள்விடுப்ப, முனிவர்ஒருதருப் பைப்புல்லினால, அப்புல் அவைகளைப்பற்றி விழுங்க, அது கண்டு உலகர் பயந்தோட, விஷ்ணு தன்போலக்கோடிவடிவங்களை உண் டாக்கிவிட, முனிவர் கோபத்தால்அவைவெந்துசாம்பராக, விஷ் ணு, மாயையாற்பலஅண்டங்கள்செய்ய, முனிவர், உன்மாயைகள் நம்மால் அழிந்தன. உனக்குஞானக்கண்தருகின்றேம் நமதுமகா மாயைகளைக்காணுகஎன்றுகூறிப்பலமாயைசெய்ய, விஷ்ணு வலி யிழந்து மயங்கிநிற்குஞ்சமயம், பிரமன்வந்து உலகம் அஞ்சுமிந்த யுத்தத்தைஒழிகவெனவேண்ட, விஷ்ணு உடனேமுனிவரைவணங் கிச் சென்றனர். அரசனும்வணங்கி முனிவரருள்பெற்றுச் சென்ற னன் இதனை, (இலிங்கபுராணம் கூச கூடு. அத்தியாயம்)

முடியின் மீதி னுதைப்ப முனிர்தெதிர்
மிடல்கொள் வேதியன் மார்பினில் வெட்டவாய்
மடிய வச்சிர மாதிலம் வீழ்ந்தது
கடலந் தானை யரசன் கலங்கினன்

கலங்கிய அரசன் விஷ்ணுவை வேண்டஅவர்வந்து,

எறிதந்த வாழியெதிர் செல்கில தாகி மீள
மறைதந்த ராவணகைத் தென்னுழை வந்தி டாதாற்
கறைதந்த கண்டத்திறை யோன்கதிர் நேமி யீது
விறலந்கு வெம்படை வேறு விடுத்தி யென்றான்
வானத்தவ ரோடுடன் கூடிய மாயன் விண்ட
தேனக்க செய்யமல ரோன்கணை தெய்வ வாளி
கூனுற்ற வரிவில்லின் வரிநாணிற் கொளுவி யேவக்
காணுற்ற தருப்பைமறை யோன்கனன் றேவி னனே.
நெய்வா யொழுகக் கனறும்மி நிணங்க முழ்ந்து
பைவாளர வொத்ததி வற்றபுற் பற்ற லோடு

மைவான்முகில் போலுமம் மாயவ னன்றி யாரு
கையாலெரு வித்திசை நான்கினு நண்ணி னுரே
பொன்னங்கம லங்கம ழுந்தியான் பொங்கி யார்த்துத்
தன்னிற்பொலி வெங்கணங் கோடி சமைத்து விட்டான்
கன்னற்கு தலைக்கொரு பங்கணைக் காத லாலே
முன்னிக்கன லாவையு வேவ முனிந்து நின்ருன்.

அதுகண்டு மாயோன்பலவண்டங்கள் செய்த லோடு
மதிதங்கு மெய்ம்மைமறை யோன்மிகு மாயை செய்வண்
முதிர்கின்ற வாழித்துயில் வோயவை முன்னி நோக்கக்
கதிர்தங்கு ஞானவிழி தந்தனன் காண்டி யென்ருன்.

புரிகின்ற மாயைபல நெஞ்சு புழுங்க நோக்கிக்
கரைகொண்ட வாழித் துயிலண்ணல் கலங்கி நிற்ப
மருவிண்ட வந்தண் கமலத்திறை வந்து நீவிர்
வெருவந்த விந்தச்சமர் விட்டுறை வீர்க ளென்ருன்
மலருற்றுறை யந்தணன் வாசகங் கேட்டு மாயோன்
கலைமுற்றுணர் வேதியன் முளிணை கைகள் கூப்பி
யலைதுற்றிய பாற்கடற் பள்ளிய னுக்கு மேவக்
கொலைபற்றிய வேற்சுப னுள்ளங் குழைந்து சென்ருன்
சென்ருங்கவன் சேவடித் தாமரை சென்னி சேர்த்தி
நின்ருரருள் செய்தி யென் றேத்தி நிகழ்த்த லோடும்
குன்ருவரு ளந்தண னின்னருள் கூர்ந்து வேண்டே
பொன்ருத செல்வத்துயர் மாநகர் போதி யென்ருன்

என்னுமுண்மையாற் காண்க. இதனால் விஷ்ணுவானவர்சிவ பத்தருக்கு எதிர் நிற்கும் வலியுமிலரென்பது தெளிவாயது.

ஈசனெதிர் நின்ருலு மீசனருள் பெற்றுயர்ந்த
நேசரொதிர் நிற்ப தரிதாமாற்—றேசுவளர்
செங்கதிர்முன் னின்ருலுஞ் செங்கதிர வன்கிரணந்
தங்குமணல் நிற்பரிதே தான் .என்ருர் பெரியோர்.

திருநந்திதேவர் பிருகுமுனிவர்பிருந்தாதேவிமுதலியர்சாபத்தால்விஷ்ணு,ராமகிருஷ்ணரியாகப்பிறந்து அப்பலனை அனுபவித்

தலேலோகோபகாரச்செயலாகஉபசரித்துக்கூறுகின்றனர். திருநந்தி சாபவிவரம்முன்காட்டினும். பிருகுமுனிவர்பத்தினிகற்பிற்சிறந்த உத்தமி கெர்ப்பிணி தனக்குமாமிஎன்பதுநோக்காமல்அம்முனிவரில்லாதசமயம் சக்கரத்தாற்கொன்றவிஷ்ணுவை அவர் இப்பாதகன் அனேகயோனிகளிற்பிறந்துலகைன்று சபித்தனர். அதனால் வருந்திச் சிவனையடைந்து பூசித்து வேண்டிய அவவிஷ்ணுவுக்கிரங்கிச்சிவபிரான் பிருகுவைநினைக்க, அவர்வந்துவணங்கிநிற்பஅன்பனே இவன்செய்ததுபெரும்பாதகமே; ஆயினும பொறுத்துச் சாபம்நீக்குதற்கோருபாயஞ் செய்கஎன்று கூற, முனிவர், அனேக மென்றது மாறிப்பத்துப்பிறப்பாகுக. ஒருபிறப்பில் பத்தினியை இழந்துகாட்டிலுலக. சக்கரம்ஒருமுகூர்த்தநேரம் ஒளிமழுங்கிக் கறையுறுக. என்றுகூறிச்சென்றனர். விஷ்ணு, சிவனை வணங்கி அடியேன் அப்பிறவிகளில் மயங்காமல்அறிவுதந்தருளுக என்று வேண்ட, ஐந்துபிறவிகளில் அறுக்கிசகமும் ஐந்தில் நிக்கிரகமும் பெறுக என்றுஅருளினர் இதனை, (சேதலமான்மியம்.)

சிவபுரத்தமல னுள்ளஞ் செய்தலு மனத்திற் போற்று, தவறிறை பிருகு வெட்மான் சரண்முடிக் கொண்டுதாழ்ந்து, சிறியனேன ...சிந்தைசெய் தருளிற்றென்கொ றெரித்தருள் பெருமவெண்ணூன், நிறைவுறு முனிவ கேட்டி

பவனீன புரிந்து வருந்துமால் சாபம் பாறுமோர் பரிசுரை எனவப், பவனருள் சிரமேற் கொடுமுனி யுரைக்கும் பங்கயக்கண்ணாயளவில், பவமென லகன்றீ ரைந்துமட் டடைந்தப் பவங்களுட் டசரதன் மகவாம், பவமதின் மீனையை யிழந்து சின்னளிப் பாரினிற்காணிடைப்பயில்க.

சக்கர மீயா தவகுலத் துதிக்குஞ் சனனத்தோர்முகூர்த்தமாமளவு, மிக்கபே ரொளிபோய்க் கறையுரு வடைந்து விளம்பிய சாபமேற் றெழுகென், றக்கட வுண்மா முனிசெல வரன்றூளிபணிந் தமலனே யடியேன், புக்குறை தருமப் பிறப்பிடை மயங்காப்பிறவாதமீந் தருள்செனப் புகன்றனன்.

திருமலுமார்பன் பணிந்துரை வாய்மை திருச்செவிமடுத்தசனருளும், அரிதின தொருபான் பிறப்பினு ளிற்தே யனுக்கிர கம்

பிறற்கமைவ , உரியதிக் கிரகம் பெறுவமற் றைர்த்ரு மூவற்றினு மீற்றினிலருள்வோம் , பரிவுறேல் விழைந்த வாறுமெஞ் ஞான்ம பாலித்துன்பதம் புகவளித்தும். என்னுமுண்மையாற் காண்க.

அனுக்கிரகம் பெறுதற்குரியவென்ற ஐந்து பிறப்புள்ளும் , ராமர் மாயமான் என்று அறியாதுமயங்கியதும், சீதைபிரிவால் வருந்தியதும், அனுமான் சுக்கிரீவன் முதலியதுணை வேண்டியதும் சீதைஇருக்குமிடந்தெரியாதுதேடியதும், வாலிசுக்கிரீவர்களின்வேற்றுமைதெரியாமல்சுக்கிரீவனுக்கு அடையாளஞ்சொல்லி வஞ்சமாகமறைந்துபின்னின்றுவாலியைக்கொன்றதும், நாகாஸ்திரத்தால் கட்டுண்டு அறிவுமயங்கிக்கிடந்து அனுமான்உதவியால்தெளிந்ததும், மாயசீதையை வெட்டக்கண்டுபுலம்பியதும், அகஸ்தியரை வணங்கி ஆதித்தஇருதயம் சிவகீதைமுதலிய உபதேசமும் ஆயுதாதிகளும் பெற்றதும், பலதலங்களிற் சிவனைப்பூசித்து வரம் பெற்றதும், அவ்வலியினாலேயே ராவணனைக்கொன்றதும், அப்பிரமகத்தி சிவலிங்கபூசனைபால் நீங்கியதும், முடிவில்ராமரை யமன் வந்து அழைத்ததும், தாருவாசனைத்தடுக்கமுடியாமல் இலக்குமணன்சரயுநதியில் வீழ்ந்து உயிர்நீங்க அதற்குவருந்தித் தாமும் சென்றும் மற்றெல்லாரும் அந்நதியில்வீழ, யமன்அழைத்தபடிவைகுண்டஞ் சென்றதுமுதலியவைகள் அவர் மலசகிதசிவரேஎன்பதை நன்கு விளக்கும். இவைகள் வடமொழிதென்மொழிராமாயணம் இரகுவம்சம் முதலியநூல்களிற்கூறப்பட்டனவே. இவற்றைமனுஷ்ருபியாய்வந்ததற்கிசையச்செய்த நாடகமென்பர். மானவியைராக்ஷதன் கவர்ந்ததும், வருந்தியதும், வாலியைமுன்னின்று கொல்லமுடியாமல் மறைந்துநின்றுகொன்றதும், அகஸ்தியரைவணங்கி உபதேசம்முதலியபெற்றதும்,சிவனைப்பூசித்துவரம்பெற்றதும்,இவை போன்றபிறவும் நாடகந்தானே;

இனிக் கிருஷ்ணர்செயல்களிலிரிப்பிற்பெருகும். ராமரால் வஞ்சித்துக்கொல்லப்பட்டவாலியேவேடனாய்ப்பிறந்து கிருஷ்ணர்காலில் எய்த அம்பினால் அவர் இறந்தாரென்பது பாரதத்துள் ளதே. இதனை இருப்புலக்கையின் துணுக்கைத்தன் அம்புக்குமுள் ளாக வைத்து ஜரன் என்னும் வேடன்தூரத்திலிருந்து சுவாமி

ருவடியை ஓருமிருகமாகவினைத்துத்திருத்தாளின் அடிப்புறத்தில் எய்தான் என்று விஷ்ணுபுராணம் (நும்அம்ஸத்தில் நூனம் அத்தியாயம் விளக்குகின்றது. பரசுராமர் அநீதியாகக்கார்த்த வீரியன் முதலிய அரசர்களைக்கொன்றபாதகம் நீங்கத்தீர்த்தயாத்திரை செய்ததைப் பாகவதம்கூறுகின்றது.

பலராமர் அகந்தையால் சூதமுனிவரைக்கொன்றபாதகம் நீங்கயாத்திரைசெய்ததும் அதுவேகூறும். வாமனர் தன்னைவழிபடுகின்ற மாபலிஇடம்செய்த வஞ்சனை பிரசித்தமே. அவர் உடம்பிற்றோலைச் சட்டையாகத்தரித்தது சட்டைநாதர்வடிவும் விளக்கும். இனிப் பன்றி, ஆமை, மீன், நரசிங்கமானபோது சிவானுக்கிரகத்தால் பகைவென்றதை மறந்து அகந்தைவெறிகொண்டு உலகுக்குஅப்பகைவர்செய்தஇடரினும் பேரிடர்செய்ய, அதனைச் சகிக்கமாட்டாமல்தேவர்கள் சிவபிரானைவணங்கிவேண்ட. அவர் விநாயகர் சுப்பிரமணியர் வீரபத்திரரைஏவி அப்பன்றிக்கொம்பு ஆமையோடு மீனக்கண் நரசிங்கத்தோலை அடையாளமாகத்தரித்தருளினர்-

இவ்வாறு விஷ்ணு அகந்தைபுற்றகாலங்களிலும் ஒதுக்கிவிடாமற் சிவபிரான்அதனைநீக்கி அவர் சுத்தராய்உய்யும்படி அவர் அவயங்களையுந்தரித்து மேலும் அருள்செய்துவரும் நன்மிறவாது பற்பலசிவஸ்தலங்களில்விபூதிருத்திராக்ஷதாரணராய்ப்பூசித்துய்ந்தனரென்னும்உண்மையை அத்தலங்களும் புராணங்களும் சுருதியாதிநூல்களும் விளக்குதலால், முற்காலத்துள்ளஉத்தமவைஷ்ணவர்கள்தாங்களும்விபூதிதரித்துவிஷ்ணுமூர்த்திக்குந்தரித்தஆலயாதிகளில் வழிபட்டுவந்தனர். இதுமுற்காட்டிய பிரமாணவிளக்கமே. ராமானுஜர்வழிப்பட்ட இக்காலவைஷ்ணவர்கள்தாங்களுந்தரியாது விஷ்ணுமூர்த்திகளுக்குந்தரியா தொழிந்ததுமன்றித்தாங்களும்ஊர்த்துவபுண்டரமண்ணிட்டு விஷ்ணுமூர்த்திகளையுந்தம்போலச்செய்கின்றனர். அவருள்ளேதென்கலை வடகலைச் சண்டையால்மூர்த்திகளில்கம்மியரால் அமைக்கப்பட்டபுண்டரங்களை அரித்திழுல் தம்பகூத்துக்கிணங்க மாற்றுகின்றனர். அம்மூர்த்திகளைச்செம்பொன்றுகல்லென்றும்நினைத்தே அக்கொடுந்தொ

ழில்களே அப்பாதகர்கள் செய்து விபூதிருத்திராக்ஷங்களே மறைக்கின்றனர். மறைத்தாலும் முற்காலத்து உத்தமவைஷ்ணவர்கள் விஷ்ணுமூர்த்திக்குவிபூதிருத்திராக்ஷம் தரித்துப்பூசித்துவந்தபடியே திருக்கண்ணபுரத்திலே சவுரிராஜப்பெருமாளுக்கு ஒரு திருநாளிலே விபூதிருத்திராக்ஷந்தரித்து அலங்கரித்துவருதலை யாவரும் காணலாம்.

இனி, வைஷ்ணவர்கள் ருத்திரன்தாமசகுணத்தனென்று கூறுவதைமறுத்து, அக்குணம் செயல்பற்றிமேற்கொண்ட புறக்குணமே, அதுவுங்குணருத்திரரிடத்தன்றிக் குணாதீதபரசிவனிடத்தின்றெனக்கூறுதற்கு எதிரியாக, விஷ்ணு சிவனைப்பூசித்ததுமுதலிய வெல்லாம் குணவிஷ்ணு செயலன்றிப்பரவிஷ்ணு செயல்அல்லவென்கின்றனர். இதுவும் எதிர்மொழியன்றிப் பிரமாணமொழியன்று. வேதாதிபொதுநூல்களும் திருவாய்மொழிமுதலிய சிறப்புநூல்களும் விஷ்ணுவை மூவருள்ஒருவனென்றேகூறுகின்றன. வைஷ்ணவர்களும் விஷ்ணுவை(உரி)வதுதத்துவமாகிய பிரகிருதிமாயாரூபியென்றே கூறுதலாலும்(உரி)க்குமேல் தத்துவங்கொள்கை அவர்களுக்கின்மையாலும் அவர்கள் கருத்தின்படி அப்பரவிஷ்ணுவும் அவ்விருபத்தைந்துமட்டிலன்றி மேற்செல்லும் வலியிலனென்பதுதெளிவாம். சிவபிரான் அப்பிரகிருதிக்குமேல் அசுத்தமாயை சுத்தமாயைகளும் அவற்றின் விரிந்தனவாகிய(நூசு)த்துவங்களுங்கடந்து நின்று மூவர்க்கும்மேலாய் விளங்குமுதல்வனென்பதுசுருதிவிளக்கமே. இதனை "மூவாலுமறியொணாமுதலாயவானந்தமூர்த்தியான்,, என்பதுமுதலிய திவ்யசுருதிகளாற்காண்க.

இதுகாறுங்கூறியவாற்றாலும் விரிவுநோக்கிவிடுத்தபலபிரமாணங்களாலும் விஷ்ணு சிவபூஜாதியதிருத்தொண்டுகள் செய்துவருகின்றவரேஎன்பதும், சிவாஞ்ஞையால் வைகுண்டபதம் பெற்றுவாழ்பவரேஎன்பதும், அத்தொண்டு நழுவினால் அத்தலைமையும் நழுவுமென்பதும், அதுஒவ்வொருகால் அகந்தையால் மாறியபோதும் ஒதுக்கிவிடாமல் அருளினால் தண்டித்து அறிவுறுத்தப்பெற்றுத்தன்னிலையிலும் தனது அவதாரநிலையிலும் எப்போதும் விபூதிருத்திராக்ஷதாரணராய்ச் சிவபூஜாதியதிருத்தொண்டுகளையே

செய்து வருகின்றனரென்பதும், சுருதிகளில் விஷ்ணுவுக்கும் மற்றுந்தேவர்க்குங்கூறும் பரத்துவம் அவரவர்க்குச் சிவபிரான் கொடுத்தவுத்தியோகத்தலைமை, அவரவர்கீழ்வாழுங்குடிகளுக்குவிளக்கும்பொருட்டு வைத்தவுபசாரமேஎன்பதும் இவைகளுக்குவிரோதமாக வைஷ்ணவர்கூறுவனவெல்லாம் பிரமாணமில்லாத அபத்தங்களேஎன்பதும், விஷ்ணு சிவபத்தராய்(உரு) வதுதத்துவம்வையிலுள்ள பீடசக்தியாய் சப்தகுரவரில்ஆறுவது குருவாய்ச்சைவாகளாகியஎம்மவர்களால் அந்தஅந்தமுறையில்வைத்துப்பூசிக்கத்தக்கவராய்ச்சிவபிரான் கீழ்ச்சார்ந்துநிற்பவசேயாதலால் அவரைஎடுத்துக்கூறும் வைஷ்ணவ வேதாந்தமும் சைவவேதாந்தத்தின்கீழ்(உரு)வது தத்துவமட்டில் நிற்பதேஎன்பதும் சக்திபிரமாணங்களுடன் விளக்கமாதல்காண்க.

மாயாவாதவேதாந்தம்.

மாயாவாதவேதாந்திகள் "பிரமம் ஒன்றுதான்என்றுமுள்ளபொருள். நாமே அப்பிரமம்: அதைத்தவிரயாதொன்றுமில்லை. மற்றெல்லாம் பொய்யே" என்பனவாதியாகவாதிக்கின்றவர்கள்: அவர்கள் மாயாஎன்னுஞ்சொல்லை *யா மா ஸ மாயாஎனவிரித்துஎதுஇல்லையோ அது மாயா என்று பொருள்கொள்ளுகிறபடியால் எல்லாம்பொய்யென்னும் அவர்களே மாயாவாதிகளென்பது அப்பொருட்பொருத்தமாயமைந்திருக்கவும் நாங்கள்மாயாவாதிகளல்லேம்உலகத்துக்கு மூதற்காரணம் மாயையென்கின்ற சைவர்களேமாயாவாதிகளென்கின்றார்கள்.

(சைவர்களேமாயாவாதிகளென்பது பொருந்தாமை)

மதவாதிகள்பேசும் வார்த்தைகள் பற்பலவாகும். அவைநோக்கி அவர்கள் அந்தந்தவாதிகளாகார். ஒருமதஸ்தர் குடத்துக்கு மூதற்காரணம் மிருத்திகையென்னும் போதுமிர்த்திகாவாதி அங்குரத்துக்கு மூதற்காரணம் பீஜமென்னும்போது பீஜவாதி சொல்லுக்கு மூதற்காரணம் அக்ஷரமென்னும்போது அக்ஷரவாதியென்

---

* மா ஓடுங்குதல். யா தோன்றுதல் இதுவேசைவாகமத்துணிபு

ஞவதில்லையன்றே அதுபோல உலகத்துக்கு முதற்காரணம் மாயையென்னுஞ் சைவர்களே அச்சொல்மாத்திரம் நோக்கி மாயாவாதிகளென்பது பொருந்தாதென்க.

(நாம்பிரமம் என்பவர்களேமாயாவாதிகள்)

ஆனல்பிரமம் ஒன்றுதவிரயாது மில்லையென்பவர்களே இல்லையென்னும் சொல்நோக்கி மாயாவாதிகளென்பது எப்படிப்பொருத்துமென்றல் அவர்கள், (திருக்குறள்)

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலைகையாய் வைக்கப் படும்.

என்னுர் தேவசுருதியும்நோக்காமல், ஜீவனில்லை ஈசுரனில்லை ஜெகமில்லை புண்ணியமில்லை பாவமில்லை சுவர்க்கமில்லை நரகமில்லை பந்தமில்லை மோக்ஷமில்லை இல்லையென்றே கூறுகின்றுர்களாதலாலும் மாயா: என்னுஞ்சொற்பொருளும் இல்லையென்பதே அவர்கள்கருத்தாதலாலும் அக்கருத்தின்படியும் அவர்களே மாயாவாதிகளென்பது பொருத்தமேயென்க. பிரமோபாசனைசெய்கின்றநாங்கள் பிரமவாதிகளே என்பரேல் அதனலும் மாயாவாதிகளென்பதே முடிவாம். எப்படியெனில்! அவர்கள் உலகத்துக்குமுதற்காரணம் பிரமமெனக்கொண்டு அம்முதற்காரணத்தையே உபாசித்தலாலும் முதற்காரணம் மாயையேயாதலாலும் அவ்வுபாசனை அம்மாயையிலேயேவந்துமுடிதலாலும் அவ்வழியினும்மாயாவாதிகளேயாவரென்க. அவர்கள்கூறுமாறு பிரம்முதற்காரணமாகாதோவெனில் பிரமமோ சித்தாகிய அறிவுடைப்பொருள் உலகமோஜடமாகிய அறிவிலாப்பொருள் சித்துச்சாதியாகியபிரமத்திலிருந்து ஜடமாகியவேறுஜாதிதோன்றுதென்க இதனை, மனிதரில் மிருகமும் மிருகத்திற் பறவைபறவையில் ஊர்வனமுதலியனதோன்றுமல் அவ்வச்சாதிகளே தோன்றுகின்றபிரத்தியக்ஷத்தாலும் காணலாம். ஆகவே ஜடமாகிய உலகந்தோன்றுதற்குச் சடமாகியமாயையே முதற்காரணமாகுமன்றிப் பிரமம் அன்றென்பதும் அப்பிரமம் நிமித்தகாரணமே என்பதுந்தெளிவாயது. இதனை, சுவேதாசுவதரோபநிஷதம் "மாயாந்துப்ரக்ருதிம் வித்யான் மாயிநந்து மஹேச்வரம்" மாயையைப்பிரகிருதியென்றறிக மாயையையுடையவன்மகேசுரனென்றறிக. என்று கூறுதல் நோக்கித்தெளிக.

காரணம் மூன்று

ஒருகாரியம்வெளிவருதற்கு முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் மூன்றுவேண்டும். நிமித்தகாரணனாகிய குசவன் முதற்காரணமாகிய மண்ணினின்று துணைக்காரணமாகிய தண்டசக்கராதிகளால் குடமாகியகாரியத்தை உலகர் பொருட்டுத்தோற்றுவித்தல்போல, நிமித்தகாரணமாகிய பிரமம் முதற்காரணமாகியமாயையினின்று துணைக்காரணமாகிய சக்தியால் உலகமாகிய காரியத்தைச் சீவர்கள்பொருட்டுத் தோற்றுவிக்கின்றதென்பதே சாஸ்திரசம்மதம். இவ்வாறு உலகத்துக்குமுதற்காரணம் மாயையேயென்பதை; (மிருகேந்திராகமம் மாயாப்பிரகரணம்.)

“ கதபூநஸீயதெபநஜமயுதெபூணஹெதஸநா
தெநெநவாஷாநம்சாயாஹிநவடஸ்துஸ்ஹிவிபூநா ”

இ—ள் உலகம் காரியரூபமாகக்காணப்படுகிறதாதலினால் அதனைத்தோற்றுவிக்கின்ற நிமித்தகாரணனாகியகர்த்தா ஒருவனுண்டென்று எப்படி அநுமானத்தால் நிச்சயமாகின்றதோ அதுபோல அந்தஉலகத்துக்கு முதற்காரணமாகிய மாயையுமுண்டென்பது நிச்சயமே. அது நூலில்லாமல் வஸ்திரம்தோன்றுதவாறுபோலாம்;என்பதனாலும்,

“ தநெகஸிவம்வீஜம்ஜமதஸ்துதூஷ்டிஸ்
ஸஹகாயபிகாராஹவாநெராயிவ்யாவ்யநஸ்வரூபா ”

இ—ள் அர்த்தமாயையானதுஏகமாய் சிவமல்லாததாய் ஜகத்துக்கு முதற்காரணமாய்ப் பலவேறுசக்திகளைபுடைத்தாய்ச் சகாரிகளாகியகர்மங்களின் அதிகாரமுடிவுவரை சீவர்களை மறைப்பதாய் வியாபகமாய் நாசமில்லாததாயுள்ளதென்பதனாலும்,

(பௌஷ்கராகமம் பிந்துபடலம்.)

“ நாதூஷ்டிரூவாஷாநஃஸி உ—வெகூஷாஷ்யுஷாஸிவஃ
வரிணாஸோஷிதம்வெராகஸ்துஷ்டு—வெவஸ்யுநயூஜ்யுதெ”

இ—ள் விகாரப்படாததாய்ச்சித்தாயிருப்பதால் சிவமாவது சிற்சத்தியாவது ஜடமாகியஉலகத்துக்கு முதற்காரணமாகாது. சித்துக்கு (ஒருகாலத்தும்) விகாரமுண்டாவதில்லை. அசித்துக்கே

விகாரமுண்டு. அசித்தாகியமாயையே அசித்தாகியஉலகத்துக்கு முதற்காரணமாகுமென்பதனாலும், ஜடமாகியவஸ்திரத்துக்கு ஜடமாகியநூலே முதற்காரணமாதல்போல ஜடமாகியஉலகத்துக்கு ஜடமாகியமாயையே முதற்காரணம் என்பது தெளிவாய்து. ஆகவே பிரமம் நிமித்தகாரணமேயென்பதும் விளக்கமே. இவ்வுண்மையை கைவல்லியம் ''எக்குணங்களும்பற்றாதோனிமித்தகாரணனுமீசன்'' என்று தெளிவிக்கின்றது. ஈசன் நிமித்தகாரணனென்ற இதனால் மாயை முதற்காரணமென்பது சொல்லாமேயமையும்.

ஸ்ரீமந்நடராஜப்பெருமானாலுஞ் சீட்டுக்கவியனுப்பிப்புகழ்ந்து பாராட்டப்பெற்ற உமாபதிசிவாசாரியர். மாயாவாதிகளின்கொள்கைகளைவிளக்குமிடத்து. ''அகமேபிரமமாயினனென்னவறிந்து .....மாயாவாதிவகுத்துரைத்தனனே'' என்று விளக்கியருளினர். இதனாலும் நானே பிரமமென்பவனெவனோ அவனே மாயாவாதியென்பது வெள்ளிடைமலைபோல விளங்குகின்றது. ஆதலால் அவர்களே மாயாவாதிகளென்பது தெளிக. இதனையே ''மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்டமாருதஞ்சுழித்தடித்தார்த்து'' என்று ஸ்ரீமந்மணிவாசகசுருதியும் விளக்கியதுக்கியது.

(மாயாவாதிகள்கூறும் சிலம்பிபுவமைபொருந்தாமை.)

இனி அவர்கள் சித்தாகியசிலம்பிப்பூச்சியில் சடமாகியநூல் தோன்றுதல்போலச், சித்தாகியபிரமத்தில் ஜடமாகியஉலகந்தோன்றுமென்பர். சிலம்பியின்உயிர்தான் சித்து உடம்பு சடமே; சடமாகிய நூல் சடமாகியஉடம்பினின்றுதான் வருகின்றது ஆதலால் அந்நூலுக்கு முதற்காரணம் அவ்வுடம்பேயன்றிஉயிரன்று. ஆதலால் அவ்வுவமை பழுதென்க. அப்படியானால் உயிர்நீங்கியகாலத்தும் அவ்வுடம்பினின்றுநூல்வரவேண்டும்; வாராமையால் அவ்வுடம்பிற்றான் நூல்வருமென்பது பொருந்துமோவெனில்? சடமாகியஉடம்பு தானேநூலைவெளிப்படுத்தாது. சித்தாகியஉயிர் நிமித்தகாரணமாயிருந்து வெளிப்படுத்துமென்க. இதனைச், சடமாகிய மண் தானே குடமாய்வராமையும் நிமித்தகாரணனாகிய குயவனாலேயே வெளிவருதலும் நோக்கித் தெளிக.

இது யாவருமுணரக்கூடியதே. இதனை ஆபத்துச்சமயத்தில் எதிரிகளை வெல்லுதற்குரிய அரியஆயுதம்போலக் கொண்டபடியால் இவ்வுவமையை நீலகண்டசிவாசாரியரிடம் சங்கராசாரியர் உபயோகித்துவென்றதாகச் சங்கரவிஜயத்தில் எழுதிவைத்துமகிழ்கின்றார்கள், விஷ்ணு ஆபத்துக்குத்துணையெனப்பெற்ற சக்கராயுதம் தார்கனிடத்துபயோகிக்கப்பட்டு அவருக்கு அபகாரமாய் அவன்மார்பிற்பதக்கமென உப்காரமாயமைந்ததுபோல, இவ்வுவமை அவர்களால் எம்மவர்களிடம் உபயோகிக்கப்பட்டு அவர்களுக்கு அபகாரமாய் எமக்கே உபகாரமாய்ப் பிரமம் நிமித்தகாரணமே; மாயை முதற்காரணமேயன்பதற்கே பிரமாணமாயது காண்க. (பிரமம் நிமித்தகாரணமென்பதில் வரும் ஆக்ஷேபத்துக்குச் சமாதானம்.)

ஆனல் சைவர்களாகிய நீங்கள் உலகெலாம் சிவனிடத்தில் ஒடுங்கித்தோன்றுவதாக "அர்தம் ஆதி" என்று கூறுதலால் முதற்காரணம் பிரமம் என்பது உமக்குச் சம்மதமன்றேவெனில்? அதுவும் உற்றுநோக்காதகுறையேயாம். அஃதாவது கிழங்கில் தோன்றும் தாமரையை அக்கிழங்குக்கு ஆதாரமாயுள்ள சேற்றில் தோன்றியதென்னும் பொருள்படப் "பங்கஜம்" என்பதுபோல, (பங்கம்—சேறு. ஜம்—தோன்றுவது.) மாயைபிற்றோன்றுமுலகைச் சிவனிடம் தோன்றியதென்பது அம்மாயைக்கு ஆதாரமாகிய சிவசத்திஒற்றுமைபற்றியன்றி வேறில்லை. இதனை, "வித்துண்டா மூல முளைத்தவா தாரகமாம், அத்தன்ரு னிற்ற லவர்வினையால்—வித்தகமாம்.....மண்போற்குளிர்ந்து" என்ற சிவஞானபோதத்தாற்காண்க. இதனில்; உலகமுதற்காரணமாயையும் அதில்தோன்றும் உலகமும், வித்தும் அதில்தோன்றும்முளையும்போலுள்ளன. அந்தவிதை தானுகமுளையை வெளிப்படுத்தமுடியாது; தனக்கு ஆதாரமாகிய பூமியிற்கிடந்து பூமிகுளிர்ந்தபோது தான் வெளிப்படுத்தும். அதுபோல, மாயையும் தானுக உலகத்தைவெளிப்படுத்தமுடியாது; தனக்கு ஆதாரமாகிய சிவசத்தியிற்கிடந்து அச்சத்தி உலகந்தோன்றுகவென்று நினைத்தபொழுதுதான் உலகை (தனுகரணபுவனபோகங்களை) சீவர்களின்வினைக்கீடாக, அவ்வவ்விடங்களில்புக்குவிரோதமில்லாமல் வெளியிட்டுக்கொடுக்கின்றசத்து

ரியமுள்ளதென்பது விளக்கமாம். இதனை உற்றுநோக்கும்போது இந்நிலத்தில் இப்பயிர்தோன்றியதென்றெருவர் கூறினால், அப்பயிர் அந்நிலத்திற்கிடக்கும் விதையிற்றோன்றியதென்பதேஉண்மையாதல்போலப், பிரமத்தில் உலகந்தோன்றியதென்னுமிடத்தும் அப்பிரமத்தில் அபிந்நமாயுள்ள சத்தியை ஆதாரமாகக்கொண்டிகிடக்கும் மாயையிற்றோன்றியதென்னும் உண்மை தெளிவாகும். ஆனல் பிரமத்தில் உலகந்தோன்றுமென்பதும் விரோதமில்லையேயெனில்? அவர்கள் மேற்கூறியபடி ஆதாரஆதேயஒற்றுமைபற்றியேகூறியதென்றுகொள்ளாமல் சித்தாகிய பிரமமே ஜடமாகிய உலகமாயதன்றி உலகமென்றெருபொருளேயில்லை; சிவர்களுமில்லை; எல்லாம் பொய்யே; பிரமத்தில் உலகத்தோற்றம் பிராந்தியே; அஃதாவது அறிவில்லாருடையமயக்கமே என்று முடிக்கின்றுதலின் அது விரோதமேயென்க.

பிரமந்தவிரயாதுமில்லையென்பது யுத்திக்கும் பொருந்தாமை.)

இனி, மாயாவாதிகள் பிரமந்தவிர யாதுமில்லையென்று கூறுமிடத்து அங்ஙனங்கூறுகின்றவர் யாரெனில்? அவரும் பிரமமேயென்பராயின், அது பிரமங்கூறினதாகுமாதலால், என்னைத்தவிரயாதுமில்லையென்று கூறவேண்டும். அதுவும் தானேசொல்லிக்கொள்ளாது. பிறரிருந்தாற்றான் அவர்க்குச் சொன்னதாகப்பொருத்தமாகும். இதனலேயே பிறபொருளுமுண்டென்பது நிசயமாகும்போது பிரமந்தவிர யாதுமில்லையென்று பிறர் கூறுமிடத்து அவ்வாறு கூறிய பிறருமுண்டென்பதில் என்ன சந்தேகம்?

பிரமம் என்னுஞ் சொல் பெரிது, பெரிதாக்குவது என்னும் இருபொருளுந்தரும். இவற்றிற் பெரிதென்பதை அவ்வேதமேயாவராலுந் தியானிக்கத்தக்கவன் சிவன்ஒருவனேஎனவிளக்குஞ் சிவஏகோதியேய: என்பதுமுதலியவற்றாலும், பெரிதாக்குவதென்பதைச் சிவத்தைச்செய்வோன்(பெரிதாக்குபவன்) எனவிளக்கும் சிவங்கர என்பது முதலியவற்றாலும் தெளிவிக்கின்றது. இதனை, அவ்வேதசாரதிராஜிடசுருதி "சிவனெனுநாமந்தனக்கேயுடைய செம்மேனியெம்மான்" "சிவமாக்கியெனையாண்ட" என்பனவாதியாற்செவ்வேகாணலாம். இதனால் பிரமம், பெரிதென்பதும் பெரி

தாக்குவதென்பதும் தெளிவாயது. ஆகவே அப்பிரமத்துக்கு வேறு பொருளிருந்தாற்றான் அதற்குப் பெரிதென்பது பொருந்தும். ஆதலால், எதற்குப்பெரிதெனில்? அப்பிரமவியாபகத்துள் வியாப்பியமாயடங்கிநிற்கும் பாசபந்தபசுக்களுக்குப் பெரிதென்பதாம். ஆகவே பிரமத்தைத்தவிர வேறுபொருளுண்டென்பது தெளிவாயது. வேறில்லையானால், பிரமம் சிருஷ்டிமுதலியனசெய்வது எதன்பொருட்டெனில்? அது சீவர்பொருட்டென்று கூறமல்முடியாது. அன்றியும் வேதசிவாகமாதிகள் யாருக்குவந்தனவெனில், அவைகள் சீவர்க்கு வந்தனவென்றே கூறவேண்டும். இதன்விவரணம் முன்புவேதப்பகுதியில் விளக்கியுள்ளதே.

இனி உலகம் நானவிதப்பொருள்களாய் நேரே காணப்படலால்இல்லையென்பது எப்படியெனின்? அவற்றைப் பிரமமாக்காணுமற் பலபொருள்களாகக்கண்டது பிராந்தியே(மயக்கமே)என்றுகூறுவர். அவர்கள் பிரமந்தவிர யாதுமில்லையென்றுகூறுதலால் மயங்கிக்கண்டது பிரமமே என்று கொள்ளவேண்டிவரும். முற்றறிவுள்ள பிரமத்துக்கு எக்காலத்தும் மயக்கமின்மையால் அது விரோதமாகும். ஆதலால் மயங்கிக்கண்டவர்கள் பிரமத்தின்வேறுயென்றுமுள்ள சிற்றறிவினராகிய ஜீவர்களேயென்றுமுடிவுபெறும். அதனை ஒத்துக்கொண்டால் எல்லாம் பொய்யென்கின்றதமதுகொள்கைக்கு விரோதமென்றெண்ணிப்பிரமம்ஒன்றே பலபொருள்களாயினதென்பர். நிர்விகாரநிர்மலப்பிரமம்ஒன்றேவிகாரப்பட்டுப் பற்பலசமலப்பொருள்களாவதென்னெனில்? விளையாட்டினல்லாயதென்பர். விளையாடுவது நன்மைதீமைபகுத்தறியாப்பாலர்செயலாய்ப் பயனற்றதாகும். பிரமம் பயனற்ற தொழில் செய்யாதென்க. ஆனல் நீவிர் அருள்விளையாட்டென்பதும் பயனற்றதாதானேவெனில்? அதன்கருத்துப் பிரயாசையில்லாத இலகுவானசெயலென்பதேயாம். இதனை, சாத்தனுத்கு ஐங்கலப்பாரஞ்சுமப்பதோர்விளையாட்டு என்பதில், அது அவனுக்கு இலகுவானசெயல் என்று கொள்ளுதல் நோக்கியுந் தெளியலாம்.

(விவர்த்தங்கூறுவது பொருந்தாமை.)

இனி, அவர்கள் பிரமம் உலகுக்கு முதற்காரணமென்பதில், பிரமம் உலகம் என இருபொருள்கள் விளக்கமாய்ப், பிரமந்தவிர

யாதுமில்லையென்றதற்கு விரோதமாதலினோக்கி, முதற்காரணமென்றதனாலாத்தமன்று விவர்த்தமென்பர். விவர்த்தமாவது:- கிளிஞ்சியில் வெள்ளி, பழுதையில் பாம்பு, கட்டையில் கள்ளனென்றாற்றல் பொய்யாதல்போலப் பிரமத்தில் உலகந்தோன்றுமென்றதும்பொய்யென்பதாம். இது அவர்கள்கருத்து. அப்படியானால், மூன் பிரமம் உலகுக்கு முதற்காரணமென்பானேன்? என்றதனால். பிரமம் உலகமென இரண்டிண்டென்பது நோக்கிப், பின் அது பொய்யென்பானேன். பிரமமொன்றேஉள்ளதென்றதைச் சாதித்தற்குக் கிளிஞ்சியாதிஉவமை கூறியதனாலேயே ஒன்றென்றது பழுதாய்க், கிளிஞ்சி பழுதை கட்டைகளும் வெள்ளி பாம்பு கள்ளர்களும் மயங்கிக்கண்டாருமாகிய பலபொருள்கள் உள்ளனவாய் ஏகவாதம்போய் அநேகவாதமாய்முடிந்ததுகாண்க.

(அவர்கள்எடுத்துக்காட்டிய உவமைகளும் பொருந்தாமை.)

கிளிஞ்சியில் வெள்ளிதோன்றுவதாக ஒருவன் மயங்கிக்காண்பது கிளிஞ்சியும் வெள்ளியும் வெள்ளொநிறமாய்ருபமுள்ளனவாயிருத்தலாலன்றி வேறில்லை. இதுபோல ரூபமில்லாதபிரமத்தில் நிறமுதலியஒற்றுமையில்லாததும் ரூபமுள்ளதுமாகிய உலகந்தோன்றியதாக ஒருவன் மயங்கிக்கண்டானென்பது பொருந்துமா? அன்றியும் கிளிஞ்சியில் வெள்ளிஒன்றுதான் தோன்றும். பிரமத்தில் பலவிதப்பொருள்களாகிய உலகந்தோன்றுமென்பது பொருந்துமா? வெள்ளிஒன்றுள்ளதாக முன்கண்டவனுக்குத்தான் கிளிஞ்சி வெள்ளியாத்தோன்றும். அவர்கள் பிரமந்தவிரயாதுமில்லையென்பதால் முன் காணப்படாத உலகம் பிரமத்தில்தோன்றியதென்பது பொருந்துமா? கிளிஞ்சியில்வெள்ளிகண்டது பொய்யன்றி வெள்ளியென்றொருபொருளுள்ளதென்பது பொய்யாகுமா? அதுபொய்யானால் கிளிஞ்சியில் மயக்கத்தால் வெள்ளிதோன்றுமா? இதுபோற் பழுதையிற்பாம்பு கட்டையிற்கள்ளனென்ற உவமையும் அறியப்படுமாதலால் அவ்வுவமைகள் பொருந்தாமையும், அவற்றாலும் பிரமம் ஒன்றுதான் உள்ளதென்றபிடிவாதம் பழுதுபட்டதும், விவர்த்தமாகப் பிரமத்தில் உலகந்தோன்றுமென்றது அபத்தமேயென்பதும் செவ்வே தெளிவாம்.

(ஒன்றேயென்பது கடாகாசவுவமைபாலும் பொருந்தாமை.)

இன்னும் அவர்கள் பிரமம் ஒன்றேசரீரங்களினகப்பட்டபோது சீவப்பிரமம் என்றுகிரீங்கியபோது உள்ளபடி பிரமமாகும். சீவனென்றொருபொருள் வேறில்லை. இது ஆகாசமொன்றே கடங்களுள் வளைபட்டபோது கடாகாசமென்றுகிக், கடமுடைந்தபோது உள்ளபடி ஆகாசமாதல்போலாமென்பர். இதனையும்விசாரித்தொழிப்பாம். பிரமந்தவிர வேறில்லையென்றதைமறந்து அது சரீரங்களினகப்படுமென்றது சரீராதிகளுமுண்டென்பதைவிளக்கி ஏகவாதம்தொலைத்து அவர்க்கு அபகாரமே விளைத்தது.

இனி, அச்சரீரம் எவனுல் எங்கிருந்து எதற்காகவந்ததென்று விசாரிக்குமிடத்து, நிமித்தகாரணனுல் மாயையிலிருந்து சீவர்கள் கர்மசேஷம்துகர்ந்து வினையொப்புமலபரிபாகம் சத்திநிபாதமுற்றுய்தற்காகவே வந்ததென்பது தெளிவாம். ஆகவே, நிமித்தகாரணனுகிய பதியும் சீவர்களாகிய பசுவும் மலம் மாயை கர்மம் ஆகிய பாசமும் எப்பொழுதும் உண்டென்பதே விளக்கமாயது. அவர்கள் கூறும் உவமானகடத்தையும் எவனுல் எங்கிருந்து எதற்காகவந்ததென்று விசாரிக்குமிடத்தும் நிமித்தகாரணனுகிய குயவனுல் மண்ணிலிருந்து சீவர்களுக்காகவந்ததென்றுகிக் குயவனும் மண்ணும் சீவர்களுமாகிய மூப்பொருளும் உண்டென விளக்கி எமக்கே உபகாரமாதல் காண்க.

ஆகாசம் சடமாதலால் குடங்களைவணையும்போது குயவனுல் அவற்றுள் வளைபட்டுநிற்குமென்பது பொருந்தும், சித்தாகியபிரமமும் சரீரங்களினுள்ளே கட்டுப்படுமென்பது பொருந்துமா? ஆகாசத்தைக் குடங்களினுள் வளைவித்த குயவனைப்போலப், பிரமத்தைச் சரீரங்களினுட்புகுத்தியது யார்? பிரமந் தானேபுகுந்ததென்பரேல், குயவனுற் குடங்களில் வளைவிக்கப்பட்ட ஆகாசத்தையுவமைகூறியது பொருந்துமா? சீவர்கள் வினைப்போகங்களை அனுபவித்துத்தொலைத்தற்காகச்சிவாஞ்ஞையாற் சரீரங்களிற்புகுந்துநில்வதையேசாஸ்திரங்கூறுவதன்றிப், பிரமம் சரீரங்களிற்புகுந்தழுவுமென்று எந்நூலாவது எவராவது கூறுவதுண்டா? உண்டெனில் அது நூலாகுமா? அவரறிஞராவரா? சுத்தப் பிரமம் அசு

த்தசரீரங்களிற் கட்டுப்படக்காரணம் என்னவெனில்? அவிச்சை யாலென்கின்றனர். முற்றறிவுள்ளபிரமத்துக்கு அவிச்சை இல்லை யேயெனில்? மாயோபாதியால் வந்ததென்கின்றனர். அம்மாயை யும் அதன்மேல் அசுத்தமாயை சுத்தமாயைகளுங்கடந்த சுத்த சைதந்தியமாய், எதனாலும் தடைப்படாது தானேபிரகாசித்துப் பெரிதென்பதும், சோமசூரியாக்கினிகளுக்குந்தானேஒளிகொடுத் துப் பிரகாசிப்பித்துப் பெரிதாக்குவதென்பதும் விளக்குகின்ற சுயம்பிரகாசபரஞ்சோதியாகிய நிர்மலபிரமத்தைக் கீழ்ப்பட்ட பிரகிருதிமாயை உபாதிக்கவல்லதா? என்றுற்றுநோக்காமல் பிர மம் மாயோபாதியால் அவிச்சையுற்றுச் சரீரங்களிற்புகுந்துழலு மென்பதென்ன தலைவிதியோ? மலசகிதசிவர்க்குத்தான் மாயோ பாதிஅவிச்சை சரீரசம்பந்தமுள்ளன. ஆதலால் அவர்கள்கூறும் பிரமம் சிவப்பிரமமேஎன்பது தெளிவாம். ஆகவே அவர்கள் சிவப்பிரமவாதிகளேயென்பதுநிராக்ஷேபமாய்நிலைபெறுமென்க.

ஆனால், வேதம் ஒன்றென்பதென்னெனில், "ஒன்றென்ற தொன்றேகாண்ஒன்றேபதி" வேதம் ஒன்றென்பதற்குப்பொருள் ஒன்றேயாம். வேறுபொருள்படாது. அதன்கருத்துப்பதிப்பொ ருள்ஒன்றே இரண்டில்லை என்பதாம். "பசுவாம் ஒன்றென்றீ பாசத்தோடே" இவ்வுண்மையறியாமல் இங்குஒன்றென்றுசொ ல்லுகின்ற ஈ பாசத்திற் கட்டுப்பட்டுள்ளாயாதலால் பசுவாம். என்றசிவஞானபோதசுருதியாற்றெளிக. பதியாகியபிரமமும் பசு வாகிய சீவனும் சித்துச்சாதிஒற்றுமையால் ஒன்றெனக்கூறினும் பிரமம் ஒன்றேபரய்ச்சரீராதிதொடக்கற்றசர்வஞ்ஞநிர்மலசித்து சீவர்கள் அநேகர்களாய்ச் சரீராதிதொடக்குற்ற கிஞ்சிஞ்ஞசமல சித்து.என்னுமுண்மையால்அப்பிரமமும்சீவர்களும்பொருட்டன் மையால் வெவ்வேறுபொருள்களேயாம். ஆயினும் சீவர்கள்திரு வருளால் பரிபாகிகளாய்ச் சிவாகமங்கூறுஞ் சிவோகம்பாவனை யாற்சிவமேதாமாய் நிற்கும்நிலையில் இரண்டன்மையாகிய சுத்தா த்துவிதநித்தியானந்தமுற்றுவாழ்வர். இதனை, (தாயுமானவர்)

அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்றே சாதியினல்—எட்டடியுந்

தேரிற் றுவிதஞ் சிவாகமநூல் சொன்னநிட்டை
யாருமிடத்தத்துவிதமாம். என்பதுமுதலியவற்றுற்காண்க.

இவ்வாறு பிரமத்துக்கும் சீவர்களுக்குமுள்ள பொருள்வேற்றுமை விளக்கமாயிருக்கவும், சாதிஒற்றுமைநோக்கி ஏகதேசத்தில் ஒன்றெனக்கூறுமதனுண்மைநோக்காமல்சுத்தப்பிரமம்ஒன்றே அழுக்கடைந்த சரீரங்களிற்புகுந்துழலுமென்கின்ற மாபாதகத்தையென்னென்று கூறுவது.

அவர்கள் அம்மட்டிலும்அமையாமல் சர்வஞானேத்தரமென்னுஞ் சிவாகமமும் மகாகாசகடாகாசவுவமை தங்கள் கருத்துக்கிணங்கக்கூறுகின்றதென்பர். அதனுண்மையும் விளக்கி அவர்கள் கருத்தை இவ்வுகாத்தகிளியாக்குவாம்.

(சர்வஞானேத்தாகமம்.)

'கடத்திருக்கு மாகாயம் போலச்சீ வான்மாகருதுமகாகாயம்போற் பரமான்மாவிருக்குங், கடத்திருக்கு மாகாயங்கடமுடைந்தான் முன்னர்க்கருதுமகாகாயமா நிறைந்துநின்றுற் போலத்,திடத்தினுறு பிரகிருதிசம்பந்தமாய தேகவுபாதிகண் முழுதுநீங்கிய பினர்தச், சடத்தமர்சீவான்மாவே பரமான்மா வாகுஞ் சர்வஞ்ஞனெமம்மாற் சொலப்பட்டதித்துவே''

இதுதான் அவர்கள் கருத்துக்கிணங்கக்கூறுகின்றதென்ற சர்வஞானேத்தராகமச்செய்யுள். இது, கடத்துள்ளிருக்கும்ஆகாசம் (கடாகாசம்) போலச், சரீரத்துட் சீவான்மாஇருக்குமென்றும், கடத்துட்படாதஆகாசம் (மகாகாசம்) போலச் சரீரத்துட்படாத பரமான்மாஇருக்குமென்றும், கடமுடைந்தால் அக்கடாகாசம் மகாகாசமாய் நிறைந்துநிற்றல்போலச் சரீரம்நீங்கியபின் அச்சீவான்மா பரமான்மாவாகுமென்றும், விளக்குகின்றதேயன்றிப், பரமான்மாவாகிய பிரமம்ஒன்றே அவிச்சையாற் பலசீவர்களாய்ச் சரீரங்களிற்புகுந்துநின்று ஞானம்வந்தபின் சரீரம்நீங்கிப் பிரமமாகியதென்ற அவர்கருத்தை விளக்கவில்லை. பிரமம் உள்ளபடி பிரமந்தானே; அதனையே பிரமமாகியதென்பது விரோதமன்றே! பிரமம்சரீரத்துட்புகுந்தமையால் பிரமத்தன்மைகெட்டுச்

சரீரம்நீங்கியபின் பிரமமாகியதனால் விரோதமின்றென்பதோல் சரீரத்துட்புகுதற்குரிய மலசம்பந்தமில்பாகவேயில்லாத அநாதி முத்தசுத்தப்பிரமம் சரீரத்துட்புகுந்ததென்பது எவ்விதத்தும் எக்காலத்தும் பொருந்தாதாதலால் அவர் கூறுவது விரோதமேயாம். ஆகவே முன் பிரமமாகாதிருந்ததெதுவோ அதுதான் பிரமமாகவேண்டியதென்றுள்ளபடி நோக்குவார்க்கு முன் பிரமமாகாதிருந்தது சீவான்மாவே என்பதும் அவ்வான்மாவே திருவருளால் மலவலிநீங்கிப் பிரமமாகியதென்பதும் தெளிவாம்.

மேற்காட்டிய செய்யுளில் பரமான்மாவாகுமென்றதை, அந்நூலாரம்பமுதற்கூறிவருமுறைபிறழாது நோக்குமிடத்து, இயல்பாகவேபாசங்களினீங்கிய சிவபரமான்மாவைச் சீவான்மா மலவலிநீங்கிச்சார்ந்து சார்ந்ததன்வண்ணமாய் நிற்குநிலையில் அச்சீவான்மாவே பரமான்மாவெனும்பெயர்பெற்று நிற்றலைபுணர்த்தும். இதனைச்சார்வுஞானேந்தரமுதலில், பசுவும்பாசமும் அதிகாரஞ்செய்துநிற்கும் பதியும், அதிகாரமின்றித் தன்னிலையினிற்கும் சிவமுமாகிய நித்தியப்பொருள்கள் நான்கினியல்புவினுவிய சுப்பிரமணியப்பெருமானுக்குச் சிவபெருமான் அவ்வியல்புகள் விளக்கிவருமிடத்துப், பசு, சார்ந்ததன்வண்ணமாய்நிற்குமியல்பினதாதலால், அது சார்ந்துநிற்கப்படும் பொருள்வகையற்றிப்பூதான்மா அந்தரான்மா தத்துவான்மா சீவான்மா மந்திரான்மா பரமான்மா என ஆறுவகையாய்க் கூறப்படுமென முன்பு பொதுவாகவிளக்கிப், பின்புபஞ்சபூதபரிணமமாகிய உடம்பினியல்பும், பசு அவ்வுடம்பைப்பற்றியவழிப்பூதான்மாவெனநிற்றலும், அகத்தின்கண்ணவாகிய வாக்குக்களினியல்பும், பசு அவற்றைப்பற்றியவழி அந்தரான்மாவென நிற்றலும், சூக்குமபூதமுதலிய தத்துவங்களினியல்பும், பசு அவற்றைப்பற்றியவழித் தத்துவான்மாவென நிற்றலும், வினைப்போகங்களையனுபவித்துப் புருஷதத்துவமெனநிற்குமியல்பும், பசு அவ்வாறுநின்றுபிரகிருதிகுணங்களைப்பற்றிஇன்பதுன்பங்களையனுபவிக்குஞ் சீவிதநிலைபிற் சீவான்மாவென நிற்றலும், தாவரசங்கமங்களெல்லாவற்றிற்கும் அதிதெய்வமந்திரங்களுள்ளனவே. அம்மந்திரங்களால் அதிட்டிக்கப்படாத உயிர்களி

ல்லை. மந்திரங்களை உச்சரிக்குமுறை இவ்வாறென அவற்றினியல்பும், பசு மந்திரங்களைச்செபிக்குமிடத்துப்படிகம்போல அந்தந்தமந்திரமயமாய் மந்திரான்மாவென நிற்றலும், அப்பசுவே தன்னின்வேறுகிய இந்த ஐந்துவகைப்பற்றுமுற்றுமற்று அவ்வைந்துவகைப்பெயரினீங்கப்பெற்று சச்சிதானந்த சிவபரமான்மாவொன்றையேபற்றிச் சிவோகம்பாவனையால் சிவமயமாகுஞ் சுத்தாத்துவிதநித்தியானந்தநிலையில் பரமான்மாவென நிற்றலும் சிறப்பாகவும் விளக்கியருளினமையாலும், பரமான்மாவென்றதை முன்பின்நோக்கி யுண்மையுணராமல் அச்சொல்லளவே நோக்கி அதன்பொருள் சிவமோவென்று பிற்ர் மயங்காமைப்பொருட்டு முருகப்பெருமான் முதலில் வினையியநித்தியப்பொருள்கள் நான்கிற்பதியாவது, லயசிவம்போகசிவம் அதிகாரசிவம் மூன்றன்மத்தியதாய்மேலுள்ள லயசிவ அருவநிலையும் கீழுள்ள அதிகாரசிவஉருவநிலையும் தன்னிற்காணநிற்கின்ற சதாசிவமே என்றும் சிவமாயது, இம்மூவகையுங்கடந்து தன்னியல்பினிற்கின்றசொரூபசிவமே என்றும் விளக்கியருளினமையாலுஞ் செவ்வேதெளியலாம்.

இவ்வாறு சர்வஞானோத்தராகமத்தினுண்மையை முன்பின் விரோதமின்றித்தெளிவாய் நோக்காமல் கடாகாசமகாகாசமென்ற சொல்லைக்கண்டமட்டிலேசிவாகமத்திலும் நமதுகொள்கைக்கு ஒருஇலக்குவாய்த்ததென்று ஆராய்வின்றி மகிழ்ந்து விபரீதார்த்தங்கொண்டு மயங்குவது அவரதுசிவாதமுரணிலையே யாமென்க. இதனையே ஸ்ரீ மச்சிவஞானமுனிவர், ''கூடாகாயவாகாயக் கூத்தாட்டாமென்ப, தடாதுள்ளமபோமாறது.'' என்று தெளித்து விளக்கி ஓதுக்கியருளிற்றென்க.

இவ்வுண்மைகள் ஒன்றையுமுற்றுநோக்காமல் பிரமந்தவிராதமில்லையென்பதையும், உலகம் நேரே காணப்படும்போது இல்லையென்பது பொருந்தாதென்று மறுப்பதுநோக்கி அப்படியன்று பிரமந்தான் உலகமாகப் பரிணமித்ததென்று மாறிக் கூறுதலையும், சித்தாகிய பிரமம் ஜடமாகிய உலகமாய்ப் பரிணமிக்கமாட்டாது; அன்றியும் பரிணமித்தல்பால்கெட்டுத்தியிராதல்போல்வதாதலால் பிரமங்கெட்டு உலகமாயதென்று பொருள்படப்

பரிணமங்கூறுதல் சிவத்தரோகமென்று மறுப்பதுநோக்கி அப்படியன்று பிரமத்திலிருந்தே உலகந்தோன்றியதென்று மாறிக்கூறுதலையும், சித்திலிருந்து ஜடந்தோன்றுதென்று மறுப்பதுநோக்கி அத்தோற்றம் உண்மையன்று கிளிஞ்சியில் வெள்ளிபோல் பொய்யேயென்று மாறிக்கூறுதலையும், மேலுங்கூறுமாறுபாடுகளையும் புத்திமான்கள் யோசிக்கின் அம்மாயாவாதிகள் தங்கள்மதநிலை இன்னதென்று தாங்களே நிச்சயித்தறிந்து கொளளமாட்டாத தடுமாற்றமுடையரென்பது செவ்வேதெளிவாகும்.

(பிரமந்தவிரயாதுமில்லையென்பது அநுபவத்துக்கும் பொருந்தாமை)

பிரமந்தவிரயாது மில்லையென்றது மேற்காட்டியயுத்திவகைகளாற்பழுதாய்முப்பொருளுண்மைதெளிவாயதுபோல அநுபவத்தாலுந்தெளியலாம். இப்பூமியிற்பல்லூழிகாலமாகஎத்தனையோதலங்கள் சிவாலயவிஷ்ணுவாலயங்கள் தீர்த்தங்களிருக்கின்றன. அங்குள்ளசிவலிங்காதிமூர்த்திகள் சுயம்புகளாயும், தேவர்முனிவர் அசுரர்மனிதர்களாற் பிரதிஷ்டிக்கப்பெற்றனவாயும், யானைமுதல் எறும்பீறுனஜீவர்களாற் பூசிக்கப்பெற்றனவாயும் விளங்குகின்றன. தேவர்முனிவர் முதலிய அப்பெரியார் உலகெலாமுய்யும்படி பிரமமே கிருதகாடின்னியம் போலச்சிவலிங்காதிமூர்த்திகளாய் விளங்குகின்றது. பசுக்களாகியநாமெல்லாம், அம்மூர்த்திகளைவழிபட்டுய்யவேண்டிய அடிமைக்களே யென்னுமுண்மைகடைப்பிடித்தவர்களாதலால், அத்தலங்களிற்பூசித்து, என்றும்விளங்கவைத்தனர்; அப்படியே பின்வருவாரும் வழிபட்டு வருகின்றனர் அம்மூர்த்திகள் அவ்வழிபாடுகளையேற்று அநுக்கிரகிக்கின்றன. பிரமமாகியபதிநித்தியம் போலப்பசு பாசங்களும் என்றுமுள்ளநித்தியங்களேயாதலாலன்றே; அப்பசுக்கள் வழிபாடுசெய்துபாசவலிநீங்கியுய்தற்காகமூர்த்திதலதீர்த்தங்கள் திருவருளால்விளங்குகின்றன. பாசமில்லையானால் வழிபாடும். பசுக்களில்லையானால்மூர்த்திதலதீர்த்தங்களும், யாருக்குவந்தனவென்ற கேள்விவரும். அதற்கஞ்சிஅவிச்சையாற் பிரமம் சிவனிலைப்படுங்கால் வழிபட்டுய்தற்குவந்தனவென்றே கூறவேண்டும். இதுதலையாரிவீட்டில் ஒளித்ததையாய்மேலும் விரிபுமாதலால் பாசபந்தபசுக்கள் வழிபட்

டுய்த்தற்கேயுள்ளன மூர்த்திதலதீர்த்தங்களென்பது திண்ணமா மென்க. (விவகாரம்பரமார்த்த மென்பதனுண்மை)

ஆனல் மேற்காட்டிய சிவலிங்காதிபூசனைமுதலியவெல்லாம் விவகாரத்தில் உண்மையாகக் காணப்படினும், பரமார்த்தத்தில் பொய்யே யென்பர். அது, பொருத்தமான சமாதானங்கூறமுடியாமல் கற்பித்துக்கொண்டதேயாம். அவர்கள்கருத்தின்படி விவகாரமெல்லாம் பொய்யானல்அவர்கள் அம்மூர்த்திதலதீர்த்தவழிபாடுசெய்வது எதற்காக? அது அவர்களைஉத்தமபதத்தொன்று வந்து உலகரடித்துபசரித்தற்கென்றுதானேமுடியும். அப்படியன்றெனில்? அது, மெய்யேயாய்க்குறித்தபலனைத்தருமென்று நம்பியே செய்வதாகவேண்டும். நம்பியபடியேஅவ்வழிபாடுகள் மந்திராதிகள் குறித்தபலனை அந்தந்த எல்லையில் கொடுப்பது நேரே தெரிந்தும் அவ்வழிபாடுமுதலியன விவகாரமாய்ப் பொய்யாய்க் கழியுமென்று வாசாமாத்திரமாக்கூறுவானேன். அக்கூற்றுஅவர்களை உத்தமனென்றுநம்பி அடுத்தவர்கள் அவ்வழிபாடுசெய்யாதுகெடுதற்கு ஏதுவாமன்றே! அடுத்தவர்களுக்கு அது பொய்யென்று கூறுவதில்லை அவ்வழிபாடுசெய்பவேண்டியது அவசியமென்றே கூறுவோமெனில்? அது தாம்பொய்யெனக்கொண்டதை மெய்யெனக்கூறும் வஞ்சச்செயலாக முடியுமன்றே உள்ளபடி உண்மையெனக்கண்டதை உண்மையென்று கூறுவதன்றேநேர்வஞ்சகமாகும். ஒருவன் அரிசிமுதலியனசேகரித்தல் பாகம்பண்ணுதல் விவகாரமாகும். அவ்விவகாரம் பொய்யானல் அன்னமுண்டின்புறுதலாகிய பரமார்த்தம்கைகூடுமா? அவர்கள் படிக்கும்நூல்கூறியபடிசெய்யப்படுஞ்சாதனசதுட்டயங்கள் விவகாரந்தானே அவை பொய்யானல் அப்பலனுகிய பரமார்த்தங்கைகூடுமா? சாதனம் பொய்யானல் சாத்தியம் மெய்யாகுமா? சாதனசதுட்டயம் பொய்யன்று மெய்யேயனில்? மேற்கூறியமூர்த்திதலதீர்த்தவழிபாடும் உள்ளபடி மெய்ம்மைதானே. மேலும் நிற்பானேன் அவர்கள்கூறும் விவகாரமும் பரமார்த்தமும் பெத்தநிலையும் முத்திநிலையுமாம். பெத்தமுத்திகள் சிவர்க்கன்றிப் பிரமத்துக்கில்லையன்றே! ஆதலால் அவர்கள் கருத்தின்படி

ஒன்றேயாகியபிரமத்துடன் அனேகராகியசீவர்களும் உள்ளபொருளேஎன்பதுதெளிவாம். சீவர்க்குள்ள விவகாரபரமார்த்த பேதமுதலியனஇலைபத்தான் வேறுபொருளில்லையென்னும் பிடிவாதத்தால் பிரமத்தில்வைத்து அப்பிரமம் அவிச்சையாற் பந்தமுற்று அதுநீங்கி முத்திபெற்றதென்கின்றனர். உள்ளபடி பேதமுதலியனஎன்றுகொள்ளுஞ்சீவர்கள் சுருதிசம்மதமாயிருக்கவும் பொய்யென்று கழித்து அவற்றைப் பிரமத்தின்றலையிலேற்றுவது வேறெந்தஇழிந்தமதத்தருக்குமில்லாத பெரும்பாதகமேயாம். சீவர்க்குள்ளதைப் பிரமத்தில்வைத்துக் கூறுமவர்கள் சீவப்பிரமவாதிகளேயென்னுமுண்மை இதனாலுந் தெளிவாம். எப்போதும் ஒரேபடித்தாய் நிர்மலமாகியசுத்தப்பிரமத்தில் விவகாரபந்தம் எவ்விதத்திலும்எக்காலத்தும்வருவதில்லை. பரமார்த்தமுத்திஇலையே பிரமசொரூபநிலையாம். ஆதலால்பிரமத்தில் விவகாரமில்லை. உண்டென்றால் அதில்பரமார்த்தம் விளங்காது. இவ்வாறு ஒன்றுக்கொன்றுவிரோதமாகிய விவகாரபரமார்த்தங்களை எடுத்துக்கொண்டு விவகாரம் பொய் பரமார்த்தம் மெய்யென்றுபிடர்ப்படுவதொழிந்து விவகாரசாதனங்கள் சாத்திபமாய்ப்பலனைத்தந்து மெய்யாய்விளங்குதலைஉற்றுநோக்கிப் பொய்யில்மெய்தோன்றுதலால் விவகாரம் மெய்தான் அதனில்மெய்யாகியபலன்தோன்றுகின்றதென்னுமுண்மை கடைப்பிடித்து அதனையே உள்ளபடிதாங்களும் மேற்கொண்டு பிறர்க்கும் நிர்வஞ்சகமாகப் போதித்துவாராக. இதுவே சுருதி சம்மதம் இதனை, "இல்லதற்குத்தோற்றமின்மையின்" "உள்ளதேதோற்ற" இல்லதுஉள்ளதாகாது உள்ளது இல்லதாகாதென்று விளக்கும் மெய்கண்டசுருதியாலும். "தாஹதெவிஜ்ஞே தெஹாவொநஹாவொவிஜ்ஞெயதெஹஃ பொய்யில் மெய்உளதாகாது மெய்யில்பொய்உளதாகாதென்று விளக்கும் பகவத்கீதையாலும் செவ்வே தெளியலாம்.

(பிரமமாகிய பதி நித்தியமென்பதுபோற் பசு பாசங்களும் நித்தியங்களேயென் பதற்குச்சுருதிப் பிரமாணம்.)

இனி, இவ்வநுபவப்பொருத்தமே சுருதிசம்மதமென்பதைப் பின்வரும் சுருதிப்பிரமாணங்களால் செவ்வேகாணலாம். இருக்குவேதம் முதலாவது மண்டலம்(க௯ச)சூக்தம்(உ0)வது மந்திரம்

"ஹம்ஸ: ஷுசிஷத்வஸுரந்தரிக்ஷஸத்ஹோதா வேதிஷததிதிர்துரோணஸத்
ந்ருஷதவரஸதுரிக்ஷஜாகோப்ஜாகோத்ரஜாருதஜாமாருஹத்ஸத்யோ மஹாகாஸ:"
பிரிபாதஇஷ்டமுன்ன இரண்டுபக்ஷிகள்ஒரோவிருக்ஷத்திலிருக்கின்றன. ஒன்று இனியபழத்தைஉண்கின்றது. மற்றது உண்ணுதுபார்த்துக்கொண்டிருக்கின்றதுஎன்பதாம். இதில் விருக்ஷமென்றது சரீரத்தையும் இரண்டு பக்ஷிகள் என்றது சிவான்மாவையும் பரமான்மாவையும், பழமென்றது வினைப்போகத்தையும், உண்கின்றதென்றது அதனைச் சிவான்மா அநுபவித்தலையும், உண்ணுது பார்த்திருப்பதென்றது அப்பரமான்மா வினையினீங்கி விளங்கிய அறிவின் மூன்வனதலால் அவ்வினைப்போகத்தன்னைச்சாராமல் ஒதுங்கிநின்று தான்எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு சாக்ஷியாயிருப்பதென்பதையுங் குறிப்பித்தல் காண்க. இதனை; (கைவல்லியம்)

அச்சுவத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள்வாழும், நச்சு மன்கொரு பறவைபக் கனிபினை நன்றுநன் றெனத்தின்னும், மெச்சு மற்றொரு பறவைதின் ஞதென விபங்கியப் பொருளாக, வைச்ச மாமறை சிவனை யீசனை வகுத்தவா றறிவாயே.

"என்றுதெரிவிக்கின்றது. இதில் விபங்கியப்பொருள் என்றது குறிப்பாற் பெறப்படும் பொருள். வேதம்குறிப்பாகக் கூறியதை வேதாந்தமாகிய (மூண்டகோபதிடதம்; கூ-க-உ.)

"ஹம்ஸ: ஷுசிஷத்வஸுரந்தரிக்ஷஸத்ஹோதா வேதிஷததிதிர்துரோணஸத்
ந்ருஷதவரஸதுரிக்ஷஜாகோப்ஜாகோத்ரஜாருதஜாமாருஹத்ஸத்யோ மஹாகாஸ:"

என்னும்மந்திரம் விளக்குகின்றது. இ—ள்; ஒரே(சரீரமாகிய)விருக்ஷத்திலே(சிவான்மாவாகிய) புருஷனனவன் (சுதந்திரமில்லாமையாகிய)†அஜ்ஞானத்தால் மயக்கமுற்றுத்துன்ப(சாகரத்தில்)மூழ்கிக்கிடக்கின்றான். அவன் இன்பத்தைபுடைய ஈச்வரனை எப்போது அறிந்து அவனுடையமகிமைக்குணங்களைப் பெறுகின்றானைனப்போது துன்பத்தின்நீங்கினவனாகின்றனென்பதாம்.

(திருமந்திரம்)

இங்ஙனமாகவும் அம்மாயாவாதிகள் திருமூலநாயனார் திருமந்திரங்களிற்சில தங்களுக்குச்சாதகமென்று கூறிமகிழ்வர். அது

அம்மந்திரங்களினுண்மை நோக்குமுன்னின்மையேயாம். இத்திருமந்திரமோ, பெரியதிருவாய்மொழியார் திருவருளே கேரிபெற்றுப் பற்பல அற்புதச்செயல்கள்செய்தருளியசிவாநுபூதிப்பெருஞ்செல்வராகிய நம்பியாண்டார்நம்பிகளாற், சைவசித்தாந்தத்திருமுறைகளென்று கோவைசெய்யப்பெற்றபன்னிருதிருமுறைகளிற் பத்தாந்திருமுறையாக விளங்குகின்றது. இராயணரோ, சைவசித்தாந்தப்பொருளை விளக்குதற்காகவே சிவஞானபால் திருவாவடுதுறையாதீனத்தில் (கூஉ) யருஷம் சிவயோகத்தமர்ந்தருளி, அவ்வாதீனப்பொருளை விளக்கும்(கூஅ)திருமந்திரங்களை வெளிப்பட்டருளினவென்று ஸ்ரீமந்நடோபதேசப்பெருமான் சேக்கிழார் திருவாக்கினின்றுவெளிப்பட்டருளிய பிரமவித்தையாகியபெரியபுராணம்விளக்குகின்றது. இப்படியே சிவாகமங்களுக்கும் சிவாகமாசாரியதேசிகளுங்கூறுகின்றனர். இவ்விளக்கத்தாலேயே இத்திருமந்திரமுழுதுஞ்சைவசித்தாந்தமேயென்பது தெளிவாம். அம்மந்திரங்களுட்சில காட்டுவாம்.

அன்னை பிரண்டுள வாற்றங் கரையினிற்
றுன்னி யிசைன்றுந் துணைபிரி யாவன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்று தென்றக்காற்
பின்ன மடவன்னம் பேறணு காதே.

இது மேற்காட்டிய இருக்கு வேதமந்திரமுண்டகோபநிடதம் விளக்கியங்கூறும் பதி பசு பாசநிர்ணயத்தை விளக்குகின்றது. இதனில் மாயாவாதிகருத்தின்படி பொருள் ஒன்றுதானிணைந்து சிவாநுபவப்பேறில்லையாய்முடியுமாதலால் ஒன்றென்பதுபொருந்தாதென்று மறுத்துமுப்பொருளுண்டென்று நிறுத்தியருளுங் காண்க.

“ பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதிபிணைப் போற்பசு பாச மறுதி
பதிபிணைச் சென்றறு காபசு பாசம்
பதியறு கிற்பசு பாசநில் லாவே.”

“ ஆண்டா னடியுரை வேண்டாது சேரினுந்
தாந்தம் விழுவது தாழ்வா ரகமே.”

“ சத்து மசத்துஞ் சதசத்துந் தான்காட்டில்”
“வேதாந்தந் தெரிம்பத மேலும் பசவென்ப”

" சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேதிற்போர் முத்திசித்தித்தவர்."

" ஆய பதிதானருட்சிவ லிங்கம்
ஆய பசுவு மடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்."

" பதியும் பசுவொடு பாசமு மேலைக்
கதியும் பசுபாச நீக்கமுங் காட்டி
மதிதந்த வானந்த மாநந்தி காணுந்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே."

" தத்துவ மாறுறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னமைம் பானென்று மேதினி
ஒத்திரு நூற்றிரு பானன்கெண் பானென்று
வைத்த பதங்களே யோரைந்தும் வந்ததே."

" ஆணவ மாகும்விந் ஞான கலருக்கு
பேணிய மாயை பிரளய கலாகும்
ஆணவ மாயை கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே."

இன்னுமனேகமுள்ளன. இவையெல்லாம் சைவசித்தாந்தபரிபாஷைகளேயென்பது அவர்களுக்கும் உடன்பாடேயாம். இனி அவர்களுத்துக்கிணங்க விபரீதார்த்தங்கொண்டு ஏதேனும்கூறவரினும் மேற்காட்டிய மந்திரங்களுக்குத்தக்க சமாதானங்கூறிவிளக்குக.

மேற்கூறிய இருக்குவேதவசனத்தின் குறிப்புப்பொருளை விளக்கிக்காட்டிய கைவல்லியச்செய்யுளாலும், மூண்டகோபதிட தவசனத்தாலும், திருமந்திரங்களாலும் பரமான்மாவும் சீவான்மாவும் பாசமும் நித்தியப்பொருள்களேயென்பது நன்கு தெளிவாயது காண்க. (கைவல்யம்.)

" தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல் "
" அநாதியாஞ்சீவனெல்லாம்" என்ற செய்யுள்களில் பசுவும் பசுவுக்கு ஆதாரமாகிய பதியும், கண்டானேல் என்றதனால் நாணயி

டாது மறைத்துநிற்கும் மலமாகியபாசமும் அநாதிநித்தியங்களே என்பது விளக்கமாயது. (பகவற்கீதை.)

உலகமுதலியவைகளே பொய்யென்பவர்கள் மீளாநரகடை வதொன்று பகவற்கீதை கூறுகின்றது. இதனை,

" எண்ணிய வுலகமு முலகுக் கிசனும்
புண்ணிய பாவமும் பொய்யென் றேகொள்வார்
பெண்ணினெ டாண்புணர் கின்ற பெற்றியால்
நண்ணிய திவ்வுல கென்று நாட்டுவார்,"

"கடப்பரி தாய நரகமென்கின்ற கடல்களில் வீழவே கடவார்" என்றுகூறியதனுற்காண்க.

இ—ள்; சேதனம் அசேதனமென்று எண்ணப்பட்ட உலகமும், அவ்வுலகுக்குத் தலைவனுகிய ஈசனும், புண்ணியபாவங்களும், பொய்யேயென்பவர்கள், கடக்கமுடியாத நரகமாகியகடல்களில் வீழவேகடவர்களென்பதாம். இதில் வீழ்வொன்றமட்டில் அமையாமற் கடவனென்று மேலுங்கூறியது, கண்ணன் அவர்கள் மேற்கொண்ட கோபமிகுதியாற் சாபங்கொடுத்ததாக்கூறவுமிடந் தருதல் காண்க. சேதனமென்றது சீவர்களேயும், அசேதனமென்றது சீவர்களுக்கு இறைவனற்கொடுக்கப்பட்ட தனுகரணபுவன போகங்களேயுமாம். (பகவற்கீதை வடமொழி)

" ஸ்ரம்ஷ்ரஷ்டவ்யமஹிதாநாம்ஹ்ருத்ஜுஷ்டஜுஷ்டம்
ஹ்ருதேபஸ்வஷ்டவ்யமஹிதாநியஜ்ஞாஸ்ருஷ்டாஜீவாயேயா
தஸ்தேவஸ்ரணம்ஹ்ருஷ்டவ்யமஹாவைநஹாஸ்ரத தஸ்மாத்ஸ்ரஷ்
வ்ஸ்ராம்ஸ்ராஜீவ்ஷ்டாநம்வ்ராவ்ருஷிஸ்ராஷ்வ்ரதிஷ்டி"

இ—ள் அர்ச்சுநா! மாயாயந்திரமென்னும் யந்திரத்திலகப்பட்டுள்ள சகலசீவர்களேயும் சுழற்றிக்கொண்டிருப்பவராய்ச் சகலசீவர்களின்இருதயத்தில்யார்இருக்கின்றாரோ, அவரையேசகல பாவனையினுலும் சரணமடையக்கடவாய். அந்தசரணுடைய அநுக்கிரகத்தினுலே மேலானசாந்தியையும் சாஸ்வதமானஸ்தான த்தையும் அடைவாயென்று கண்ணன்கூறியவசனத்தாற்பதி பசு பாசநித்தியமேவிளக்குகின்றது.

(வாசிட்டம்)

"ஆய்ந்தவென் சிந்தை சிவ நாயகன் வசமா கைக்கே
யேய்ந்தது நிலைபுங் கொள்ளா திறைவனைப் பிரிந்தாள் போல"

இதில், அந்தூலரையாசிரியர் (சிவநாயகன்வசமாகைக்கு) என்ற தற்குக் கூடஸ்தப்பிரமைக்கியமாதற்கு என்றுரைத்துச் சிவனைக் கூடஸ்தனென்றும் நாயகனைப் பிரமம் என்றும் விளக்கினார். இவ்விளக்கத்தால் கூடஸ்தன் சிவனேயென்பது தெளிவாயது. அம்மாயாவர்திகளும் கூடஸ்தனைப்பொய்யென்று கூறுவதில்லை. இதனாலும் சிவனும் நாயகனுமாகியபசுவும்பதிபும்சிந்தைநிலைகொள்ளாமையைச் செய்யும் மலமாகியபாசமும் நித்தியமென்பது தெளிவாயது. இதில்நாயகனைப்பிரிந்தநாயகிபோலென்றஉவமானமும் அத்தெளிவையே வற்புறுத்தும். இன்னும் வாசிஷ்டம்,

"ஆவா யிப்போ துள்ளபடி யறிபும்அறிவி லெனைக்கண்டேன்
ஓவா விகற்ப மற்றுணர்வா யொளிருஞ் சிவ னுருவிதுவே"

இது, சிவன்சித்தென்று விளக்குகின்றது. மேலும்வாசிட்டம்;

"ஈசமில்சைவாகமர்க்குச்சிவனுப்" என்பதால் சிவாகமத்தை மற்றை ஈசமுள்ளதூல்கள்போலாகாதசிறப்புடையதென்று விளக்கித்துப்பொதுக்கிச்சிவனுப் என்றசிறப்புநாமத்தாலும் அதனை விளக்குகின்றது. இது அன்னபூரணிஉபநிடதவிளக்கமே.

(இதன்மேலும் வாசிட்டம்;)

"தண்டிலத்தோலும் செம்பினிற் கனிம்பும் சகசமாய்த்
தொழில்விசேடத்தால், விண்டுபோ மதுபோற் புருடனு மலத்
தை மேவியே போக்குத லியல்பாம்.என்று உவமைகாட்டிப் பாசவியல்பும், பசு அதனைப்பற்றினின்று அவ்வலிநீங்கப்பெறுதலுங் கூறுமுகத்தால் அவை நித்தியங்களென்பது குறிப்பித்தது. இப்படியே வாசிட்டம் பதி பசு பாசநித்தியம் ஆங்காங்கு விளக்குதலாற்றான் முழுதும் அவற்றையேகூறுஞ் சிவாகமங்களைச் சிலாகிக்கின்றது. (பிரமகீதை.)

"ஆகமங்கள் பலவுமுரையாடுகின்றதிவனே" என்பதுமுதலியவாகச் சிவாகமங்களையெடுத்து விளக்கியது. மேலும்,

"உரியதால் வேதத் தோமெனும் பொருளா யுள்ளதா யுள்ளவெப் பொருட்குங், கரியதாய்" என்ற செய்யுளில் எப்பொருட்குஞ் சாகூயியாயென்றதனுலே பிரமமேயன்றி மற்றைப் பசுக்களும் பாசங்களும் நித்தியப்பொருள்களேயென்பது விளக்கமாகின்றது. (வேதாந்தமகாவாக்கியங்கள்.)

இனி, ஆவர்கள் மற்றையனபோலப் பொய்யென்று கழிக்காத தத்துவமசி, அகம்பிரமாஸ்மி, அயமாத்மாபிரமம், பிரஜ்ஞானம் பிரமம் என்கின்ற வேதாந்தமகாவாக்கியங்களும் பதிபசுபாசமூன்றும் மெய்யேயென்று விளக்குகின்றன. எப்படியெனில்; "தத்துவமசி" என்பது தத் துவம் அசி எனப்பிரிந்து அது நீ ஆகின்றாய் என்னும் பொருட்டாய், அது என்றது பிரமமாகிய பதியையும் நீயென்றது சீவனுகிய பசுவையும் ஆகின்றாய்என்றதனுல் முன் ஆகாதிருக்கச்செய்து திருவருளால் தன்வலிகுறைந்துள்ளமலமாகிய பாசத்தையும் உணர்த்தலாலென்க. அதனை,

ஆருயிர் யாதான் றகலின் மாசிரி, பதியதுதன்மை படர்ப, அன்னபாசமறி. என ஞானநிர்த்தம் விளக்குகின்றது.

இ—ள் அரியஉபநிடதங்கள் (திருவருளால்) யாதொன்றைவிட்டு நீங்கினவோ அந்நீக்கத்தால் இயல்பாகவேபாசங்களினீங்கிப்சிவனது குணத்தைச் (சிவமாகின்றநிலையை) அடைகின்றன. அங்ஙனம்நீங்கப்பட்டபொருள் பாசமென்றறிக என்பதாம். இதனுல் மேற்கூறிய மூப்பொருளுண்மைகாண்க.

இத்(தத்துவமசி)வாக்கியம்போலவே மற்றை மூன்று வாக்கியங்களுள் அகம் பிரமம் அஸ்மி அயம் ஆத்மா பிரமம் பிரஜ்ஞானம் பிரமம் எனமும்மூன்றுகப் பிரித்துமேற்காட்டியபடி பதி பசுபாச நித்தியம் விளங்குகின்றன. இந்நான்கு வாக்கியங்களும் மும்மூன்று சொற்களாகவே அமைந்துள்ள இயைபும் அவ்வெண்மையை வலியுறுத்தும்.

(ஒன்றுபலகூனைத்து மாறு சென்றதனுண்மை)

இவ்வாறுவேதாந்த மகாவாக்கியங்களே மூப்பொருள்களும் எப்பொழுதுமுள்ளன வென்றுண்மை தெளிவிக்கவும் அம்மாயாவாதிகளிற்சிலர், சிவஞானவள்ளலென்பாரொருவர்,

ஒன்று யுலகனைத்து மாஞென் றப்பமுனி
பொன்று மொழியாற் புகன்றிருப்பக்—குன்றுத
முத்தியிலு மும்முதலு முண்டென் றுரைப்பதெவன்
பித்தமுறுஞ் சைவாரீ பேசு.“ என்றசெய்யுளைக்காட்டிச் சித்தாந்த சைவர்களாகிய எம்மவர்களை வைது தமது மடமைக்குணத்தை வெளிபிடுகின்றீர். அவர், “ஒன்றுப்“ என்ற சொல்லைக்கண்டவே பிரமந்தனிரயாது மில்லை யென்பதற்கு ஒருபெரிய ஆதாரங்கண்டதாக் கொண்டு எம்மை வைது வெளிபிட்டதே மடமைக்குணமென்பதை அத்தேவாரத்தினுண்மைப் பொருள்கண்டுதெளிவாராக. ஒன்றுப்“ என்றது தன்னைப்போலப் பதிப் பொருள் வேறின்றித் தன்னந்தனியாயுள்ள ஒருபொருளாய் உலகர்க்குள்ளசுகதுக்கந்தன்னைத் தாக்காமல் நிற்றலையும், “ உலகனைத்து மானர்“ என்றது, சேதனுசேதனப்பிரபஞ்சமுழுதும் வியாபித்து நிற்றலையும் விளக்கும். சேதனம்—அறிவுள்ளது. அசேதனம்—அறிவில்லது “ஒன்றுநீயல்லை அன்றியொன்றில்லை“ என்றமணிவாசகசுருதி முதலியனவும் இப்படியே விளக்குகின்றன. ஆதலால் ‘ஒன்றுப் ஆனர்“என்ற சொற்பொருளாகியபதியும், உலகனைத்துமென்றதில் சேதனப் பிரபஞ்சமாகிய சீவர்களும் அசேதனப்பிரபஞ்சமாகிய பாசங்களுமாகிய முப்பொருளுண்மையே விளக்கமாம். சேதனஉலகம் அசேதனஉலகம் எனப்பிரபஞ்சம் இரண்டுபிரிவாய்ப்பலவாயிருத்தல் நோக்கியே “உலகு“ என்று ஒருமையாகக்கூறுமல் உலகனைத்து மென்று பன்மையாகக்கூறியருளியதென்க. அத்தேவாரசுருதி சைவர்களாகிய எங்களுக்குரியசொத்தாதலால், அதுஎமக்கே உபகாரமாமென்பதை நோக்காமல் ஒன்றுப்என்றமட்டிலேயே மகிழ்ந்துதமக்காதாரமென்று வெளிவந்த புத்திவிசேடத்தை விரிப்பானேன். பிரமம் ஒன்றுதனிரயாதுமில்லையென்றுகொள்கின்ற அவர்“ஒன்றுப்“என்றமட்டில் நில்லாமல் உலகனைத்துமென்று வாய்திறக்கலாமா? உலகமென்பதே யில்லையாலல்“உலகனைத்துமானர்“ என்று அச்சுருதிகூறுமா; எல்லாம் பொய் என்றுபழகியதோஷமே சிறுவருமுணரத்தக்கஇதனையுற்றுநோக்கி யுண்மைதெளிதற்கு அவர் புத்திபிடந்திலது.

இனி, முத்தியிலுமும்மூதலுமுண்டென்றுரைப்பதெப்படியென்றதனால், பெத்தத்தில் மூன்றுமிருக்கலாம் முத்தியில் மூன்றுமிருக்கப்படாதென்பதே அவர்கருத்தாகின்றது. ஆகவேபந்தமுள்ளகாலத்திற் சீவர்கள் துன்பத்திலழுந்தியேகிடக்கட்டும். பந்தநீங்கி முத்தியிற்சென்று இன்புற்றிருக்கப்படாதென்பது தெளிவாகின்றது. இதனாற் சீவர்கள் அவர்களுக்குச்செய்ததீமையென்னையோ?

இனிப் பந்தமுத்தி பிரமத்துக்கில்லாதலால் பந்தமுள்ளவன்றான் அதனிடபட்டுமுத்தியுறவேண்டியவன்; முத்தியென்னுஞ் சொற்கு விடுபடுதல்என்பதே பொருள். பந்தமுள்ளவர் சீவர்களே. அவர்க்கே முத்தியுண்டென்பது நிச்சயமே. பந்தமுள்ளகாலத்தில் பிறப்பிறப்பாதிதுன்புறுவர். அதுநீங்கியபோது பேரின்புறுவர்; அதுவே முத்தியாம். அப்போது சீவர்களிருந்துதான் அவ்வின்பமனுபவிக்கின்றார்களாதலால். அம்முத்தியினுமின்பத்தைக்கொடுக்கின்ற சிவபரமான்மாவும் அநுபவிக்கின்ற சீவான்மாவும் அவ்வின்பத்தைவிளைவிக்கின்ற மலமுமென்னுமுப்பொருள்களுமுண்டென்பதே நிச்சயமாகும். இதனை,

"முத்தியினு மூன்று மூதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவினை வித்தன்மலம்
அன்புடனே கண்டுகொளப் பா." என்னும் உண்மைவிளக்கச் சித்தாந்தசுருதியாற்காண்க.

(மாயாவாதிகள்கூறும் சுருதிவஞ்சனை.)

இப்படியே, சொற்பொருள்களை முன்பின்விரோதம்வராதபடி நுணுகிப்பாராமல், ஒன்றேயென்னும் பிடிவாதத்துக்கிணங்கவே பொருள்கூறுமிகிழ்வர். இதனை அவர்கள்கூறுஞ் சிலசுருதிவஞ்சனைகள்காட்டிவிளக்குவாம். "யோகமஸ்மி" எவன்நானாகின்றேன்; "பிரமாஹமஸ்மி" பிரமம் நானாகின்றேன். "அஹமேவாஹம்" நானேநான்என்கின்றஇவைகளைமாத்திரங்கூறி, அதன்மேலுள்ள "மாம்சுஹோமிஸ்வாஹா" என்னை ஹோமிக்கின்றேன் என்றவாக்கியத்தைக் கூறாதுவிடுவதும், "பிரமைவஹந்" பிரமமேயானவன் என்றதைமாத்திரங்கூறி அதன்மேலுள்ள "பிரமாப்

யேதி" பிரமத்தையடைகின்றான் என்றதைக் கூறாதுவிடுவதும் அறியாமையாலோ! அறிந்தும் வஞ்சனையாலோ! இதனைப் புத்திமான்கள் ஊகிப்பாராக. ஹோமித்தல்—சேர்ப்பித்தல். "என்னை ஹோமிக்கின்றேன்" என்பதையும் அங்குள்ளபடி அம்மூன்றுவாக்கியங்களுடன் சேர்த்துக்கூறினால், என்னையென்றாகூறுஞ் சிவான்மாவும், யாரிடத்தில் ஹோமிக்கின்றாயென்றால், சிவபரமான்மாவினிடத்தென்று கூறவேண்டுமாதலால் அப்பரமான்மாவும் இதுவரையும் ஹோமிக்கவிடாது தடுத்துநின்றமலமுமாகிய மும்பொருளும் எப்பொழுதுமுள்ளனவென்பதும், இதுபோலவே பிரமமேயானவன் பிரமத்தையடைகின்றானென்றுகூறினால் பிரமமும் அடைகின்றவன் ஒருவனும் அடையவிடாதுதடுத்த பாசமுமாகிய மும்பொருளுமுண்டென்பதும் விளக்கமாகுமென்றே சூரியனை ஒருவிரலால் மறைப்பார்போலமறைத்து வைத்தனர். "தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதி யமனார் மறைத்தாலும், நிலையி லாதார் நிலைமையினன் மறைக்க வொண்ணுமோ" என்று பெரியபுராணங்கூறியபடி அவ்வாக்கியங்கள் அவர்கள் மறைப்புளகப்படாமல் பிரகாசிக்கின்றன. மறைத்தவர்கள் "பிரமமேயானவன்" "பிரமத்தையடைகின்றான்" என்றஇரண்டில் பிரமத்தையடைகின்றான் என்றதைமறைத்துவிட்டால், பிரமமேயானவன் என்றசொற்குமுடிவில்லையேயென்று யோசிக்காமல்மறைக்கப்புகுந்தது கள்ளம்வெளியாதற்கே காரணமாயிற்று. சைவசித்தாந்திகளாகியஎம்மவர்களோ, அவர்கள்போல வஞ்சித்தொழுகுங் குறைவினரல்லராதலால், அவர்கள் சாதகமெனக்கொண்ட மூன்வாக்கியங்களையும் மறையாமல் முழுதுங்காட்டி என்னைஹோமிக்கின்றேன் என்றபடி தம்மைச் சிவத்திற்கலப்பித்து, அதனாற் பிரமமேயாகிப்பிரமத்தையடைந்து, அதனாற் பிரபஞ்சனாகின்றேன் பிரமமேனானெனக்கொள்ளும் பெரும்பேறுபெற்றுவாழ்கின்றார்கள். இவ்வாறு வஞ்சமின்றியுள்ளபடியொழுகாமல் சுருதியாதிவாக்கியங்களையும் தமது கருத்துக்கிணங்கப்பேதிப்பது அவர்கள் வழக்கம். அவற்றிலுஞ்சிலகாட்டுவாம். (சுருதிப்புரட்டு.)

இருக்குவேதம் பரமான்மாவும் சீவான்மாவும் பாசமும்நித்தியமென்றுசுறிப்பித்ததை முண்டகோபநிஷதம் விளக்கியது.

அதனைக் கைவல்லியமும்தெளிவித்தது. வேதவேதாங்கங்களும்பல இடங்களில் விளக்குகின்றன. இவ்விளக்கம் விரோதமென்றெண்ணிப் பாஷியஞ்செய்யப்புகுந்து, அங்கங்குள்ளவாக்கியங்களைமாற்றியும், கூட்டியும், தங்கருத்துக்கிணங்கவெனியிட்டும் அதற்கிணங்கச்சூத ஸம்ஹிதையைப் பதினெட்டுமுறைபடித்துப் பலஇடங்களிலிஷ்டப்படிசெய்தும், வைத்தார்கள். அதனில், யஞ்ஞவைபவகண்டத்துப் பிரமகீதை ஏழாம்அத்தியாயத்தில் "சிவன் ஈசன்என்றிரண்டுபக்ஷிகள்இந்தச் சரீரத்தில்உள்ளன. சிவன் கர்மபலன்புசிக்கின்றது; ஈசான் புசிக்கின்றிலன்" என்றுள்ளபடியெழுதி, அதன்பின்" ஆகாசம், கடாகாசம் மகாகாசமென வேறுபட்டதுபோலப்,பரஞானம் (பரப்பிரமம்) ஈசனுகவும் சிவனுகவும் கற்பிக்கப்பட்டது" என்றெழுதிவைத்துச், சிவனும்பொய் ஈசனும்பொய்யென்னுந்தங்கள் கொள்கைக்கு ஆதரவுசெய்துகொண்டார்கள்.

"பிரமம் சிவனுகவும் ஈசனுகவுங்கற்பிக்கப்பட்டது எதற்காக? கற்பித்தவர் யாவர்? அதனால் என்னபலன்? அப்பலனை யாரடைகிறது. அடையாதபோதுள்ள குறைஎன்ன?" என்ற கேள்விகளுக்குயாதுகூறுவீரோ? இருக்கட்டும்; யாராலுமுந்தங்கள்பக்ஷத்துக்குஆதரவுதேடிக்கொள்வது வழக்கமே. அதனில் சாசனப்புரட்டிருந்தால், அரசரால் தண்டிக்கப்படுவதும் வழக்கமே; சிற்றறிவுஞ்சிறுதொழிலுமுள்ள இவ்வரசர்செயலே இப்படியானால், முற்றறிவும் முழுத்தொழிலுமுள்ள பரமேசுவரவாக்காகிய சுருதிகளையும்புரட்டிய பெரும்புரட்டு வீண்போகுமா? சிவசித்சத்தியாகிய உமாதேவியைச் சடசத்தியென்றும், மோகரூபிணியென்றும், விஞ்ஞானமுதலிய அருட்சத்திதிருநாமங்களை அந்தக்காரணவிருத்திகளென்றும், தக்ஷாகாயவியோகத்தை அவித்தை அஞ்ஞானம் மாயைசடசத்தியென்றும், சாமிபத்தை ஐக்கியம் என்றும், அத்துவாவைச்சம்சாரகதியென்றும் இன்னும் பலவற்றைப்பலவிதமாகவும் புரட்டிஎழுதிவைத்தனர்.

இதனால் அவர்பின்னேயோர் அம்மட்டிலும்அமையாமல் புரட்டுதலே தமது பிதுரார்ச்சிதமெனக்கொண்டு ஒவ்வோராலயங்களில் தமதுஆதிக்கமிருதியால் சிவாலயபூஜாதிகளையும் புரட்டி

நடத்துகின்றனர். அவர்பின்னேயோரும்சிவாகமத்தினுண்மைநோக்காமல் அதுவேமுறையென்றுறைத்துநின்று காலநீட்டித்த ஆட்சிப்படுத்திவருகின்றனர். இதனை, ராமேசுவரம் திருச்செந்தூர் காமக்கோட்டம் சிதம்பரமுதலியபெருந்தலங்களிற் காணலாம். இத்தலங்கள் முற்காலங்களிற் சிவாகமவிதிப்படியே பூஜாதிகள் நடந்துவந்தனவென்பதைஅப்புராணாதிகளும் விளக்கும். இதை நீக்கி உள்ளவாறுநடந்துவரும்படி திருவருளைப்பிரார்த்திக்கின்றனம். வைதிகரிற் சாஸ்திரங்கள் குருமுகமாகநன்குணர்ந்து பிரசித்திபெற்ற பெரியார்பலர் வேதத்தைக்காட்டிலும் அதன்சாரமாகிய காமிகாதி(உஅ)சிவாகமங்களைச் சிலாகித்து வேதம் பாற்கடல்போல்வது சிவாகமங்கள் அதன்சாரமாகிய வெண்ணெய் போல்வதென்றுள்ளபடிகருதியே வெகுசனசமூகத்திற் பிரசங்கித்துவருகின்றார்கள். இவ்வுண்மைகடைப்பிடித்து அவ்வழிப்பட்டோர் சிவாகமநிந்தையும், அதனைத் திரஸ்கரித்தலும் நீங்கி உய்யும்படி மேலுந் திருவருளைப்பிரார்த்திக்கின்றனம்,

(பகவற்கீதையின் முடிந்தகருத்து.)

அவர்கள் மிகக்கொண்டாடும் பகவற்கீதை கண்ணன் அர்ச்சுனனைக்கொலைசெய்யும்படிஎவியதூலென்பது பாரதம் படித்தார் கேட்டார் எல்லாருந்தெரிந்ததே. அருச்சுனன் வீராவேசத்துடன் யுத்தபூமியில்வந்தும் எதிர்நிற்பவர் ஆசாரியர்முதலியோரல்லவா? இவர்களைக்கொன்று நிலையின்றிஒழியும் மண்ணுட்சியைப் பெரிதெனநம்பிவாழ்வதென்று பயந்து போரிற்சென்ற புத்திமுழுது மாறிநிற்றலால், அவன்புத்தியைஇலகுவாகமாற்றமுடியாதென்று பதினெட்டுஅத்தியாயமாகவிரித்து அக்கீதைகூறினர். கூறியும் லக்ஷியம்கொலைசெய்யஎவுதலிலேயேநின்றது. அதனை அருச்சுனன் அந்நூல்கேட்டபின் பயம்நீங்கிக் கொலைசெய்யத்துணிந்தானென்று தெளியலாம். அந்நூலைஞானோபதேசநூலென்பர். சுத்தஸ்தானத்தில் அந்தரங்கத்தில் ஆசாரியன் உயர்ந்தபீடத்திலிருந்து சிஷ்யனைத் தாழவைத்துக்கூறுவதே உபதேசமுறை. யுத்தகளமாகிய அசுத்தஸ்தானத்திலே அநேகவீரர்கள் ரதகெஜதுரகபதாதிகள்

வாத்தியமுழக்கங்கள்கூடிய பகிரங்கத்திலே, ஆசாரியன் கீழிருந்து சிஷ்யனைமேற்பீடத்தில்வைத்து அவன்பாதங்களைத்தன் தோள்களில்வைத்துச் சாரதிமுறைமேற்கொண்டு எல்லாஜீவர்களுங்கொல்வாயென்றுகூறியது ஞானோபதேசமாகுமா? இவ்வுண்மையை,

" பார்த்தனு ரிசதமேறிப் படைதனைப் பார்த்துச் சார்வை
கூர்த்தவம் பாலே யெய்து கொன்றுசா லேனென்னத்
தேர்த்தனி லிருந்து மாயஞ் செய்துமால் கொல்லச் செப்பும்
வார்த்தைநூ லாக்கிக் கொண்டாய் புரங்கொல்நூல் மதித்திடாயே." என்ற சித்தியார் செவ்வே விளக்குகின்றது.

இதன்கருத்துக் கொலைக்குப்பயந்தவனைக் கொலைசெய்யும் படிவிஷ்ணுவின் அம்சனாகிய கண்ணன் மாயஞ்செய்து கூறியவார்த்தையையொருநூலாக்கிக்கொண்டீ சிவபூசகர்களாகிய திரிபுரத்தவர்களை நாம்கொல்வது முறையன்றென்று மனுத்து சிவபிரானையன்றிப் பிறர்வெல்லமுடியாமையால், அவர்களைச் சைவநெறியினீக்கிவிட்டால் சிவபிரான்வந்து கொன்று நமதுதுன்பத்தைநீக்கியருளுவானென்றுகருதி அவ்விஷ்ணு வஞ்சனையாற்பௌத்தகுருவாய்வந்து கூறியவார்த்தையாகியபௌத்தநூலையும் ஒரு ஞானநூலாகமதித்து மேற்கொள்வதாகவெண்டீதாம்.

வசிட்டத்தின்முடிந்தகருத்து.

வசிஷ்டமும் பிரபஞ்சபாரம்மவித்தலில் ஊக்கமின்றி ஒதுங்கியசாமனை அதனிற்புகுத்தற்காக வசிஷ்டர்கூறியதாம். இதனை,

"அருச்சுனற்கு மிராமற்கு மதிகார மவைநோக்கி யுறைந்த நூலின், கருத்தறியாய்" என்று மகாராஜாதுறவுநூலுந்தெளிவிக்கின்றது. கண்ணரும் வசிஷ்டரும் சிவபக்தர்களாதலால், சமயோசிதமாகக் கூறினரேனும், அக்கீதையும் வாசிஷ்டமும் அங்கங்கே பதி பசு பாசவித்தியசைவநலமும் விளக்குகின்றன.

(மாயாவாதிகள் பசுஞானிகள்.)

அம்மாயாவாதிகள் தேகம் இந்திரியம் அந்தக்கரணம் மூதலிய சடங்களையே பொருளெனக்கொள்ளும் நிலைகளை அங்கங்குள்ள பழுதுகண்டுநீங்கி, அச்சடங்களைக் கருவியாகவைத்தா

ஞுகின்ற சித்தல்லவா நாமென்றுகண்டமாத்திரமே சித்தாகியநாம மைச் சடங்களாகநினைத்த கீழ்நிலைநீங்கி உள்ளபடி சித்தெனக் கண்டு மேல்நிலைக்கு வந்துவிட்டோமென்ற களிப்பின்மிகையால் அவ்வசப்பட்டுநிற்றலால் நாம் சித்தாஞலும் அறிவித்தால் அறிவ தும் அதுவும் ஒன்றென்றுய் அறிவதுமாகிய கிஞ்சிஜ்ஞசித்தன்றி எல்லாவற்றையும் ஒருங்கேதானே அறியும் சர்வஜ்ஞசித்தல்லேம். அச்சித்தாகிய சிவத்தையடைதற்குரிய சன்மார்க்கநிலைகிற்றலே நமதுகடமையென்றுண்மைநோக்குதற்கு மனம் இடந்தராமல் பசுவாகிய தம்மையே பிரமமெனக் கருதித்துநிற்கின்றராதலால் அவர்கள் பசுஞானிகளேயாவர், இதனை,

வேதசாத் திரமிருதி புராணகலே ஞானம் விரும்பசபை வை கரியா தித்திறங்கண் மேலாம், நாதமுடி வானவெலாம் பாச ஞான நணுகியான் மாவிலைகிழ் நாடலாலே, காதலினு ஞன்பிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானமிவ ஞடலிற் கட்டுண், டோதி யுணர்ந் தொன்றென்று வுணர்ந்திடலாற் பசுவா மொன்றுகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே." என்னுஞ் சித்தியாராலுங் காண்க. (மாயாவாதிகளுக்குள்ளதத்துவங்களிருபத்தைந்தே.)

இருபத்தைந்துதத்துவங்களே அவர்களுக்குள்ளன. அங்ஙனமாகவும் அவர்கள் ஜீவன் ஈசுவரன் கூடஸ்தன் மூன்றுகூட்டி எங்களுக்கு இருபத்தெட்டுத்தத்துவங்களுண்டென்றும், இனி வாயுக்கள்பத்தும் அவித்தையுங்கூட்டி முப்பத்தாறுண்டென்றுங் கூறுகின்றார்கள். சீவன் ஈசுரன் கூடஸ்தன்மூன்றும் தத்துவங்கள் போற் சிவனுற்கடந்து செல்லவேண்டியனவல்லவாதலால், அம் மூன்றையுந் தத்துவமெனக் கொள்ளுதல் பொருந்தாதென்க. இனிப் பத்துவாயுக்கள் பஞ்சபூததத்துவமொன்றுபுள்வ வாயுபூதத் திலடங்கும்; அவித்தை மலத்திலடங்கும்; ஆதலால் அவர்களுக் குள்ள தத்துவங்கள் (உரு) என்பதே நிச்சயம். இவ்விருபத்தைந் தின் விவரம், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம்(நி)சத்தம் பரி சம் ரூபம் ரசம் கந்தம்(நி)மெய் வாய் கண் மூக்கு செவி (நி) வா க்கு பாதம் பாணி பாயுர் உபஸ்தம்(நி) மனம் புத்தி சித்தம் அக ங்காரம் (சு)ஆக (உசு,ம்) ஆன்மதத்துவமாகும். இது, தன்பேரா

லும் இதனையடுத்துள்ள புருஷதத்துவம் சிவனிலையேயென்பதை விளக்கும். அவர்கள் முடிவாக்கொண்டது. (உறு-வது) இப்புருஷதத்துவமேயாதலால் இவர்களைச் சிவப்பிரமவாதிகளேயென்பது நிராக்ஷேபமே.

(சைவர்க்குரியதத்துவங்கள் மூப்பத்தாறு.)

(உரு) க்குமேல் சாலம் நியதி ஏலு வித்தை ராசம் மாயை ஆறும் புருஷதத்துவத்தோடுஞ்சேர்ந்து ஏழாய் வித்தியாதத்துவமென்றும் அதற்குமேல் சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்திசிவம்ஐந்தும் சிவதத்துவமென்றுங் கூறப்படும். இவை,

—'' கூஆஃ வூஹாவொதியகியபூஒூஊஹஒதாநியொறிஃ வாஷூஷஊகிஹிஜூஃ '' (என்னும் சுவேதாசுவதரகருதியாலும்,

''ஸிவம் ஸத்தி ஹாஹாவ்யீஸம் விஒூரவ்யுஸெவ''

என்னும் பிருஹத்ஜாபாலசுருதியாலுந் தெரியலாம். ஆகவே இம்மூப்பத்தாறுந்தான் சுருதிசம்மதமான தத்துவங்களென்பதும், மாயாவாதிகள் சீவன் கூடஸ்தன்பிரமம்சேர்த்து (உஅ) என்றும் வாயுக்கள் பத்து அவித்தையொன்றுசேர்த்து(நகூ)என்றும் விகற்பித்துக்கூறுவனவெல்லாம் சுருதிசம்மதமன்றென்பதும் தெளிவாயது. நாம் பிரமமென்னும் மாயாவாதமதபாஷியகர்த்தாசங்கராசாரியர் இச்சுருதிசம்மதமானதெளிவு கடைப்பிடித்தேசிவானந்தலகரி சிவபுஜங்கம் தேவிபுஜங்கமுதலிய நூல்களிற் சைவசித்தாந்தமே கூறி இம்மூப்பத்தாறுதத்துவங்களே நாம் மேற்கொண்டமையும் அப்பீடத்தின்மேற் சந்திரமௌளீசரைப் பூசித்துவருதலும் அதற்குரிய சிவதீக்ஷாதிசம்ஸ்காரமும்விளக்கினர். இதனுலிவர் நீலகண்டசிவாசாரியரிடம் சிவதீக்ஷாதிபெற்றுச் சைவகெறியொழுகுஞ் சைவரேனென்பது தெளிவாம். ஆனால் அவர் மூன் பாஷியஞ்செய்ததென்னெனில்? புத்திமுதலியன பிரமமென்பார் இலகுவாக மேலேறிச் சிவப்பிரமநிலையில் வருதற்கேயன்றி வேறில்லை. அது அவர் சிவபூஜாதிகண்மைச்செயலாலும் விளக்கமே. இம்மூப்பத்தாறுதத்துவங்களும் சைவர்களாகிய எம்மவர்களால் மேற்கொள்ளப்பெற்றன.

(மாயாவாதிகள் பிரமவாதிகளென்பது பொருந்தாமை.)

இம்மூப்பத்தாறையுங் கடந்து அதீதமாய்நிற்பதுபிரமம்.வரி சைக்கிரமமாக இம்மூப்பத்தாறையும் கடந்துசென்று பிரமத்தை யறிந்து வழிபடுகிறவர்கள் பிரமவாதிகளாவாரன்றி,இருபத்தைந் ததத்துவபட்டிலேநின்று அப்புருஷனேபிரமமென்பவர்கள்பி ரமவாதிகளாகாராதலால் அவர்கள் அப்புருஷதத்துவ சிவப்பிர மவாதிகளே என்பது தெளிவாமென்க. இம்மாயாவாதிகளுக்கு இருபத்தைந்து தத்துவங்களே உள்ளனவென்பதை,

ஆகின்றதொண்ணூற்றோடாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறு முருஞ்சைவர்தத்துவம்
ஆகின்ற நாலேழ்வே தாந்திமா யாவாதிக்
காகின்ற வையைந் தறுநான்கு வைணவர்க்கே,” என்னுந்தி ருமந்திரத்தாற்காண்க. இவ்விருபத்தைந்தில் ஒன்றையாவதுசட மெனக்கண்டு விட்டொழியாமல், அவற்றிற்கிடந்தலைபவர்கள் நாம் பிரமமென்பது வாசாமாத்திரமாயொழிந்து சிவத்துரோகத் துக்கே ஏதுவாமென்க.

(நாம்பிரமமென்பதுபெத்தநிலை சிவோகமென்பது முத்திநிலை)

ஆனால்சைவர்கள்சிவோகம்என்பதும் அதுதானேயெனில்? அப்படியன்று; அச்சொல்(நகூ)த்தத்துவங்களோடுங்கடந்து பசுத்து வம்நீங்கிச்சிவத்துவம் பெற்றபெரியார்அச்சீவன், முத்திநிலையிற் சிவமேமுன்னிற்பத்தாங்கள் அதனுளடங்கிப்பின்னிற்கும் பேரா நந்தநிலையை விளக்குவதேயாம்; இதுசிவமென்பது முன்னின்று அகம்என்பது பின்சேர்ந்துசிவோகமெனவிளங்கும் அச்சொல் லாலுந்தெளிவாம். இதனை, (ஆலாஸ்யமான்மியம்)

மாசாய் மறைக்கு மலவலிபு நானும் வேறின்றி
யாசா விகாரமல மாயினேனைப் பொருட்படுத்துப்
பேசாத வின்புருவினின்றெடென்னைப் பின்வைத்த
ஈசா” என்றதிருவாக்கும் தெளிவிக்கின்றது.

நான் பிரமமென்பதில் நான்என்னுஞ்சீவன் ஆணவமுனைப் பால்மூற்பட்டு கிற்பப்பிரமம் பிற்பட்டுநிற்றலால் இது மலபெத் தர்களாகிய பசுஞானிகள்கூற்றேயாம். முத்திநிலையில் சிவம்மு

ற்பட்டுநிற்றலும் சிவன் அதனுளடங்கிப்பிற்பட்டு வியாப்பியமாய் நிற்றலும், பெத்தநிசையில் ஆணவமலமூனைப்பினுல்சிவன்மூற்பட்டு நிற்றலும் சிவன் அச்சிவபோதத்துக்கு வெளிப்படாதுமறைந்து பிற்பட்டுநிற்றலுமாகிய இதுசிவசாஸ்திரவிளக்கமே. இதனை

தானின் றெனைத்தனக் குள்ளே யொளிக்குமென் றன்மைநிற்க
யானின்ற போதெனைக் குள்ளே யொளித்திடு மிப்பரிசே
வானின்ற சின்மய மாமாசி லாமணி மன்னுந்தன்மை
நானின்று கண்டனன் காணை னிதற்கொத்த நன்மணியே''

என்னும்பண்டாரமும்மணிக்கோவைத் திருவாக்கினுலுந் தெளிவாகும். ஆகவேநாண்பிரமமென்பது பெத்தநிலையையும் சிவோகமென்பதுமுத்திநிலையையுமுணர்த்துமென்க. இவ்வாறு, சத்துவம் ஒன்றையேனும் விட்டுநீங்காமல்சமூசாரத்துட்டங்கிடந்துகொண்டே நாம்பிரமமென்றுசூறி. அதனுலுந்தாங்கள் பெத்தநிலைப்பட்டவர்களே யென்பதை விளக்குகின்றவர்களது விருதாகோஷத்தைவிரிப்பானேன். இவர்கள், நாமேபிரமமென்பது மஹாபாதகச்செயலாகுமென்பதை,

தாம்பிரமந் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே
நாம்பிரம மென்பவர்பா ணண்ணுதே

என்றுஉமாபதிசிவருருதியும்'' யாங்களேகடவுளென்றிடும் பாதகத்தவரும்'' என்றுதாயுமானசுருதியும் விளக்குகின்றன.

உள்ளபடி அவ்விருபத்தைந்து தத்துவங்களையும் ஒன்றொன்றுக அதனதன்சொரூபங்களேச்செவ்வேகண்டு அவையெல்லாஞ் சடங்களெனத்தெளிந்து விட்டுநீங்கி அவற்றின்விலக்ஷணர்களாய் (வேறுபட்டவர்களாய்) தம்மைச்சித்தெனக்கண்டு, பின்பு அச்சடங்களேப்பற்றுமல் அம்மட்டிலாவதுபடிமுறையாக மேலேறிவந்தவர்கள் அதன்மேலெட்டிப்பார்த்தற்குரிய சிவஞானக்கண்கிடைக்கப்பெறுதகுறைவினல் கிஞ்சிஞ்ஞசித்தாகியதம்மையேசர்வஞ்ஞசித்தாகிய பிரமமெனக்கூறிநிற்பினும், திருவருள்வலியால்மேலுள்ளதத்துவங்களையுங்கடந்து நன்னிலைக்கு வருவாராதலால் அவர்கள் மேற்கொண்டுநிற்கும் மாயாவாதவேதாந்தம் சைவசித்தாந்தத்தின்கிழ் ஒருபகுதியாய் ஒதுங்கிநிற்பதாமென்க.

(சைவவேதாந்தம்.)

சைவவேதாந்திகளாகியஎம்மவர்கள், பதி பசு பாசம் மூன்றும் நித்தியப்பொருள்களே, பதி சிவனொருவனே மற்றையாவரும் அவன் அடிமைகளாகிய பசுக்களேயென்பதும், அப்பசுக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனமூன்றுவகையினர் அநேகமென்பதும், பாசங்கள் ஆணவமலம் மாயாமலம் கர்மமலம் எனமூன்றுபகுதியாய்ப் பசுக்களைப்பந்தித்துள்ளன என்பதும், திருவருளால் அப்பாசவலிநீங்கியபசுக்கள் சிவபதமிழலில் வாழுதலேமுத்தியென்பதும் திருவருளுணர்த்தச் செவ்வேதெளிந்து, அவ்வழிநின்று வாழுஞ்சிவானுபூதிப் பெருஞ்செல்வர்களே.

ஈண்டுக்கூறிய வெல்லாம் மற்றைய வேதாந்தங்களிற்கூறிய உபசாரங்கள் போல்வனவல்ல; உண்மையேயென்பதை வருகின்ற பிரமாணங்களே நோக்கித்தெளிக.

(சுருதிப்பிரமாணங்கள்)

சைவவேதாந்தமாகிய கடவல்லியுபநிஷதம்(உ,ம்அத்தியாயம்(நு)ம்வல்லி(கஉ)ம்மந்திரம் " நித்யோநித்யானாம்அதநஶ்சேதநஶ்சேதநானாம்" என்னும் மந்திரம்நித்தியப் பொருள்களுள்ளேநித்தியன் சேதநப்பொருள்களுள்ளேசேதநன் என்றுவிளக்குகின்றது. அழிவின்றியென்றுமுள்ளது எதுவோஅதுவேநித்திய மென்பதாம் மாயாவாதிகள் பிரமம்ஒன்றுதான் நித்தியம் வேறொன்றுமில்லையென்பதுண்மையானால் இவ்வேதாந்தம் நித்தியப் பொருள்களென்று பன்மையாகக்கூறுமா? பசுபாசங்களும் நித்தியமாதலானன்றே அவ்வாறு கூறியதென்க. நித்தியங்களுள்ளே நித்தியன் என்றது. நித்தியமாயுள்ள பசு பாசங்களுள் மேலாய் விளங்கும் நித்தியன்என்பதாம். சேதநங்களுள்ளே சேதநனென்றது, விஞ்ஞானகலர் பிரளயாகலர்சகலர் எனமூன்றுபகுதியாய் அறிவித்தாலறியும் அறிவுடைப்பொருள்களாகிய பசுக்கள் போலாகாதுதானேஅறியும் முற்றறிவினனாகிய சேதநனென்பதாம்.

• சாந்தோக்கியோபநிஷதம்-நு-வது பிரபாடகம்-கஅ-வது கண்டம்-முதலாவதுமந்திரம்- ஸதெ-ஏஷாதஸ்ம ! என்று பசுக்கள்

பலவென்பதும், (ஷ்வே-சு-௧க-ந) "த்ரயமேதஜ்ஜீவாஃ" என்று சீவர்கள் அழிவில்லாத நித்தியர்களென்பதும் விளக்குகின்றது

சுவேதாசுவதரோபநிஷதம் முதலாவது அத்தியாயம் எட்டாவது மந்திரம் "ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவேகாம்ஸ்தயாத்மாஜுஷ்டஸ்ததோனேனமோக்ஷம்" என்று பாசங்கள் பலவென்பதும், ஆத்மாமகாதேவனை அறிந்து அப்பாசங்களினின்றும் விடுபடுகின்றனென்பதும் விளக்குகின்றது: ஷைவோபநிஷதம்-க-சு-"வ்யோமாதாதாவைரிதாரஜ்ஞேஷ்வா" இம்மந்திரம் ஆத்மாக்களை வேறுபொருளாகவும்(அவற்றைச்) செலுத்துகின்ற (பதியை) வேறுபொருளாகவும் அறிந்து என்றுவிளக்குகின்றது. இதனை, ஆத்மாக்களும் பிரமமும் பொருட்டன்மையால் வெவ் வேறுபொருள்கள் என்பது தவறென்று கூறும்மாயாவாதிகள் உற்றுநோக்குவாராக.ஷைவோபநிஷதம்-ரு-க-"க்ஷரம்ப்ரதானமம்ருதாக்ஷரம்ஹரஃக்ஷராத்மானாவீஶதேதேவ ஏகஃ" அவித்தையென்றது அசேதநம் (பாசம்) வித்தையென்றது சேதநம் (பசு) இவ்விரண்டையும்ஆளுபவர் இவ்விசண்டுக்கும் வேறுள்ள ஈசர் என்றும், ஷைவோபநிடதம் க. க0.

"க்ஷரம்ப்ரதானமம்ருதாக்ஷரம்ஹரஃக்ஷராத்மானாவீஶதேதேவ ஏகஃ"

க்ஷரத்தையும் (பாசத்தையும்) (சீவ) ஆன்மாவையும் ஆளுபவர் ஏகராகிய தேவர் என்றும், ஷைவோபநிஷதம் க. கூ.

"ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவேகாம்ஸ்தயாத்மாஜுஷ்டஸ்ததோனேனமோக்ஷம்"

பிறவாதவனாகிய ஞானும் (சிவனும்). அஞ்ஞானும் (சிவனும்) ஆகிய இருவரும் ஈசனும் அநீசனுமாம் என்றுங்கூறுகின்றன. இம்மந்திரங்களால் மேற்காட்டிய பதி பசு பாசங்கள் நித்தியமென்பதை விளக்கிஆளுபவர் என்றதனால் அப்பசுக்களை அடிமைகளாகவும் பாசங்களை உடைமைகளாகவுங்கொண்டுஆளுகின்றவனென்பதையும் தெளிவிக்கின்றன. தைத்திரீயோபநிஷதம் கூ. க. ச.

"யதோவாசோநிவர்தந்தேஅப்ராப்யமனஸாஸஹ"

என்றமந்திரம் இந்தப்பசுக்களுக்குப்பதியாயுள்ளவர் (ஈசர்) ஆளுகின்றனென்றுகூறிப் பசு பதி சிவனேயென்பதைவிளக்கியது.

ஈசாவாசியோபநிஷதம் க௧. கச. "க்ஷரேதமஸ்யதே" சிவாநந்த

தத்தைஅநுபவிக்கின்றனன்என்றும், கேநோபநிடதம் கூ. ''விஜ்ஞாதம்விஜானதே'' சிவாநந்தத்தைத்தெளிக்கின்றனன் என்றும், கடோபநிஷதம்(சு-கச) ''ஸர்வேவேதாயத்பதமாமநந்தி தபாஂஸிஸர்வாணிச யத்வதந்தி'' பின்மனிதன் அமிர்தனுகின்றான் பிரமத்தை அநுபவிக்கின்றான்.என்றும், பிரசிநோபநிஷதம். ங. கூ.

''விஜ்ஞாயாரமிதிவிஜ்ஞாதாரமிதி''

அறிந்துசிவாநந்தம்அநுபவிக்கின்றான் அறிந்துசிவானந்தம்அநுபவிக்கின்றான் என்றும், முண்டகோபநிடதம் உ. உ. எ.

''தமேவைநவித்வாவிஜ்ஞாநமாத்மாநம்வேதயத்வம்''

ஏந்தப்பிரமம் ஆநந்தவடிவாகிய அமிர்தமாய்விளங்குகின்றதோ அந்தப்பிரமத்தை (அருள்) ஞானத்தினாற் பெரியோர் பார்க்கின்றனர் என்றும், கைஉபநிஷதம் ங. உ. கூ. ''விஜ்ஞாதாரமரேகேந விஜாநீயாத்'' (பாசத்தினின்றும்) விடுபட்டவனுய் அமிர்தனுகின்றனன் என்றும், தைத்திரீயோபநிடதம் க, சு. க. ''ஸர்வேதாஹிஸ்ருஷ்டயஃ பரமசிவன் பொன்னம்பலினியன்என்றுங்கூறுகின்ற இவ்வேதாந்தமந்திரங்களும் பதி பசு பாசங்கள்மூன்றும் நித்தியங்களேயென்பதைவிளக்கிப் பசுக்கள் திருவருளினுலே தம்மைப்பற்றித்துள்ள பாசத்தினின்றும்விடுபட்டுச் (சிவபதகிழலில்)சிவாநந்தத்தைஅநுபவிக்குமென்பதை விளக்குதல்காண்க. இம்மந்திரங்களில் அங்குங்கே அமிர்தமென்னுஞ்சொல் இறப்பில்லாத சிவஇன்பத்தையேஉணர்த்திநிற்கின்றது. (சைவஉபநிஷதங்கள்:)

சைவவேதாந்தமாகிய உபநிஷதங்கள், ஈசாவாசியம், கேனம், கடம், பிரசிநம், முண்டகம், மாண்டூக்கியம், ஐதரேயம், தைத்திரீயம், சாந்தோக்கியம், பிருகதாரணியம், கௌஷீதகிப் பிராம்மணம், பஸ்மசாபாலம், பிருகச்சாபாலம், ஜாபாலம்,சரபம்,கைவல்லியம், காலாக்கினிருத்திரம், சுவேதாசுவதரம், மைத்திராயணம். அதர்வசிரசு, அதர்வசிகைமுதலியனவாம். இவைகள் முற்கூறிய பதி பசு பாசநித்தியமென்பதுமுதலிய சைவநலங்களேயெடுத்துக்கூறப்புகுந்

விரியுமாதலால், முடிவிலுள்ள அதர்வசிகோபநிஷதத்தின்முடிந்த வசனம் ஒன்றுமாத்திரம் எடுத்துக்காட்டிமுடிப்பாம்

(அதர்வசிகை.)

இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும்நான்கின் முடிந்தவேதம்அதர்வணம். அதன்சிரசுக்குமேல் முடிவாயுள்ளது அதர்வசிகை. இது சிவோத்கரிஷங்கூறிவந்து முடிவில்

“ஸிவவஸகொயெ யுயஸிவஃகஸவஸுதேஸுவரிதுஜுவு ரோவாயவுஸிவா” என்று முற்றுப்பெற்றது.

இ—ள்; சிவனெருவனே(யாவராலும்)தியானிக்கத்தக்கவன் (எதனால்என்றால், ஒருவராலுநீடித்துநின்றாலும், அவரவர்காலஎல்லையில் அழிந்துபோகின்ற அநித்தியமாகிய அற்பமங்களங்களைச் செய்யும் மற்றைத்தேவர்கள்போலாகாமல் ஒருகாலத்தும் அழிவில்லாதநித்தியமாக) மங்களத்தைச்செய்பவன், (“சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியும்மான்” ஆகிய காலாதீதன் அவனேயாதலாலென்க.) (ஆனால், மூன்பற்பலஇடங்களில் பிரமவிஷ்ணுவாதிதேவர்களையும் தியானிக்கத்தக்கவர்களென்று பிறர்கருதும்படி, அவர்களுக்கும்பரத்துவங்கூறியதென்னையோவெனில்? அது அவரவர்க்குக்கீழுள்ளார்அடங்கிநடத்தற்காக விசேஷித்துரைத்தஉபசாரமேயன்றியுண்மையன்று. இதனை, அங்குங்கே பரத்துவங்கூறியஇடங்களிலும் அவர்களில் ஒருவருக்கும்தியேயுகுப்தம்கூறாமல் மற்றைவாக்கியங்களால் விசேடித்தலாலும், விசேடிக்கினும்“நாராயணாத்பரோத்யதா” என்பதுமுதலியவாக்கியங்களால் அவரவர்க்கியல்பாயுள்ளநிலைமையினைக்கலாலுந்தெளியலாம். ஆதலால்இங்கேமுன்னுள்ள உபசாரப்பொருள்களெல்லாவற்றினுந்தெளித்தெடுத்துமுடித்தவிளக்கிய அப்பரமசிவனெருவனைத்தவிர)மற்றைத்தேவர்களையாவரையும் கைவிட்டு(மேற்காட்டிய பரமசிவனையேதியானிக்குக.)அதர்வசிகை முற்றிற்று என்பதாம்.

தீர்ப்பு.

ஒருவிவகாரத்தில் வாதிபிரதிவாதிகளேவிசாரித்துத்தீர்ப்புச் செய்கிறநீதிபதி முன்பு ஒவ்வோர்விஷயங்களேவிரித்துவிளக்கிவந்

தானும் அவற்றின்மேற் காரணபெலங்காட்டி மூன்விஷயங்களை விலக்கிமுடிவில்தீர்ப்புச்செய்வதுஎதுவோ அதுவேபிறரால்அசைக்கப்படாதநிச்சயமாகும். அதுபோல ஈசுரவாக்காகிய இவ்வேத வேதாந்தங்கள் ஒருவராலும் மறுக்கமுடியாத முக்கியபிரமாண நூல்களாதலால், முன்பிறர்க்கும்பாத்துவங்கூறினும்இவற்றின்முடிவிற்பிரமாணபலமுங்காட்டிச் சர்வலோகைகநாயகனெனியஈசுரனுல்தீர்ப்புச்செய்யப்பெற்றஇம்முடிபுமற்றையதேவர்முனிவராதிஉலகர்களால் எவ்விதகாரணத்தினுலாவதுமறுக்கப்பட்டு வேறொருதீர்ப்புவருவதில்லை.இவ்வுண்மையைஉற்றுநோக்கி இச்சைவவேதாந்தமுதலியற்கூறியபடி எம்மவர்கள் மேற்கொண்டுள்ளசைவநெறியே யாவரும்மேற்கொண்டுதின்றுய்வாராக.

தெளிவு.

இனித்தெளிவாவது யாதென்றால்? மற்றைவேதாந்தங்களெல்லாவற்றையுந்தன்கீழ்ச்சோபானங்களாகியஅங்கங்களாகக்கொண்டுதான் அங்கியாய்நிற்கின்ற சைவவேதாந்தத்தின்சாரமென்பதாம். இத்தெளிவாகியசாரமே சுத்தாத்துவிதசித்தாந்தசைவமென்க. சைவசித்தாந்திகளாகிய எம்மவர்கள் மேற்கொண்டுள்ள இத்தகையசுத்தாத்துவைதமே வேதசம்மதமாயுள்ளது. இதனை,

யஜுர்வேதமண்டலப்பிராஹ்மணோபநிஷதம்.

"தநநோவியுயம்யாகீதஷிஷோ×வரூஹம்வஹ்ம தலுயா
ஊஹாதெஹவிஹி: ஹொஜரஹாவாஹ வஹதெஹவரூதிகூழ்!
ஹரூஹாதெஹஜூரூஹம் ஹரூஹாதெதாஜாட்டு"

என்பனவாதிகளாற்காணலாம். இவ்வுண்மைநோக்காமல் வைஷ்ணவர்கள்தம்மைவிசிஷ்டாத்வைதிகளெனவும் மாயாவாதிகள்தம்மைக்கேவலாத்வைதிகளெனவும் சொல்லிக்கொண்டு அவ்வந்நெறியேபற்றிநிற்கின்றுராதலின் வேதங்கூறும்மெய்ப்பொருளாகியசுத்தாத்வைதத்தினுண்மைகண்டு அதனைமேற்கொள்ளும் பரிபாகம்பெற்றிலர். உள்ளபடி மெய்ப்பொருள்கண்டவர்களே அதனைமேற்கொண்டுய்யும்பரிபாகமுற்றவர்களென்க. இதனைத்

தருமானவர்

"பொய்கண்டார் காணப் புனிதமெனுமத்துவித, மெய்தண்டாரா தனருண் மேவுநாளெந்நாளோ" என்றருளியவாற்றானுங்காண்க.

இவ்வாறு வேதங்கூறிய சுத்தாத்வைதசித்தாந்தத்தையே சிவாகமங்களும் விளக்குகின்றன. சுப்பிரபேதாகமம் 'விஜ்ஞாதோ வெஷ்வாஸ்வாஸ்' என்றும், மகுடாகமம் 'வெஷ்வாஸ்விஷ்ணோ தஸ்ய இத்தத்தந்த்ரம் (சித்தாந்தம்) வேதசாரமென்றும் 'வெஷ்ணாயஷ்விஷ்ணு ஜ்ஞானம்விஜ்ஞானம்வஷ்ணவேஸ்ஹி' இந்தச் (சித்தாந்த)ஞானம் வேதாந்தப்பொருள்என்றும், பரமாநந்தமாகிய சித்தாந்தத்தை யென்றும், இரத்தினத்ரயபரீக்ஷை, "விஜ்ஞாதவானவவிஜ்ஞாதஷ் வாவக்ஷாஸ்தஷ்வவிஸ்" சித்தாந்தமேசித்தாந்தமாம். அதற் குவேறுணவைகள் பூர்வபக்ஷங்களென்றும்

வியாசவாக்காகிய கந்தபுராணம்

"ஸநகாதிஷ்ஷு நீம்ஷ்ஷ்ஹ்ருஷ்ஷிவஷ்யாஷ்யஷ்ஸம்ஹிதம்
ரஹஸ்யஷ்சாமசாஸ்த்ரஷ்வம்விஜ்ஞாஸ்யகயஷ்ஸ்ருஷ்டி"

(கைலாசத்திலே சிவபெருமான்) சனகர்முதலிய முனிசிரேஷ்டர் களுக்குப் (பதிபசுபாசமென்னும்) திரிபதார்த்தங்களுடன்கூடிய ரகசியமாயுள்ள ஆகமார்த்தம் என்னும்சித்தாந்தத்தைச்சொல்லிக் கொண்டிருந்தார் என்றும், "ஸ்ரூஷ்திவாஸ்யஷ்ஸ்ரூஷ்தஷ்" என்றும் காதிகாதிஸ்வரூவ்யாஹ்ருஸ்ருஜ்ஞாஜ்ஞாஜ்ஞாஷ் என்றும்விளக்குகி ன்ற பிரமாணங்களினுண்மைபாற்றெளிபலரம். சிவபிராணச்சன காதி நால்வர்வணங்கிச்சுவாமிச் வேதவேதாந்தங்கள் எல்லாப்பக் கங்களிலும் எங்கள்புத்தியை, இருட்பெருங்கடலில் நடுராத்திரி யிற்பெருங்காற்றிலகப்பட்டாற்போல ஆலைக்கின்றது. அதனால் உண்மை ஞானங்கைவந்திலது. இம்மபக்கம் நீங்கும்படி அருளுக என்று வேண்ட அவர்கள்புத்திதெளியும்படி சிவாகமத்துள்ள மூன்றுபாதம் விளக்கிமுடிவில் ஞானபாதம் சிறுமுத்திரையாலுய தேசித்தருளினர். இதனைக்,(கந்தபுராணம்)

இருட்பெருங் கடலுள் யாமத்தெறிமருத் திடைப்பட்டாங்குப் பொருட்பெருங் கடலாம்வேதம் புடைதொறுமலைப்பவித்நாள் அருட்பெருங் கடலே யெய்த்தே மமைந்திலந் துணர்வி யாங்கள் மருட்பெருங் கடலி னீங்கும் வண்ணமொன் றருடி யென்றார்

" முத்துறை சனகனுதி முனிவர் தொழுது கேட்ப
அந்தமி லாகமத்தி னரும்பத மூன்றுங் கூறி "

" உரத்திற், கரதலமொன்றுசேர்த்தி மோனமுத்திரையைக்காட்ட
டுனிதன தருளாற் றத்தம் புத்திபி னெடுக்கம் பெற்றார்."

என்னும் வழுவற்ற திருவாக்குக்களாற் காண்க.

(சிவப்பிரகாசம்)

" புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகலரு
ளகக்களாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பிலதா யிருள்வெ
ளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற் பேதாபே தமுமின்றிப்
பெருந்தூல் சொன்ன, வறத்திறனல்லிலவதாயுடலுயிர்கண் ணருக்
கனறிவாளி போற்பிறவுமத் துவிதமாகுஞ்சிறப்பினதாய் வே
தாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றா
ம் " என்று திராவிடசித்தாந்த சிவப்பிரகாசசுருதி செவ்வேதெளி
விக்கின்றது.

இ—ள்; பதிப் பொருளானது, லோகாயதரும்; பௌத்தரில்
மாத்திபிகர், யோகசாரர் சௌத்திராந்திகர், வைபாஷிகராகிய
நால்வகைபினரும்; ஆருகதராகிய சமணருமென்கின்ற புறப்புறச்
சமயத்தார் அறுவரும்; தார்க்கிகன், மீமாஞ்சகன், ஏகாத்மவா
தி, சாங்கியன், யோகி, பாஞ்சராத்திரி என்கின்றபுறச்சமயத்தார்
அறுவரும்;(அவைதிக)பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம்,
வைரவம், ஐக்கியவாத சைவமென்கின்ற அகப்புறச்சமயத்தார்
அறுவருமாகிய பதினெட்டுவகையினரும் பதிபசுபாசங்களினுண்
மையுணர்ந்து மேற்செல்லுதற்குரிய பரிபாகங்ககூடப்பெறாத
பாசப்பிணிபினராய் அவரவர்கொள்கைகளிலேயே அழுந்திக்கிட
த்தலால், குருடன்கண்ணுக்கு எல்லாம் இருளாய்த்தோன்றுதல்
போல' அப்புறச் சமயத்தவர் அறிவுக்கு இருளாயும், பாஷாண
வாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிரா
ந்தவாதசைவம், ஈசுரவிகாரவாதசைவம், சிவாத்துவிதசைவமா
கிய அறுவகை அகச்சமயத்தவரும் திரிபதார்த்தங்களே மேற்கொ
ண்டவர்களாய், அவரவர்நிலைமைக்குத்தக்க பரிபாகங்ககூடப்
பெற்றுப்பாசநீக்கத்துக் குரியவர்களாய்நிற்றலால், அவர்கள

றினிளவுக்கியைந்த ஒளியாயும், அவரவர்களாற்கூறப்படுகின்ற அளவைகளுக்கும்(பிரமாணங்களுக்கும்) இடங்கொடுத்து நிற்கும் அவ்வவ்வளவினதாயும் அப்படிப்பொருள் உயிர்களிடத்துச்சேர்ந்துநிற்கும் நிலையானது, கேவலாத்து விதிகளாகிய ஏகாத்மவாதிகள், பொன்னும் பணியும் போலென்றுகூறும் அபேதமில்லாதாயும், துவைதவாதிகளாகியமாத்துவர்கள் இருளும்வெளிபும் போலென்றுகூறும் பேதமில்லாதாயும், விசிஷ்டாத்துவிதிகளாகியவைஷ்ணவர்கள் சொல்லும் பொருளும் போலென்றுகூறும் பேதாபேதமில்லாதாயும், எம்மவர்கள் உடலும் உயிரும்போலென்றுகூறும் உவமைக்கிபைந்த அபேதமாயும்(ஒன்றுபும்), கண்ணுஞ்சூரியனும் போலென்றுகூறும் உவமைக்கிபைத்தபேதமாயும்(வேறுபும்), ஆன்மபோதமும்கண்ணெரிபும் போலென்றுகூறும் உவமைக்கிபைந்த பேதாபேதமாயும்(உடனுபும்)பிரிவின்றிநிற்கின்ற சுத்தாத்துவிதமாகிய சிறப்புவாய்ந்ததாயும், வேதாந்தத்தெளிவாயுமுள்ளசைவசித்தாந்தப் பகுதியை ஈண்டுத்தெரிவிக்கத் தொடங்குவோமென்பதாம். அபேதம்.

ஏகாத்மவாதிகள், பிரமம்ஒன்றே பலசீவர்களாகியது. அது பொன் ஒன்றே பலஆபரணங்களாதல்போலாமென்று கூறும் உவமைபொருத்தமில்லை. எதனலென்றால் பிரமந்தானேசீவர்களாயிற்றென்பது அவர்கருத்து. அது போற் பொன்னுந்தானே ஆபரணமானல் அவ்வுவமை ஒருவாறு பொருந்தும். பொன் ஒருகம்மியனுருக்கித் தட்டிகீட்டிச்செய்யுந் தொழிலால் ஆபரணமாகுமன்றித் தானே ஆவதுளதங்குமில்லை. எமது கொற்றங்குடியடிகள் "பொன்பணியாகை தன் பணியன்றே" என்றுவிளக்கியதுங்காண்க. இனி, அழுக்கற்றொளிரும்பிரமத்தை, அழுக்குப்பிடித்தசீவனுக்குதற்கு ஒருபோர்வழியைத்தேடிவைத்துக்கொண்டு அவர்கள்கூறிய உவமானப்பொருள்களாகிய பொன்பணிமுதலியவேறு பொருள்களுமுள்ளனவேயெனக்கொண்டு பிரமம்ஒன்றேயுள்ளதென்னும் ஏகவாதத்தைமுழுதுங்கைவிட்டுக் கூறுவார்களாதலால் அவ்வுவமானம் அம்மட்டில்ஒருவாறுபொருந்தும்; அதனிலும்பலவிசோதமுண்டு.

இனிப்பொன்னுயிருந்தபோதும் அதுபணியாய்வந்தபோ

தம் நிறங்குணமுதலியன வேறுபடுவதில்லை. அதுபோல்பிரமம் சிவனுய்வந்தபோதும், அப்பிரமத்தின்நிர்மலத்துவாதிசுத்தகுணங்களே அச்சிவனிலிருக்கவேண்டும்; அப்படியின்றிமலசம் பந்தத்தாற்பிறப்பிறப்பாதி துக்கத்துட்கிடந்துவருந்துவது சிவனுதலால், இம்முறைநோக்கியும் அவ்வுவமைபொருந்தாமைகாண்க. இப்பழுதுகள் நோக்கியே அவர்கூறுமுவமையைப்"பொற்பணிபோலபேதப்பிறப்பிலதாய்" என்று ஒதுக்கிவிட்டு அபேதமாய் (ஒன்றாய்) நிற்றற்கு எமதுசைவசித்தாந்தவியல்புக்குரியதாய், உடனாயிருப்போலென்னும் உவமானங்கூறியருளியதென்க.

இது, உடல்சிவனுக்கும் உயிர்பிரமத்துக்கும்உவமையாய் அவ்விரண்டும் கலப்பினுற்பிரிவின்றி ஒன்றாய்நிற்றலேபுணர்த்தியதன்றி அவர்கள் பொன் பணியாய் வந்ததுபோலென்றுஉவமித்துச் சுத்தப்பிரமம் அழுக்குப்பிடித்த சிவனுய்வந்ததென்றுகூறுதல் போல உயிர் உடலாய்வந்ததென்றுவமித்துச்சிவம் சிவனுய் வந்ததென்றுணர்த்துவதன்று. உயிர் உடலாய் வருவதொருகாலத்துமில்லை; அதுபோலச் சிவம் சிவனுய்வருவதும் ஒருகாலத்துமில்லையென்பதுதிண்ணமாயது. பேதம்.

மாத்துவர்கள் பிரமமும் சிவனும் வெவ்வேறுகவேஇருக்கும்: இது, இருளும்வெளியும்போலாமென்றுகூறுவதும்பொருந்தாது எதனலென்றால்? இங்கேவெளியென்றது சூரியனொளியை. அவ்வொளியுள்ளபோது இருளிராது இருளுள்ளபோது சூரியனொளியிராது; அன்றியும், அவ்விருளும் ஒளியும் ஒன்றுக்கொன்றுபகைப்பொருள்களாம். அவ்விருள் ஒளியின் அபகாரத்தைப்பெற்றுமாய்வது. இதுபோலப்பிரமம் உள்ளபோது சிவனில்லையென்றுவது சிவனுள்ளபோது பிரமம் இல்லையென்றுவதுகூறமுடியாது. பிரமமும் சிவனும் ஒன்றுக்கொன்றுணர்புடையன. பிரமம் உபகாரம்செய்வதும் சிவன் அவ்வுபகாரத்தைப்பெற்று வாழுவேன்றபதுமாம். இதனல், அவ்வுவமைபொருந்தாதென்க.

இனி இதற்குஎமது சைவசித்தாந்தமுறைப்படி கண்ணும் அருட்கண்ணும்போலென்று உவமைகூறுமிடத்து அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமின்றியுபகாரம் செய்வதொன்றும்

அந்தப்பெறுவதொன்றுமாய்ளப்போதுமுள்ளனீவாய்ங்ண்புடை-
யனவாதலால் இவ்வுவமையேபொருத்தமாதல்காண்க.

பேதாபேதம்.

ஸ்வஷ்ணவர்கள், பிரமமும் சிவனும்வேறுயும் ஒன்றுயுமிருக்
கும். இது,சொல்லும்பொருளும்போலாமென் றுவமைகூறி அச்
சொல்லும்பொருளும் வேறுயும் ஒன்றுயுமிருக்குமென்பது பொ
ருந்தாது, எதனலென்றால்? ஒருபொருளுக்கு இரண்டுதன்மை
கொள்ளுதல்பொருந்தாமையாலென்க. சொல்லும் பொருளும்
வேறுயிருப்பன்வன்றி ஒன்றுயிரா. ஒருசொல்லைச்சொல்லும்போ
து அதன்பொருளும் உடன்விளங்கித்தோன்றுதல் பற்றி ஒன்று
யிருக்குமென்கின்றார். உண்மையன்று. இதனை,பசுவன்றுசொல்
லாக்கிலும் அதன் பொருள் நாலுகால்கள் இரண்டுகோம்புகள்முத
லிய அவயவங்களுடன்கூடிய வடிவத்தையுண்டுபதாய் வேறிடத்
திலும் இருத்தலைநேரேகண்டுத்தெரியலாம். இதுபோல்வேமற்றெ
ச்சொற்பொருள்களுமிருக்கும். ஆதலால் இவ்வுவமை வேறுயிரு
த்தற்குப்பொருந்துமன்றி ஒன்றுயுமிருத்தற்குப்பொருந்தாது. இ
ப்பொருந்தாமைநோக்கியே இதனையொழித்து எமதுசுவசித்
தாந்தமுறைப்படி ஆன்மபோதமும் கண்ணெனியும் உவமையா
க்கொண்டதெனக. இவ்விரண்டும்பொருளால் வேறுயும் கண்
ணெனி ஒருரூபத்தைப்பார்க்கும்போது ஆன்மபோதமுங்கலக்க
ப்பெற்றேபார்த்தலால் ஒன்றுயும் நிற்பதேயாம். இதனல் அவ்
வுவமையே அப்பேதாபேதத்துக்குப் பொருத்தமாதல்காண்க.
ஈண்டுக்கூறிய உடல் உயிர் கண் அருக்கன் அறிவுஒளியாயினும்
மூன்றுவமைகளும் பரமசிவன் சிவசக்தியோடு கலப்பினு லொன்று
யும் பொருட்டன்மையால் வேறுயும் உயிர்க்குயிராதற்றன்மையா
ல் உடனுயும்நிற்கும்நிலையை விளக்குகின்றன. இதனை,

"ஈருய்முத லொன்றுயிரு பெண்ணுண்குண மூன்றுய்
மாருமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறுர்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானுய்
வேறுயுட னுனிடம் வீழும்மி முலியே."

என்னும் ஸ்ரீஞானசம்பந்தநாயனுர்திருவிடைருத்திவினவுகின்றது.

இது காறுங்கூறியவாற்றால் வேதாந்தத்தின் தெளிவுசுத்தாத் துவிதசித்தாந்த சைவமேயென்பது நிச்சயமாயது. இதனை யின்னு மோர்திராவிடசுருதியெடுத்துக் காட்டிமுடிப்பாம்.

" சூடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதமென்னும் பாதவம்வளர்த்தனை
பாதப மதனிற் படிபயன் பலவே அவற்றுள்

இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றறுப்ப மிவ்வாறு பயப்ப
வோருண்மே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய ரியினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
நீண்புன லமுத மார்ந்தன னதனுல்
வேண்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே."

இதனுல், சிவபிரான், சுத்தமாயையாகிய நிலத்திலே * திருவருளுங்கருணையும் வித்து நீருமாகநின்று வெளிவரச்செய்தருளியவேதமாகிய விருக்ஷத்தினுச்சியிற்பழுத்து முதிர்ந்துள்ளகனியினையும்போன்ற சமயாதீத சைவசித்தாந்தசந்மார்க்கத்தைச் சார்ந்துய்தற்குரிய அருந்தவ வலியின்மையால், தார்க்கிகன்,

---

* சிவபிரான்சர்வசீவரிடத்தும் வைத்துள்ள இரக்கமே செயல்வகையால் திருவருளென்றும், கருணையென்றும் பாகுபாடுபெற்ற து. திருவருளாவது அச்சீவர்களிற்பொய்ப்பற்றொழிந்து மெய்ப்பற்றினராய்ப் பரிபாகமுற்று, சத்திநிபாதம்பெற்ற உத்தமர்களைக்குறித்து ஆங்காங்குத்தீக்ஷாதி அருட்கிரகமுறையில் தனித்துச்

மீமாஞ்சகன், சாங்கியன், யோகி, பாஞ்சராத்திரி, ஏகான்மவாதி யாகிய அறுவரும், அவ்விருகூத்திலுள்ள இலை தளிர் அரும்பு மலர் பிஞ்சு காய்போன்ற ஒவ்வோர்மதமேசிறந்ததாக மேற்கொண்டு நிற்றலால், அம்மதங்களுக்குமேல் உண்மைப்பொருளையெட்டிப்பார்த்தற்குரிய உண்மைஞானங் கைவரப்பெறுதவராய்க் "கொடிறும் பேதைபுங் கொண்டது விடா" என்றபடி தாம்தாம் மேற்கொண்டமதங்களேயே இறுகப்பற்றிநின்றுண்மைப்பயன் பெறுதொழிகின்றனர் என்பதும், சத்திநிபாதத்துத்தமபரிபாகிகளாகிய எம்பெருமக்களே அத்தகைய சமயாதீதசைவசித்தாந்த சன்மார்க்கஞ்சார்ந்து உண்மைப்பயனுகியசிவானுபூதிச்செல்வராய் வாழ்கின்றனரென்பதும், அதுகிடைக்கப்பெறுத என் போலிகளும் அப்பெரியார்திருவடியலம்பிய திவ்யதீர்த்தஞ் சிறிதுட்கொளப் பெற்றால், சுவர்க்காதிவின்னுலகவாழ்விற்சிறிதும் பற்றின்றி வெறுப்புற்று அப்பெரியாரைப்பற்றிநின்று சிவானுபூதிச்செல்வராவ தொன்பதும்தெளிவாயது.

இவ்வேதாந்தத்தெளிவாகிய சைவசித்தாந்த சன்மார்க்கமேற் கொண்ட சிவானுபூதிப்பெருஞ்செல்வர்கள் அநிபிரமேந்திராதியர் பதவாழ்வையெல்லாம் ஒருபொருளாக நினைத்தலுஞ் செய்யார்களென்பதும், சிவத்துவ விளக்கம் வாய்ந்த அவர்கள் அடிபெருந் தேவர்களாலும் வணங்கத் தக்கவர்களேயென்பதும் முதலியபெருஞ் சிறப்பெல்லாம் பின்வருந் திராவிடசூக்திகளாற் காண்க.

திருஞானசம்பந்தர்தேவாரம்.

மங்குலோய் மணிமாட மதிதவழு நெடுவீதிச்
சங்கெலாங் கணைபொருது திரைபுலம்புஞ் சாய்க்காட்டாண்
கொங்குலா வரிவண்டி னிசைபாடு மலர்க்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே.

செல்வதாம். கருணையாவது அவசவர்பக்குவத்தளவிற் பயன்படுமாறு எல்லாச்சிவர்களிடத்தும் பொதுவாகப்பரந்துசெல்வதாம் இக்கருத்துவிளக்கவே சிவானுபூதிப்பெருஞ்செல்வராகிய சுமசகுருபரசுவாமிகள் இக்கண்ணியில் அருளோவித்தென்றும் கருணையை நீரென்றும் உருவகஞ்செய்தருளிற்று.

இங்கே சுவர்க்கங்கள் என்றபன்மை அதற்குமேலுள்ள பிரமவிஷ்ணுவாதியர் பதங்களையுமுணர்த்தும்.

திருநாவுக்கரசு தேவாரம்.

மூழுத்தாமன் மேனித் தவளப் பொடியன் கனக்குன்றத்
தெழிறபெருஞ் சோதியை யெங்கள் பிரானை யிகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுத் பின்னர்த்
தொழப்படுந் தேவர்தம் மாற்றொழு விக்குந்தன் றொண்டனைபே.

இத்திருவிருத்தம், உலகரால்றொழப்படுகின்ற பிரமவிஷ்ணுவாதிதேவர்களாற்றொழப்படுகின்ற சிவபிரான், அத்தேவர்கள் தன்னைத்தொழுதுபரிபக்குவமுற்றபின்பு தன்தொண்டனைத்தொழச்செய்துஉய்விக்கின்றனர்என்று விளக்குகின்றது. இதனால், மேற்கூறிய சிவாநுபூதிச்செல்வர்களாகிய சிவனடியார்களை வணங்கிஉய்யும்பெரும்பாக்கியம் அத்தேவர்களுக்கும் முன்பு சிவபிரானைவணங்கிப் பக்குவமுற்றபின்புதான் கிடைக்குமென்பதுதெளிவாபது.

சுந்தரமூர்த்தி தேவாரம்.

இந்திரன் மால்பிரம னெழி லான்மிகு தேவரெலாம்
வந்தெதிர் கொள்ளவெணை மத்த யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரியை ஞசென வெம்பெருமான்
நந்தமர் நூரனென்று ஞெடித் தான்மலை யுத்தமனே.

பிரமவிஷ்ணுவாதிதேவர் சுந்தரமூர்த்திநாயனர் திருமுன்வந்து வலஞசெய்துவணங்கிஅஞ்சலித்துநின்று வெள்ளையானைமீதுஎழுந்தருளும்படி பிரார்த்தித்தமையை அந்நாயனர் இப்பாசுரமுதலியவற்றால் விளக்குதல் காண்க. திருவாசகம்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேனினதடி யாரொடல் லான்ற கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவர்
உள்ளேன் பிறதெய்வ முன்னேயல் லாதெந்த ஞத்தமனே
சாவமுன் னட்டிக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவுவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரோ [மேற்
மூவுரொன் றேயெம்பி ரானெடு மெண்ணிவிண் ணுண்டுமண்
றேவரொன் றேயிது வாந்தென்ன பர்வந் திரிதவரோ.

திருக்கோவையார்.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தாணென்று காட்டமற் றுங்கதுங் காட்டிடென்றே
வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே.

திருவிசைப்பா.

பாம்பணைத் துயின்றோ ன்யன்முதற் றேவர் பன்னெடுங் காலு
நிற் காண்பான், ஏம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த வெளி
மையை யென்றுநான் மறக்கேன், தேம்புனற் பொய்கை வாயி
வாய் மடுப்பத் தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும், பூம்பணைச்
சோலை யாவணவீதிப் பூவணந் கோயில் கொண்டாயே.

தணுக்கென வயணு மாலுந் தொடர்வருஞ் சுடரா யிப்பால்
அணுக்கருக் கணிய செம்பொ னம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச் சிதம்பரைச் சித்தையூத்தைப்
பிணுக்கரைக் காணு கண்வாய் பேசாதப் பேய்களோடே.

திருப்பல்லாண்டு.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தெ
ண்டருள்ளீர், சில்லாண்டிற் சிதைபுஞ் சிலதேவர் சிறுநெறி சேரா
மே, வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன் விடைப்பாகன்,
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

பெரியபுராணம்.

மால யன்சத மகன்பெருந் தேவர் மற்று முள்ளவர்கண் மூ
ற்று நெருங்கிச், சில மாமுனிவர் சென்றுசின் முன்னித் திருப்பி
ரம்பினடி கொண்டு திசைத்துக் காலநேர்படுதல் பார்த்தய னிற்
பக் காதலன்பர்கண நாதர் புகும்பொற், கோல நீடிருவா
யிலைறஞ்சிக் குனித்த செங்கைதலை மேற்கொடு புக்கார்.

கந்தபுராணம்.

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திர னரசினைக் கனவினும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் றமியேன்.

திருவிளையாடற்புராணம்.

புள்ளியதோ லாடை புனைந்தரவப் பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையா னடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையா ரருவருத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினு மென்செய்தாய்.

வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலால
மூண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்.

இவைபோல் இன்னும் பற்பலவுள்ளன; விரிப்பிற்பெருகும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருநாவுக்கரசுநாயனர் சுந்தர மூர்த்திநாயனர் மாணிக்கவாசகசுவாமிகளாகிய சமயாசாரியர் நால்வர், திருநந்திதேவர் சனற்குமாரர் சத்தியஞானதரிசனி பரஞ்சோதி மெய்கண்டார் அருணந்தி மறைஞானசம்பந்தர் உமாபதியாகிய சந்தானாசாரியர் எண்மர், அரி பிரமேந்திராதிதேவர்பல்லோர், வாமதேவர் பதஞ்சலி வியாக்கிரபாதர் உபமந்நியர் அகஸ்தியர் துர்வாசர் வியாசர் வசிட்டர் தேவகுரு நாரதராதி மகரிஷிகள் பல்லோர், மனுவாதி சோழ சேர பாண்டிய மூடிமன்னர் பல்லோர், இன்னுமளவில்லோர் யாவரும் இச்சைவநெறியே மேற்கொண்டு விளக்கினர். இதுவே மற்றெம்மதங்களையும் புறக்கணித்துத்தள்ளிவிடாமல் படிமுறையில் அங்கங்களாகக்கொண்டு தான் அங்கியாய்நின்று தனது பூரணநிலை எவர்களாலும் எக்காலத்தும் மாறுபடாமல் அம்மதங்களெல்லாம் பரிவாரங்களாகத் தன்னைச் சூழ்ந்துநிற்ப மௌனமுடிசூடித் தத்துவாதீதஉத்தமோத்தமசத்தாஜாங்கத்தமர்ந்திருந்து சிவச்செங்கோல் வளர்ப்பதாம். இதனை, "விண்ணவரிந்திரன்முதலோர்" "இயல்பென்றுந் திரியாமல்" என்பனவாதியதாயுமானசுருதிகள் விளக்குகின்றன, மற்றையமதங்களெல்லாந் தம்மளவில் தம்மைமாத்திரம்பெரிதென்றுகூறிக்கொண்டு தனித்தனியாக நிற்பனவன்றி அயல்மதங்களைத்தழுவிக்கொள்வனவல்ல. அதனை, மற்றைமததெய்வங்களைத்

தம்முட்கொள்ளாத அவ்வக்கோயில்களிலுங் காணலாம். இதனு லும், அம்மதங்களும் அத்தெய்வங்களும் அந்தந்தமட்டிலுள்ள ஏகதேசவியாபகமுள்ளனவே என்பது செவ்வேதெளியலாம் நமது சைவசித்தாந்தசன்மார்க்கம் ஒன்றுதான் மேற்கூறியபடி மற்றெம்மதங்களையுந் தன்கீழ்வரிசையாகத் தழுவிக்கொண்டு மே லாய் விளங்குகின்றது. இதனை, முழுமுதற்கடவுளாகிய சிவபி ரான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கோயில்கள் இலக்குமிநாயக விஷ்ணுவாதிய அந்நியமத தெய்வங்களையுந் தம்முட்கொண்டு வி ளங்குதலாலுங் காணலாம். இதனாலும் இச்சைவசமயமும் இச்ச மய தெய்வமாகிய மகாதேவனும் சர்வவியாபகனிலையில் விளங்கு வது செவ்வேதெளிவாம் ஆதலால்; தாந்தாம் நிற்கும் நிலைகின் றும் மேற்சென்றுய்வ தொன்றையே விரும்பும் புத்திமான்கள் இ தனாறுங் கூறிய பிரமாணங்க ளெல்லாவற்றையும் மூன்னுக்குப் பின் விரோதம் வராமல் உண்மை இது உபசாரம் இது வென உள்ளபடி கடைப்பிடித்துப் பக்ஷபாத மின்றி நடுநிலை நின்று தெ ளிந்து, அத்தெளிவில் மூடிந்து நின்ற சித்தாந்த நிலையையே இறு கப்பற்றிப் பழைய வாசனைகளால் மனஞ்சலியாது உறைத்துநின் றுய்யும் வண்ணந் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

திங்களொடு கங்கைபுனை யங்கணனுர் செப்புதிரு வருவிளைஞி தங்குநகர் பரஞ்சோதி முனிவனினி தறைகுறிப்புந் தகவாக் கொண்டு, துங்கமுறு சிவஞான போதமும்வார்த் திகப்பொ ழிப்புஞ் சுழிப்புநீர்சூழ்ந், திங்கமருந் தமிழ்நாடு வீடுபெறப் புரி குரவ ரிருதாள் போற்றி.

வேதாந்தத் தெளிவு முற்றுப்பெற்றது.

மெய்கண்ட தேவன் திருவடிகளே சரணம்.

திருச்சிற்றம் பலம்.

சிவமயம்.

அநுபவம்.

இனிமேற்கூறிப்போந்தவேதாந்தத்தெளிவாகிய சைவசித்தாந்தசன்மார்க்கஞ் சார்ந்து நிற்கும் எம் பெருமக்கள் சைவநலமுழுதும்ஐயந்திரிபற ஆராய்ந்துணர்ந்து சிவாநுபூதி சுவாநுபூதியாகப் பெற்று வாழ்தற் கின்றியமையாச் சிறப்பினதென மேற்கொண்ட சிவசாஸ்திரம் சிவஞானபோதம்.

இப்பெருஞ்செல்வர்கள்,

"வாழ்வெனுமையல்விட்டு மறுமையாஞ்சிறுமைதப்பித்
தாழ்வெனுந்தன்மையோடுஞ் சைவமாஞ்சமயஞ்சார்ந்து"

திருவருளால் மலவலிமுழுதுமொழியப்பெற்று அருளிலடங்கி நின்றுஇன்புறுகின்ற சிவஞானபோதாநுபவநிலையைத், "தாமின்புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார்" என்றபடி தம்மைவந்தடுக்கின்ற நிர்வாணசிவதீக்ஷாதிகாரிகளுக்கும் விளக்கி இன்புற்று வாழச்செய்வார்கள். அதனைச் சிறிது விளக்குவாம்.

சிவஞானபோதம்.

மங்கலவாழ்த்து.

கல்லா னிழுன்மலி
வில்லா ருருவிய
பொல்லா நீணைமலர்
நல்லார் புனைவரே.

இதன்பொருள். (அருள்வடிவாகிய) கல்லாலநிழலில் (வீற்றிருந்தருளி, நந்திபிரானுக்கு இந்நூலால்) மலைவுதீர்த்தருளிய

சிவபிரான் அருளும்பொருட்டு, திருவெண்ணெய்நல்லூரிலே சுயம்புமூர்த்தியாய்வீற்றிருந்தருளுகின்ற விநாயகப்பெருமானுடைய ஞானக்கிரியாசத்திகளாகிய திருவடிமலர்களைக், கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்கள் தமது ஞானக்கிரியாசத்திகளுக்கு வியாபகமாக்கொண்டு தாடலைபோல்டங்கிற்பனென்பதாம்.

அவையடக்கம்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
லெம்மை யுடைமை யெமைபிகழார்—தம்மை
யுணரா ருணர்ரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

இ—ள். ஆன்மாக்களாகிய தமதியல்பையுணர்ந்து தம்மை யுடைய தலைவனுகிய சிவனையுணரும் சிவாநுபூதிப்பெருஞ்செல்வர்கள், எம்மையுடையவராதலால் எமது குற்றங்களைக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி) எம்மையிகழார் (ஆதலால் எம்மாற்செய்யப்படும் தூலையும் கைக்கொள்வர்)தம்மையுணராதார் தலைவனையுமுணரமாட்டார் (ஆதலால் அவர்கள்) தம்முள் ஒற்றுமைப்படாமையால் மாறுபாடுடையராவர். (அவர்கள் எம்மையும் எம்மாற்செய்யப்படும் நூலையும் இகழ்ந்துரைக்கும்)புறம்பாகிய சொல்லை (நாம்)ஒருபொருளாக்கொள்ளோம் என்பதாம்.

நூல்.

இந்நூலாசிரியர், தமிழுலகம் உய்யத் திருவுளங்கொண்டு, மூதலவன் சிவாகமங்களிற்கூறும் ஞானபாதப்பொருள்களின் மலைவுதீர்த்தற்பொருட்டருளிச்செய்த மூதநூலிலுள்ளபடி இத்தமிழ்நூலைப் பொதுவுண்மையென்றிரண்டதிகாரமாக்கிப், பொதுவைப் பிரமாணவியல் இலக்கணவியல் எனவும், உண்மையைச் சாதனவியல்பயனியல் எனவும் நூல்வகைப்படுத்திப் பொதுவில் பதி பாசம் பசுமூன்றும் உண்மைப்பொருள்களென்பதற்குப் பிரமாணம்மூன்றுசூத்திரங்களாலும், அப்பதிபசுபாச இலக்கணங்கள் மூன்றுசூத்திரங்களாலும், உண்மையில் சாதனஞ்செய்து பயன்பெறுதற்குரிய அதிகாரிவியல்பும், சாதனத்தினியல்பும், சாதிக்கு முறைமையும் மூன்றுசூத்திரங்களாலும், அவ்வதிகாரி

யால் பெறப்படும்பயனுகிய பாசநீக்கமும், சிவத்தைஅடைதலும். அடைந்தோர் தன்மையும் மூன்றுசூத்திரங்களாலும் விளக்குவாராய் முதலில் பதி யுண்மைக்குப் பிரமாணங்கூறியருளுகின்றார்.

முதற்சூத்திரம்.

அவனவ ளதுவெனு மவையூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனர் புலவர்.

இச்சூத்திரத்தின் கருத்துரை. சங்காரகாரணனுயுள்ள முதலியே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதலுதலிற்று.

இ—ள். அவன் அவள் அது என்னும் பகுப்பினதாய்க் காணப்படுமூலகத்தைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குங்கடவுள் மற்றையரல்லர்; சங்காரக்கடவுளாகிய சிவபிரானேயென்று பொருளீக்கிச் சிறப்பாகப் பிரமாணத்தால் உணர்த்துகின்றதென்பதாம்.

இச்சூத்திரப்பொருள்; உலகம் சித்தும் சடமுமென்றிரு வகையாம். சித்து—சிற்றறிவுடைய உயிர்கள். சடம்—சரீராதிகள். இவ்வுலகம் விரிவாயிருத்தலால் பிரபஞ்சமென்பதாம்.(பஞ்சம்—விரிவு. பிர—உபசர்க்கம்,) இப்பிரபஞ்சம், அவன், அவள், அது, என்று சுட்டி அறியப்படும் அவயவப்பகுப்பினதாய்த் தோன்றல் நிற்றல் ஒடுங்கலாகிய முத்தொழிற்படுதலால் ஒருவரால் தோற்றப்பட்ட உள்பொருளேயாம். எவராலெனின்? முன் ஒடுக்கிய கடவுளால் தோற்றப்பட்டதேயாம். தோன்றுவது எதற்கெனில் மலம் நீங்குதற்பொருட்டேயாம். ஆதலால் அச்சங்காரக்கடவுளே முதற்கடவுள். மற்றையரல்லர் என்று பெரியார் கூறுவதொன்பதாம்.

இச்சூத்திரம்,"அவனவள் துவெனு மவையூ வினைமையின்" எனவும், "தோற்றிய திதியே ஒடுங்கி யுளதாம்" எனவும், "அந்த மாதி யென்மனர் புலவர்" எனவும் மூன்றதிகரணமாகப் பகுக்கப்படும். அதிகரணமாவது தான் மேற்கொண்டபொருளும் (மேற்கோளும்) அதன்கணுண்டாகும் ஐயமும் அதற்குப் பிறர் கூறும் பகுதியும், அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபும்

அதற்கு எடுத்துக்காட்டும் இயைபுமாகிய ஐந்தையுந் தன்னிடத்தே அக்கொண்டதாம்.

மூதலதிகாணம்.

மீமாஞ்சகரும் உலகாயதரும், உலகம் நிற்பது நேரே காணப்படுதல்போலத், தோன்றுவதும் அழிவதும் ஒன்றொன்றுத் தோன்றி அழிவதன்றி முழுதுந்தோன்றி முழுதுமழியக்கண்டிலமாதலால், தோற்றவொடுக்கஞ்சந்தேகமாம்; அன்றியும் நித்தியமாய்க் காணப்படும் உலகம் முத்தொழிற்படுமென்பது பொருந்தாதென்று கூறுவது நோக்கி "அவனவ ளதுவெனு மவைமூவினை மையின்" என்ற சூத்திரமுதற்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

ஈண்டி உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது.

இ—ள். மூவித அவயவப்பகுப்பினதாயும் அம்மூவகை பல வேறுய்ச் சடமாயும் முயற்கோடுமுதலிய பொய்போலாகாமல் மெய்யாகச்சுட்டி அறியப்படுவதாயுமுள்ளபிரபஞ்சம் இம்மூன்று காரணங்களாலும் தோன்றிநின்றழிதலையுடையதென்பதாம்.

உலகாயதர் தோன்றல் அழிதல் நேரேகாணப்படாமையால் பிரத்தியக்ஷமல்லாத பிரமாணம் எமக்குடன்பாடன்றென்றுகூறுவதுநோக்கிப் பிரத்தியக்ஷத்தாலும் மேற்கோளேச்சாதிக்கும்வது.

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

இ—ள். உற்பத்தியும் நாசமும், நேரே காணப்படும் திதியின் பக்கத்தே காணக்கிடத்தலால் அப்பிரபஞ்சம் முத்தொழிலுடையதே என மேற்கொண்டதென்பதாம்.

நேரே காணப்படும் திதியின் பக்கத்தில் மற்றிரண்டும் இடப்பதெப்படியென்றுகூறுவதுநோக்கி ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னேதாமே
ஒன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முன்டென்ன வாய்ந்து.

இ—ள். பிரத்தியக்ஷப்பிரமாணத்தாலும் அறியமாட்டாத மூடவோனே, பஞ்சபூதங்களாகிய மூதற்காரணத்தினின்றுந்தோன்றி நேரே காணப்படும் உலகம் ஒன்றிற்றொன்றித்தானிற்கின்றது. தோன்றியது அழியும் ஆதலால் மத்தியில் நிற்பதாகிய திதி முன்னும்பின்னும் சிருட்டி சங்காரங்களைத் துணையாக்கொண்டுதான் நிகழ்கின்றது. அங்ஙனமாயினும் ஒன்றுதோன்ற ஒன்று நிற்ப ஒன்று அழிவதன்றி ஒருங்கே தோன்றிநின்று அழியக் கண்டிலமென்பாயானால், ஓசோசாதிப்பயிர்முதலியன ஒவ்வொரு காலவிசேடங்களில் முழுதுந்தோன்றிநின்று முழுதும் அழிதலைக்கண்டிருந்தும், அவ்வாறேஉலகமும் முழுதுந்தோன்றிநின்று முழுதும் அழிபுங்காலவிசேடமுண்டென்று சொல்லாதோ உன் போலுமடமையில்லாதோனென்பதாம்.

இரண்டாமதிகரணம்.

இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் ஒடுங்கினசங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்றது.

இவ்வதிகரணம் " தோற்றிய திதியே ஒடுங்கியுளதாம் " என்ற இச்சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப் பதம்பிரித்துரைத்துமேற்கொண்டதாகும். இதனை உரையாசிரியர் "திதியே" எனவும் "தோற்றிய" எனவும், "ஒடுங்கியுளதாம்" எனவுமூன்றதிகரணமாகப் பகுத்து உரைக்கின்றார்.

(க) புத்தர், உலகம் முத்தொழிற்படுமாயினும் அது இல்பொருளாய் ஒவ்வொன்றும் அதனதன் சார்பிலே தானேதோன்றி அழியுமியல்பினதே. ஆதலால் அது ஒரு முதல்வனையுடையதென்றல் பொருந்தாதென்றுகூறுவதுநோக்கி "திதியே" யென்னும் பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, உலகம் உள்ளதென்றது,

இ—ள். மேற்கூறி நிச்சயிக்கப்பட்ட உலகம் உள்பொருளே என்பதாம்,

உலகம் உள்பொருளாவதெப்படியென்று கூறுவதுநோக்கி மேற்கோளைச் சாதிக்கும் ஏது.

இல்லதற்குத் தோற்றுமின்மையின்.

இ—ள். உலகம் இல்பொருளானால் முயற்கோடுபோல முக்காலத்தும் தோன்றுவதில்லை. உருவமாய்த்தோன்றுதல் காணப்படுதலால் அது ஒரு கடவுளாற் றோற்றப்பட்ட உள்பொருளே என மேற்கொண்டதென்பதாம்.

(உ) நிரீச்சுர சாங்கியர் உள்ள உலகம் அதன்முதற்காரணத்தில் தானேதோன்றி அழியும் அதற்கு ஒருகடவுள்வேண்டாமென்றுகூறுவது நோக்கித் "தோற்றிய" என்றபாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, உலகஞ் செய்வோனையுடைத்தென்றது.

இ—ள். உலகம் தானே தோன்றி நின்றழியாதாதலால் அதனைத் தொழிற்படுத்தும் நிமித்தகாரணனே யுடைய தென்பதாம்.

அதற்குப் பிரமாணமென்னையென்றுகூறுவதுநோக்கி மேற்கோளைச் சாதிக்கும் ஏது.

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்.

இ—ள். மண்ணிற் சூக்குமமாயுள்ளகுடம் தூலமாய் வருதற்கு வினைதற் றொழில்நிகழவேண்டும், அது, குயவனின்றித்தானே நிகழாது. அதுபோல, மாயையிற் சூக்குமமாயுள்ள உலகம் சடமாதலால் தூலமாய்வருதற்கு அத்தொழில்நிகழவேண்டும். அஃது சித்தாகிய நிமித்தகாரணனின்றித் தானேநிகழாது ஆதலால் உலகஞ் செய்வோனை உடையதே எனமேற்கொண்டதென்பதாம்.

(ங) வைஷ்ணவர்முதலியோர், உலகைத்தோற்றுவிப்பானொருவனுண்டென்றகருத்தா விஷ்ணுபிரமன்முதலியோரில் ஒருவராதலமையுமென்று கூறுவதுநோக்கி "ஒடுங்கியுளதாம்" என்றபாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லையென்றது.

இ—ள். உலகம் தான் ஒடுங்கிய சங்காரக்குருத்தாவினின்றுதோன்றுமன்றி வேறுவழித் தோன்றுதென்பதாம்.

அதற்குப் பிரமாணமென்னை? என்றுகூறுவதுநோக்கி மேற்கோளைச்சாதிக்கும் ஏது.

ஆண்டொடுங்குதலின்.

இ—ள். உடைந்து மண்ணில்ஒடுங்கியகுடம் மீளவும் மண்ணிலன்றி வேறுவழித்தோன்றுதவாறு போலச் சங்காரக்கடவுளிடத் தொடுங்கிய உலகம் அக்கடவுளிடத்திற்றான் றோன்று மெனமேற்கொண்டதென்பதாம்.

புத்தர், உலகம் உள்பொருளானால் உள்ளது உள்ளபடியிருக்கும் உண்டாகவேண்டுவதில்லை, உண்டாகுமென்னிற்சற்காரியவாதம் அடுக்காதென்று கூறுவது நோக்கி "இல்லதற்குத்தோற்றமின்மையின்" என்ற ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

இலயித்த தன்னிலில யித்த தாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்

இ—ள். உலகம் உள்ளதாயினும் சங்காரகாலத்தில்ஒடுங்கியதாதலால் ஒடுக்கிய கடவுளினின்றும் சிருஷ்டிகாலத்தில் தோன்றும். ஒடுங்கியது மீளத்தோன்றவேண்டா. வேண்டுமேல் ஒடுங்காதிருக்கலாம். ஒடுங்குதலும் தோன்றுதலும் எதற்கெனில்? கர்மமலம்பக்குவமாதற்கு ஒடுங்கி, ஆணவமலம்பக்குவமாதற்கு மீளத் தோன்றும். ஆனால் முன்ஒடுங்கியதுநாசமாகப் பின்வேறுபொருள் தோன்றுமென்னுமல், அதுவே தோன்றுமென்பதற்குப் பிரமாணமென்னெனில்? நிலத்தில் எந்தவிதைவிதைக்கப்பட்டதோ அந்தப்பயிரேவெளிவருதல்போல, முன்ஒடுங்கிய உலகமேமீண்டு வருமென்பதே பொருத்தமாதலால் அதுவேயாவராலும் விரும்பப்படுஞ்சம்மதமென்பதாம்.

அன்றியும், முன்ஒடுங்கியஉலகம் ஆணவமலபக்குவம் பெறுமல் ஒடுங்கினமையால் அப்பக்குவம்பெறுதற்கு அதுவே மீண்டுதோன்றவேண்டும். அப்படியன்றி அது நாசமாதலும் வேறு தோன்றுமென்றலும் பொருத்தமின்மை காண்க.

வைஷ்ணவர், காரியம் காரணத்தில் ஒடுங்குமென்னுஞ்சற்காரிய முறைப்படி உலகமாகிய காரியம் அதன்காரணமாகிய பிரகிருதியில் ஒடுங்கும். அப்பிரகிருதிவிஷ்ணுவின்வடிவமாதலால் அவ்னிடத்து ஒடுங்குமென்பதே பொருத்தம்; சங்காரக்கடவுளிடத்து ஒடுங்குமென்பது பொருந்தாதென்று கூறுவதுநோக்கி முன்

"ஒடுங்கினசங்காரத்தின்" என்றும், "இலயித்த தன்னில்" என்
றுங்கூறிய குறிப்பேதுவை வலியுறுத்தும்உதாரணம்.

இலயித்த

தத்திதியி லென்னி லழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு

இ—ள். உலகம் ஒடுங்கியது பிரகிருதிமாயாரூப விஷ்ணுவி
னிடத்தென்பாயானால், அசுத்தமாயா சுத்தமாயாபுவனங்கள் விஷ்
ணுவியாபகத்துக்குமேலுள்ளனவாதலால், கீழுள்ள ஏகதேசமாத்
திரமன்றி முழுதும் அவனிடத்து ஒடுங்கா. முழுதும் ஒடுங்குவ
தெங்கெனில்? அம்மாயைகள் முழுதுங்கடந்தவனுய் அவ்விஷ்ணு
பிரமர்கள்தோன்றுதற்குக்காரணனுயுள்ள சங்காரக்கடவுளிடத்தி
லேயே அவ்விருவரோடும் ஒடுங்கு மென்பதாம்.

சாங்கியர், உலகுக்கு நிமித்தகாரணனுகியமுதல்வனொருவனு
ண்டெனக்கொள்ளினும், எது எதனில் ஒடுங்குமோ அது அதனி
ற்றோன்றுவதே (அவிநாபாவம்) இன்றியமையாததாதலால், மா
யையில் ஒடுங்கிய உலகை மாயையே தோற்றுவிக்கும்; கடவுள்
வேண்டாவென்று கூறுவது நோக்கி "உள்ளதற்குச் செய்வோ
ரின்றிச் செய்வினையின்மையின்" என்ற ஏதுவை வலியுறுத்தும்
உதாரணம்.

வித்துண்டா மூல முளைத்தவா தாரக்மா
மத்தன்ரு னிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழப்போல் வேண்டுருவைத் தான்கொ
கூட்டானே மண்போற் குளிர்ந்து. [டுத்துக்

இ—ள். 'மூல விதையிற் றோன்றுவ துண்மை யாயினும்'
விதை, தனக்குஆதாரமாகிய நிலத்திற்கிடக்க, நிலங்குளிர்ந்தபின்
புதான் அவ்விதையில் முளைதோன்றும். விதை தனித்துநின்று
முளையைத்தோற்றுது அதுபோல, மாயை தனக்குஆதாரமாகிய
சிவசத்தியிற்கிடத்தலால் அச்சத்தி உலகம் தோன்றுகவென்று
நினைத்தபின்புதான்; அவ்வக்காரியங்களை அவ்வவ்விபல்பிற் பிற
ழாதற் றோற்றுஞ்சாதுரியமுடையதாம். தனித்துநின்று தோற்

ரூது. ஆதலினால் அச்சத்தியைப் பிரியாதசக்தனுகிய இறைவனிட மே உலகம் ஒடுங்கித் தோன்றியதாம். இதனைக்கிழங்கிற் ரூன்றிய தாமரையை அக் கிழங்குக்கு ஆதாரமாகிய சேற்றிற்ரூன்றியதெனப் பொருள்படப் பங்கஜம்" என்பதனாலும் அறிக. பங்கம்—சேறு. ஜம்—தோன்றுவது. அன்றியும், மாயை சடமாதலால் உலகைத் தானுகத்தோற்ரூது, நிமித்தகாரணனுகிய இறைவனே ஆன்மாக்களின் வினைக்கேடாகத் தோற்றுவிப்பன். வினைவசத்தாற்; ரூற்றுவிப்பனேல், தன்வயத்தனுகான்மே பாஷமெனில்? குளவிவண்டு எடுத்துவைத்த புழு குளவியையே நினைத்துக்கொண்டிருந்து விரும்பியபடி, அவ்வினைக்குத்தக்க அவ்வடிவினை அக் குளவிகொடுத்தல்போல, இறைவனும் அவரவர் விரும்பியபடி, வினைக்குத்தக்க வடிவுட் பயனுங்கொடுப்பனுதலால் இறைவன் தன்வயத்த னென்பதற்கிழுக்கில்லையென்பதாம்.

இங்கே விதையில்முளைதோன்றல்போல் என்றதனுல்விதையில்லையேல் முளைதோன்ரூத வாறுபோல மாயையில்லையேல் உலகந்தோன்ரூதென்பது விளக்கமாம். இதனுல், பிரமமே உலகமாய்ப்பரிணமித்தென்னும் பரிணமவாதிகளையும், மாயை உண்டென்றும் இல்லையென்றுஞ் சொல்லமுடியாத அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், மாயை மூதலிவனின்வேறன்றென்னும் சிவாத்துவிதிகளையும் பாஞ்சராத்திரிகளையும் மறுத்தவாரூயிற்று.

முதற்கடவுளுண்டெனக் கொள்ளினும், அவன், சிருட்டிமுதலியபலவேறு தொழில்செய்வனேல் விகாரியாய்ப் பந்தமுறுவனென்று கூறுவதுநோக்கி ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
ரூக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னுக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கூண்டவனி லிற்றின்ரூங் கட்டு.

இ—ள். காலமானது, இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் வருஷம் மாதம் முதலியவாக வேறுபட்டுப் பலதொழில்கள் செய்தும் விகாரமின்றி நிற்றல்போல, முதல்வனும் விகாரமின்றி நின்று சிருஷ்டியாதிகளைக் கருவிகளாற் செய்யாமல் நினைப்புமா

த்திரத்தாற் செய்தலால் விகாரப்படுதலும் அவற்றுற் பந்தப்படுதலுமிலன். இது படித்தநூலிலுள்ள சொல்லும் பொருளும் உள்ளத்திற்றோன்றும்போது அவ்வுள்ளம் அச்சொற்பொருட்களிற் றொடக்குறுமையும், ஒருவன் கனவிற்கண்டவைகளே நனவில்வினைங்க அறியும்போது அவன் அக்கனவிஷயங்களிற்றொடக்குறுமையும் போன்ற இத்தன்மைத்தென்பதாம்.

மூன்றாமதிகரணம்.

அநேகேசுரவாதிமூதலியோர், சங்காரக்கடவுளே உலகிற்கு முதல்வனென்பதுண்மையாயினும், தேர்முதலியன பலர் செய்தல்போல, அவற்றினும் அதிவிசித்திரவுலகிற்கு முதல்வர் பலருளரொன்று கூறுவதுநோக்கி "அந்தமாதி" என்ற மூன்றாம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனிச், சங்கரரே முதலென்றது,

இ—ன். சங்காரகர்த்தா ஒருவனே உலகிற்கு முதற்கடவுளென்பதாம்.

அதற்குப் பிரமாணமென்னை? என்பானை நோக்கி மேற்கோளைச் சாதிக்கும் ஏது,

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

இ—ன். ஒன்றொன்றைச் சுட்டி அறியும் சேதனவுலகர் சுட்டின்றி எல்லாம் ஒருங்கே அறிபுஞ் சுதந்திரனுகிய சங்காரகர்த்தா ஒருவன் வழிப்பட்டுப் பரதந்திரராய் நிற்பதன்றித் தமக்கெனச் சுதந்திரமுடையரல்லாதலால் சுதந்திரனுகிய அவனே முதல்வனன்றிப் பரதந்திரராகிய மற்றையர் முதல்வராகாரென மேற்கொண்டதென்பதாம்.

தேர் முதலியன பலர்செய்தலினும் ஒரு தலைவன்ஏவலாற்செய்வதாதலால் அவையெல்லாம் முதல்வராகாமல் ஏவியவொருவனே முதல்வனுதல்போலச், செய்தும் செய்வித்தும் எத்தொழிற்குங் கருத்தாவாய் நிற்கும் முதல்வன் சங்காரகாரணனெனுமவனே என்பது கருத்து.

அங்ஙனமாயினும், சுட்டிஅறியு மூலகர் பலராதல்போல, ஒருங்கேஅறியும் சங்காரகருத்தாவும் பலரென்றுகொள்வோம். அவ்வாறன்றி ஒருவனே என்றற்குப் பிரமாணமென்னையென்று கூறுவதுநோக்கி ஏதுவைவலியுறுத்தும் உதாரணம்.

ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு.

இ—ள் தானேருலகப்பொருளாகாது உலகாதீதனுகிய ஒப்பற்ற சங்காரக்கடவுளாலேயே உலகம் தோன்றிநிற்றல் போல அக்கடவுளிடத்திலேயே ஒடுங்குதலால் அவன் ஒருவனே உலகிற்கு முதல்வனும். ஆனல் சேதன உலகர், முத்திநிற் சிவசமமாதலால், அவர்களும் முதல்வராவரொனில்? முதல்வன்போல நித்தியராகிய அவர்கள், அம்முத்தியிலும் பலவாற்றானும் முதல்வனுக்கு அடிமைகளே என்பதாம்.

உலகம் சடமாதலானும் பிரமவிஷ்ணுவாதி சிவர்களாகிய சேதனஉலகர், சுட்டுணர்வினராய் ஒன்றைபுந் தாமாகஅறிதலுஞ் செய்தலுமில்லாத மலபெத்தராதலானும்' இவ்விருவகைச் சேதனஅசேதனஉலகைத் தொழிற்படுத்துபவன் அவற்றின் வேறும் அவற்றைக் கடந்தவனுமிருந்தாற்றானமையுமாதலானும், பிரகிருதிமாயாரூபியாகிய விஷ்ணுமுதலியோர் அதன்மேலுள்ளமாயையைக்கூடக் கடந்தவசல்ல ராதலானும், சங்கரிப்பவனே அம்மாயை மூன்றையுங்கடந்து மேனிற்பவனுதலானும் அத்தகையமுதல்வனொருவனுண்டென்பது பெறப்படும். பெறவே; பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலால் இவ்வாறு நடத்தும் முதல்வன் மூற்றுணர்வு அளவிலாற்றல் பேரருள் சுதந்திரமுதலிய பரத்துவகுணங்களுடையன் என்பதுபெறப்பட்டது. படவே இத்தன்மை, யனுகிய முதல்வனொருவனே அமையுமாதலால் வேறும் அத்தன்மையருண்டெனக்கொள்ளின் மிகை என்னுங் குற்றமாம். •அன்றியும் சங்காரத்துக்குரிய இலக்கணங்களுள் ஒன்றேனும் ஒருவாற்றானும் வேறுபடாது நிறைந்துள்ளபோது அவ்விலக்கணத்தை

• •

யுடைய இலக்கியமாகிய முதல்வன் ஒருவனேயன்றிப் பலராதல் செல்லாதென்னுங் கருத்தால் "ஒன்றலாவொன்று" எனவையத்தோதினர். ஆகவே பிரபஞ்சம் அதிவிசித்திரகாரியமாயினும் அதனைச் சங்கரித்தற்கு அப்பரத்துவகுண முதல்வனொருவனே போதிய ஆற்றலுடையானென்பது தெளிவாம்.

இருளீங்கியபோதும் கண்கள் சூரியனையின்றிக் காணமாட்டாதவாறுபோல, மலநீங்கிய முத்தியிலும், ஆன்மாக்கள் உடனின்று அறிவிக்கு முதல்வனையின்றி அவனை அறியமாட்டாமையும் கண்ணும் படிகமும் ஆகாசமும்போல ஆன்மாக்கள் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பனவன்றி முதல்வனைப்போலத் தனித்துநில்லாமையும், அவனைப்போல ஐந்தொழிற்குரிமையின்றிச் சிவானுபவமொன்றுக்கே உரியனவாதலும், சமவியாபகமுள்ளனவாயினும் விளக்கொளியிற் கண்ணொளிபோல முதல்வன் வியாபகத்துள் வியாப்பியமாய் அடங்கிநிற்றலுமுதலிய பலவாற்றானும் ஆன்மாக்கள் முத்தியிலும் அடிமைகளே என்பது தெளிவாம். இதனால் அநேகேசுரவாதிமதமேபன்றிச் சிவசமவாதிசங்கிரசந்தவாதி உற்பத்திவாதி ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன.

இச்சூத்திரம், உலகம் முத்தொழிற்படுதலால் அவற்றைச் செய்யுங் கடவுளொருவருண்டு; அவர் சங்காரகாரணரே. உலகம் அவனிடத்தொடுங்கித்தோன்றலால் அவரே முதற்கடவுளென்பதனைநாட்டி, அதனை ஒத்துக்கொள்ளாமல் முதலதிகரணத்தில் தோன்றல் அழிதல் நேரே காணப்படாமையால் உலகம் நித்தியமென்றுகூறும் லோகாயதர் மீமாஞ்சகையும்(உ)தோன்றியழியுமேனும் இல்பொருளாய் அதனதன் சார்பிலேதோன்றிநின்றழிவது அதனியற்கையாமென்றுகூறும் புத்தரையும், உள்பொருளானால் உள்ளபடி இருக்கும் இறைவன் வேண்டாவென்றுகூறுஞ் சாங்கியரையும், வேண்டுமாயினும் விஷ்ணுமுதலியரே இறைவரானவரென்றுகூறும் பாஞ்சராத்திரிமுதலியரையும், (ஊ) சங்காரக் கடவுளே முதல்வராயினும் அதிவிசித்திரஉலகம் ஒரேகடவுளாற் செய்தல் கூடாமையால் பலகடவுளருளாதல் வேண்டுமென்றுகூறும் அநேகேசுரவாதிகளையும் மறுத்து மேற்கூறியபடி சங்காரகாரணனாகிய சிவபிரானே யாவர்க்குமேலானமுழுமுதற்றலைவ

னென்பதை வலியுறுத்திப் பொதுச்சிற்ப்புவகையின் அனுமானப்பிரமாணத்தின்வைத்துப் பதியுண்மை விளக்கியவாறு காண்க

இரண்டாஞ்சூத்திரம்.

பாசவுண்மை.

அவையே தானே யாயிரு வினைபிற்
போக்கு வரவு புரிய வாணவி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

கருத்துரை. புனருற்பவம் வருமாறுணர்த்துதனுதலிற்று.

இ—ள். உலகமானது, ஒடுங்கிய முதல்வனினின்றும் மீளத் தோன்றுதலே வகுத்துணர்த்துமுறையில், மூதற்காரணதுணைக் காரணங்களில்லையேல் அம்முதல்வன் நிமித்தகாரணனுவதெப்படியென்று கூறுவது நோக்கி அம்மூதல்துணைகளாகிய மாயார்மலமூம் கன்மமலமும் உள்பொருள்களே எனப் பாசவுண்மைக்குப் பிரமாணமுணர்த்துவதென்பதாம்.

சூ—ள், முற்கூறிய சங்காரக்கடவுளாகிய சிவபிரான், (அவையேயாயும்) (உயிர்களுடன் கலப்பினுல் உடம்பின் உயிர் போல ஒன்றேபாயும்) (தானேயாயும்) (பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல வேறும்) (அவையே தானேயாயும்) (உயிர்க்குபிராதற்றன்மையாற் கண்ணுளிபின் ஆன்மபோதம் போல உடனுகிபும் நின்று) தனது ஆணை என்னும் பரியாயப் பெயருடைய சிற்சத்தியாற் செலுத்தப்பட்டுவருகின்ற இருவினைகளால் அச்சீவர்கள் இறத்தல் பிறத்தல்களைக் கொள்ளும்படி எப்போதும் அச்சிற்சத்திபுடன் பிரிவின்றி நின்றருள்வதொன்பதாம்.

இறத்தலாவது, சீவர்கள் தூலசரீரத்தைவிட்டு நீங்குதல். பிறத்தலாவது, தூலசரீரத்துடன் வெளிவருதலாம். இச்சூத்திரத்தில் "ஆணைபின்" என்றதனுல் நிமித்தகாரணனுகிய முதல்வனுக்குத் துணைக்காரணம் சிற்சத்தியென்பதும், "இருவினையின்" என்றதனுல் அச்சத்திவழித் துணைக்காரணமாகிய கன்மமலமும், போக்குவரவுபுரிய என்றதனுல் அதற்குப் பற்றுக்கோடாய், உயிர்கள் இறத்தல் பிறத்தற்கிடமாகிய சரீராதிகளைக் கொடுக்கும்

இதற்காரணமாயாமலமுமாகிய பாசங்கள் உண்டென்பதற்குப் பிரமாணங்கூறினமை காண்க.

இச்சூத்திரம்: "அவையே தானேயாய்" எனவும் "ஆணைபின் இருவினைபின்" எனவும், "போக்குவரவுபுரிய" எனவும், "ஆணவினீக்கமின்றி நிற்குமன்றே" எனவும் நான்கதிகரணமாகப் பகுக்கப்படும்.

முதலதிகரணம்.

முதல்வனுஞ் சிவனும் பொன்னும்பணியும்போல் அபேதமோ? இருளும் வெளியும்போல் பேதமோ? சொல்லும்பொருளும்போல் பேதாபேதமோ? என்றுவினவும் ஐயப்பாட்டில் அம்மூன்றுள் ஒவ்வொன்றே பற்றிநிற்கும் மாயாவாதிகள் மாத்துவர்கள் பாஞ்சராத்திரிகள் கூறுவது நோக்கிச் சூத்திரத்தில் "அவையே தானேயாய்" என்னும் முதற்பாசுத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்குமென்றது.

இ—ள். முதல்வன், வினைப்போகங்களை அனுபவிக்கச்செய்து ஒழித்தற்காக உயிர்களிடத்து உடலும் உயிரும்போலக் கலந்துநிற்றலால் ஒன்றும், அவ்வுயிர்களுக் கறிவித்தற்காகக் கண்ணும் அதற்குப் பொருள்களை அறிவிக்குஞ் சூரியனும்போலப்பொருட்டன்மையால் வேறும், அறிவித்தவழியே நடப்பித்தற்காகக் கண்ணெனினும், அதனைப் பொருள்களிற்செலுத்தும் ஆன்மபோதமும்போல உயிர்க்கு உயிராதற்றன்மையால் உடனுமியும் நின்றுபகரித்தருளுவனென்பதாம்.

முதல்வன் "அப்பொருளுமான்மாவு மாரணநூல் சொன்னபடி, தப்பிலாச் சித்தொன்றே சாதியினால்" என்றபடி சீவர்களுடன் கலந்திருக்குந் தன்மைநோக்கி ஒன்றும் என்றும், "எப்படியுந்தேரிற்றுவிதம்" என்றபடி பொருட்டன்மையால் இரண்டென்னும் உண்மைநோக்கி வேறும் என்றும், "சிவாகமநூல்சொன்னகீட்டை, யாருமிடத்தத்துவிதமாம்" என்றபடி உயிர்க்குயிரா

யுடனின்றுசெலுத்து நன்மைநோக்கியுடனையென்றும் கூறினும் இம்மூன்றியல்பும் சீவர்களிடத்து வேறின்றி உடனுய்நிற்கும் அத் துவிதமென்பதே முடிவாம்.

இவ்வாறு மூன்று விதமாய்நிற்றற்குப் பிரமாணம் என்னை? என்று கூறுவதுநோக்கி மேற்கோளேச்சாதிக்கும் ஏது.

அத்துவிதமென்றசொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்றசொல்லே அங்ஙிய நாத்தி யை யுணர்த்துமா யிட்டு.

இ—ள். அத்துவிதமென்ற சொல்லின் முதலிலுள்ள(ந)அக ரத்துக்கு இன்மைப்பொருள்கொண்டு அத்துவிதமென்ற சொல் லுக்குப் பொருள்ஒன்றே எனில்? அவ்வொன்றுகியபிரமம் தன்னை த்தானே ஒன்றெனச் சொல்லிக்கொள்ளமாட்டாதாதலால் அவ் வாறு சொல்பவன் வேறொருவனேயென்பது விளக்கமாதலா னும், எண்ணுப்பெயர்முன்வரும்(ந)அகரம் அன்மைமாத்திரம ன்றி இன்மைமுதலியபொருளுணர்த்தும் வழக்கம்இன்மையால் அத்துவிதமென்றசொல்லே வேறுகாரணம்வேண்டாது வேறன் மையையுணர்த்துமாகலானும், ஆன்மாக்கள் பலவும் முதல்வன் ருனேயாய் நிற்குமென மேற்கொண்டதென்பதாம்.

அத்துவிதமென்னுஞ் சொல், அ—துவிதம் எனப்பிரிபடும். துவிதமென்பது இரண்டுஎன்னும் எண்ணைக்குறித்ததே. இதனில் யாருக்கும் ஆக்ஷேபமில்லை. இதன்முதலிலுள்ள, (ந) அ—என் னும் எழுத்துக்குத்தான், பலர் பலபொருள் கூறுகின்றார்கள். இந்த அகரத்துக்கு, சாமியம், இன்மை, பேதம், அற்பம், இழிவு மறுதலை என்னும் பொருள்களுண்டு. இதனை,

(சப்தகல்பதருமம்.)

தத்ராத்ரயஸ்ஸாதர்ம்யமத்ரயஸ்ஸாதர்ம்யம்
வைதர்ம்யஸ்ஸாதர்ம்யம் வைதர்ம்யம் ॥

என்று விளக்குகின்றது. சாமியப்பொருள் அன்மைப்பொருளில் செல்லும். இதனை,

(பரிபக்ஷேந்துசேகரம்)

நஞிவய-கூஃநுவஷ்ஸாயிகரணெதயாஹ்யஃமகிஃ

என்பதனைக் காண்க.

இந்நூல், பேதமும் அபேதமுமாகிய அன்மைப்பொருளே (அநஸ்வ) உதாரணத்தால் விளக்குகின்றது.

பாதஞ்சலமகாபாஷியம் 2-ம்அத்தியாயம், 2-ம்பாதம் க-ம் ஆன்னிகம், சூ-ம்(க்ஷூ)என்னும் சூத்திரம் இந்தஅன்மைப்பொரு ளேகூறுகின்றது. (முண்டகோபநிடதம் ங-க-ங)

"தஞாவிஆநுவ-ணுவாவெவியஇபநிரஂஜநஃ

வரஃம் வாஃஷ்ஃ-வெதி।"

"தஞாவஶிவவந-கூஃவவுஜ்ஞாஃயிஃகூஃ

ஊதெதவம ஹ-ணவா கூராஜிவாஃவகெஷாநிர-ஷவிதஃ"

என்று சாமிபப்பொருள் விளக்குகின்றது.

ஆகவே சாதிருசியம் என்றது அன்மை என்பதேயாம்.

இது, ஒருபிராமணன் ஒழுக்கந்தவறியுள்ளானுகில், அவனை அப்பிராமணன்என்று ஒருவர்கூறுமிடத்து, அச்சொற்குப் பிரா மணத்தன்மையுடையான் அல்லனென்று, அன்மைப்பொருள் கொள்ளுதலாலுங்காணப்படும். பிராமணன் இல்லையென்று இன் மைப்பொருள்கொண்டால் அப்புருஷனேயில்லையென்றுகும் ஆத லால் மேற்காட்டிய(ந)அகரத்துக்கு அன்மைப்பொருள்கொள்ள வேண்டிய இடங்களில், புத்திமான்கள் இல்லையென்பதாகிய இன் மைப்பொருள் கொள்ளாதொன்க.

இன்மைப்பொருள், அபோஜனம் என்பதற்குப் போஜனமி ன்மை(உபவாசம்)எனக்கொள்ளுதல்போல, இல்லையென்பதாம்.

மறுதலைப்பொருள், இவன் அதர்மன் என்பதற்குத், தருமத் துக்கு மறுதலையாகிய பாவஞ்செய்பவன் எனக்கொள்ளுதல்போ ல; எதிர்மறை என்பதாம்.

பேதப்பொருள், இது அகடம் என்பதற்குக், கடத்துக்கு வேறுகிய படமெனக்கொள்ளுதல்போல, வேறென்பதாம்.

அற்பப்பொருள், இவள் அருந்ததீ என்பதற்குச் சிறுவயிது டையவள் எனக்கொள்ளுதல்போலச், சிறுமை என்பதாம்.

இழிவுப்பொருள், இது அதனம் என்பதற்குத் தனமென்றெ ண்ணப்படாத தோற்காசெனக்கொள்ளுதல்போல இழிந்ததென் பதாம்.

இவ்வாறு பலபொருள்கொள்ள இடமிருந்தாலும் எவ்விட த்தில் எப்பொருள் பொருந்துமோ அப்பொருள் கொள்வதே பொருத்தமாயிருக்க, மாயாவாதிகள் இந்தஅகரம் துவிதமெ ன்னும் எண்ணுப்பெயர்முன் அத்துவிதமென நிற்கும்போது, இரண்டன்மையெனக் கொள்ளாமல் இரண்டில்லையென்றும் அத ற்குப் பொருள் ஒன்றே என்றும், அது பிரமமேஎன்றும் அதுத விர ஒருபொருளுமில்லையென்றும் கூறுகின்றனர். அஃதுண் மையாயுள் அத்துவிதம் என்னுஞ் சொல்லுக்குப்பொருள் ஒன் றே என்று பிரமங்கூறியதாகவே முடியும். பிரமம் தன்னைத்தா னே ஒன்று என்று சொல்லிக்கொண்டிருக்குமா? சொல்லுமெ னில் அது அறிவொழிந்த பித்தர்களின் வாய்ப்புலம்பல்போலா மன்றி உண்மையாகுமா? உண்மை நோக்குமிடத்து அவ்வாறு சொல்லுகின்ற புருடன் வேறொருவனுளனென்பதே நிச்சயமாம். ஆகவே, பொருள் இரண்டுஉண்டென்பதுதெளிவாகின்றது. அன் றியும், ஒன்று என்றே கொள்ளவேண்டுமாயுல், பலபொருள் தந்து பிறர்சந்தேகித்தற்கிடஞ்செய்யும் அத்துவிதம் என்னுஞ்சொ ல்லைவிட்டுத் தெளிவாய் விளங்கும்படி ஏகம் என்றே கூறலாம். அப்படியின்றி ஊகித்துணரும்படி அத்துவிதமென்று கூறியது இரண்டு அன்மையென்னுமுண்மை தெளிதற்கேயாமென்க.

(மைத்ரேயோபநிஷதம்.)

வாகவாம்வ்ரவி ஹீநொஹ்ரிஹிவாம்வ்ரவாநஹாம்நஹ

என்ற மந்திரம், சிவ்பரப்பிரமம் நான் ஒன்றென்னும் எண்ணும் இரண்டென்னுஞ் எண்ணும் அற்றவனுயிருக்கின்றேன். என்று கூறியதில்வைத்து, அத்துவிதமென்ற சொற்பொருளினுண்மை விளக்குகின்றது. பிரமமே இவ்வாறு பிறர்க்குக்கூறுதலும் நோக் காது மாயாவாதிகள் ஒன்றே என்று கூறும் பிடிவாதம், கொடி.

றும் பேதையுங் கொண்டதுவிடா என்பதை விளக்கிச் சிறிதும் பயன்படாதொழிதல் காண்க.

அன்றியும், அகரம் மேற்காட்டிய போஜனம் முதலியபோர்களில் முன்வந்து அபோஜனம் முதலியவாக நிற்குமிடத்து இல்லை யென்பதுமுதலியபொருள்களைத் தருமேயன்றி, ஏகம் துவிதம் என்ற எண்ணுப்பெயர் முன்வந்து அநேகம் அத்துவிதம் என்று நிற்கும்போது இல்லையென்னும்பொருள் தரமாட்டாது. அவ்வழக்கமும் எவ்விடத்துமில்லை. இருந்தால்வெளியிட்டுவிளக்கலாம். இவை ஒன்றும் நோக்காமல் இல்லையென்பதேபொருளென்றால் அநேகம் என்பதற்கும் ஒன்றுஇல்லைஎன்றே கொள்ளவேண்டும். கொண்டால், அநேகம் என்பதற்குப் பல என்பதே பொருளாதலால் அது பொருந்தாது. ஒன்றுமுதலாகப் பல்சேர்ந்துதான் பலவாகும். ஒன்றே இல்லையென்றால் பல என்பது எப்படி நிலை பெறும். ஆதலால், அநேகம் என்பதற்கு ஒன்றல்லாத பலவென்பதே பொருத்தமாய் அன்மைப்பொருளே விளக்கமாதல்போல அத்துவிதம் என்ற பெயரும் மேற்காட்டியபடி அன்மைப்பொருளையே தருமென்க.

மேற்கூறியபடி, ஒருகடவுள் ஒன்றும் வேறும் உடனும் மூவிதமாய் நிற்பதெப்படி என்றுகூறுவதுநோக்கி (அவையேயாய்) ஒன்றாய்நிற்றலை உவமைமுகத்தால் விளக்கும் உதாரணம்.

கட்டு முறுப்புங் காணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு.

இ—ள் உயிர், நரம்புமுதலியவற்றாற் கட்டப்பட்ட உடம்பையும் பொறிமுதலிய கருவிகளையுங்கொண்டுள்ளதே. உடம்பு சடம். உயிர் சித்து. இரண்டும் பொருளால் வேறாயினும் ஒருவனை உடம்புக்கிட்டபேரால் அழைத்தவிடத்து அவனே என்னென்றிவருதலால் அவன் அவ்வுடம்பைவிட்டு ஒன்றெனநிற்றல்போல, முதல்வன் முற்றறிவினன். உயிர் சிற்றறிவினது. இருபொருளும் வேறாயினும் முதல்வன் உயிரைவிட்டு ஒன்றெனநிற்பன். நிற்பி

னும், மேற்காட்டிய உடம்பு உயிராகாமலும் உயிர் உடம்பாகாமலும் அவ்வுயிர் உடம்பின்வேறுப்த் தனித்துநிற்றலும், உடம்பு தனித்துநில்லாமையும்போல, உயிர் முதல்வனுகாது; முதல்வன் உயிராகான்; முதல்வன் உயிரின்வேறுப்த் தனித்துநிற்பன் என்பதாம்.

இங்கே தனித்துநிற்றலென்றது உயிர்களைப் பிரிந்துநிற்பதன்று. அவ்வுயிர்கட்குவரும் சுகதுக்காதியிற் கட்டுப்படாதுநிற்றலேயாமென்க. இதனுல் மேற்கூறிய மூன்றனுள் ஒன்றுய்நிற்றல் விளக்கமாயது.

வேதம் அத்துவிதமென்றதுமன்றி, ஏகம்(ஒன்று) என்றுங் கூறுதலால் அதற்குமாறுக, முதல்வன் உயிர்களுடன் ஒட்டிநிற்பனென்றிரண்டுபடக் கூறுவதெப்படி என்று வினவுது நோக்கி அச்சொற்குத் தாற்பரியங்கூறுமுகத்தால் (தானேயாய்) வேறுய்நிற்றலே விளக்கும் உதாரணம்.

ஒன்றென்ற தொன்றேகா ணெண்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுள்ளு கா—ணெனின்றின்று
லக்கமங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு.

இ—ள். வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம். அதன்கருத்துப் பதிப்பொருள் ஒன்றே; இரண்டில்லை என்பதாம். இதனை யறியாமல் ஒன்றென்று கூறியநீ அப்பதியின் வேறுய பசுவே. நானும் சித்தமயிருக்க என்னைப் பசுவென்றதென்னெனில்? நீ பாசத்திற் கட்டுப்பட்டிருத்தலால் பசுவென்றுசொல்லப்பட்டாய் ஆனுல், வேதம்பிரமமில்லையேல் ஒருபொருளுமில்லையென்பதென்னெனில்? அது, உயிரு மெய்யுமாகிய எல்லாவழுத்துக்களுமுள்ளனவேயாயினும், அவ்வெழுத்தெல்லாவற்றுள்ளுங்கலந்துநின்றுஒலிக்கச்செய்கின்றநாதவடிவாகியஅகரமில்லையேல்எழுத்துக்கவ் ஒன்றுமில்லையென்பதுபோல, எப்பொருளினுங்கலந்துநடத்துகின்ற பிரமமில்லையேல் ஒருபொருளுமில்லையென்கின்ற அவ்வளவேபாதலால், மேற்கூறியபடி முதல்வன்உயிரனுபவத்திற்கு ஒன்றுய் ஒட்டிநிற்பினும், அவைகளுக்கு அறிவித்தற்கு வேறுயும் நிற்பனென்பதாம்.

வேதம், ஏகம் என்றுகூறும் பிரமத்தையே ஒவ்வோரிடங்களில் அத்துவிதம் என்றுங்கூறுதலால், சைவர்களாகிய நீவிர், அத்துவிதம் என்பது பதியும் பசுவுமாகிய இருபொருள்கள் கலந்திருத்தலேவிளக்குமென்பது பொருந்தாது ஏகம் என்பதிற்போல அத்துவிதமென்பதற்கும் ஒன்றென்பதேபொருளாமென்றுகூறுவதுநோக்கி அதனை நீக்குமுகத்தால்(அவையேதானே) உடனுய்கிற்றலே விளக்கும் உதாரணம்.

பண்ணோடு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணுரு
வத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
தத்துவித மென்றறையு மாங்கு.

இ—ள். வேதம், பிரமத்தை ஏகம் என்றசொல்லினலேயே எங்குங் கூறியமையாமல். பண்ணும் அதன் ஓசையும்போருட்டன்மையால் இரண்டாயிருந்தும் பிரிந்து நில்லாமற்கலந்தே நிற்றல் போலவும், பழம் சுவைமுதலியவைகளும் அப்படியேநிற்றல் போலவும், மூதல்வன் றிருவருள் எங்குநிறைந்து உயிர்களோப்பிரிவின்றிக் கலந்து நிற்றலாற்றான் அத்துவிதமென்றும் அவ்விடங்களிற்கூறியதாற்றலால் இதனை ஊகித்துணராமல் அத்துவிதத்துக்கு ஒன்றென்பதேபொருளென்றல் பொருந்தாதென்பதாம்.

எனவே, வேதம், பிரமம் உயிர்களை ஒட்டிநின்றும், அவ்வுயிர்களின் சுகதுக்காதிகள் தன்னைப்பற்றுதிருக்குந் தனிமைநோக்கியே ஏகம் என்றும், அவ்வுயிர்களைப் பிரியாது நடத்திஉடனுய்நிற்றல் நோக்கியே அத்துவிதமென்றும் வேறுவேறுசொல்லால் விளக்கியதென்பது தெளிவாயது.

இவ்வாறு வெவ்வேறு உவமைகூறினல் அநேகாந்தவாதமாகுமென்று கூறுவதுநோக்கி ஒரே உவமையால் அம்மூன்றுநிலையும் விளக்கி அது அநேகமுடிவாகாமல் ஒரேமுடிவுதான் என்பதை வலியுறுத்தும் உதாரணம்.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்

தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று.

இ—ள். அரக்கை உருக்கி அதனுடன் சேர்த்த கற்பெர்டி அவ்வரக்குடன் இயைந்து நிற்றலால் ஒன்றுயும், அரக்கும் கற் பொடியும் வேறுவேறு பொருளென்று தெரியநிற்றலால் வேறு யும், அங்ஙனம் நிற்பினும் பிரிவின்றிநிற்றலால் உடனுயும் நிற்றல் போல, முதல்வனும் உயிர்களினிடத்துக் கலப்பினால் ஒன்றுயும், பொருட்டன்மையால் வேறுயும், பிரிவின்மையால் உடனுயும்நிற் பனுதலால் அநேகாந்தவாதமாகாதென்பதாம்.

ஆனல் வாமதேவமுனிவன்முதலியோர் யானே உலகெலாமா யினேனென்றுகூறுதலால்,முதல்வனது ஒன்றுய் வேறும் உடனுய் நிற்கும் இலக்கணம் அம்முனிவன்முதலிய ஆன்மாக்களிடத்து முண்டென்று கொள்ளவருமன்றேவெனில்? பாசமுற்றும் நீங் கப்பெற்றுச் சுத்தமாய்த் தனித்துநிற்கும் என்னிடத்தும் சிவோ கம்பாவனையால் முதல்வன் வேற்றுமையின்றி விளங்கலால் அவ் வரிமைபற்றி இம்முத்திகாலத்துயானே உலகெலாமென்பேனுயி னேன். அதுபற்றி உயிரெல்லாம் அவ்விலக்கணமுடையனவாகா வென்பதாம்.

கண்ணன், இப்பாவனைமுதிர்ச்சியாற் சிவமாய்நிற்றல்பற்றி யே அர்ச்சுனற்குக் கீதை உபதேசிக்குமிடத்து நானே உலகமெ லாமாயினேனென்றுகூறி முதல்வனது விசுவரூபமுங்காட்டி வெ வ்றையுங்கைவிட்டு என்னையே வழிபடுக என்று கூறினன்.

கண்ணன் சிவமாய்நின்றுகூறினமையால், அது சிவாஞ்ஞை என்பதுள்ளபடி தெரிந்த அர்ச்சுனன் சிவபூசனையே எப்போதுஞ் செய்துவந்தான். இதனுல் கண்ணன் உபமந்நியுமுனிவனையடை ந்து வணங்கிச் சிவதீக்ஷை சிவபூசைமுதலிய சிவசம்ஸ்காரம்பெற் றுச் சிவத்துவம்வாய்க்கப்பெறுமுன் அவனிடத்து முதல்வனது விசுவரூபங்காட்டுதல் முதலிய சிவச்செயல்கள் நிகழாவென்பது தெளிவாயது.

இரண்டாமதிகரணம்.

பரிணமவாதிகள், முதல்வன் மீளவுஞ் சிருஷ்டிக்குங்கால் வினைகளாய துணைக்காரணமுதலியன வேண்டின், அவனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காதலால் அவை வேண்டப்படாவென்பதை மறுத்து "ஆணையின் இருவினையின்" என்ற இரண்டாம்பாகத்தைத்தப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினைமுதல்வன் ஆணையின் வருமென்றது.

இ—ள், உயிர்களுக்குமுன்செய்யப்பட்டு மாயையிற்கிடந்த இருவினைகள் முதல்வனது ஆணையாகிய சிற்சத்தியால் வருமென்பதாம்.

ஆணையின் வரும் என்றதனால், முதல்வனது சுதந்திரத்திற்கு இழுக்கில்லை என்பது விளக்கமாயது.

சிருட்டித்தற்கு ஆணையாகிய சத்தியே போதியதாம். இருவினைகள் எதற்கென்றுகூறுவதுநோக்கி மேற்கோளைச்சாதிக்கும் எது.

ஒரு நகரியைக்காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினையாகலான்,

இ—ள். ஒரு நகரத்தைக்காக்கும் அரசன், தனது ஆணையால் சிறைச்சாலையிற்செய்யுந் தண்டத்தொழிலை அது செய்தற்குரிய ஒருவனிடம்வைத்து நடத்துதல்போல முழுமுதற்றலைவன் மீளச்சிருட்டிப்பதாகிய தனதுஆணையை இருவினைகளில்வைத்து நடத்தலே முறையாகலான் இருவினைகள் முதல்வன் ஆணையின் வருமென மேற்கொண்டதென்பதாம்.

வினையுண்டு, அது உயிர்க்குப் பயனுய்வரும். பயனை அநுபவிக்குமிடத்தும் மேலும் வினை ஏறும். அது முதல்வனையின்றித் தானுகப் பயன்தராதென்பதற்குப் பிரமாணமென்னை யென்றுகூறுவதுநோக்கி ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

- உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
  னுள்ளதா மூற்செய்வினை யுள்ளடையே—வள்ளலவன்

செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

இ—ள். இல்லது தோன்றுதாதலால், முன்உள்ளதாகிய சஞ் சிதவினையே தன்பயனுகிய இன்பதுன்பங்களையும் உடம்பையும் தோற்றுவிக்கச் சடமாகிய உடம்புக்கு அநுபவங்கூடாமையால் உயிர் அவ்வுடம்பைச் சார்ந்து அப்பயனை அநுபவிக்கும். அநுப விக்தொழிந்தால் மேலும் வினை ஏறுவதெப்படியெனில், அநுபவி க்கும்முறையில் விருப்புவெறுப்பு நிகழ்தல்பற்றி மேலைக்கும் வினை யுளதாம். ஆனல் வினையே பயனுப் வரும், முதல்வன் வேண்டா வெனில்? உழவர் செய்யுந் தொழிற்குப் பயனை நிலங்கொடுப்ப தன்றி அத்தொழில் கொடாது. அதுபோல, உயிர்க்கு உணவும் வித்துமாய் வரும் வினைகளை முதல்வனே சேர்ப்பனன்றிச் சட மாகிய வினை தானே பயனுய் வராதென்பதாம்.

ஆனல், உயிர் சித்தாதலால் வினைப்பயனைத் தானே எடுத்து அநுபவிக்கும். முதல்வன் வேண்டாவென்று கூறுவது நோக்கி வேண்டுமென அதனைவலியுறுத்தும் உதாரணம்.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானி னுகராே
லார்தா மறிந்தணைப்பா ராங்கு.

இ—ள். இரும்பை இழுக்கும் இயல்பினதாயினும் காந்தம் இரும்பிருக்குமிடத்திற்போயிழுக்கமாட்டாது, ஒருவன் நேரிற் சேர்த்தபோதுதான்இழுக்கும். அதுபோல, வினைப்பயனை அநு பவிக்கு மியல்பினவாயினும் சிற்றறிவுயிர்கள் வினைக்குத்தக்கபய னைத் தாமாகஅறிந்தெடுத்துக்கொள்ளமாட்டா. ஆதலால், முற் றறிவுடைய முதல்வனே அவரவர் வினைக்குத்தக்க பயனை மாறு படாமல் அவரவர்க்குச்சேர்ப்பன். உயிர்கள் அதற்குரியஉடலைப் பொருந்தியின்று அப்பயனை அநுபவிக்கும். அறிவுஞ் சுதந்திரமும் இன்றி மலத்தின் மறைந்துகிடக்கும் அப்பெத்தகாலத்தில் அம்முற் றறிவுடைய முதல்வனேயன்றி வேறுயாவர் அப்பயனையறிந்து சேர்ப்பர் ஒருவருமில்லையென்பதாம்.

அவ்வினை, ஒருகாலத்தில் வந்த ஆதி என்றால், இல்லாதது பின்வந்ததென்றுகிச் சற்காரியவிரோதமாம். அநாதி என்றால், அதுதானே உயிரைப்பற்றிநிற்கும்.ஒருவர் சேர்க்கவேண்டாவென்று கூறுவதுநோக்கி வேண்டுமென அதனை வலியுறுத்தும்உதாரணம்.

நெல்லிற் குமிபு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம்.

இ—ள். நெல்லில் உமியும் செம்பிற் களிம்பும் நெல்லுஞ்செம்பும்உள்ளபோதேஉள்ளன. இடைபில்வந்தனவல்ல. அதுபோல மாயை ஆணவம் கன்மமாகிய மும்மலங்களும் உயிர்களினிடத்து அநாதியே (முன்னரே) உள்ளனவாம். அம்மலங்கள் தத்தங்காரியங்களைச் செய்தல் முதல்வனாலேயேயாம். அது முன்னரேஉள்ள தாமரைப்பூ மலர்தலும் குவிதலுஞ் சூரியனாலேயே ஆதல்போலுமென்பதாம்.

ஆணவமலகாரியம், மோகம் மதம்முதலியன. கர்மமலகாரியம், இன்பதுன்பமுதலியன. மாயாமலகாரியம், தநுகரணமுதலியன. இவ்வெண்பாவில் "வள்ளலால் ஆம்" அம்மலகாரியங்கள் முதல்வனாலேயாம். என்றதனால், அம்முதல்வனின் வேறுகாத சிற்சத்தியே சீவர்களின் வினைப்பயன்களை அனுபவிப்பித்துத் தொலைக்கும்பொருட்டு அவ்வனுபவவிடயங்களின் குணங் குற்றங்களை மறைத்துநிற்கும் அவசரத்தில் திரோதானசத்தியாய் நிற்குமுண்மை பெறப்படும். திரோதானம்—மறைப்பு. அத்திரோதானசத்தி, அம்மலங்களின்வழிநின்று மோகமுதலிய அம்மலகாரியங்களைத் தொழிற்படுத்துஞ் சிவசங்கற்பத்திற்கு ஏதுவாய்நிற்றலால் மலமென்றுபசரித்துக் கூறப்படும். இவ்வாறு ஆணவம் கன்மம் மாயை திரோதானம் மாயாகாரியமாகிய மாயேயம் என்னும் ஐவகை மலமுண்டென்னுமுறை காண்க.

ஆணவமலம், ஒன்றேயாய் ஆன்மாக்களோடாயும் வெவ்வேறுய்த் தத்தங்காலஎல்லையினீங்கும் அநேகசத்திகளை உடையது.

மாயை, சுத்தம் அசுத்தம் என்றிரண்டாம். சுத்தமாயையில், ஐந்தகலையும் நான்குவாக்கும் சிவதத்துவமைந்தும் சுத்தகாலமூதல் சுத்தபூமிவரை (நூக)தத்துவங்களும்: அசுத்தமாயையில், அசுத்தகாலமூதல் அசுத்தபூமிவரை (நூக) தத்துவங்களுந் தோன்றும். கன்மமலம், ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தமென மூன்றுவகையாய் "ஈசோற்பத்திபண்ணிவருமாதலாலஞாதி" என்றபடி பிரபஞ்சம்போல் ஒடுங்கித் தோன்றிவருதலால் பிரவாகாகாரதியாயுள்ளதொன்றும், "ஏக னனேக னிருள்கருமமாயைபிரண்டாக விவை யாருதி யில்" "ஆணவமுதலன்றதுபோற் கருமமும்" என்றபடி அம்மூவகைவினைக்கும் மூதற்காரணமாய் அநாதிநித்தமாயுள்ள மூலகன்மம் ஒன்றுமெனக் காரியகாரணமுறைபிரிண்டுள்ளன காண்க. இவ்வினைகள், லௌகிகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம்என ஐவகையாய் முறையே ஒன்றுக்கொன்று மேலாய் நிவிர்த்தியாதி ஐந்தகலைகளினடங்கி நின்று அசுத்தபோகம் சுத்தாசுத்தபோகம் சுத்தபோகங்களைத் தரும்.

மூன்றுமதிகரணம்.

கிரீடாப்பிரமவாதிகள், மீளப் பிறப்பது சரீராதிசடங்களே: உயிராகிய சித்துக்கில்லை. முன்வினை இப்போது உயிர்க்குவருமென்பது பொருந்தாது. உயிர் சரீரம்புகுந்துநிற்பினும், குடமுடைந்தபோது அதிலுள்ள ஆகாசம், ஆகாசத்திற்சேர்தல்போல, உடம்பு நீங்கியபோது அதிலுள்ளவுயிர் பிரமத்தைச்சேரும். ஆதலால், அது மீளப்பிறப்பதில்லை என்றுகூறுவதூநோக்கி, "போக்குவரவுபுரிய" என்றமூன்றும்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இவ்வான்மாக்கள் மீளப்பிறந்து வருமென்றது.

இ—ள். உடம்பு, சடமாதலால் இருவினைப்பயனை அநுபவியாது. அநுபவித்தற்குரிய இவ்வுயிர்களே இறந்தும் மீளப்பிறந்தும் இவ்வாறே அநுபவித்துவருமென்பதாம்.

அதற்குப் பிரமாணம் என்னைனன்றுகூறுவதுநோக்கிமேற் தோவோச்சாதிக்கும் எது,

தோற்றமும் மீறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

இ—ள். பிறப்பதும் இறப்பதும் அழிவின்றி எப்போதுந் தொடர்ந்துவருகின்ற உயிர்க்கன்றி அவ்வவ்வெல்லையில் அழிந்து போகுமுடம்புக்கில்லையாதலால், அவ்வுயிர்களே உடம்பைப் பொருந்திப்பிறந்து வருமென மேற்கொண்டதென்பதாம்.

எனவே, முன்வினை உயிரைப்பற்றியே வருமென்பது தெளிவாயிற்று.

இனிச், சிவாத்துவிதிகள், குடத்திலுள்ளஆகாசம் மகாகாசத்தின் வேறன்மைபோல, உடம்பிலுள்ள உயிர் சிவத்தின்வேறன்றுதலால், பிறப் பிறப்புக்கள்உயிரின் பொருட்டுச்சிவத்துக்கேயாமென்றும்; சாங்கியர், பிரகிருதியிற்றோன்றும் புத்திதத்துவத்திற்கே பிறப்பிறப்புண்டென்றுங்கூறுதலே மறுப்பதிவ்வதிகரணமெனக்கொண்டு, பிறப்பும் இறப்பும் அவ்வரிமைபுள்ளதற்கேயன்றி ஏனையவற்றிற்கின்மையால், இவ்வுயிர்களே மாறிமாறிப் பிறந்துவருமென்று மேற்கொண்டதென்றதுமாம். இப்பொருள்கூறுமிடத்துத், "தோற்றமும் ஈறும் உள்ளதற்கு" என்றதில் உரிமை உள்ளதற்கென அவாய்நிலையால் உரிமை வருவித்துக்கொள்க.

மாறிப் பிறந்து வருங்காற் படிமையல்புகளுணர்த்தி அதனைவலியுறுத்தும் உதாரணம்.

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினுற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்.

இ—ள். இவ்வுடம்புநீங்கியபோது முத்திகிட்டும்வரை நிலைத்துள்ள சூக்குமதேகமே வானுலகுக்குரிய பூதசாரசரீரம், நரகுக்குரிய யாதனாசரீரம், பூமிக்குரிய பூதசரீரமாகத்தோன்ற, உயிரானது வினைக்குத்தக்கபடி அச்சரீரங்களைப் பொருந்திச்சுவர்க்க நரகாதியிற்சென்றநுபவித்துப், பின்புநனவிற் கண்டதைக் கனவில் மறந்து, அறிவுவேறுபடுதல்போல, முன் உடம்புநீங்கி, வேறுடம்பிற்புகுந்தது சுவர்க்க நரகாதிகளிற்சென்றது அங்கங்கு அநுபவித்தது முதலியவற்றை மறந்து அறிவு வேறுபட்டு, முன்னுட-

ம்பு இறக்குங்கால் அடுத்தவினைக்குரிய கதியை அவ்வுயிர் விரும்பும்படி மனஞ்செலுத்தலால், அக்கதிகளொன்றிற்புகுத்தற்கேது வாய் முன்அநுபவித்தெஞ்சிநின்ற புண்ணியபாவசேடத்தால் சூக்குமதேகமாத்திரையாய் அம்மனந்தள்ளிய கதிக்கியைந்த கருவிற் புகுந்திருந்து பிறக்குமென்பதாம்.

உயிர்கள் மீளப்பிறப்பதில்லை என்றுவாதிகள் எடுத்துக்காட்டும் குடாகாய உவமைக்குண்மைப்பொருள்கூறி அஃதுண்டென்பதையே வலியுறுத்தும் உதாரணம்.

அரவுதன் ரோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.

இ—ள். உயிர், தூலவுடம்புநீங்கியபின் சூக்குமதேகத்தாற் பெறப்படும் பூதசார முதலிய உடம்புகளிற் புகுந்து சுவர்க்கநரகாதிகளிற் செல்லுதற்குப், பாம்பு, முன்னுள்ளதோலைநீங்கி வேறு தோல் போர்த்துச் செல்லுதலும், புருடன், தனவுடம்புநீங்கிக் கனவுடம்பிற் செல்லுதலும், யோகிகள், தம்முடம்புநீங்கிப் பரகாயத்திற் சென்றுமீளுதலுமாகிய உவமைகளே மிகுதியாய் வழங்கப்படுகின்றன. இவற்றிற்குமாறுகக் குடாகாயம் குடமுடைந்தபின் மகாகாயத்துடன்கூடுதல்போல்வதோர் கூத்தாட்டாமென்று கூறுவதுபொருந்தாது. அக் குடாகாய உவமை,உயிர் முத்திகிட்டும் வரை தன்னைவிட்டுநீங்காத சூக்குமவுடம்பை விட்டுப் போதற்கே கூறியதென்பதாம்.

எனவே,இவ்விருவித உவமைகளும் ஆகமங்களிற்கூறுதலால் அவற்றின்கருத்துமாறுபடாமல்முந்தியமூன்றுவமைகளும்,உயிர், தூலவுடம்பைவிட்டுப்போதற்கும், குடாகாய உவமை சூக்கும உடம்பைவிட்டுப் போதற்கும் கூறியதென்பதே உண்மையாதலால்,அது தூலவுடம்பைவிட்டுப்போதற்குக் கூறியதோவென்று மயங்காதொழிகவென வலியுறுத்தியவாறு காண்க.

நான்காமதிகரணம்.

மீமாஞ்சகர்முதலியோர், மீளப்பிறத்தற்கு ஏதுவாகிய வினையைச் செலுத்துவதென்ற சிற்சத்தி, முதல்வனின் வேறென்றும்

தார்க்கிகர்முதலியோர் வேறன்றென்றுங் கூறுதலைநோக்கி "ஆணை யினீக்கமின்றிநிற்குமன்றே" என்ற நான்காம்பாகத்தைப் பதம்பி ரித்துரைக்கும் மேற்கோள்.

இனி நீக்கமின்றி நிற்குமன்றே என்றது.

இ—ள். முதல்வன், தனதாணையாகிய சிற்சத்தியுடன் பிரிவி ன்றி நிற்பனென்பதாம்.

அதற்குப் பிரமாணமென்னென்பாரை நோக்கி மேற்கோ ளைச் சாதிக்கும் எது.

அவன், ஏகாநேகவிரண்டுமின்றிச் சருவவியாபியாய்நிற்றலான்.

இ—ள். முதல்வன் ஒன்றென்பதும் வேறென்பதுமின்றி இரு ண்டிற்கும் பொதுவாய் எங்கும் வியாபியாய் நிற்றலால், சிற்சத்தி யோடு பிரிவின்றி நிற்பனென்பதாம்.

ஒன்றுமின்றி வேறுமின்றிப் பொதுவாய் வியாபித்துநிற்ற லால் என்றது, சத்தியுடன் பிரிவின்றி நிற்பன் என்றதற்கு ஏது வாய் இன்றியமையாமையாமாறு எப்படி? என்பாரை நோக்கி அத்தீன வலியுறுத்தும் உதாரணம்.

எங்குமுள னென்றுளவை யொன்றன் பிரண்டென்னி
லெங்கு முளனன் றெவற்றெவனு—மங்க
ணவையவ னன்றில்லைப் பொன்னெளியோ லீக
ணவையுடைமை யாளாநா மங்கு.

இ—ள். எங்குமுளனென்று கூறியதனாலேயே முதல்வனொரு பொருளென்றல் கூடாது. ஒன்றுளதில் கங்கைக்கரையினிற்றவன் காவிரிக்கரையினும் ஒரோசமயத்தினிற்றல் முடியாதவாறுபோல ஒருபொருள் ஓரிடத்தன்றி எங்கும் வியாபித்து நிற்கமாட்டாதென் பதாம். அப்படியானால், முதல்வன் இருபொருளாய் வேறுபட் டுநிற்பனெனில்? தன்னில்வேற்றுமையுடையவன் பிறபொருள்க ளில் வேற்றுமையின்றி எங்கும் வியாபித்துநிற்கமாட்டானென் பதாம். இவ்விருதிறனும் ஒன்றுக்கொன்றுமாறுபடுதலால் எங்கு மூளனல்லனெனில்? (அகரவுபிரின்றேல் அக்கமங்களில்லை என்ற படி) எல்லாப்பொருள்களும் அம்முதல்வனையின்றியமையாமை

யால், எங்குமுளனல்லனென்பதும் பொருந்தாது. அப்படியானால் முடிவுதான் என்ன? எனில், சூரியனும் ஒளியும் வேறுபும், பிரிவின்மையால் ஒன்றுயும் இரண்டிற்கும் பொதுவாய்நிற்றல்போல, எங்குமுளனாகிய முதல்வன் அவ்விரண்டிற்கும் பொதுவாய் தானான்மியத்தாற் சிவமுஞ்சத்தியுமெனக்கலந்து நிற்பனென்க. அப்படியானால், வியாபகப்பெர்ருள்களாகிய பசு பாசங்களும் இம்முறைபற்றி இரண்டற்கும்பொதுவாய் முதல்வன்போலத் தத்தஞ் சத்திகளுடன் கலந்துநிற்றலால் முதல்வனுடன் சமமாகும்போலுமெனில்? அவ்வாறுபினும் முதல்வன் வியாபகத்தைநோக்கி வியாப்பியமாயடங்கிநிற்றலால், அப்பாசங்கள் அம்முதல்வனது உடைமைகள், பசுக்களாகிய நாம் அடிமைகளே என்பதாம்.

இச்சூத்திரம். முதல்வன் ஒன்றுய் வேறுப் உடனுய் உயிர்களினின்று அவற்றின் வினைவழித்தாய் அதனை ஊட்டுந் தனது சத்தியால் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தலைக் கொள்ளும்படி செய்வனென்பதும், உயிரும் முதல்வனும், ஒன்றே, வேறே, ஒன்றும் வேறுமே என்பாரைமறுத்து முதல்வன் அம்மூன்றும் ஒருங்கேயுள்ளவன் என்பதும், முதல்வன்மீளச் சிருட்டித்தற்குத் தனைக் காரண முதலியவேண்டில் சுதந்திராதிக்கு இழுக்கென்பாரை மறுத்து அக்காரணங்கள் அவன் ஆணைவழிநிகழ்தலால் இழுக்கில்லை என்பதும், குடாகாய உவமையால் உயிர்மீளப் பிறப்பதில்லை என்பாரைமறுத்து அவ்வுவமைக்கு அவர்கொள்ளும்பொருன்பொருந்தாமை காட்டிப், பாம்பு, கனவு, யோகிகள் உவமையால் உயிர்மீளப்பிறக்குமென்பதும், சத்தி, முதல்வனின் வேறுளனவும், வேறன்றெனவும் உரைப்பாரை மறுத்துமுதல்வன் அவ்விரண்டற்கும் பொதுவாய் வியாபித்து நிற்றலால் சிவமும் சத்தியுமெனக் கலந்து நிற்பனென்பதும், உரியபிரமாணங்களால் விளக்கிப் பாசவுண்மை கூறியவாறுணர்க.

மூன்றுஞ்சூத்திரம்.

பசுவுண்மை.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னேம்புல னெடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவி னியின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

கருத்துரை. ஆன்மப் பிரகாச மூணர்த்ததனுதலிற்று.

இ—ள். மூன் அவையே என்றெடுத்துக்கொண்ட உயிரைச் சூனிய வாதிகள் முதலியோர் சூனியமுதலியவாமென்பதை மறுத்து அவைகளின்வேறு யுயிருண்டென்று அனுமானத்தால் விளக்கி, மூன் உயிர்கண்மேல் வைத்தோதிய முதல்வனது இலக்கணத்தைவலியுறுத்துவ தென்பதாம்.

சூ—ள் மூன் நேரோகாணப்படுகின்ற உலகத்தைக்கொண்டு அதனைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குங்கடவுள் ஒருவனுண்டென்று நிச்சயித்தவாறுபோல, அக்கடவுளாகியபதியினுல் ஒன்றுயும் வேறுயும் உடனுயும் நின்று உபகரிக்கப்பெறுகின்ற சீவர்களாகிய பசுக்களும், (அதற்கிடமாய்க்காணப்படும் உடம்பைக்கொண்டு அதனுள்ளே சித்தாயிருந்து அதனை நடத்துகின்ற) உள்பொருள்களேயாமென்பது, "இலதென்றல்" முதலிய ஏதுக்களால் நிச்சயிக்கப்பெறுமென்பதாம்.

இங்கு ஆன்மாவுளதென்றமேற்கோள் ஒன்றே உள்ளதாயினும் அது எழுவகை மதங்களை மறுக்கும் எழுவேதுக்களுடன் தனித்தனி கூடுதலால் இச்சூத்திரம் ஏழதிகரணத்ததாயிற்று.

முதலதிகரணம்.

சூனிய, தேக, இந்திரிய, அந்தக்கரண, சூக்குமதேக, பிராண, விஞ்ஞான, சமூகான்மவாதிகள் எண்மருள் அந்தக்கரணான்மவாதிஆன்மவிலக்கணங்கூறுமிடத்துமறுக்கப்படுதலால் மற்றை எழுவர்களை மறுத்து உயிருண்மை சாதிக்கத்தொடங்கி அவருள்ளே மாத்துமிகளுகிய சூனியான்மவாதி, தேகம் ஆன்மா அன்று இந்திரியம் ஆன்மா அன்று என்று இப்படியே எல்லாவற்றையும் கழித்தபோது வேறொன்றுங் காணுமையால் ஒன்றுமில்லாத சூனியமே ஆன்மா என்று கூறுவதுநோக்கிச் சூத்திரத்தின் முதற்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

ஈண்டு இலதென்றலின்- ஆன்மாவுளதென்றது.

இ—ள். இது ஆன்மா அன்று இது ஆன்மா அன்று என்றறிந்துசொல்லும்பொருளொன்றுண்மையால் அதுவே அங்ஙனம் அறியப்பட்ட பொருள்களின் வேறுயுள்ள உயிரென்பதாம்.

ஆன்மா இலது என்றதுபற்றி அஃதுண்டென்பது, முயற் கோடு இல்லையென்பதுபற்றி அஃதுண்டென்பதை ஒக்குமென் றுகூறுவதுநோக்கி அதன் தாற்பரியமுணர்த்துவது.

எவற்றினாயும் அன்று அன்றெனவிட்டு ஆன்மாஇலதென்று நிற்பதொன்றுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இ—ள். ஆன்மா இலதுஎன்னுஞ் சூனியவாதிகளும், முயலுக்குக் கோடுஇல்லைஎன்பதை நேரேதெரிந்து சொல்வது போல ஆன்மா இல்லை என்று நேரே தெரிந்து சொல்லமுடி யாமையால், தேகம் இந்திரியமுதலியவைகளே இது ஆன்மா அன் றுஅன்றெனக்கழித்து இனி வேறொன்றுங் காணுமையால் ஆன் மா சூனியமே என்பர். ஒன்றொன்றுகக்கழித்து நீங்கி இனி வே றொன்றுமில்லையென்றறிந்து நிற்கும் அறிவுண்மையால் அதுவே ஆன்மா என்பதாம்.

அங்ஙனம் அறிந்த அறிவுஞ் சூனியமேஎனில்? அது "என்னீ யின்றுள் மலடி" என்பதை ஒக்குமென்றெழுகின என்பது கருத்து.

சூனியமாவது—உள்ளதுமன்று. இல்லதுமன்று. இரண்டு மாவதுமன்று. வேறுமன்றெனைப்படும் பாழ்.

அவ்வறிவை, உடல் பொறிமுதலியவற்றில் வேறுபட்டுப் பிரித் தற்குக் காணுமுறையும், அவ்வறிவே உயிராகும்முறையும் விளக்கி வலியுறுத்தும் உதாரணம்,

அன்றன் றெனைநின் றறிவித்தும்விட் டுஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீயறிவித்து—நின்றின்று
தற்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

இ—ள்; முன், உடல் பொறிமுதலிய கருவிகளையே நான் நான் எனநின்று பின் அவைகளே இது நான்அன்று இது நான் அன்று எனக் கண்டு நீங்கியபோது, அவ்வாறு நான்அன்றுஎனச் சூக்குமபஞ்சாக்ஷரரூபமாய்அறிந்துவந்தமிதாரறிவு அக்கருவிகள் போற்கழிக்கப்படாமல் நிலைபெற்றுள்ளதல்லவா? அதுவும் நான் அன்றெனில், அதையுங் கண்டுகழித்த அறிவுவேறொன்றுண்டெ ன்றுகிமேலும் வரம்பின்றி ஓடுமாதலால், சூக்குமபஞ்சாக்ஷரரூப

மாயறிந்துவந்த அவ்வறிவே நீஎன்பதறிவாயாக; அப்படியானால் மாயேயமும் சிவமும் உளவென்று முற்சூத்திரங்களால் நிச்சயிக்கப்பட்டமையால் அவையே அவ்வறிவையும் அறிந்துநிற்குமாதலால் வரம்பின்றியோடுமாறில்லைஎனில்? உன்னுற் சாரப்பட்ட மாயை அம்மாயாகாரியப்பொருள்களே உனக்குக் கண்ணாடிபோல விளக்குவதன்றி அறிவதன்றுகலான் அறிகின்ற நீ அம்மாயையல்லை. மாயையான்விளங்கி அறியும்நீ அதற்கதீதமாகிய சிவமுமல்லை. அவற்றின்வேறுகிய உயிரே என்பதாம்.

இரண்டாமதிகரணம்.

தூலதேகான்மவாதி, அவ்வறிவு, தேகமின்றி நிகழாமையானும், நான் பருத்தேன் சிறுத்தேனென உடம்பினையே நானென்றுவழங்குதலானும், அத்தேகமே ஆன்மா என்றுகூறுவதுநோக்கிச் சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது.

இ—ள். நான் பருத்தேன் சிறுத்தேன் என உடம்பின்குணங்களையே உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும், நான் உடம்பு நான் கைகாலெனவழங்குவாரின்றி எனதுடம்பு கைகாலெனவேற்றுமைப்படவே வழங்கலால் இவ்வுடம்பின்வேறாய் ஆன்மா உண்டென்பதாம்.

தலைமாத்திரமுள்ள ராகுவை ராகுவின்றலையென்று கூறுமிடத்து வேற்றுமையின்றி ஒற்றுமையாய்க் கொள்ளுதல்போல, எனதுடல்என்பதும் வேற்றுமையின்றி ஒற்றுமையேயாம். ஆதலால் அவ்வுடலின்வேறாய் உயிருண்டென்பது பொருந்தாதென்றுகூறுவதுநோக்கி மேற்கோளின் தாற்பரியம் விளக்குவது.

என்பதி என்மனை என்றாற்போல என்கை என்காலென நிற்ப எனதாதலின் அதுவே ஆன்மாவாமென்றது.

இ—ள். இராகுவினது தலை என்றாற்போல்வன ஏகதேசவழக்கம். என்பதி என்மனைவியென்றல்போலவே என்கை என்கால் என்கண் செவி பொறி பிராணன் அறிவெனப் பலவகையினும் பெரும்பாலும் வழங்கலால், இம்மிகுவழக்கம் வேற்றுமைப்பொ

ருள்படவே நிற்றலால், அவ்வாறு எனதெனக் கூறிக்கொண்டு வரும் பொருள் ஒன்றுண்டல்லவா? அதுவே அவ்வுடலின்வேறு கிய ஆன்மாவென்பதாம்.

மனைவி இறந்தால் நான் இறந்தேன், மனை இடிந்தால் நான் இடிந்தேன் என்பது எங்குமின்றி அம்மனைவிமுதலியபுறப்பொருள்கள் வேறுய்நிற்றலால், அப்பொருள்களைப் பிறிதின்கிழமையாக (வேறுக) எனதுஎன்பதுபோலன்றி, நான் நடந்தேன் அடித்தேன் என்று தேகத்தின்றொழிலை ஒற்றுமைப்படக்கூறுதல்போலக் ைககால் முதலியவைகளைத் தற்கிழமையாக எனது என்றலால் இவ்விருமொழியும் பொருளால் ஒவ்வாதென்றுகூறவதுநோக்கி ஒக்குமென்றும், உடலின்வேறுய் உயிருண்டென்றும் அதனை வலியுறுத்தும் உதாரணம்.

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
னெனதலா துகைகால் யாக்கை—யெனதென்னு
மென்னறிவ தென்று முணர்த்துநீ நிற்றிகா
ணுன்னிலைவ வேறு முணர்.

இ—ள், நீ உலகாயதனூணருமுன் மனைவிமுதலிய புறப்பொருள்களை உனக்கு வேறெனக்காணுமல் உன் உயிரொனமயங்கித் தற்கிழமைப்பொருளாக எனதெனக் கூறிநின்றற்போல, உனதல்லாதகை கால் முதலியவைகளை எனதென்றும், அங்ஙனம் அறிந்த பாசஅறிவை என்னறிவென்றும் தற்கிழமையாகக் கூறிக்கொண்டு நீ ஒருபொருள் வேறுகநிற்கின்றுய், அந்நூலுணர்ந்தபின்பு மனைவிமுதலிய பொருள்களை வேறெனக்கண்டாற் போலக், கை கால்முதலியவைகளையும் எதுக்களால் ஆராய்ந்து நோக்கில் அவைகள் உனக்குவேறென்பதுதெளிவாம். ஆகவே தேகம் ஆன்மாவன்றென்பது காண்பாயாகஎன்பதாம்.

மூன்றாமதிகரணம்.

இந்திரியான்மவாதி, செவி பெய் கண் ணாய் மூக்கு என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், அறிவில்லாததேகம்போலாகாமல் அறியுந்தன்மையுடையனவாதலால், அவ்விந்திரியங்களை ஆன்மர் என்று கூறுவதுநோக்கி இந்திரியங்களின் வேறுய் உயிருண்டெ

னைச் சூத்திரத்தின் மூன்றும்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, ஐம்புலனறிதலின் ஆன்மா வுளதென்றது.
இ—ள். ஐந்து விடயங்களையும் தானேயறிதலால் இந்திரியங்களின் வேறாய் அவ்வறியுமுயிருண்டென்பதாம்.

ஐந்தையும்அறிதலால் ஐம்பொறியின்வேறாய்உயிருண்டென்பதெப்படி? என்று கூறுவதுநோக்கி அதன்மாற்பரியமூணர்த்துவது.

ஐம்புலனுகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்ததொன்றறியாமையின் இவ்வைந்திலுஞ்ஐம்பய னுமறிவதுஒருதரகளின் அதுவே ஆன்மாவாமென்றது.

இ—ள். சத்த முதலிய ஐம்புலன்களைச் செவி முதலியஇந்திரியங்களுள் ஒருவிடயத்தை அறிந்தஇந்திரியம் மற்றொன்றைஅறியாமையால் இவ்வைம்பொறிகளாலும்ஐந்துவிடயங்களையும் அறியும்பொருளொன்றுண்டாகலான் அதுவே மேற்கூறிய ஆன்மா என்பதாம்.

இந்திரியங்கள், ஒன்றறிந்ததை வேறொன் றறியாதென்றது சரி. அவ்வைந்தும் ஐந்துயிரெனக்கொள்வதில் எமக்கிழுக்கில்லை. இனி இவ்வைந்திலுஞ் ஐம்புலனையும் ஒருபொருளே அறியுமென்பதற்குப் பிரமாணங்கண்டிலம். சூத்தைக்கண்ட நானே அதனைத் தீண்டினேனென்னுமிடத்து, கண்டதும் தீண்டினதும் நானே என்று அவ்வறிவுதொடர்ந்து வருதல்போல, ஒருடம்பிலிருக்கும் ஒற்றுமைபுடைய அவ்வைம்பொறிகளே ஒவ்வொன்றை யுந் தொடர்ந்தறியுமாதலால், அவற்றின்வேறாய் உயிரொன்றுண்டென்பதுபெறாருந்தரதென்று கூறுவதுநோக்கி அவ்விந்திரியங்களின்வேறாய ஆன்மா வுண்டென்பதைவலியுறுத்தும் உதாரணம்,

ஒன்றறிந்த தொன்றறியா தாகியுடன்மன்னி
யுன்றும் புலனைவ் வஞ்செழுத்தை—யொன்றறிதல்
லுள்ளாதே யாகி லதுநீ தனித்தனிகண்
டுள்ளலுவ மொன்றில்லை யோர்.

இ—ள். உடம்பிலிருக்கும் அவ்வைந்திந்திரியங்களும் ஒன்றறிந்ததை வேறொன்றறியாததுமன்றி தம்முள் மாறுபடும் ஐந்தனுள் ஒன்றைமாத்திரம் அறிவதும் தாமாக அறிவதில்லை. சூக்குமபஞ்சாக்ஷரங்கள் செலுத்தச் சென்றறியும். அங்ஙனம் அறிகின்ற இந்திரியங்களின் தொழில்களோக், கண்உருவத்தை அறிவது செவி ஓசையை அறிவதென்றிவ்வாறு அறிகின்ற பொருள் ஒன்றில்லை எனில்? அவ்வறிவுகழாதாதலால் உள்ளதேயாம் அதுவே நியாகியஆண்மா என்க. அவ்வாறு அறிவதும் அவ்விந்திரியங்களேயெனில்? அவைகள் ஒவ்வொன்றும் அக்ஷரங்கள் செலுத்தச் சென்று ஒவ்வொரு விஷயங்களே வேறுவேறுயறிதன்மாத்திரையேயன்றி, நாம் அறிந்தேமென்றும் அறியமாட்டா. அப்பயன்களையுங் கொள்ளமாட்டா. அவ்விந்திரியங்களின்வழிபாக விஷயங்களே ஒருங்கே அறிவதும் நான் அறிந்தேனென்பதும் அப்பயன்களைக்கொள்வதும் அவற்றின் வேறாகிய ஆண்மாவே என்பதை ஆராய்ந்தறிவாயாக என்பதாம்.

இம்மூன்றதிகரணங்களாலும் சாக்கிரத்தினிகழுமியல்புபற்றி ஆண்மாவினுண்மைசாதிக்கப்பட்டது.

நான்காமதிகரணம்.

சூக்குமதேகாண்மவாதி, இச்சூக்குமதேகம் புறத்தேகாணப்படாதாயினும் (நேசவிந்திரியங்கட்குநிகழறிவிதனுற்காண்டும்)சத்தம் பரிசம் ரூபம்ரசம் கந்தம் மனம் புத்தி அகங்காரம்எட்டுமாகியஇச்சூக்குமதேகத்தால் அவ்விந்திரியங்கட்கு அறிவு நிகழுமெனகீழிருந்து கொள்ளுதலால் அச்சூக்குமதேகமே உன்னின்று இந்திரியங்களைச் செலுத்தி அறியும். அதனின்வேறாய் ஆண்மா ஒன்றுள்ளதுஅதுவே அறியுமென்பது பொருந்தாதென்றுகூறுவதுநோக்கிச் சூக்குமதேகத்தின்வேறாயுயிருண்டெனச்சூத்திரத்தின் நான்காம் பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, ஒடிக்கமறிதலின் ஆண்மாவுளனிதன்றது.

இ—ள். அவ்விந்திரியமைந்தும் ஒடுங்கின சொப்பனத்தில் நிகழ்ந்ததை அறிதலால் அங்ஙனமறியுமான்மா அதனின் வேறுபுண்டென்பதாம்.

• • •

சொப்பனத்தில் நிகழ்ந்ததைப் புறத்தேயறிவதுஞ் சூக்குமதே கமேயாதலால், இது முன்சித்தித்ததையே மேலுஞ் சாதிக்குஞ் சித்தசாதனமாகிய குற்றமா மென்று கூறுவதுநோக்கி அதன் ரூற்பரியமுணர்த்துவது.

நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற் பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

இ—ள். சொப்பனங் கண்டனங் கண்டிலமென்று சாக்கிரத் தில் மயங்கி அறியும்பொருளொன்றுள்ளதாதலால் அதுவே மூற் கூறிய ஆன்மா வென்பதாம்.

ஒடுக்கமறிதலென்றது, சொப்பனத்தின் நிகழ்ந்ததை சாக்கி ரத்தின் மயங்கியறித லென்பதேயாதலால் சித்தசாதனதோஷமா காதென்க. கனவுகண்ட சூக்குமதேகமேசாக்கிரத்தில் அதனையும் அறிபுமாபிற் கண்டபடியன்றிமயங்கி யறியாது, மயங்கியறி தல் காணப்படுதலால், சூக்குமதேகமும் போல ஒருபடித்தன்றி க் கனவிற் செல்லுதல் நனவில்வருதல் முதலிய வேறுபாடுடைய உபிரே கனவுகண்டேன் கண்டிலே னெனமயங்கியறியுமாதலால் அதுவே அச்சூக்குமதேகத்தின் வேறுபுண்டென்பதுகாண்க.

கனவிற் செல்லுதலும் அங்கு நிகழ்தலும் மீளவருதலுமுணர் த்தி யதனை வலியுறுத்தும் உதாரணம்.

அவ்வுடலினின்றுயிர்ப்பவைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதினவ்வுடலிற் சென்றடங்கி—யல்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுடனியல்லே மற்று.

இ—ள். தூலவுடம்பினின்று தொழிற்படும் ஐம்பொறிகள் அத்தொழிலின்றிக்கிடக்கும்போது புறத்தொழிலெல்லாமடங்க நீ அத்தூலவுடம்பினுட்சென்று அவ்வுடம்பிற்போல அதனின் வேறுய சூக்கும உடம்பெடுத்துக்கொண்டு வேறோர் வழியால் விரைந்து சத்தாதிவிடயங்களைப்பற்றிவிளையாடி மீண்டு அத்தூல உடம்பில் வருகின்றுயாதலால், அத்தூலவுடம்பினின்று புறத்து நிகழ்வனவற்றை அறிதல்போலச், சூக்குமவுடம்பினின்று அக

த்துநிகழ்வனவற்றை அறிகின்ற நீ அச்சூக்குமதேகமல்லை; அதனின் வேறுப ஆன்மாவேயென்பதாம்.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தில் நிகழுமியல்புபற்றிஉயிருண்மை சாதிக்கப்பட்டது.

ஐந்தாமதிகரணம்.

பிராணன்மவாதி, கனவிலன்றி மேற்செல்லமாட்டாத சூக்குமதேகம்போலாகாமல் சுழுத்திதுரியங்களிலுஞ் சென்று தொழிற்படும் பிராணவாயுவே கனவில் இந்திரியங்களை அடக்கியும், சாக்கிரத்தில் வெளிப்படுத்தியும் அறிவதாகிய ஆன்மாவாகுமென்றுகூறுவதுநோக்கி அப்பிராணனில் வேறாய், ஆன்மா உண்டெனச் சூத்திரத்தின்ஐந்தாம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்,

இஃதிக், கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மா உளதென்றது.

இ—ள். நித்திராகாலம் பிராணவாயு சுழுத்தியில்இருக்கும்போதும் இன்பதுன்பஅநுபவமும் உடம்பு தொழிற்படுதலுமின்மையால் அநுபவித்தலுந்தொழிற்படுத்தலு முடைய ஆன்மா ஒன்று அப்பிராணவாயுவின் வேறாய் உண்டென்பதாம்.

சுழுத்தியில் அநுபவமும் தொழிலும் உடம்புக்கில்லையென்றது சரி. சுழுத்தியிற் பிராணவாயு நடத்தலாற் றொழிலும், பின்பு சுகமா உறங்கினேன் என்றலால் அநுபவமும் காணப்படுதலால் அப்பிராணவாயுவுக்கு அவ்விரண்டும்அங்குஇல்லையென்றதுபொருந்தாதென்று கூறுவதுநோக்கி அதன்றூற்பரியமுணர்த்துவது. ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பம் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியாநிற்பதளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இ—ள். அநுபவமென்றது, உறங்கிய சுகத்தையன்று; விஷயங்களால் வரும் இன்பதுன்பங்களையே. தொழில் என்றது; வாயுநடத்தலையன்று; உடம்பின்றொழிலையே. ஆதலால், இவ்விரண்டும் பிராணவாயு நடக்கும்போதும் சுழுத்தியில் இன்மையானும்

சாக்கிரத்தில் உண்மையானும் அவ்வின்மை உண்மைகட்கு ஏது வாம் சுழுத்தியிற் கருவிகளை ஒடுக்கியும் சாக்கிரத்தில் ஒடுக்காமலும் கிற்பதொன்றுளதல்லவா? அதுவே பிராணவாயுவின் வேறாகிய ஆன்மாவென்பதாம்.

சுழுத்தியில், கருவிகள் ஒடுங்கிநிற்றலால் அநுபவமும் தொழிலும் உடம்புக்கில்லை யென்பது பற்றிப் பிராணவாயுவை ஆன்மா வென்பதற்கு இழுக்கு என்னை? யென்று கூறுவதுநோக்கி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணுதே
யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
யுள்ளதா முண்டிவினை யூன்

இ—ள். உடம்பின் கண்ணேகருவிகள் தொழிற்படாதொடுங்கியபோது அநுபவமுந் தொழிலும் உடம்புக்கில்லையாகவும் பிராணவாயுநிலைபெற்றியங்குதலால் அதுவேயிராஞல் அநுபவமும் தொழிலுமில்லாமற் போகவேண்டாம், ஆதலால் விடயங்களைக் கண்டறியும் உரிமையுடைய உயிர் பிராணவாயுவின் வேறாயுண்டு. அவ்வுயிர் ஒடுங்காமல் அவ்வுடம்பிற்பொருந்துமாஞல் அவ்வுடம்பு அநுபவமுந் தொழிலும் உடையதாம். அதனை ஆராய்ந் தறிவாயாக என்பதாம்.

இவ்வதிகரணத்தால் சுழுத்திதுரியங்களில்நிகழுமியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறும் சார்மாயைநீயல்லை என்றதனை வலியுறுத்தியவாறு.

ஆறாமதிகரணம்.

விஞ்ஞானன்மவாதி, மேற்கூறிய பிராணவாயுமுதலியவை சடங்களாதலால் அவைபோலாகாமல் என்றுஞ்சித்தாயுள்ளபிரமமே ஆன்மா என்று கூறுவதுநோக்கி பிரமத்தின்வேறாய் உயிருண்டெனச்சூத்திரத்தின் ஆறும்பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, உணர்த்த வுணர்தலின் ஆன்மா உளதென்றது.

இ—ள். நீகூறும் பரப்பிரமம் எக்காலத்தும் வேறுபடாமல் எல்லாவற்றையும் தானே அறிந்து நடத்துவதாம். ஆன்மாவோ, சாக்கிரத்தினின்று சொப்பனதிகளில் போக்கு வரத்துச்செய்து துரியாதீதத்திற் கேவலமாய் அறிவின்றிக் கிடந்து, கலையாதிகரு விகளால் சிறிது அறிவிக்க அறிவதாம். இவ்வான்மாவை அப்பிரமமென்பது தகாதாதலால் அவ்வாறு அறிவிக்க அறியும் ஆன்மா வேறுண்டென்பதாம்.

அப்பிரமமே அவிச்சைக்காலத்துக்கருவிகளுடன் கூடிநின்று றியும். அதுபற்றி உயிர்வேறுண்டென்பது பொருந்தாதென்று கூறுவது நோக்கி அவ்வளவில் அவன்மகிழ்க என்னும் நியாயத்தால் வேறும் அதன்சுற்பரியம் உணர்த்துவது.

அவனறிந்தாங் கறிவனென் றறிவிக்க வறிந்து உபதேசியாய் நிற்பதொன் றுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது,

இ—ள். கருவிகளுடன்கூடி அறியும்போதும் மறந்து மறந்தறிவ தன்றி அறிந்தபடியே அறியாமல் அங்ஙனம் அறியுமிடத்தும் விஷயங்களேயறிவதன்றித் தன்னையும் தலைவனையும் அறியாத ஆன்மாவைப்போலாகாமல், அறிந்தபடியே அறியும்பேரறிவுடையது பிரமமென்பதும், தான் அடிமையென்பதும் வேதாகமங்களால்அறிவிக்க அறிந்து, அறிந்தபடி அநுபவிக்கிலவரும்பொருட்டுச்சற்குருவின் உபதேசம்பெற்று நிற்பதொன்றுள்தாதலால் அதுவேமுற்கூறிய ஆன்மாவென்பதாம்.

பிரமம் கருவிகளுடன்கூடியபின்னும் அஞ்ஞானம்நீங்காமையால் விஷயமாத்திரமன்றித் தன்னியல்பறியாது. உபதேசத்தால் அறியுமாதலால், அதுபற்றி இழுக்கென்னை என்று கூறுவது நோக்கி அதனையும் அவ்வளவில் அவன் மகிழுக் என்றஞாயத்தால் உடன்பட்டு இன்னுமொரு தாற்பரியங் கூறுமுறையில் விடயங்களை அறியும்போதுமுண்டாம் வேறுபாடு கூறி அதனை வலியுறுத்தும் உதாரணம். பிரமம் அறிந்தாங்கறியுமாறும் உயிர் மறந்துமறந்தறியுமாறும் தெரித்துணர்த்திவலியுறுத்துவதெனினும் அமையும்,

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி— யறிந்த
தெதுவறிவு மன்றுகு மெய்கண்டா ணென்றி
னதுவதுதா னென்னு மகம்.

இ—ள். சாக்கிரத்தில் எல்லாக்கருவிக ளுடனின்றும், எல்லாவற்றையும் அறியமாட்டாமல் ஒன்றையறிந்தும், வேறொன்றை அறியச்சென்றும், மூன்றறிந்ததை மறந்தும் இப்படி ஒவ்வொன்று யறிந்ததையும் தொடர்ந்தறியாமல், விட்டு விட்டு ஐந்தவத்தைகளில்ஒன்றில் அறிந்ததைமற்றொன்றில் அறியாதடங்கி மீண்டும் அறிந்துவருதல் காணப்படுதலால், அப்படி அறிந்துவரும் பொருள் அவ்வறிவுடைமையாற் சடமுமன்று; இயற்கையாக எல்லாம்ஒருங்கு அறியும் பிரமமுமன்று. இதனை, உண்மையான சித்தாந்தநெறிஉணர்ந்தவன் உற்றுநோக்குவனேல், காட்டுகின்ற சூரிய னொளிக்குவேறுய கண்ணொளிபோல, அறிவிக்கின்றபிரமத்துக்கு வேறுப்ச்சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியும் ஆன்மாவே யென்பது அறிவனென்பதாம்.

ஏழாமதிகரணம்.

சமூகான்மவாதிகளாகியபௌத்தராந்திகர், வைபாடிகர், மேலே தேகம் இந்திரியம் முதலியஒவ்வொன்றை மாத்திரம்ஆன்மா வென்றதுபொருந்தா தென்றது சரி; இவைகளி லொன்றுகுறையினும் அறிவுநிகழாமையாலும், எல்லாங்கூடியபோது அறிவு நிகழ்தலாலும்எல்லாங்கூடிய சமுதாயமே ஆன்மா வென்றுகூறுவது நோக்கிஅச் சமுதாயத்தின்வேறாய் உயிருண்டெனச்சூத்திரத்தின் ஏழாம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா வுளதென்றது.

இ—ள். நீ கூறிய சமுதாயப் பொருளெல்லாம் மாயா காரியங்களாய்ச் சூத்திரப் பாவைபோல ஒருசரீரமாய்க் கட்டப்பட்டுஅழிபுந் தன்மைய வாதலால், அவ்வுடம்பினுள்ளே மாயாகாரியு மாகாத நித்தியமான ஆன்மாஒன்று உண்டென்பதாம்.

சித்தமும் சித்தப்பகுதியு மாகிய அகச்சமுதாயம் ஐந்தும்மாயாகாரியமா யழிபுந் தன்மையவென்பது எமக் குடன்பாடில்லை

யாதலால், அதுபற்றி ஆன்மாவேறுண்டென்பது பொருந்தாதென்றுகூறுவதுநோக்கி அவ்வளவின் அவற் மதிழுக என்னும் நியாயம்பற்றி வேறுமோர் வழியால் ஆன்மா வேறுண்டெனச் சாதிப்பது.

அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலாற். இ—ள். நீ ஐந்துகந்தமெனக் கொண்டமாயா காரியங்கள் ஆன்மா வெற்ற பெயர்பெறாமல் வெவ்வேறுபெயரினிற்றலால் அவைகள் ஆன்மாவல்ல அவற்றின்வேறாய் மாயாதனுவினுள் ஆன்மா உளது என்பதாம்.

அவைகள் வெவ்வேறுபெயர்பெறினும், எல்லாஞ்சேர்ந்த சமுதாயத்தில் ஆன்மாவென்னும் பெயர் பெறும் எனக்கொள்வோம் அதுபற்றி இழுக்கில்லை என்றுகூறுவதுநோக்கி அவை வெவ்வேறு பெயர் பெறுமிடத்தும் அவர்கூறியபடி உருவம் விஞ்ஞானமுதலிய பேரின்றி வேறுபேர்பெறுதலும் அவைமாயாகாரியங்களேயாதலும் அச்சமுதாயத்திலும் ஆன்மா வெனும் பேரின்றி வேறுபேர் பெறுதலுமுணர்த்தி ஆன்மாவேறுண்டென்பதை வலியுறுத்தும் உதாரணம்.

சலியாதி மண்ணந்தங் காணிலவைமாய்ய
நிலையாவாந் தீபமே போல—வலியாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதனுவாந்
தானத்தின் வேறுகுந் தான்.

இ—ள், அச் சமுதாயங்கள் எவையென்றாயிற்கூறுமுதற் பிருதிவி வரையுள்ள தத்துவங்களேயாம். அவையாவும்மாயா காரியமாதலால் நிலகாலம்நின்று அழிவனவாம். அச்சமுதாயத்தில்விளங்கும் ஞானவியல்பைமனம் ஒருவழிப்படநின்று அசையாமல்முன்னுணர்ந்து அதுகருவி ஞானமேயாம். பின் அச்சமுதாயம்யாதென்றாயின் அது, கண்ணுக்குவிளக்கு அறிதற்கருவியாதல்போல,உயிர்க்குத், தூல சூக்கும காரண தேகங்களாகிய அறிதற் கருவியேயாம். ஆதலால், கண் விளக்கின்வேறானற்போல உயிர் உடம்பின் வேறே யென்பதாம்.

இச்சூத்திரம், சூனியமேஆன்மா, தூலதேகமேஆன்மா,இந்திரியமே ஆன்மா,சூக்குமதேகமேஆன்மா,பிராணவாயுவே ஆன்மா, பிரம்மே ஆன்மா,சமுதாயமே ஆன்மாஎன்றுகூறும்வாதிகளை மறுத்து, ஆன்மா இவற்றின்வேறாயுள்ளதென்று பிரமாணங்கள்காட்டிப் பசு வண்மைவிளக்கிய வாறு காண்க.

ஆனல், பதி பசு பாச மென்றிம்முறையாகக் கூறுமல், பதி பாசம் பசு என்றுகூறிய தென்னையோவெனில்? தலைமைபற்றிமுதற்சூத்திரத்தில் நிமித்தகாரணமாகிய பதி யுண்மைகூறி அக்காரணஞற்றுமைபற்றி இரண்டாஞ்சூத்திரத்தில் துணைக்காரணமாகிய கன்மமும் அதற்கு ஆதாரமாயுள்ள மாயையுமாகிய பாச வுண்மையும் அதனல் உலகம் காரியப்படு முறைபுங்கூறி அதனலாகும் பிரயோஜனங்களைப் பெற்றுக்கொள்வது பசுவேயாகுமுறை பற்றி மூன்றாஞ்சூத்திரத்தில் அப் பசு வண்மைபுங்கூறியவாறு மென்க.

நான்காஞ்சூத்திரம்

பசு விலக்கணம்.

அந்தக் கரண மவற்றினென் றன்றவை
சந்தித்த தான்மாச் சகச மலத்துணரா
தமைச்சர சேய்ப்பகின் றஞ்சுவத் தைத்தித.
கருத்துரை. இதுவுமது.

இ—ள். பிரமாணத்தாலும் இலக்கணத்தாலும் மூப்பொருளுண்மை விளக்கத் தொடங்கிய முறைபற்றி முன்மூன்று சூத்திரங்களாலும் பிரமாணங் கூறப்பட்ட பதி பாச பசுக்களின் இலக்கணம் எதிர் நிரனிறையாகக் கூறத்தொடங்கி அம்மூன்றனுள் இச்சூத்திரம், இதற்கு முன் அமித்துநின்ற பசுவின் இலக்கணங் கூறுவதென்பதாம்.

சூ—ள். மூன்றாஞ்சூத்திரத்தால், என்றுமுள்ளபொருளென்றுநிச்சயிக்கப்பெற்ற ஆன்மாவானது, மனம் புத்தி அகங்காரம் சித்தமாகிய அந்தக்கரணங்களுள் ஒன்றுவதன்று. ஆயினும், அரசன் பொதுமையாகத் தனக்கு அறிவிருந்தும் பகுத்தறியும் நுண்ணறிவின்மையால் ஆலோசனைத்துணைவர்களாகிய மந்திரி முத

லானவர்களுடன் சேர்ந்துநின்று அவர்களாற் பகுத்தறிவுகொண்டு உலக காரியங்களிற் போக்கு வரத்துச் செய்தல்போல், அவ்வான்மாவும் தன்னை அராதியே பந்தித்துள்ளசகச மலமாகிய ஆணவத்தால் அறிவு மறைபட்டுக்கிடந்து பின் கலை முதலிய தத்துவங்களால் பொதுவாகச் சிறிது அறிவுபெற்றும் அம்மட்டிலமையாமல், பகுத்தறிவுஞ் சிறப்பறிவு விளக்குதற்குரிய ஆலோசனைத் தானைவர்போன்ற, அவ்வந்தக்கரணங்களுடன் சேர்ந்துநின்று அவத்தைகளிற் போக்கு வரத்துச்செய்யுமாதலால் ஐந்து அவத்தைகளை உடையதாகு மென்பதாம்.

இச்சூத்திரம், அந்தக்கரணமவற்றி னென்றன்று, (அன்றபினும்) சகச மலத்துணராது அமைச்சரசேய்ப்பஅவைசந்தித்தது, அமைச்சரசேய்ப்பனின்று அஞ்சவத்தைத்தே எனவுணர்த்திகரணமுள்ளது.

மூதலதிகரணம்.

அந்தக்கரணன்மவாதி, முன் மற்றெல்லாம் வெவ் வேறு பெயர் பெறுதலால் அவைகள் ஆன்மாவல்லவென்றது சரி''சிந்தையைச்'' சிவனென்று நீவிரும் வழங்குதலால் அச்சிந்தைமுதலிய அந்தக்கரணங்கள் தனித்தனி ஆன்மாவா மென்று கூறுவது நோக்கி அவை ஆன்மாவன்றெனச் சூத்திரமுதற்பாகத்தைப்பரம்பரித்துரைக்கும் மேற்கோள்.

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யாங்கார சித்தங்களில் ஒன்றன்றென்றது.

இ—ள், மேற்கூறிய உயிராவது, புறவந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தங்களின்வே றென்பதாம்.

''மனமும் புத்தியகங்காரஞ்சித்த நான்கு மருவியான்மாவே யென்னவரும்'' என்று நீவிருங்கொள்ளுதலால், உயிர், அந்நான்கு ளொன்று மென்றிற் பழுதென்னை? என்று கூறுவதுநோக்கிமேற்கோளைச் சாதிக்கும் ஏது.

அவைதாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

இ—ள். அந்தக்கரணங்கள், கீழுள்ள இந்திரியங்களுக்கு அறிவித்தல்நோக்கி(சிவன்) சித்தென்று உபசரித்துக் கூறப்படினு

ம், தம்மை ஏவி நடத்தும் ஆன்மாவைநோக்கி அசித்தேயாம் ஆ தலால் தன்னைநோக்கியும்' எப்போதுஞ் சித்தாயுள்ள ஆன்மா அ வற்றின் வேறே என்பதாம்.

எனவே, உயிரால் அதிட்டிக்கப்பட்டுப் பொறிகளின்வழி யாக விடயங்களை அறிகின்ற அந்தக்கரணங்களுள்ளே, சித்தம், இதுயாதென்று சிந்தித்தறியும்; யான் சிந்தித்தேனென்று தன்னை யறியாது. மனம் இஃது இன்னதாமெனவும் ஆமோ அன்றோவெ னவும் அதனைப்பற்றிநின்றறியும்; யான் பற்றினேனென்று தன் னையறியாது. அகங்காரம், நிச்சயித்தறிவேனென்றெழும்பிநின் றறியும்; யான் எழும்பினேனென்று தன்னை யறியாது. புத்தி, நி ச்சயித்தறியும்; யான் நிச்சயித்தேனென்று தன்னை யறியாது. ஆ ன்மாவோ அந்நான்கையும் கருவியாகக்கொண்டு நான் சிந்தித் தேன்; பற்றினேன்; எழும்பினேன்; நிச்சயித்தேன் என்று தன் னையும் அறியும். அதன்பின் புத்தியால் நிச்சயிக்கப்பட்டுச் சுகது க்கமோசரூபமாய்த்தன்பால் வந்தவைகளை களாதிகளுடன்கூடினி ன்று இதுசுகம் இதுதுக்கம் இதுமோகம் என்றுபிற றற்றையும் சுகித்தேன் துக்கித்தேன் மோகித்தேனென்றுதன்னையும் அறியும். இவ்வாறு பிறவற்றைநோக்கியும் தன்னைநோக்கியும் சித்தாயுள்ள ஆன்மா, தம்மைநோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களில் வே றுமென்பது தெளிவாம்.

''இவன்றனும் புத்தியுஞ் சித்திவனுமோர்புத்தி'' என்று வழி நூலாசிரியர் கூறியதும் இவ்வியல்புநோக்கியே. ஆலோசனை மட் டிற்கே அரசனுற்சார்த்துநிற்கப்படும் மந்திரிகள் அரசராகார், அ வையும் அரசனென்பது அணுக்கவுரிமைநோக்கிக் கூறும் உப சாரமே, அதுபோல. பகுத்தறிதல் மட்டிற்கே துணைக்கருவியாக ஆன்மாவினுல் சார்த்துநிற்கப்படும்அந்தக்கரணங்கள் ஆன்மாவா கா'' கருவியாமனமும் புத்தியகங்காரஞ் சித்தநான்கு மருவியா ன் மாவே'' என்றது, மற்றைப் புறக்கருவிகள் போலாகாமல் ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றும் சிறப்புநோக்கிக்கூறும் உப சாரமே, உண்மையன் றென்க

இதனால், முன்சூத்திரத்தில் மறுக்கப்படாது நின்ற அந்தக் கரணன்மவாதியை மறுத்தவாறுயிற்று.

அந்தக்கரணங்கள், தங்கீழ்ள்ளவற்றை நோக்கிச்சித்தாதலும் மேலுள்ளவற்றை நோக்கியும் தம்மைநோக்கியும் அசித்தாதலும் உணர்த்தி மேற்கூறியதை வலியுறுத்தியுதாரணம்.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தொன்றை யுள்ள முணர்த லதனி
லுதிக்குங் கடற்றிரையை யொத்து

இ—ள். மனமுதலிய அந்தக்கரணங்கள், இந்திரியங்களின் வழியாகப் புறவிடயங்களைஉணரும். ஆன்மா, அம்மனத்துக்கு மேலாகிய புத்தியின்வழியரும் சுகதுக்காதிகளை உணரும். அவ்விருவித அறிவும் ஒன்றன்பின்ஒன்றாக ஆன்மாவையே சாரும். அது, கடலின் வருந்திரை, ஒன்றன்பின்ஒன்றாகக் கரையைச்சேர்தல்போலாம். அதனால், ஐம்பொறிவழியா யுணரும் அந்தக்கரணங்கள் அப்பொறிகளின் வேறுதல்போல அந்தக்கரணங்களின் வழியாயுணரும் ஆன்மாவும் அவற்றின்வேறென்பதாம்.

ஒன்றன்பின் ஒன்றுகச்சார்தலாவது, முன்னர் வாயிற்காட்சியறிவும், பின் மானதக் காட்சியறிவும், அதன்பின்தன் வேதனைக் காட்சியறிவும் ஆன்மாவில் வந்து சாருதலாம்.

மூன். பொதுவாக, இந்திரிய வழியாய் அறியுமென்று அந்தக்கரணங்கள் தனித்தனி இவ்வாறு அறியுமென்று சிறப்பாகக் கூறாமுறையில், அவ்வந்தக்கரணங்களால் அறியும் மானதக்காட்சியுள்ளும் கடற்றிரைபோல ஒன்றன்பின் ஒன்றாய் வெவ்வேறுணர்வு நிகழுமுறை யுணர்த்தி, ஆன்மா அவற்றின்வேறுதலை வலியுறுத்தும் உதாரணம்.

சிந்தித்தாய் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறு
மவ்வேறும் போதுபோ லாங்கு.

இ—ள். ஆன்மா, இந்திரியக்காட்சியால் கண்ட விஷயங்களை மனமாதியாலறியும் மானதக் காட்சியிலும்ஒருதன்மைப்படாமல்,சித்தமாய்நின்று இதுயாதெனச் சிந்தித்தும், மனமாய்நின்று இஃது இன்னதாமெனப்பற்றியும், அகங்காரமாய்நின்று இன்னதென நிச்சயிப்பே னென்று தெளிவின்றி யெழுந்தும், புத்தியாய்நின்று இன்னதெனத் தெளிந்தும் இப்படியே வெவ்வேறு கருதலால். அவ்வாறுஅறியும் ஆன்மா, ஒன்று மற்றொன்றைஅறியாத அவ்வந்தக்கரணங்களின் வேறும்; அது, சூரியன்முதலிய வற்றுடன் கூடிநின்று நாழிகை, நாள், பட்சம், மாசம் முதலியவாக வேறுபடுத்துகின்ற காலத்துவம் அவற்றின் வேறுய் நிற்றல்போலு மென்பதாம்.

அந்தக்கரணங்களே, அசித்தென்றலால் அம்மானதக்காட்சியின் அறிவுஎப்படிநிகழுமென்று ஐயுறுவண்ணம் அவற்றினிடனின்று செலுத்தும் அசுரர்கள் இவைஎன்பதும் அவற்றால் அறிவு மாறிமாறித் தோன்று முறையு முணர்த்து முதாரணம்.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத மூலவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

இ—ள். அகரம்—அகங்காரத்தையும், உகரம்—புத்தியையும், மகரம்—மனசையும், விந்து—சித்தத்தையும், நாதம்—ஆன்மாவையும் செலுத்துதலால் கடலில் அலை புதிதாய்த்தோன்றி ஒடுங்கிவருதல்போல (மகாசகலம்) எல்லாக்கருவிகளும் தொழிற்படுகின்றசாக்கிரத்தில், அறிவு கணந்தோறும் புதுபுதிதாய்த் தோன்றியும் ஒடுங்கியும் மாறி மாறிவரும் இவ்வக்காரம் ஐந்தும் தனித்தனிப்பிரிவின்றிச் சேர்ந்துநிற்பது பிரணவமாகு மென்பதாம்.

சூக்குமைமுதலியவாக்கு நான்கும் நிவிர்த்திமுதலிய ஐந்துகலைகளைப்பற்றி அகாரமுதலிய பஞ்சகலைவடிவாய் நின்று அந்தக்கரணங்களை வேறுவேறு செலுத்தலால்மகாசகலத்திற் கணந்தோறும் கிளைப்பும்மறப்புமாகிய சகலதேவலங்கள்காற்றடிபோலமாறி மாறிஅநுபவப்பமாய்நிகழுமென் றுணர்க.

அவ்வக்கரங்களும் சடமாதலால் அவற்றை யதிட்டிக்கு மதிதெய்வங்களிவையென் றுணர்த்து முதாரணம்.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

இ—ள். நாதத்திற்குச் சதாசிவமும்விந்துவுக்கு மகேசனும் மகரத்துக்குருத்திரனும் உகரத்துக்கு விஷ்ணுவும் அகரத்துக்குப் பிரமனும் அதிதெய்வங்களென்பதாம்.

இரண்டாமதிகரணம்

ஆன்மா, அந்தக்கரணங்களின்வேறாலில் அவற்றுடன் சார்ந்து நிற்றற்கு ஏது என்னென்று கூறுவதுநோக்கிச்சூத்திரத்தின் இரண்டாம் பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இவ்வான்மாசகசமலத்தினுணர்வின்றென்றது.

இ—ள். அவ்வுயிர், முதல்வனைப்போல் அந்தக்கரணங்களின் வேறாய் அறிவுடையதாயிருப்பினும், அவ்வறிவைமறைத்துக் கொண்டு செம்பிற்களிம்புபோல அநாதியேதன்னுடன்சகசமாய் நிற்கும் ஆணவமலத்தினால் தன்னியல்பின் அறிவதன்றி, அந்தக் கரணாதிகருவிகளுடன் கூடினின்றறிவதாயிற்றென்பதாம்.

இதனால், மூலமலத்திற்குத்தன்னியல்பு அறியாமையைச் செய்வதாகிய கேவலாவஸ்தையி னிகழு மியல்பே என்றும், பொதுவியல்பு கருவிகளுடன் கூடி அவத்தை யுறுவதாகிய விபரீத வுணர்வைச் செய்யுமியல்பே என்றும், அவ்வாணவமலத்தின் இருவிதஇலக்கணமும் விளக்கமாதல் காண்க.

சகசமலத்தால் அறிவில்லையேற் பின்கருவிகளாலுண்டாவ தெப்படி? உண்டேல், இல்லது உள்ளதாகாது; உள்ளதில்லதாகாது என்னுஞ்சற்காரிய விரோதமல்லவா? வென்று கூறுவது நோக்கிமேற்கோளைச்சாதிக்கும் ஏது.

அது தான்ஞானதிரோதகமாய்மறைத்துக்கொண்டு நிற்றலால்

இ—ள். அச்சகசமலம், ஞானம்நிகழவொட்டாமல் அதனை இல்லையென்னும்படிமறைத்துக்கொண்டு நிற்றலால் உணர்வின் றெனமேற்கொண்டதென்பதாம்.

அம்மலத்தால் மறைந்திருந்த அறிவுதான் கருவிகளால்விளக் கமாயதன்றி முன்இல்லாததுபின் உள்ளதாகவில்லையாதலால் சற் காரியவிரோதமின்றென்க.

ஐக்கியவாதசைவர், ஆகந்துகமலமாகியமாயையே ஆன்ம அ றிவை மறைக்கும், வேறுமோர்மலமுண்டென்பது மிகையாமென் று கூறுவதுநோக்கி அவ்விரு மலங்களின் செயல்வேற்றுமையுணர் த்துமுறையில் ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணுதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் காட்டம்போற்
றன்னைமல மன்றனைத ருன்.

இ—ள். ஆன்மா, மாயா காரியமாகிய உடம்பைக்கொண்டு தான்விடயங்களையறியும். உடம்பில்லையேல் ஒருவிடயத்தையும் அறியாது. அவ்வுடம்பு பொருள்களைக்காட்டும் விளக்குப்போல் வதன்றி அறிவைமறைப்பதன்று. மறைப்பது, மேற்கூறியபடி அநாதியேபந்தித்துள்ள ஆணவமலமேயாம். அது, அதிஅதிவா யிற்றின்று தனக்கு அழிவில்லாத அக்கினியைத்தன்னுண் மறைத் துக்கொண்டு ஒன்றே என்னும்படிநிற்கும் விறகு முதலியன போலுமென்பதாம்.

ஆகவே, ஆகந்துகமலமாகிய மாயை விளக்கொளிபோலும்; அநாதி மலமாகிய ஆணவம் இருள்போலுமென அவ்விருமலங் களும் மாறுபட்டுநிற்கும் வேற்றுமை பெரிதாதலே விளக்கிய வா றுமென்க.

மூன்றுமதிகரணம்.

அந்தக்கரணன்மவாதி, இருளிலகப்பட்டகண், விளக்குடன் கூடியபோது பொருள்களையறிவதன்றி வெவ்வேறவத்தைப்படு வதில்லை. அதுபோல, மலத்திலகப்பட்டஆன்மா, கருவிகளுடன்

கூடியபோது ஒருதன்மைத்தாயறியுமன்றி வெவ்வேறவத்தைப் படுமென்பதெப்படி? யென்று கூறுவதுநோக்கிச் சூத்திரத்தின் மூன்றும்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும்மேற்கோள்.

இனி, இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரிய ந்துரியாதீத மாயுள்ள பஞ்சா வத்திதனுய் நிற்குமென்றது.

இ—ள். சகச மலத்தால் அறிவின்றிக்கிடந்து அந்தக்கரணங் களுடன்கூடி அறிவு தொழிற்பட நிற்கும்ஆன்மா, மந்திரிகளுட னன்கூடித் தொழிற்செய்யும் அரசன்போல் நிற்றலால், அவ்வாசன் மந்திரிமுதலியசைனியங்கள் தன்னைச்சூழப் புறஞ்சென்றுமீண்டு தன்மாளிகையுட்செல்லுங்கால், நிறுத்தவேண்டியவர்களை அந்தர ந்தவாயில்களில்நிறுத்திக்காவலும் வைத்துவிட்டு உட்செல்லுதல் போல அவ்வான்மாவுந் தன்னைத் தத்துவங்கள் சூழப்புறஞ்சென் று மீண்டு அத்தத்துவங்களை அறிவுகாவலாக அங்கங்கே நிறுத் திவிட்டு உட்செல்லுமுறையில், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமாகிய ஐந்தவத்தையுடையனுய் நிற்பனென் பதாம்.

அரசன் போல, ஆன்மா அஞ்சவத்தைப்படின் அதன்வியா பகத்துக்கு இழுக்கா மென்று கூறுவதுநோக்கி இழுக்கின்மை விளக்கி மேற்கோளைச்சாதிக்கும் ஏது.

அது தான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியா யிற்றலான்.

இ—ள். அவ்வான்மா, மலவடிவில் மறைப்புண்ட விடத்து அருவ வடிவாகிய தத்துவ சொரூபியாய் நிற்றலால் அத்தத்துவங் கள் தொழிற்படும் அவத்தை வேறுபாடுபற்றி அஞ்சவத்தைப் படுமென்று மேற்கொண்டதென்பதாம்.

அதனுல், ஆன்ம அறிவு அங்கங்கேநிற்குங்கருவிகளுடன்கூ டி வியாபித்து நிற்றலால் அதன் வியாபகத்துக்கு இழுக்கில்லை யென்க.

தத்துவங்கள் தொழிற்படு மிடத்து வரும் அவத்தைகளின் வேறுபாடு தெரிவித்து ஆன்மதத்துவ சொரூபியாய்நிற்றலே அ தற்கு ஏதுவாதலை வலியுறுத்தும் உதாரணம்.

ஒன்றினையா மூலத் துயிரினையு நாபியினிற்
சென்றினைபுஞ் சித்த மிதயத்தின்—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

இ—ள். மூலம், நாபி, இருதயம், கண்டம், புருவநடுவாகிய ஐந்திடங்களினுமுறையே நின்று தொழிற்படும் தத்துவங்கள். க. உ. ரு. உரு. ஈறு. என்பதாம்.

அவத்தைகள், கேவலம், சகலம், சுத்தமெனமூன்றும். இவற்றின் காரியாவத்தைகள் மூவைந்துபதினைந்தாம். ஆகவே இம்மூன்றுங்காரணவத்தைகளென்க.

ஆன்மா, ஆணவமலத்தால் அணுத்தன்மையாய் அறிவுமறைபட்டு ஒருகருவிகளுடனுஞ்சேராமல் தனித்திருக்கும் நிலை கேவலாவத்தை என்பதாம். கேவலம்— தனிமை. அவத்தை— இருத்தல். சகலம்- ஆன்மா, கலிபாதி கருவிகளுடன் கூடி அறிவு விளங்கப்பெற்று நிற்கும் நிலைபாம். சுத்தம்- ஆன்மா, அநாதிமல முத்தசுத்தபதார்த்தமாய்க் கருவிகளொன்றினும் பற்றப்பெறாது தத்துவாதீதமாய்நிற்கும் சிவத்துடன்சார்தற் குரிய நிலைதிருவருளாற்கைவரப்பெற்றுத் தானுங் கருவிகள் முழுதும் நீங்கிச் சுத்தமாய்ச் சார்ந்துநிற்கும் சுத்தாத்துவித நிலையாம். இம்மூலாவத்தைமூன்றிற் கேவல காரியாவத்தை- ஆன்மா சகலத்தினின்றுகீழ்நோக்கிச்செல்லும் கேவலாக்கிரம், கேவலசொப்பனம், கேவலசுழுத்தி, கேவலதுரியம், கேவலதுரியாதீதமெனஐந்தாம், இதுகீழாலவத்தை. சகலகாரியாவத்தை- ஆன்மா, சகலத்திற் கீழ்நோக்காமலும் மேல்நோக்காமலும், நினைப்பு மறப்புக்களாற் கணந்தோறும் மாறிச்செல்கின்ற சகலாக்கிரம், சகலசொப்பனம், சகலசுழுத்தி, சகலதுரியம், சகலதுரியாதீதமெனஐந்தாம். இதுமத்தியாலவத்தை. சுத்தகாரியாவத்தை- ஆன்மா, யோகமுறையில் இருதயம், கண்டம், தாலுமூலம், புருவநடு, பிரமரந்திரமாகிய ஐந்திடத்தும் மேல்நோக்கிச் செல்லும் நிலையாம். இதுமேலாலவத்தை. இம்மூன்றில் மூலகேவலம் இச்சூத்திரத்திற் "சகசமலத்துணராது" என்றதனுணர்த்தப்பட்டது. அதன்காரியமாகிய கீழாலவத்தை (ஒன்றினையா) என்றஇவ்வெண்பாவில், ஆன்மா,

பஞ்சகஞ்சுகனும்புருடநிலையுற்றுச்சாக்கிரத்தானமாகிய புருவநடுவில். நடுநி. தத்துவங்களும்,சொப்பனத்தானமாகிய கண்டத்தில். உடுநி. தத்துவங்களும், சுழுத்தித்தானமாகிய இருதயத்தில். நூ. தத்துவங்களும், துரியத்தானமாகியநாபியில். உ. தத்துவங்களும் தொழிற்படத்துரியாதீதமாகிய மூலாதாரத்தில் தான்மாத்திரம் நிலைபெறுதலாமென்க.

அங்ஙனம் அதீதத்தினின்ற ஆன்மா சாக்கிரத்திலும் ஐந்தவத்தைப்படுமென அதனை வலியுறுத்தும் உதாரணம்.

இலாடத்தே யைந்தவத்தை யெய்திய வள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

இ—ள். அவ்வாறு கீழ்ச்சென்றபடி மீண்டு புருவநடுவில் உணர்த்து முறைச்சாக்கிரத்தில்வந்த ஆன்மா, அங்கும் சாக்கிர சாக்கிராதிஐந்தவத்தைப்படும். அவை, அச்சாக்கிரத்தானத்தில் அவ்வவ்விந்திரியங்களால்அவ்வவ்விடயங்களையுணர்ந்து அப்போதப்போதே அவைகளைமறந்து விடுதலாம். இவைபோலச்சுத்தாவத்தையும் ஐவகைப்படுமென்பதாம்

இனிச் சகலாவத்தை ஐந்தாஞ்சூத்திரத்தும் சுத்தாவத்தை ஆறுஞ்சூத்திரத்துங்காண்க.

இச்சூத்திரம், ஆன்மா, அந்தக்கரணங்களின் ஒன்றன்று ஆயினும் சகசமலத்தால் மறைபட்ட அறிவுவிளங்கும் பொருட்டு அவற்றைச்சார்ந்து ஐந்தவத்தைப்படுமென்றும், சிந்தையைச் சீவனென்று கூறுதலால் அச்சிந்தைமுதலிய அந்தக்கரணங்கள் ஆன்மாவெனில்? அவைகள் இந்திரியங்களைநோக்க அறிவுடைமைபற்றி ஆன்மா வென்று கூறினும், ஆன்மாவையும் தம்மையும் நோக்க அறிவுடையனவன் றுதலால், அவ்வான்மாவுக்குக் கருவியாகிய அந்தக்கரணம் ஆன்மா அன்றென்றும், அவற்றுடன் ஆன்மா கூடுவானேனெனில்? அறிவு விளக்கத்தின் பொருட்டே என்றும் கூடினவிடத்து ஒரேவிதமின்றிப்பலவித அவத்தைப்படுவானேனெனில்? கருவிகள் ஒரேவிதமாய்க் கூடிநில்லாமல் குறை

க்தும் பிரிந்தும் நிற்றலால் ஐந்தவத்தைப்படுமென்றும் விளக்கி இது ஆன்மாவின் பொதுலக்கணமென விளக்கியவாறுகாண்க.

ஐந்தாந்சூத்திரம்.

பாச விலக்கணம்.

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிற் குறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றுமியருள்
காந்தங்கண்ட பசாசத் தவையே.

கருத்துரை. இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதனுதலிற்று.

இ—ள். ஆன்மா, ஐந்தவத்தைப்படும்போது, அதற்கு மந்திரிகள்போலும் அந்தக்கரணந்தி கருவிகளினுபகாரமே போதியதாதலால் அங்கு முதல்வனுல் ஆகத்தக்கதொருபயனில்லை போலுமென்று கூறுவதுநோக்கி அங்கும் முதல்வனுபகாரம் இன்றியமையாதென்பதை விளக்குமுகத்தால், முன்உள்பொருளென்று பிரமாணங் கூறியபாசத்தினிலக்கணங் கூறுவதென்பதாம்.

சூ—ள். மேற்கூறிய ஆன்மாவினுல், இந்திரியங்கள் விஷயங்களை இன்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனமறிபும் தம்மையும் தம்மையதிட்டித்துநின்றுசெலுத்தி அறிவிக்கின்ற ஆன்மாவையும் அறியமாட்டா. அவைகள்போல, அவ்வுபகாரமும், தமது அறிவுக்கு விளக்கஞ்செய்கின்ற முதல்வனுடைய திருவருளால் மேற்கூறியஇருவகை ஐந்தவத்தைகளிற் போக்கு வரத்துச் செய்துநின்றுவினைப்பயன்களை அளவிட்டறிந்து அநுபவிக்கும். அநுபவிக்கின்ற தன்மையுச்சடங்களின்வேறுகிய சித்தென்றறியமாட்டா. தன்மை அதிட்டித்துநின்று விஷயங்களிற்செலுத்துகின்றதிருவருளையும் அறியமாட்டா. உயிர்கள் அவ்வாறு அறிதல் முதல்வன் சந்நிதிமாத்திரத்தால் ஆகும். ஆனல் ஆன்மா இந்திரியங்களைச்செலுத்தி விஷயங்களை அநுபவிச்சும்போது பலவகையாய் விகாரப்படுதல்போல, ஆன்மாவைச்செலுத்தி அநுபவிக்கச்செய்து உடனிற்கின்ற திருவருள்முதல்வனும் விகாரப்படுவனோ? வெனில், சுகந்தத்தைக்கண்ட இரும்பு (ஊசி) அக்காந்தம் விகாரத

மின்றி அசையாதிருப்ப அதன்சந்நிதியில் அதனால் இழுத்துக் கொள்ளப்படுதல்போல முதல்வன் உயிர்களைக்கருவிகளாற்செலுத்துவதின்றிப் போகங்களை அநுபவிக்குதலன்று நினைத்தலொழிய சந்நிதிமாத்திரையேசெலுத்துதலால் ஒருகாலத்தும் விகாரப்படானென்பதாம்.

இங்கே திருவருளென்றது. ஆன்மாக்களைச் செலுத்திப்போகங்களை அநுபவிக்கச்செய்யுமென்றதற்கேற்பத்திரோதான சத்தியேயாம். இதனிலக்கணம் இவ்வாறு கூறவே இதற்குக்கருவியாய் இதனுளடங்கி நிற்குமாயை கன்மங்களினிலக் கணமுங்கூறியவாறும்.

இச்சூத்திரம், "விளம்பியவுள்ளத்து மெய்வாய்கண்மூக்கு அளந்தறிந்தறியா" எனவும், "ஆங்கவைபோலத் தாக்குமுணர்வின்றமியருள் காந்தங்கண்டபசாசத்தவையே" எனவும் இரண்டதிகரணத்தது.

முதலதிகரணம்

சாங்கியர், தாமசாகங்கார மனமாபத்தற்றுநிற்ப அதன் சந்நிதியில் புத்திதத்துவமே ஐம்பொறிவழியாகவிடயங்களையறியுமாதலால், அவ்வான்மா கருவிகளுடன்கூடி அவத்தைப்படுமென்பதுபொருந்தாதுஎன்றுகூறுவதுநோக்கிச்சூத்திரமுதற்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

ஈண்டு, ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணருமென்றது.

இ—ள். ஐம்பொறிகள் தாமாகஒன்றையும் அறியாவாதலால், ஆன்மாவால்விடயங்களை யறியுமென்பதாம்.

அதற்குப் பிரமாண மென்னென்பாரை நோக்கிமேற்கோளை வலியுறுத்தும் ஏது.

அவற்றினின் ஆன்மா வொற்றித்துக் காணினல்லது அவையொன்றையும் விடயியா வாகலான்.

இ—ள். அவ்வைம்பொறிகளுடன் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்று அறிந்தாலன்றி அவை ஒருவிடயத்தையும் விடயிக்கமாட்டா வாகலால் ஐம்பொறிகள் ஆன்மாவா லுணருமென மேற்கொண்டு தென்பதாம்.

உயிர், அவ்வாறு ஒற்றித்துநின்றுசெலுத்துதலும்ஐம்பொறிகள் உயிரையின்றி யுணரமாட்டாமையும்,எதனால் விளங்கப்பெறுவோமென்பானைநோக்கி அவற்றைவிளக்கி ஏதுவைவலியுறுத்தும்உதாரணம்.

ஐம்பொறியை யாண்டங் கரசாயுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா—மைம்பொறியிற்
காணுதேற் காணுது சாணுமூளங் காணுதேற்
காணுகண் கேளா செவி.

இ—ள். அரசன் அத்தாணி மண்டபத்திருந்து ஏவலாளரைக்காரியங்களிற் செலுத்திஆளுதல்போல,ஆன்மா,புருவநடுவி லிருந்துபொறிகளை அந்தந்தவிடயங்களைஅறியும்படி செலுத்துதலால்,அரசனு லேவப்பட்டோர்ஏவியகாரிய மட்டிலன்றி மேற்செய்ய மாட்டாமைபோல,அப்பொறிகளும் உயிராற் செலுத்தப்பட்ட விடயமட்டிலன்றி செலுத்தும்உயிரை அறியமாட்டா. ஆனல்,பொறிகள் உயிரானன்றி அறியாவாயினும்,உயிர்,பொறிகளானன்றியும் அறியும்போது மெனில்? அரசன் மந்திரிகளையின்றியும், மந்திரிகள் தலைவனையின்றியுஞ் செய்யமாட்டாமைபோல, பொறிகளையின்றி உயிரும் உயிரையின்றிப்பொறிகளும் விடயங்களை அறியமாட்டாவென்பதாம்.

இரண்டாமதிகரணம்.

ஈசுரஅதிகாரவாதி, கருவிகள் சடமாதலால் சித்தாகிய உயிரையின்றியறியாவாயினும், சித்தாகிய உயிர்முதல்வனுதவியை வேண்டாது; வேண்டுமேல் முதல்வனுக்கும் வேறுதவிவேண்டுமென்றுகிவரம்பின்றி ஓடுமென்றுகூறுவதுநோக்கிச்சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இதுவுந்தமது முதலாலேயுணரு மென்றது.

இ—ள். இவ்வான்மாக்களுந்தமது முதல்வனுலே அறிவிக்க அறியுமென்பதாம்.

தமதுமுதலென்றதனுல், மேலொருமுதற் பொருளினடங்கிநிற்கும் பொருள்களே அறிவிக்க அறிவனவன்றித், தானே முதலாயுள்ள பொருளுக்குப் பிறரறிவிக்கவேண்டா; ஆதலின் வரம்பி

ன்றி ஒடுதலின்றென்பதும் உடம்பொடுபுணர்த்து விளக்கியவாறு காண்க.

ஐம்பொறிசடமாதலால், சித்தாகிய உயிரால் அறியுமென்றது பொருந்தும், சடமல்லாத உயிர் முதல்வனுல் அறியுமென்மேற்கோள் கூறியது பொருந்தாதென்பாரை நோக்கி அது பொருந்துமென மேற்கோளை வலியுறுத்தும் எது.

இவ்வான்மாத்தன்னுலே யுணரு மிந்திரியங்களைப் போலத் தானுந் தன்னையுணராது நிற்றலான்.

இ—ள். உயிர் சித்தும் ஐம்பொறி சடமுமாகிய வேற்றுமையுறினும் ஐம்பொறிதம்மையும் தமக்கு அறிவிக்கு முபாயையும் அறியாதவாறுபோல உயிர்களும் தம்மையும் தமக்கு அறிவிக்கு முதல்வனையும் அறியாவாதலால் அவ்வொற்றுமை நோக்கி மேற்கோள் கூறியது பொருத்தமே என்பதாம்.

ஆன்மாவினுல் விடயங்களை யறியுமிந்திரியங்களுக்கு வரும் பயன் ஆன்மாவைச்சேர்தல்போல, முதல்வனுல் அறியும் ஆன்மாவுக்கு வரும்இன்பதுன்பங்கள் முதல்வனைச்சேரும்போலு மென்பாரைநோக்கி அங்ஙன மாகாமைகூறி ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியல்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று.

இ—ள். இங்கேகூறிய அதுமானப் பிரமாணமுமன்றி, நிலை பெற்றசிவசந்நிதியில் பிரபஞ்சம் தொழிற்படுகின்றதென்று கூறும் (வேதப்பொருளையும்) ஆகமப்பிரமாணத்தையும் மறந்து பிணங்குகின்ற பேதையே, இந்திரியங்கள் தமக்காகவொன்றும் அறிவதில்லை உயிருக்காகவேயாம். உயிர் அவற்றின்வழியாய் அறிவனவெல்லாம் தமக்கேயாம். அவ்வான்மாதனக்கு வேதத்துள் எடுத்தோதப்படும்முதல்வன் அறிவித்துக்கொண்டுநிற்பத் தான்செய்த

வினைக்கிடாகவொவ்வொன்றை அறியும், இவ்வேறுபாடறிவாயாக மங்கல ரூபியாகிய சிவன் உயிர்க்கு அறிவித்துடனிற்பினும், தன் சந்நிதியில் அமங்கலமாகிய பிரபஞ்சம் முற்பட்டுத்தோன்றுதாதலால் அவ்வின்பதுன்பப் பயனை அநுபவியானென்பதாம்.

இங்கே சிவசந்நிதியென்றது, அவிகாரவாதிகள்கூறும் சிவனது அபிமுகமாத்திரையன்று, சிவசத்தி அவ்வக் காரியங்களில் உன்முகமாதலாகிய சங்கற்பமே.

உயிர், அறிவிக்க அறியுமிடத்து முதல்வனின் வேறுய்கின்றறியுமோ? ஒன்றுய்கின்றறியுமோ? வென்பாரைநோக்கி அவ்விருவிதமுமின்றி கின்றறியுமென்றுணர்த்தி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறிபு மைம்புலனைக்
கண்டடனுய் மன்னுதலாற் காண்.

இ—ள். சூரியனொளியிலடங்கி வேறுமாகாமல் சூரியனையும் ஒழியாத நக்ஷத்திரங்கள் அச்சூரியனால் ஒளியுடையனவாதல் போல, உயிர் ஐந்துவிடயங்களையும் மெய்ப்பொருளாகிய முதல்வனை யுணர்ந்து வேறுதலும்ஒன்றுதலுமின்றிஅவ்விரண்டுக்கும்பொதுவாயடங்கி உடனுய்நிற்றலை அறிவா யென்பதாம்.

முதல்வன்அறிவிக்க அறியும்உயிர்க்கு, அறிவுபலவேறுதலால் அவ்வேறுபாடு முதல்வன்அறிவிக்கும் வேறுபாட்டாலாயதேல் சுருதி அவனைநிர்விகாரிஎன்பதற்குமாறுய் விகாரியென்றுகூறவருமென்பாரைநோக்கி விகாரியாகாமையுணர்த்தி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளுமவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணுர் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து.

இ—ள் முதல்வனுக்கு உயிர்களின்பசுத்துவ நீக்கிச் சிவத் வம்விளக்கவேண்டுமென்னு மிரக்கம் அநாதியேயுள்ளது:அது அவனது சத்தியே. சத்தியும்முதல்வனும் குணமும் குணியுமாத லால் சத்திமுதல்வனைவிட்டுத் தனித்துநிற்றல் அமையாது. முதல்வனும் சத்தியைஇன்றி யமையாதவனுய் ஞானக்கண்ணு டையா ரறிவிற்குச் சூரியன் தன்னொளியுடனியைந்து நிற்றல் போல, சத்தியுடனியைந்துநின்று அறிவிப்பன். ஆதலால்' தன் வயத்தனுய் விகாரமின்றிச் சத்திசங்கற்பமாத்திரையி னுலேயே யாவுஞ்செய்கின்ற முதல்வன் விகாரியாதலில்லை என்பதாம்.

இங்கே ஞானக்கண்ணுடையாரென்றது, சிந்தாந்தசைவ ரையே. அவர்க்கன்றி மேற்கூறிய உண்மை விளங்காதென்க— சூரிய னொளியாலேயே அவ்வொளியையும் சூரியனையும் அறிதல் போலச், சித்தாந்த சைவர்கள் சிவசத்தியாகிய அருளாலேயே அவ்வருளையும் சிவத்தையும்அறிவர்; இவ்வுண்மை "அவனரு ளாலே யவன்ருள்வணங்கி" என்று ஸ்ரீவாசகசுருதிவிளக்குதலா லுங்காண்க.

இச்சூத்திரம், மந்திரிகளுடனும் அரசன்போல அந்தக் கரணங்களுடனு யவத்தைப்படி முயிர்க்கு அவையே யமையும். முதல்வனுலாவதோர்பயனில்லை யென்பாரைமறுத்து அங்கும் முதல்வனுதவிவேண்டுமென்பதுணர்த்து முறையில், ஐம்பொறி கள்போல உயிருந் தன்னையும் தலைவனையும் அறியாது முதல்வ னருளாற் ருனறிந்தவத்தைபுறும். அப்படியறிதல் காந்தத்தின் முன்இரும்புபோலாதலால் முதல்வன் விகாரப்படானென்றும்; ஆன்மசந்நிதியில் புத்திதத்துவமே அவத்தையுறுமென்பாரைமறு த்து, புத்தியினுற்பொறிகள்விடயங்களையறியா ஆன்மாவினுற்ருன் அறியும்;அவத்தையுறுவது சித்தாகிய ஆன்மாவே சடமாகியபு த்தியன் றென்றும், உயிர் சித்தாதலால் அது முதல்வனுலறிய வேண்டா. வேண்டுமேல் அவனும் பிறரால்அறியவேண்டுமென வரம்பின்றி ஓடுமென்பாரை மறுத்து, தனக்குமேல் ஒருமுதலை யுடைய உயிர்க்கன்றித் தனக்குமேல் ஒருமுதலின்றித்தானே முதலாயுள்ள சர்வஜ்ஞ சித்துக்குப் பிறர் அறிவிக்கவேண்டா

வாதலால் வரம்பின்றி ஓடுவதில்லையென்றும், உயிரின் அறிவு பலவேறுய் நிகழ்தலால் அவ்வேற்றுமை அறிவிக்கும்முதல்வ னலா யதென்றுகி அவன் விகாரிபோலுமென்பாரை மறுத்து, முதல்வனருளாகியசத்திசங்கற்பத்தால் அவ்வருளினுங்கின்று யிரறியுமாதலால் முதல்வன் விகாரப்படானென்றும் விளக்கி, ஆன்மாக்கள் தம்அறிவை விளக்கும் "தமியருளாகிய" திரோதா னசத்திசங்கற்பத்தாலறிந்துநிற்கின்ற சகலாவத்தையாகிய உணர் த்துமூறைச் சாக்கிரத்தினியல் புணர்த்தியவாறு காண்க.

ஆருஞ்சூத்திரம்

பதியிலக்கணம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத்தா மென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே. [தலிற்று.

கருத்துரை. சத்தும் அசத்தும் வரைசெய்துணர்த்துதனு

இ—ள். முற்கூறியபொருள்களில் சத்துஇது அசத்துஇது என்றுணர்த்து முகத்தால் பதிஇலக்கணங்கூறுவதென்பதாம்.

சூ—ள். ஆன்மஅறிவுக்கு விளக்கஞ்செய் துபகரிக்கு முதற் பொருள், பிரமாணங்களால் சுட்டிஅறியப்படுமியல்பினதென் றும், அப்படி யறியப்படும் உலகப்பொருள்போல்அழியும் அச த்துஎன்றுகும்; எவ்வழியினும் அறியப்படாததென்றும் முயற் கோடுபோல சூனிய மென்றுகும். ஆதலால் அவ்விருபகுதியுமின் றிப் பாசஞானம் பசுஞானங்களால் அறியப்படாமையாற் சிவ மென்றும், சிவஞானத்தால்அறியப்படுதலால் சத்தியென்றும்இவ் விருவகையினுல் சிவசத்துஎன்று மெய்யுணர்வினுல் நிலைபெற்று யர்ந்த மேலோர்கூறுவரென்பதாம்.

சிவம்என்றது சித்துஎன்றும்பொருட்டு. பிரமாணங்களால் அறியப்படுதலும் எவ்வித்தத்தும் அறியப்படாமையுமாகிய அவ் விருவகையுமின்றிப், பாசஞானம், பசுஞானங்களால் அறியப் படாத சித்தாயும், பதிஞானத்தால் அறியப்படுகின்ற சத்தாயும்

நிற்றலே பதியிலக்கணமென்க. இது சொரூபலக்கணமென்னுஞ் சிறப்பிலக்கணமாகும். இன்னுமுள்ளசிறப்பியல்புக்குணங்களெல்லாம் சித்து சத்து என்னுமிரண்டினடங்கும். அக்குணங்கள், சர்வஞ்ஞதாதி எண்குணங்களாம். முன்ஒன்றுபும், வேறுபும், உடனுபும் நிற்பன்எனக்கூறியது தடஸ்தலக்கணமென்னும் பொது இலக்கணமாம். இங்கே சத்துஎன்றது முக்காலத்தும் ஒரேபடித்தாயுள்ள சிவப்பொருளையே; அசத்துஎன்றது மாயையிற்றோன்றிமின்றொடுங்கும் உலகப்பொருளையே. இது தோன்றி மின்றொடுங்கும் வேறுபாடுநோக்கி அசத்தென்றுகூறியதன்றி இன்பொருளென்னுங்கருத்தாற்கூறியதன்று. மாயையிற் றோன்றிநிற்கும்போது ஸ்தூலமாயும்ஒடுங்கியபோதுசூக்குமமாயும் என்றும் உள்ளதேயாதலால் இது சடசத்தென்பதாம். ஆதலாற்றான் மேலே பதியாகிய சிவபிரானே சித்தாகிய சத்துஎன்பதுதோன்ற சிவசத்துஎன்றுகூறியதென்க.

இச்சூத்திரம், "உணருருவசத்தெனி னுணராதின்மையின்" எனவும் "இருதிறனல்லது சிவசத்தாமென இரண்டுவகையினிசைக்குமன்னுலகே" எனவும்இரண்டதிகரணமுள்ளது.

முதலதிகரணம்

தார்க்கிகர், முதல்வனும் அறியப்படுபொருளே என்றும், சாங்கியர், எல்லாப்பொருளுஞ் சத்தாதலாற்பிரபஞ்சமும் சத்தே என்றுங் கூறுவதுநோக்கிச் சூத்திரத்தின்முதற்பாகத்தைப்பதம் பிரித்துரைக்கும்மேற்கோள்.

ஈண்டு, அறிவிலைறியப்பட்ட சுட்டுஅசத்தென்றது.

இ—ள். சுட்டறிவினால் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல்லாம் அசத்தென்பதாம்.

தார்க்கிகன், உள்ளதாய் நேரேகாணப்படும் பிரபஞ்சத்தை இல்பொருளாக அசத்தென்றலும், சாங்கியர், சத்தாகியபிரபஞ்சத்தைச் சுட்டியறியப்படுதல் மாத்திரம்நோக்கி அசத்தென்றலும் பொருந்தாதென்பதுநோக்கி மேற்கோளவலியுறுத்தும் எது.

அவை தாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய்நிற்றலான்

இ—ள். உலகமாகிய அச்சுட்டுப்பொருள்கள், இராஜத மிகு தியாற்பிரமனும் படைக்கப்பட்டுள்ளதெனின் முதாமத மிகுதி யால் ருத்திரனுலழிக்கப்பட்டில்லையெனநிற்றலால் அசத்தென மேற்கொண்டதென்பதாம். இதுதார்க்கிகனுக்குக்கூறியதாம்.

இனிஇரட்டுறமொழிந்து, அவைதாம், காரியாவத்தையிற் காலமாய்விளங்கின்று காரணுவத்தையிற்சூக்குமமாய் விளங் காதமறைந்துநிற்கும்வேற்றுமையால் விளங்கியறியப்படாதகா ரணப்பொருள்களோ கோக்கி அறியப்படுங் காரியப்பிரபஞ்சம். அசத்தென்றல் பொருந்துமாதலின் அவ்வாறுமேற்கொண்ட தென்றும் பொருள்கொள்க. இதுசாங்கியனுக்குக்கூறியதாம்,

தார்க்கிகன், உலகத்துள் அழியும்பகுதிகள் அசத்தாயினும் அழியப்படாது காணப்படுவனவும் அசத்தென்றற்குப்பிரமாண மென்னென்பதுநோக்கி ஏதுவைவலியுறுத்தும்உதாரணம்.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா னுயின்.

இ—ள். அசத்தினியல்பை யறியாதவனேநாம்கூறுதலேநீமனம் பற்றிக் கேட்பாயாக. சத்தினியல்பை அறிந்தவன் ஆராய்ந்தா னேல் சுட்டறிவினுலறியப்பட்டனவெல்லாம் அசத்தென்றே யறி வனென்பதாம்.

"அசத்தறியாய்" என்றதனுல், அசத்தினியல்பையறிந்தா யாயின் இவ்வாறுபிணங்குவாயல்லையென்பதும், கேள்நீ" (என்ற தனுல், "எந்தைதாட்பால் வணங்கித்தலைநின்றிவைகேட்க) இனி யாவது மூனைப் பொழிந்து திருவருளினடங்கித் தலைபன்பி னு றைத்துநின்று கேட்டறிந்துதெளிவா யென்பதும், "அறிவறிந்த வெல்லா மசத்தாகும் என்றதனுல், உள்ளதென்றுணரப்படும் பொருளெல்லாம் இல்லையென்றுணரப்படும்அசத்தாதல் நிச்சய மென்பதும், "மெய்கண்டான்" என்றதனுல், சத்தினியல்பை யறிந்தாற்கன்றி அசத்தி னியல்பறியமுடியாதென்பதும், "ஆயி

ன்" என்றதனால், அது அறிதற் கரியதென்பதும் அச் சொல்லாற்றலால் விளக்கமா மென்க.

முன்பு சாங்கியனேநோக்கி, இரட்டுறமொழிந்துகாரியாவஸ்தையில் விளங்கிக்காரணாவஸ்தையில் விளங்காமையால் அசத்தேயாம்என்று" கூறியதை வலியுறுத்தும் உதாரணம்.

—அசத்தலாய்

நீரிலெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினையி னின்றுமா றெறுப்பு.

இ—ள் அசற்காரிய வாதியாகாமற் சற்காரியவாதியாகிய அறிவுடையவனே அவ்வாறு தோன்றிமறையும் பிரபஞ்சத்தை அசத்தென்பதற்குவமானம் ஆராயின்நீரிலெழுத்தும்நிகழ்கனவும்பேய்த்தேரு மா மென்பதாம்.

நீரிலெழுத்து" தோன்றியவுடனே மறைந்துபோதலேயும், நிகழ்கனவு" தோன்றிய விஷய முடிவுபெறுமல்மறைந்துபோதலேயும், "பேய்த்தேர்" (கானல்நீர்) ஒருகாரணங்காட்டிமறைந்துபோதலேயும்விளக்குதற்கே மூன்றுவமைகூறி அருளிற்று. மேக முதலியவற்றால் மறைந்துபோதலே காரணங்காட்டி மறைதலென்க. கனவைப்பொய்யென்பாரைமறுத்தற்கே "நிகழ்கனவு" என்றடைகொடுத்தருளிற்று.

இச்சூத்திரத்தில் "உணராதெனின்இன்மை" என்றதன்பொருள், எவ்வகையினும் அறியப்படாதபொருள்சூனியமேயாகும். அதுஎல்லாச்சமயத்தாருக்கும் சம்மதமாதலால் அதுபற்றி ஆசங்கையில்லை என்க.

இரண்டாமதிகரணம்.

மாயாவாதி, • உணர்பொருள் அசத்து உணராப்பொருள் சூனியமென்றுமேலேநிச்சயித்தலால், இவ்விரண்டின்வேறாயமுதல்வனியல்பு, உணரப்படுமென்றும்படாதென்றுஞ் சொல்லமுடியாதஅநிர்வசனமென்பதுபோலுமென்றுகூறுவதுதோக்கிச்சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப்பதம் பிரித்துரைக்கும்மேற்கோள்.

இனி, இவ்விரண்டுதன்மையுமின்றி வாக்குமனாதீதகோசர மாய்நின்றவதுவேசத்தாயுள்ள சிவமென்றுணரற்பாற்று.

இ—ள். உணர்தல் உணராமை இரண்டினின்றி (வாக்கு) ஞாதவழி ப்பட்டபாசஞானத்தினிற்கும், (மனம்) மனம்முதலிய கரணங்களு டன்ஒட்டிநின்றுணரும்பசுஞானத்திற்கும், (அதீதமாய்) அறியப் படாததாய், ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் பதிஞானத்திற்கே விளங்கித்தோன்றுவதாய் நிற்கும் அதுவே, பிரமாணங்களால் இன்னதென்று அறிப்பப்படாமைநோக்கி மகாவாக்கியத்தால் "அது" என்றுகூறப்படும் சத்தாகிய சிவமென்றுணரும் பான் மையதென்பதாம்.

அறிப்படுதல் படாமைஇரண்டுமில்லாதபொருளே (அநிர்வச னமாய்)இன்னதென்றுசொல்லமுடியாதாய்நிற்பதென்னமல், பாச பசு ஞானங்களால்அறிப்பப்படாது பதி ஞானத்தால்அறியப்படு மென்பதெப்படி? என்பாரைநோக்கி மேற்கோளேச்சாதிக்கும் ஏது.

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்க வேண்டுவதின்மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும்.

இ—ள். வாக்கு மனங்களால்உணரப்படும்பொருளானால் அ தனை யறிதற்குரிய சாதனங்கள் பின் (அ-வது) சூத்திரத்திற்கூற வேண்டா. ஒருவாற்றானும் அறியப்படாததானால் அங்குக்கூறிய அச்சாதனங்களால் ஒருபயனுமில்லை. ஆதலால் அவ்விருவகையு ங்கடந்துஅதீதமாய் அச்சாதனவழி நின்று பதிஞானத்தால்அறி யப்படுங் கோசரப்பொருளாய்நிற்கும் அதுவேசத்தாகிய சிவமா மெனமேற்கொண்டதென்பதாம்.

அவ்வாறுநிற்கும் பரமார்த்தமாகியபிரமம்அஞ்ஞானத்துட ன் கூடியபோது (விவகாரத்தில்) சீவான்மா, பரமான்மா, என்றி ருவகைப்பட்டுப் பின் கூறப்படுஞ் சாதனங்களினின்றறியவும் படும். அஞ்ஞான நீங்கியபோதுபரமார்த்தத்தில் அவ் விருவகை யுமின்மையால் சத்தென்றுவது அசத்தென்றுவது அறியப்படா மலிருக்கும். ஆதலால் அப் பிரமத்தைக் கோசரம் (அறியப்படும்

பொருள்) என்பதுபொருந்தா தென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

எண்ணிய சத்தன்றசத்தன்று மென்றுலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா— னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்று ளாம்.

இ—ள். அப்பிரமம்விவகாரத்திற்கருதப்படும் சத்துமன்று அசத்துமன்றெனில் அப்படிஒருபொருளுண்டென்றதுஎன்ன பிரமாணம் நோக்கியோ? பிரமாணமுண்டென்றல்பிரமாணத்தால் அறியப்படும்பிரமேயமென்றதி அறியப்படுபொருளாய்முடியுமென்றஞ்சிப்பிரமாண மில்லைஎன்றல் அது பிரமாணங்களால் அறியப்படாதசூனியமாய்முடியும். இவ்வாறு அறியப்படுவதும் படாததும்உண்மைஉணர்ந்தோன் ஆராயின் அசத்தேயாம். ஆதலால் சார்தோக்கியஉபநிடதங்களிற்சத்தென்று கூறப்படுவதாயுஞ் சுட்டறிவினாலறியப்படாதாயுமுள்ளமெய்ப்பொருள்சைவஉபநிடதங்களினும் சைவாகமங்களினும் வேற்றுமை யின்றி நின்றுணரும் அநுபவஞானத்திற் கோசரிப்பதென்றேதப்படுஞ் சிவனருளாவதன்றி நீகூறுஞ்சூனியமன்று. அஞ்ஞானத்துடன்கூடி விகாரப்படுவது மன்றென்பதாம்.

இதனால்போந்தபொருள்சத்துமன்றி அசத்துமன்றி ஒன்றுண்டெனிற்பிரமாணமென்னை? பிரமாணாதீதசூனியமெனில்? சூனியமும் அழிபொருளும் அசத்தேயாதலால் பிரமம்அசத்தென்றுசித்தென்னுஞ் சுருதிகளுக்குமாறுபடும். ஆதலால் சத்தெனினும்பிரமம் உண்மைஞானத்திற்கோசரிப்பதென்று நாங்கூறுஞ் சிவமேயன்றி நீகூறுஞ்சூனியமன்றெனமாயாவாதியைமறுத்துக் கோசரமென்றதை விளியுறுத்தவாறுமென்க

இனி. தார்க்கிகன், முன் பிரத்தியக்ஷத்தாலறிந்த ஒருபொருளேப்பின் அநுமானத்தால்அறியவரும்பில் அவ்வழியினும்அது அறியப்படுதல்போல, முதல்வன் முன் பாசபசுஞானங்களாலும் அறியப்படுவன் பின்சாதனங்களாலும்(பதிஞானத்தால்) அறியப்

படுவன். ஆதலால்முன்வாக்கு மனங்களால்அறியப்படான் முதல் வனென்றது பொருந்தாதென்பதைநோக்கிஅதனைவலியுறுத்தும் உதாரணம்.

உணர்ப வசத்தர்த லொன்றுணரார் தொன்றை
யுணருநீ தானுணரர் யாயி—னுணருமுனிற்
றுணிரண்டா மெய்கண்டான் றன்னு ணுணர்தலாற்
றுணிரண்டாய்க் காணுன் றமி.

இ—ள். அவ்வாக்கு மன முதலிய கருவிகள் தாமேயறியாமல் ஆன்மாவாகிய உன்னுலேயே அறியப்படுதலால் அவைகள் அறி வில்லாத அசத்தாகும். ஆதலால் அக்கருவியுள் ஒன்றேனுமுதல் வனையறியமாட்டாது (ஆகவே பாசஞானத்தால் முதல்வன் அறி யப்படானென்பது தெளிவாம்) நீ அக்கருவிகளேக்கொண்டே யறிபவனுதலால் நீயும் தனித்து நின்று அறியமாட்டாய். இத னுல் பசுஞானத்தால் அறியப்படானென்பது காண்க. நீயே ஆராய்ந்தறிவையானுல் அக்கருவிகளால் அறியப்படும் பொருள் கள் உனக்கு வேறுதல் போல முதல்வனும் உனக்கு வேறன்று ம். பொருட்டன்மையால வேறுயினும், முதல்வன் கலப்பினுல் உயிர்க்குயிராய் நின்றறிவிப்பனுதலால் உயிர்க்கு அறிவு விளங்கு முண்மைபுணர்ந்தோன் தன்னறிவு சிவனருளினடங்கி அதுவே யாய் ஒற்றித்துநின்று அவ்வருளாலறிவானன்றி வேனப்பொருள் களேவேறுய்கின் றறிதல்போல அம்முதல்வனே அவனின்வேறுய் நின்றறியமாட்டானென்பதாம்.

இனி, யோகமதஸ்தன், முதல்வனுல் முதல்வனே அறியவே ண்டுமென்பதில் (ஆன்மாச்சிரயதோஷம்) தன்னேப் பற்றுதலென் னும் குற்றமுண்டாமாதலால்யோகத்திற்கூறும்தியான பாவனே களால் முதல்வன் அறியப்படுவானென்பதுநோக்கி முதல்வன் அவனலன்றி அப்பாவனேயா லறியப்படானென்பதை வலியுறு த்தும் உதாரணம்.

பாவகமேற் றுனசத்தாம் பாவனு தீதமெனிற்
பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்

பாவித்த ருனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ்.

இ—ள். நீகூறும் பாவனை மனமுதலியகருவிகளுடன் நின்று பாவிப்பதெனில், அது சுட்டி அறியப்படுதலால் அசத்தாகும். கருவிகளைநீங்கிநின்று பாவித்தல்பாவனையைக் கடந்ததெனில் மன முதலிய கருவிகள் நீங்கியபோது ஒன்றுமறியாத கேவலாவஸ்தையாய் முடியுமாதலாற் பாவகமாத்திரையன்றிப் பயனில்லையாம், இவ்விரண்டுமின்றிஇன்னதென்று சொல்லமுடியாத அநிர்வசனமாகப்பாவிப்பதெனில், அதுசூனியமாம். பாவனையிலகப்படாததை அகப்பட்டதாகப்பாவிப்பதெனில், அதுபோலியாய்ப் பாவனைதீதம்போல் பயனற்றதாம். ஒருபாவனைக்குங் கிட்டாத பொருள் (சூனியம்) பாழாமென்பாயேல், நீ கூறியபாவனைகளிற் காலம்போக்கிப் பயனின்றி ஒழியாமல் திருவருளாற் பாவித்தறியப்படுவதே அப்பரம்பொருளாதலால், நீகூறும் பாவனைகளுக்கு அகப்படாமைபற்றிப்பாழென்று கூறமுடியாதென்பதாம்.

இங்ஙு, முதல்வன் அவனதுதிருவருளால் அறியப்படுவன் என்றதனால், தன்னைப்பற்றுதலென்னும் குற்றமின்றென்பதுவிளக்கமாம்.

யோகநூலார் கூறும்பாவனை இந்நான்கனுள் ஒன்றுவதன்றி வேறில்லையாதலால் திருவருளாற்பாவிக்கப்படாத அப்பாவனை ஒன்றுலும் பயனில்லையென்பதுதெளிவாமென்க.

இதனை, "மநஸை வேதமாப்தவ்யம்" இந்தப்பிரமம் அருளினாலடையத் தக்கது என்று கடவல்லியுபநிடதமும், "மநஸைவாநுத்ரஷ்டவ்யம்" பிரமம் அருளினாலே காணற்பாலது என்று பிருகதாரண்யோபநிடதமும், "ஸநோபுத்யா சுபயாசம்யுநக்து" அவர்நம்மை அருளினாலே (தம்முடன்) சேர்ப்பாராக என்று சுவேதாசுவதரோபநிடதமும், "அவனருளே கண்ணைக் காணினல்லால்" அவனருளாலே யவன்றாள்வணங்கி" என்றுதிருவாசகமுஞ் சுருதிகளும் விளக்குதலாலுந் தெளியலாம்.

திருவருளாற்பாவிப்பதற்கு அவ்வருளையும் பாவிக்குமுறையையும் தெரியவேண்டுமாதலால் அவை(கூ ம்சூத்திரத்திற்) கூறப்படும்

இனிச்சிவசமவாதசைவர், அவனருளாற்பாவிக்கவேண்டாம்; ஆன்மா பசுத்துவம் நீங்கியபோது சிவனைப்போல எண்குணங்களையடையுமென்று சிவாகமங் கூறுதலால் அப்போது ஆன்மஞானம் சிவஞானத்தையொத்ததன்றிப்பசுஞான மன்று. ஆதலால் முதல்வன் அவ்வறிவால் அறியப்படுவனென்பதுநோக்கிஅருளாலன்றி யறியப்படாமையை வலியுறுத்தும் உதாரணம்.

அறிய விரண்டல்ல ஞங்கறிவு தன்னு
லறியப்படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்றனைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

இ—ள். வேதசிவாகமங்களில் ஆன்மாவும் சிவமும் வேறுபடாமல்அத்துவிதமாயிருக்குமென்று கூறுதலால், ஆன்மா, தன்னறிவால் முதல்வனை அறிதற்கு முதல்வன் ஆன்மாவின்வேறல்லனுதலாலும், தன்னின்வேறின்றித்தன்னுள்ளேநின்று அறிவிக்கின்றஆன்மாவினும் பொருள்களை அறிகின்ற கண்ணனது ஆன்மாவுடன் சமமாதலின்றி,உள்ளேநின்றறிவித்தலால்அவ்வான்மாவைச்சூக்குமமெனவும் அக்கண் புறப்பொருளைநோக்குதலாற் றன்னைத்தூலமெனவுங் கூறும்படி நின்று, தானுக ஒன்றையும் அறியமாட்டாத வாறுபோல, ஆன்மாவும் தன்னின்வேறின்றித் தனனுள்ளேநின்றறிவிக்கின்ற முதல்வனை லறிகின்றபடியால் அம்முதல்வனுடன்சமமாதலின்றி, உள்ளேநின்றறிவித்தலாற்சூக்குமசித்தாகியமுதல்வனைநோக்கத்தான் தூல சித்தாய் நிற்றலால் தானுக ஒன்றையும் அறியமாட்டாதாகலானும், தன்னறிவுக்கு 'விளக்கஞ்செய்துபகரிக்குமுதல்வனை, ஆன்மஅறிவானது தானேகண்டு அவ்வான்மாவுக்குக் காட்டமாட்டாது. ஆதலால் அவ்வான்மஞானத்தால் முதல்வன் அறியப்படானென்பதாம்.

இனிச் சிவாத்துவித சைவரும், சுத்த சைவரும்முதல்வனையுங்கூடியஆன்மா அவனுடன் ஒன்றுப்போகும். ஆதலால் அம்

மூத்திநிலையிலும் அறிவதும் அறியப்படுவது முண்டென்பதெப் படியென்பது நோக்கி அங்கு மவை யுண்டெனவிளக்கி வலியுறுத்தும் உதாரணம்.

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல னுங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

இ—ள். சத்தாகியசிவம், அங்கும் அறியப்படும்பொருளாய்ப்பசு பாசாங்களாகிய விசேஷணத்தையுடைய விசிஷ்டமாய் (பசுபதியாய்) உள்ளதென்பது உங்களுக்கும் ஒத்ததேயாதலால் அச்சிவம் இன்னதென்றுகூறமுடியாமல் அநிர்வசனமாய் நிற்பதாய்த் தன்னைத்தவிர வேறொன்றுமில்லாதநிர்விசேடப்பொருளென்றுமாயாவாதிகூறுதல்போல, அதுவென்று அநிர்வசனமாய்க் கூறப்படுஞ் சூனியமன்று ஆதலால் அச்சிவம் ஒன்றுமாத்திரமன்றி அதற்கு வேறாக அதனைவாக்குமனாதீதமாய் நிற்பதென்றறிகின்ற ஆன்மாவும்அம்முத்திநிலையிலுள்ளதேயாம். உள்ளதானால் அங்கே சிவத்துடன் ஆன்மா ஒன்றுவதில்லையே எனில், உலகப்பொருள்கள் இது இதுவென்று சுட்டியறியப்பட்டு அவ்வான்மாவுக்குவேறாய் நிற்றல்போலாகாமல், முதல்வன், அப்பணிந்த உப்புப்போல வேற்றுமைதோன்றாமல் ஆன்ம அறிவிற்கலந்துநிற்றலால் சுட்டியறிதலின்றி அருளாலறிகின்ற அவ்வான்மா சிவமாந் தன்மையைப்பெறுமாதலால் அம்முத்தியிலும் ஆன்மாவிருந்தேஅருளாலறிவதும் அறியப்படுவதுமுண்டென்பதாம்.

அங்கு ஆன்மாஇல்லையெனில் அம்முத்தியின்பத்தை அநுபவிப்பவனுமில்லையாய் அநுபவமுமில்லையாய் அதனைக்கொடுத்தருளு முதல்வனுமில்லையாய் எல்லாஞ்சூனியமாய் முடியுமென்க.

முன் பசுவிலக்கணங்கூறும் நான்காஞ்சூத்திரத்தில் "சுகதமலத்துணராது" என்றதனால் அப் பசுவின் கேவலாவஸ்தையும், பாசவிலக்கணங்கூறும் ஐந்தாஞ்சூத்திரத்தில் "தமியருள்" என்றதனால் அவ்வருளாகியதிரோதானசத்தி செலுத்த அப் பாசமாகிய

ஒருபொருளை அறிந்தபோது அதனலாயபயனைப்பெறுதற் குரிய முயற்சிசெய்பத்தொடங்குவார்க்கு, அது செய்யத்தக்கவ ன்மை நமக்கு உண்டென்பதும், செய்தால்வரும்பயன் இன்னதெ ன்பதும், அப்பயனைத்தருதற்குரிய சாதனமின்னதெனபதும் அச்சாதனம்எதனல்வருமென்பதும் அறிந்தாலன்றிமனம்ஊக் கமாய்ச்செல்லாதாதலால், அவ்வாறு சாதனம்செய்துபயன்பெறு தற்குரியஅதிகாரி, அவ்வன்மையுள்ள ஆன்மாவென்றுணர்த்துவ தாகியஇச்சூத்திரம் இச்சாதனவியலின்முதலில்வைக்கப்பட்டது.

சூ—ள். முற்சூத்திரத்திற் சிவசத்தென்றும் அசத்தென்றும் கூறிய இரண்டில்வாக்கு மனிதமாகிய சிவசத்தின் சந்நிதியிலே அசத்தாய்ச்சுட்டியறியப்படுவதாகியபிரபஞ்சம்சூனியமாதலால், அப்பிரபஞ்சத்தைச் சத்தாகிய சிவம் அறியாது. அப்பிரபஞ்ச மும்சடமாதலால் அச்சிவத்தையறியாது. இவை ஒன்றைஒன் றுஅறியா தென்றதால், அவ்விரண்டையும் அறிவதுஒன்றுண் டென்பது பாரிசேஷ ஞாயத்தாற் பெறப்படும். அதுவேசத்தே யாந்தன்மையும் அசத்தேயாந்தன் மையுமாகிய இரண்டு மல்லாத சதசத்தாகிய ஆன்மா என்பதாம்.

ஆன்மா இரண்டையும் அறியும் என்றுகூறிய அறிவு இச் சாதனவியலுக்கேற்ப அநுபவ அறிவேயாம். சிவம் உயிர்க்கு அறிவிக்கும்பொருட்டும் பிரபஞ்சப்பொருளை அநுபவிப்பிக்கும் பொருட்டும் அறிபுமாயினும் தன்அநுபவத்தின்பொருட்டுச் சுட் டியறியாதென்பதேயாம். அவ்வான்மா ஒருபொருளை மனமுதலி யகருவிகளாலறிவது ஆராய்ச்சி அறிவு. நேரேஅறிவது அநுபவ அறிவென்பதாம். ஆகவே அவ்வான்மா சத்து அசத்து இரண்டனை யும்அநுபவமாகஅறிபு மென்பதே ஈண்டுக்கூறியவாறுமென்க.

இச்சூத்திரம், "யாவையுஞ் சூனிபஞ் சத்தெதிராகலிற் சத் தேயறியாது" எனவும், "அசத்தறியாது" எனவும், "இருதி றனறிவுள திரண்டலா வான்மா" எனவும் மூன்றதிகரணமுள் ளது.

முதலதிகரணம்.

சிவாத்துவிதசைவர் முதல்வனுக்கு மாயை ஒருசத்தி என்றும், அதிற்றோன்றும் உலகம் திருமேனி என்றுங்கூறப்படுதலால், அதைச் சூனியமென்றலும், முதல்வன் உயிர்க்காகவுலகை அறிவனென்றுகூறப்படுதலால் அப்பிரபஞ்சத்தைஅறியானென்றலும் பொருந்தாதென்பது நோக்கிச்சூத்திரத்தின் முதற்பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்

ஈண்டுச்சத்தினிடத்து அசத்துப்பிரகாசியாதென்றது. இ—ள். ஒன்றொன்றுப்ச்சுட்டியறிதலின்றி எல்லாப்பொருளிலுங் கலந்துநின்று ஒருங்கே அறியும் சிவசத்தின்முன் சுட்டியறியப்படும்அசத்தாகிய பிரபஞ்சம் விளங்கித்தோன்றுதென்பதாம்.

எல்லாவற்றையும் ஒருங்கே அறியும் முற்றுணர்வுடைய சிவத்திற்கு அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டியறிதலும் முண்டென்றுற்பழுதென்னை? என்பாரைநோக்கி மேற்கோளைச்சாதிக்கும் ஏது.

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்

இ—ள். முதல்வனுக்குத் தன்னியல்பாயுள்ளசிறப்புக்குணங்களுள் ஒன்றாகிய இயற்கைறறிவின் (மெய்யறிவின்) மூன், கருவிகளுடன் கூடியறியும்பொதுவியல்பாகிய சுட்டறிவு (பொய்யறிவு) வெளிப்படாத்தலால் அவனிடத்துச் சுட்டறிவுதோன்றுதென மேற்கொண்டதென்பதாம்.

இயற்கையறிவின்றி அறிவிக்க அறியுமுயிர்தான், ஒன்றொன்றுச்சுட்டியறியும். அவ்வறிவும்கருவிகளுடன் சார்ந்தபோது விளங்கிச், சாராதபோதுமறைந் தொழிதலாற் பொய்யறிவாம். தானே அறியும்இயற்கை அறிவு என்றுமொருபடித்தாய் விளங்கி நிற்றலால் அதுவே மெய்யறிவா மென்க.

முதல்வன், சுட்டறிவின்மையால் பிரபஞ்சத்தை அறியானேல்? அவனது முற்றறிவுக்கு இழுக்கன்றோவென்பாரை நோக்கி இழுக்கின்மை விளக்கி ஏதுவைவலியுறுத்தும் உதாரணம்.

அங்கியமி லாமையரற்கொன்றுணர்வின்று
மங்கியமி லானசத்தைக் காண்குவனே—லங்கியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று.

இ—ள். தன்னுள் அடங்கிய பசு பாசங்களின்வேறின்றி நிற்கும் முதல்வன் சுட்டியறிதற்கு அவனின்வேருய் ஒன்றுமில்லையாதலால், அவன் பிரபஞ்சத்தை அறிவனுகிற், கலந்துடனுய் நின்று ஒருசேரஅறிவனன்றி நம்மனேர்போல வேருய்நின்று சுட்டிஅறியமாட்டான். அது, சூரியன்முன் இருள்வெளிப்படமாட்டாது மறைந்து நிற்றல்போல, முதல்வன்முன் பிரபஞ்சம் விளங்கி நில்லாமையா லென்பதாம்.

எனவே பிரபஞ்சத்தைச்சுட்டியறியும் ஏகதேசஅறிவுமுற்றறிவைத்தடுக்குமாதலால் அஃதில்லாமைமுற்றறிவுக்குமேம்பாடாவதன்றி இழுக்காகாதென்று விளக்கினமைகாண்க.

இரண்டாமதிகரணம்.

சிவசங்கிராந்தவாதி, சத்துஅசத்தை அறியாதாயினும், அசத்தென்னப்பட்டதநுகரண புவனபோகங்களுள் ஒன்றுகிய அந்தக்கரணமானது விளக்குத் தன்முன்கண்கள்பொருள்களை அறியத்தான் விகாரமின்றி நிற்றல்போல, விகாரமின்றி நிற்கும் ஆன்மசந்நிதியில், பெத்தகாலத்தில் அசத்தாகிய விடயங்களை யறிதல்போல, முத்தியிலும் அக்கரணங்களேசிவகரணமாய்நின்று சத்தாகிய சிவத்தை அறியுமென்றலும், ஒருவர்க்கு எதிர்ப்பட்ட கண்ணுடியில் நிழலுண்டாதல்போல ஆன்ம சந்நிதியில் அக்கரணங்களுக்கு அறிவுண்டாமென்றலும் பொருத்தமாமென்பதைநோக்கிச்சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

இ—ள் அசத்தாகியஅக்கரணமுதலியதத்துவங்களெல்லாம் சடமாதலால் அவற்றிற்கு அறிவில்லை என்பதாம்.

இச்சூத்திரத்தில், "அசத்துஇலது" என்றதற்கு அசத்தானது

இல்லாப் பொருளோவென்று பிறர் மயங்காமல்அசத்துக்கு அறி வில்லை யென்னுமுண்மை தெரிந்துகொள்ளவே அதன்பொருள் கூறும்இம்மேற்கோளில் "அசத்தினுக்கு உணர்வின்று"என்பதை விளக்கியருளியதுகாண்க.

பதிஞான பசுஞானங்களுடன் பாசஞானமென்று ஒக்கவை த்தெண்ணப்படுதலால், அப்பாசவகையாகிய காணமுதலியதத்து வங்களே அறிவில்லாதனவென்றல் பொருந்தாதென்பாரைநோக் கிமேற்கோளைச் சாதிக்கும். எது.

அதுதான் நிரூபிக்கில் இன்றுகலான்.

இ—ள். உற்றுநோக்காது தூலமாநோக்குமிடத்துபாசத்துக்கு அறிவுள்ளதுபோலத்தோன்றினும், சன்தேகவிபரீதமின்றி குற்று மற்ற சவிகற்பக் காட்சியால் நோக்கின் அப்பாசம் அறிவில்லாத தென்றேதே தெளிவென்பதாம்.

எனவே, பாசமாகிய தத்துவங்களின்வழியாக ஆன்மாவினிட த்து நிகழும் ஞானத்தையேபாசஞானமென்று உபசாரமாகக் கூறியதை, பாசத்திற்குள்ளஞானமென்றெண்ணுவது நீரூபியா விடத்துள்ள அறியாமையே யன்றி வேறில்லை என்றவாறுயிற்று.

இதனை, மேலும் உவமையால் வலியுறுத்தும் உதாரணம்.

பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தோசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதெனக் காண்.

இ—ள். பாலைநிலத்திற் காணப்படுங்கானலைச் சவிகற்பக் காட் சியாலுண்மையறியாமல் விபரீதக் காட்சியால் நீரென விரும்பி உண்ணவருபவனுக்கு அதனை அடுத்தவிடத்து அக்காணலானது நீராகாது பொய்யாயது போல ஆராய்ந்தறியமாட்டார்க்கு அப் பாசம் அறிவுள்ளதென்றே காணப்படினும், குருவினுபதேசமு றைபெற்றாராந்தறியவல்லார்க்கு அது அறிவில்லதேயென் றறி வாயாக என்பதாம்.

சவிகற்பக்காட்சி—பகுத்துணர்ந்துண்மைகாண்டல்.
விபரீதக் காட்சி—ஒன்றை மற்றொன்றுகக் காண்டல்

மூன்றுமதிகரணம்.

முதலதிகரணத்திற் சிவசத்தின் தன்மையே உயிர்க்காவதன்றி உயிர்குத் தனித்தொருதன்மையில்லையாதலால் சத்தே அசத்தை அறியுமென்று கூறுஞ்சிவாத்துவிதசைவரை மறுத்துச்சத்து அசத்தை அறியாதென்பதும்இரண்டாமதிகரணத்தில் ஆன்மசந்திதியில் கரணங்களறியுமென்றதனுலும் உயிர்க்குத் தனித்தொருதன்மையில்லை யென்றுதலால் அசத்தாகிய கரணங்களே சத்தாகிய சிவத்தைஅறியுமென்று கூறுஞ் சிவசங்கிராந்தவாதசைவரை மறுத்து அசத்து சத்தை அறியாதென்பதும் உவமானுதிகளாற் செவ்வே விளக்கியபின் சத்தும் அசத்தும் இவ்வாறு ஒன்றை ஒன்று அறியாதென்றுல் அவ்விரண்டையும்அறிவதுயாதோவென் பாரைநோக்கிப் பரிசேஷ்அளவையால் அவ்விரண்டின்வேறுய் உயிர்க்குத் தனித்தன்மை யுண்டென்பதுவிளக்கி அவ்விரண்டு மல்லாத சதசத்தாகிய ஆன்மவியல்புணர்த்தும்மேற்கோள்.

இனி, இருதிறனறிவளதிரண்டலாவான்மாவென்றது.

இ—ள். சத்து அசத்தாகிய இரண்டும் தம்மூள் ஒன்றுனென் றறியப்படாமையால் அவ்விரண்டினியல்பையும்அறிவது அவ்விரண்டுமல்லாத சதசத்தாகிய ஆன்மாவேனன்பதாம்.

இதனைச், சூரியன் உலகப்பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுவதன்றித்தான்நேரே ஒன்றொன்றுகச்சுட்டியறியான். அப்பொருள்களும் சடமாதலால் அவனை அறியமாட்டா. இவ்விருதிறப் பொருள்களும் ஒன்றுனென் றறியப் படாமையால், அவ்விரண்டையும்அறிவது அவ்விரண்டுமாகாது அவற்றின்வேறுகிய கண்ணேயாதல்போலாமென்னும் அதுமானத்தாற்காண்க.

சத்தும் அசத்துமாகிய அவ்விரண்டும் ஆன்மாவினுலும் அறியப்படாவெனில்? அறிந்தநுபவிக்கும் பிரயோசனமு மில்லை யென்றுகி, அவ்விண்டும்ஒன்றுலொன்றறியப்படாமையுடன் உயி

ராலும் அறியப்படாமையுஞ்சேர்ந்து ஒன்றாலும் அறியப்படாத சூனியமென்பதாய்முடியுமாதலால், மேற்கூறியபடி அவ்விரண்டையும்ஆன்மா அறியுமென்பதே நிச்சயமாய் ஆன்மாவுக்கு அறியுந்தனமை உண்டென்பது தெளிவாமென்க.

இச்சூத்திரத்தில் "இருநிறனறிவு" என்றதொகைமொழியில்,ஐ.ஆல், கண் மூன்றாருடன்விரித்து மூவிதப்பொருள்கூறுமுகத்தால் ஆன்மாவுக்குத்தன்னியல்புவேறு வேறுகூறுவாரைமறுத்துஉண்மை விளக்கும் ஏது.

இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டனைபாலு முளதா யுள்ளவதுவே அவ்வான்மாவா மென்றது.

இ—ள்- சத்தும் அசத்து மாகிய இருதிறனையும் அறியும் அறிவும், அறிவிக்கும்அவ் விருதிறனும் உபதேசியாய் நின் றறியும் அறியும், அவ்விருதிறப் பொருள்களிடத்தும் அது அதுவாயழுந்திநின் றறியும் அநுபவஅறிவு முள்ளதுவதுவோ அதுவே சத்தும் அசத்துமல்லாதசதசத் தாகிய ஆன்மா வென்பதாம்.

ஆன்மா இரண்டையும் அறியுமென்றதனால், சிவம் ஆன்மாவுக்காக அசத்தையறியுமென்றும், அசத்து ஆன்ம முன்னிலையிற் சத்தை அறியுமென்றுங் கூறுஞ்சிவாத்துவிதசைவர் சிவசங்கிராந்தவாதசைவரிருவரையும், அறிவித்தால் அறியுமென்றதனால், அறிவிக்கவேண்டாதுதானே அறியுமியல்பினதென்னுஞ்சிவசமவாதசைவர், ஈசுரஅதிகாரவாதசைவர், ஐக்கியவாத சைவர்முதலியோரையும், சத்துஅசத்து , இரண்டினிடத்தும் அதுஅதுவாயழுந்திநின்றறியு மென்றதனால், ஆன்மஅறிவு, முத்தியினும் மலநீங்கா தாதலால் மலத்திலடங்கிக் கல்லிப்போலக் கிடப்பதன்றிச் சிவத்துடன்சார்வதில்லை; என்னும், பாஷாணவாதசைவரையும், மலம்நீங்குதலே முத்தி; சிவனடியிற் கலத்தலன் றென்னும் பேதவாத சைவரையும், ஆன்மா முத்தியில் சிவனுடன் ஒன்றாய் விடுவதன்றி உடனிருந்து ஆனந்த மனுபவிப்பதில்லை என்னுஞ் சுத்தசைவரையும், அவரோடொப்பார் பிறரையும் மறுத்தவாறு காண்க.

இவ்வாறு மறுக்குமுறையில் மூன் "இரண்டனையும் அறிவதாய்" என்றதனால், ஒன்றையும் அறியமாட்டாத இருளுமாகாமல், தானேஅறியும் ஒளியுமாகாமல் அவற்றின் வேறுப் நின்று ஏகதேசமாயறியுங் கண்போல, ஆன்ம அறிவு ஒன்றையும் அறியமாட்டாத அசத்துமாகாமல் எல்லாவற்றையும் ஒருங்கேயறியுஞ் சிவசத்து மாகாமல் அவ்விரண்டையும் ஏகதேசமாயறியும் வேறு தன்மையுடையதென்பதும் "உபதேசியாய்" என்றதனால் அவ்வாறுஅறிவதும் ஆகாயம் தன்னிடத்துள்ள ஒலியைத் தானே வெளியிடமாட்டாமல் ஒருதுணையைப் பற்றி நின்றே வெளியிடுதல் போல, பெத்தகாலத்தில் மனமுதலிய காரணங்களும் முத்திகாலத்தில் திருவருளுந்துணையாகக் கொண்டு அத்துணைகளாலறியுமென்பதும், "இரண்டிடத்தும் அழுந்திநின்றறிவதாய்" என்றதனால், துணைகளாலறியுமிடத்துஞ் சார்ந்தபொருளின் வண்ணமாய் நிற்கும் பளிங்குபோல, அசத்தைச் சார்ந்தால் அசத்தாயும் சத்தைச்சார்ந்தால் சத்தாயும், அவ்விரண்டினிடத்தும் அதுஅதுவாயழுந்திநின்றறியுமென்பதுமாகிய மூன்றும் அவ்வான்மாவின் சிறப்பிலக்கணங்களா மென்பது விளக்கியவாறுகாண்க.

இம்மூன்றில், "இரண்டனையும்அறிவதாய்" என்றதனை வலியுறுத்தி ஆன்மா சத்துமன்று அசத்து மன்றென்பதை விளக்கும் உதாரணம்.

அருவுருவந் தானறித வாயிழையா யான்மா
வருவுருவ மன்றுகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றுது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற்றெருக்கு.

இ—ள். துண்பொருணூல்களை ஆராயும் உயிரேசத்து அசத்துக்களை யறிதலால் அவ்வுயிர் அவ்விரண்டின் வேறும். அப்படியானால் ஆன்மாவுக்குத்தனித்து நின்று தன்னுண்மை அறியப்படுமோ? படாதோ? அறியப்படுமேல் மூன்இரண்டையு மறியுமென்றுமாத்திரங் கூறுமல் தன்னுடன் மூன்றையுமறியுமென்று கூறவேண்டும்; அறியப்படாதேல் அறியப்படாதபொருள் சூனியமென்றுகொள்ளப்படுமெனில்? அவ்வான்மாவினுண்மைத் தன்

மை, சத்தும் அசத்துமாகிய இரண்டும்போல விளங்கித்தோன்றி அவற்றுடனொப்பநிற்பது மன்றுய், விளங்காது சூனியமாய்நிற் பதுமன்றுய், மலரினுள்ளவாசம்அதைவிட்டுத் தனித்துநிற்பது மின்றி அம்மலர்போல விளங்கித்தோன்றுவதுமின்றி விளங்காமற், சூனியமாவதுமின்றி அம்மலரிலடங்கிநின்றுபரிமளித்தல்போலச் சத்தைச்சார்ந்து சத்தாயும் அசத்தைச்சார்ந்து அசத்தாயும் சார்ந்ததன்வண்ணமாயடங்கித் தோன்றுவதோரியல்பாம் ஆதலால் அவ்வுயிரினுண்மைத்தன்மை சத்தும் அசத்துமாகிய அவ்விரண்டும்போலத் தனித் தறியப்படுவதன்றி அவ்விரண்டையும் அறியும்வழியால் அறியப்படுவதென்பதாம்.

"தூண்பொருணூலகனே யாராயுமுயிர்" என்றதனுல் ஆன்மாவுக்கு அறியுந்தன்மை உண்மையாற்றுன் இறைவனுல் வேதசிவாகமாதிநூல்கள்வெளியிடப்பெற்றன வென்பதும் விளக்கமாகியது. இக்கருத்துப்பற்றியே உமாபதிசிவம் "பலகலை யுலகினிலவுதலாலும்" என்றருளிற்று.

அவ்வாறு தன்னையும் அறிகின்றவுயிர், முதல்வனுக்குச்சமமான அறியுடைய தென்பாரை நோக்கி, "உபதேசியாய்"என்றதனை வலியுறுத்தி இறைவன்போலத்தானுக அறியாதென்பதை விளக்கும் உதாரணம்.

மயக்கம துற்று மருந்திற் தெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி—லசத்துமலை
நீயறிந்து செவ்வினைகணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

இ—ள். சிவசமமான அறிவுடையதுயிரென்பவனேநீ உன்னறிவை விளக்குந் துணையில்லாதபோது விடயத்தைஇன்னதென்றறியமாட்டாது மயங்கியும் பசிநோய் நீக்கு மருந்தாகிய அன்னம்போல அம்மயக்கநோய்நீக்குமருந்தாகிய அத்துணையுள்ளபோது மயக்கநீங்கிஅதனை இன்னதெனத் தெளிந்தறிந்தும் மாறிமாறி அறிந்துவருகின்றநீ, என்றும் ஒரேபடித்தாய்த் துணைவேண்டாதியல்பா யறிகின்ற முதல்வன்போலறியுஞ் சத்தியுடையவனல்

லை. அப்படியானால் நான் அசத்தனெனவெனில்? நீ துணையுள்ள போதும் முன் அறிந்துசெய்த வினைகளை இப்போது நீயேயறிந் தனுபவிக்க வல்லவனன்றி, உன்னின்வேறாய் அசத்தாகிய பாசம் அறிந்தனுபவிக்க மாட்டாமையால், அதுபோல அசத்தனுமல்லை. சப்தகுணமுள்ள ஆகாசம்போலத் துணையுள்ளபோதறிதலும் அஃதில்லாத போதறியாமையு மாகியஇரண்டுமுள்ளநீ, துணை யின்றி இயல்பா யறியுஞ் சித்தும், துணைபெறினும் அறியமாட்டா தசித்து மாகிய இரண்டிற்கும்வேறுகிய சிதசித்தே யாவாயென் பதாம்.

அம்மயக்கம்அவ்வுயிருடனியைந்துள்ள முதல்வனுக்குமுண் டுபோலு மென்றும், அது உயிர்க்கு எப்போது வந்த தென்றும் வினவுவார்க்கு விடைகூறுமுறையில் "இரண்டன்பாலுமுளதாய்" என்றதனை வலியுறுத்தும் உதாரணம்.

மெஞ்ஞானந் தன்னில் வினையாதசத்தாத
லஞ்ஞான முள்ள மணைதல்காண்—மெஞ்ஞானந்
தானே யுளதன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுளவாத் தான்.

இ—ள், மேற்கூறிய (அஞ்ஞானம்) மயக்கமானது, என்றும் ஒருபடித்தாயுள்ள (மெய்ஞ்ஞானந்தன்னில்) சிவத்தினெதிர் கதிர் முன்இருள்போல நில்லாதாதலால் (வினையாது) அங்குளதாத லின்றி, அச்சிவம் என்றுள்ளதோ அன்றே தான் சார்தற்குரிய உயிர்களுள்ளனவாக அவ்வுயிர்களைப்பற்றிநிற்கும். அது, கடலும் நீரும், உப்பு மாகிய மூன்றில் உப்பானது கடலிடத்திற் பற்றுமல் நீரை மாத்திரம் பற்றி நிற்றல் போலென்றறிவாயாக என்பதாம்.

ஈண்டுக் கூறிய, கடல், நீர், உப்பு மூன்றனுள் கடலுவமை பதி, சர்வவியாபகப்பொரு ளென்பதையும், நீருவமை, பசு, அப், பதியுளடங்கிநிற்கும் வியாப்பியப் பொருளென்பதையும், உப்பு வமை, பாசம், அப் பசுவைப்பற்றிநிற்பதேயன்றி அப்பாலுள்ள சுத்தசைதன்னிய பதியைப் பற்றமாட்டாத சடப்பொருளென்ப

ஆன்மா இலது என்றதுபற்றி அஃதுண்டென்பது, முயற் கோடு இல்லையென்பதுபற்றி அஃதுண்டென்பதை ஒக்குமென் றுகூறுவதுநோக்கி அதன் தாற்பரியமுணர்த்துவது.

ஏவற்றினையும் அன்றுஅன்றெனவிட்டு ஆன்மாஇலதென்று நிற்பதொன்றுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இ—ள். ஆன்மா இலதுஎன்னுஞ் சூனியவாதிகளும், முயலுக்குச் கோடுஇல்லைஎன்பதை நேரேதெரிந்து சொல்வது போல ஆன்மா இல்லை என்று நேரே தெரிந்து சொல்லமுடி யாமையால், தேகம் இந்திரியமுதலியவைகளே இது ஆன்மாஅன் றுஅன்றெனக்கழித்து இனி வேறொன்றுங் காணுமையால் ஆன் மா சூனியமே என்பர். ஒன்றொன்றுகக்கழித்து நீங்கி இனி வே றொன்றுமில்லையென்றறிந்து நிற்கும் அறிவுண்மையால் அதுவே ஆன்மா என்பதாம்.

அங்ஙனம் அறிந்த அறிவுஞ் சூனியமேஎனில்? அது "என்னை யீன்றருள் மலடி" என்பதை ஒக்குமென்றெழிகளன்பது கருத்து.

சூனியமாவது—உள்ளதுமன்று. இல்லதுமன்று. இரண்டு மாவதுமன்று. வேறுமன்றெனப்படும் பாழ்.

அவ்வறிவை, உடல் பொறிமுதலியவற்றில் வேறுப்பிரித் துக் காணுமுறையும், அவ்வறிவே உயிராகும்முறையும் விளக்கி வலியுறுத்தும் உதாரணம்,

அன்றன் றெனகின் றனைத்தும்விட் டுஞ்செழுத்தாய்
கின்றொன் றுளததுவே நீயனைத்து—கின்றின்று
தற்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

இ—ள்; முன், உடல் பொறிமுதலிய கருவிகளையே நான் நான் எனகின்று பின் அவைகளை இது நான்அன்று இது நான் அன்று எனக் கண்டு நீங்கியபோது, அவ்வாறு நான்அன்றுஎனச் சூக்குமபஞ்சாக்ஷரரூபமாய்அறிந்துவந்ததோரறிவு அக்கருவிகள் போற்கழிக்கப்படாமல் நிலைபெற்றுள்ளதல்லவா? அதுவும் நான் அன்றெனில், அதையுங் கண்டுகழித்த அறிவுவேறொன்றுண்டெ ன்றுமேலும் வரம்பின்றி ஓடுமாதலால், சூக்குமபஞ்சாக்ஷரரூப

மாயனீர்துவக்த அவ்வறிவே நீளன்பதறிவாயாக, அப்படியானால் மாயேபமும் சிவமும் உளவென்று முற்சூத்திரங்களால் நிச்சயிக்கப்பட்டமையால் அவையே அவ்வறிவையும் அறிந்துநிற்குமாதலால் வரம்பின்றியோடுமாறில்லேனில்? உன்னுற் சாரப்பட்ட மாபை அம்மாயாகாரியப்பொருள்களே உனக்குக் கண்ணாடிபோல விளக்குவதன்றி அறிவதன்றுகலான் அறிகின்ற நீ அம்மாயையல்லே. மாயையான்விளங்கி அறிபும்நீ அதற்கதீதமாகிய சிவமுமல்லே. அவற்றின்வேறுகிய உயிரே என்பதாம்.

இரண்டாமதிகரணம்.

தூலதேகான்மவாதி, அவ்வறிவு, தேகமின்றி நிகழாமையானும், நான் பருத்தேன் சிறுத்தேனென உடம்பினையே நானென்று வழங்குதலானும், அத்தேகமே ஆன்மா என்றுகூறுவதுநோக்கிச் சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது.

இ—ள். நான் பருத்தேன் சிறுத்தேன் என உடம்பின்குணங்களையே உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும், நான் உடம்பு நான் கைகாலெனவழங்குவாரின்றி எனதுடம்பு கைகாலென வேற்றுமைப்படவே வழங்கலால் இவ்வுடம்பின்வேறாய் ஆன்மா உண்டென்பதாம்.

தலைமாத்திரமுள்ள ராகுவை ராகுவின்றலையென்று கூறுமிடத்து வேற்றுமையின்றி ஒற்றுமையாய்க் கொள்ளுதல்போல, எனதுடல்என்பதும் வேற்றுமையின்றி ஒற்றுமையேயாம். ஆதலால் அவ்வுடலின்வேறாய் உயிருண்டென்பது பொருந்தாதென்றுகூறுவதுநோக்கி மேற்கோளின் தாற்பரியம் விளக்குவது.

என்பதி என்மனை என்முற்போல என்கை என்காலென நிற்ப தளராதலின் அதுவே ஆன்மாவாமென்றது.

இ—ள். இராகுவினது தலை என்முற்போல்வன ஏகதேசவழக்கம். என்பதி என்மனைவியென்றல்போலவே என்கை என்கால் என்கண் செவி பொறி பிராணன் அறிவெனப் பலவகையினும் பெரும்பாலும் வழங்கலால், இம்மிகுவழக்கம் வேற்றுமைப்பொ

ருள்படவே நிற்றலால், அவ்வாறு எனதெனக் கூறிக்கொண்டு வரும் பொருள் ஒன்றுண்டல்லவா? அதுவே அவ்வுடலின்வேறு கிய ஆன்மாவெண்பதாம்.

மனைவி இறந்தால் நான்இறந்தேன், மனைஇடிந்தால் நான்இடிந் தேன் என்பது எங்குமின்றி அம்மனைவிமுதலியபுறப்பொருள்கள் வேறாய்நிற்றலால், அப்பொருள்களைப் பிறிதின்கிழமையாக (வேறாக) எனதுஎன்பதுபோலன்றி, நான் நடந்தேன் அடித்தேன் என்று தேகத்தின்றொழிலை ஒற்றுமைப்படக்கூறுதல்போலக் கை கால் முதலியவைகளைத் தற்கிழமையாக எனது என்றலால் இவ் விருமொழியும் பொருளால் ஒவ்வாதென்றுகூறுவதுநோக்கி ஒக் குமென்றும், உடலின்வேறாய் உயிருண்டென்றும் அதனை வலியு றுத்தும் உதாரணம்.

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
னினதலா துணைகைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முணர்த்துநீ நிற்றிகா
ணுன்னிலைவை வேறா முணர்.

இ—ள், நீ உலகாயதத்தா லுணருமுன் மனைவிமுதலிய புறப் பொருள்களை உனக்கு வேறெனக்காணுமல் உன் உயிரெனமயங் கித் தற்கிழமைப்பொருளாக எனதெனக் கூறிநின்றாற்போல, உனதல்லாத்தை கால் முதலியவைகளை எனதென்றும், அங்ங னம் அறிந்த பாசஅறிவை என்னறிவென்றும் தற்கிழமையாக் கூறிக்கொண்டு நீ ஒருபொருள் வேறாகநிற்கின்றாய், அந்நூலுணர்ந்தபின்பு மனைவிமுதலிய பொருள்களை வேறெனக்கண்டாற் போலக், கை கால்முதலியவைகளையும் ஏதுக்களால் ஆராய்ந்து நோக்கில் அவைகள் உனக்குவேறென்பதுதெளிவாம். ஆகவே தேகம் ஆன்மாவன்றென்பது காண்பாயாகஎன்பதாம்.

மூன்றாமதிகரணம்.

இந்திரியான்மவாதி, செவி மெய் கண் வாய் மூக்குஎன்னும் ஞானேந்திரியம் ஐந்தும், அறிவில்லாததேகம்போலாகாமல் அறி யுந்தன்மையுடையனவாதலால், அவ்விந்திரியங்களே ஆன்மா வென்று கூறுவதுநோக்கி இந்திரியங்களின் வேறாய் உயிருண்டெ

னச் சூத்திரத்தின் மூன்றும்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, ஐம்புலனறிதலின் ஆன்மா வுளதென்றது.
இ—ள். ஐந்து விடயங்களையும் தானேஅறிதலால் இந்திரியங்களின் வேறுய் அவ்வறியுமுயிருண்டென்பதாம்.

ஐந்தையும்அறிதலால் ஐம்பொறியின்வேறுய்உயிருண்டென் பதெப்படி? என்று கூறுவதுநோக்கி அதன்றுப்பரியமுணர்த்து வது.

ஐம்புலனுகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங் கள் ஒன்றறிந்ததொன்றறியாமையின் இவ்வைந்தினாலும் ஐம்பய னுமறிவதுளதாகலின் அதுவே ஆன்மாவாமென்றது.

இ—ள். சத்த முதலிய ஐம்புலன்களைச் செவி முதலியஇந்தி ரியங்களுள் ஒருவிடயத்தை அறிந்தஇந்திரியம் மற்றொன்றைஅறி யாமையால் இவ்வைம்பொறிகளாலும் ஐந்துவிடயங்களையும் அறி யும்பொருளொன்றுண்டாகலான் அதுவே மேற்கூறிய ஆன் மா என்பதாம்.

இந்திரியங்கள், ஒன்றறிந்ததை வேறென் றறியாதென்றது சரி. அவ்வைந்தும் ஐந்துயிரெனக்கொள்வதில் எமக்கிழுக்கில்லை. இனி இவ்வைந்தினாலும் ஐம்புலனையும் ஒருபொருளே அறியுமென் பதற்குப் பிரமாணங்கண்டிலம். சூத்தைக்கண்ட நானே அதனைத் தீண்டினேனென்னுமிடத்து, கண்டதும் தீண்டினதும் நானே என்று அவ்வறிவுதொடர்ந்து வருதல்போல, ஒருடம்பிலிருக்கும் ஒற்றுமைபுடைய அவ்வைம்பொறிகளே ஒவ்வொன்றையுந் தொடர்ந்தறியுமாதலால், அவற்றின்வேறுய் உயிரொன்றுண்டென்பது பொருந்தாதென்று கூறுவதுநோக்கி அவ்விந்திரியங்களின்வேறுய ஆன்மா உண்டென்பதைவலியுறுத்தும் உதாரணம்.

ஒன்றறிந்த தொன்றறியா தாகியுடன்மன்னி
யன்றும் புலனுயவ் வஞ்செழுத்தை—யொன்றறிந
துள்ளதே யாகி லதுதீ தனித்தனிகண்
டுள்ளலைவ தொன்றல்லே யோர்.

இ—ள். உடம்பிலிருக்கும் அவ்வைந்திந்திரியங்களும் ஒன்றறிந்ததை வேறொன்றறியாததுமன்றி தம்முள் மாறுபடும் ஐந்தனுள் ஒன்றைமாத்திரம் அறிவதும் தாமாக அறிவதில்லை. சூக்குமபஞ்சாக்ஷரங்கள் செலுத்தச் சென்றறியும். அங்ஙனம் அறிகின்ற இந்திரியங்களின் தொழில்களைக், கண்உருவத்தை அறிவது செவி ஓசையை அறிவதென்றிவ்வாறு அறிகின்ற பொருள் ஒன்றில்லை எனில்? அவ்வறிவுநிகழாதாதலால் உள்ளதேயாம் அதுவே நீயாகியஆன்மா என்க. அவ்வாறு அறிவதும் அவ்விந்திரியங்களே யெனில்? அவைகள் ஒவ்வொன்றும் அக்ஷரங்கள் செலுத்தச் சென்று ஒவ்வொரு விஷயங்களை வேறுவேறுயறிதன்மாத்திரையேயன்றி, நாம் அறிந்தே மென்றும் அறியமாட்டா. அப்பயன்களையுங் கொள்ளமாட்டா. அவ்விந்திரியங்களின்வழியாக விஷயங்களை ஒருங்கே அறிவதும் நான் அறிந்தேனென்பதும் அப்பயன்களைக்கொள்வதும் அவற்றின் வேறாகிய ஆன்மாவே என்பதை ஆராய்ந்தறிவாயாக என்பதாம்.

இம்மூன்றதிகரணங்களாலும் சாக்கிரத்தினிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மைசாதிக்கப்பட்டது.

நான்காமதிகரணம்.

சூக்குமதேகான்மவாதி, இச்சூக்குமதேகம் புறத்தேகாணப்படாதாயினும் (நேசவிந்திரியங்கட்குநிகழறிவினற்காண்டும்)சத்தம் பரிசம் ரூபம்ரசம் கந்தம் மனம் புத்தி அகங்காரம் எட்டுமாகியஇச்சூக்குமதேகத்தால் அவ்விந்திரியங்கட்கு அறிவு நிகழுமென நீயிருந் கொள்ளுதலால் அச்சூக்குமதேகமே உள்நின்று இந்திரியங்களைச் செலுத்தி அறியும். அதனின்வேறாய் ஆன்மா ஒன்றுள்ளது அதுவே அறியுமென்பது பொருந்தாதென்று கூறுவதுநோக்கிச் சூக்குமதேகத்தின்வேறாய்உயிருண்டெனச்சூத்திரத்தின் நான்காம் பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது.

இ—ள். அவ்விந்திரியமைந்தும் ஒடுங்கின சொப்பனத்தில் நிகழ்ந்ததை அறிதலால் அங்ஙனமறியுமான்மா அதனின் வேறாயுண்டென்பதாம்.

சொப்பனத்தில் நிகழ்ந்ததைப் புறத்தேயறிவதுஞ் சூக்குமதே கமேயாதலால், இது முன்சித்தித்ததையே மேலுஞ் சாதிக்குஞ் சித்தசாதனமாகிய குற்றமா மென்று கூறுவதுநோக்கி அதன் குற்பரிய முணர்த்துவது.

நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற் பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

இ—ள். சொப்பனங் கண்டனங் கண்டிலமென்று சாக்கிரத் தி ல் மயங்கி அறியும்பொருளொன்றுள்ளதாதலால் அதுவே முற் கூறிய ஆன்மா வென்பதாம்.

ஒடுக்கமறிதலென்றது. சொப்பனத்தின் நிகழ்ந்ததை சாக்கி ரத்தின் மயங்கியறித லென்பதேயாதலால் சித்தசாதனதோஷமா கா தென்க. கனவுகண்ட சூக்குமதேகமேசாக்கிரத்தில் அதனையு ம் அறிபுமாபிற் கண்டபடியனறிமயங்கி யறியாது, மயங்கியறி தல் காணப்படுதலால், சூக்குமதேகம் போல ஒருபடித்தன்மி க் கனவிற் செல்லுதல் நனவில்வருதல் முதலிய வேறுபாடுடைய உயிரே கனவுகண்டேன் கண்டிலே னெனமயங்கியறியுமாதலால் அதுவே அச்சூக்குமதேகத்தின் வேறுயுண்டென்பதுகாண்க.

கனவிற் செல்லுதலும் அங்கு நிகழ்தலும் மீளவருதலுமூணா ர்த்தி யதனை வலியுறுத்தும் உதாரணம்.

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறுடனீயல்லே மற்று.

இ—ள். தூலவுடம்பினின்று தொழிற்படும் 'ஐம்பொறிகள் அத்தொழிலின்றீக்கிடக்கும்போது புறத்தொழிலெல்லாமடங்க ஈ அத்தூலவுடம்பினுட்சென்று அவ்வுடம்பிற்கேபால அதனின் வேறுய சூக்கும உடம்பெடுத்துக்கொண்டு வேறோர் வழியால் விளைந்து சத்தாதிவிடயங்களைப்பற்றிவிளையாடி மீண்டு அத்தூல உடம்பில் வருகின்றுயாதலால், அத்தூலவுடம்பினின்று புறத்து நிகழ்வனவற்றை அறிதல்போலச், சூக்குமவுடம்பினின்று அக

த்துநிகழ்வனவற்றை அறிகின்ற நீ அச்சூக்குமதேகமல்லை; அதனின் வேறுய ஆன்மாவேயென்பதாம்.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தில் நிகழுமியல்புபற்றிஉயிருண்மை சாதிக்கப்பட்டது.

ஐந்தாமதிகரணம்.

பிராணன்மவாதி, கனவிலன்றி மேற்செல்லமாட்டாத சூக்குமதேகம்போலாகாமல் சுழுத்திதுரியங்களிலுஞ் சென்று தொழிற்படும் பிராணவாயுவே கனவில் இந்திரியங்களே அடக்கிபும், சாக்கிரத்தில் வெளிப்படுத்தியும் அறிவதாகிய ஆன்மாவாகுமென்றுகூறுவதுநோக்கி அப்பிராணனில் வேறுய், ஆன்மா உண்டெனச் சூத்திரத்தின்ஐந்தாம்பாகத்தைப் பதப்பிரித்துரைக்கும் மேற்கோள்,

இஃரிக், கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மா உளதென்றது.

இ—ள். நித்திராகாலம் பிராணவாயு சுழுத்தியில்இருக்கும் போதும் இன்பதுன்பஅநுபவமும் உடம்பு தொழிற்படுதலுமின்மையால் அநுபவித்தலுந்தொழிற்படுத்தலு மூடைய ஆன்மா ஒன்று அப்பிராணவாயுவின் வேறுய் உண்டென்பதாம்.

சுழுத்தியில் அநுபவமும் தொழிலும் உடம்புக்கில்லையென்றது சரி. சுழுத்தியிற் பிராணவாயு நடத்தலாற் றொழிலும், பின்பு சுகமாஉறங்கினேன் என்றலால் அநுபவமும் காணப்படுதலால் அப்பிராணவாயுவுக்கு அவ்விரண்டும்அங்குஇல்லையென்றதுபொருந்தாதென்று கூறுவதுநோக்கி அதன்றூற்பரியமூணர்த்துவது. ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பம் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியாகிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இ—ள். அநுபவமென்றது, உறங்கிய சுகத்தையன்று; விஷயங்களால் வரும் இன்பதுன்பங்களேயே. தொழில் என்றது; வாயுநடத்தலேயன்று; உடம்பின்றொழிலேயே. ஆதலால், இவ்விரண்டும் பிராணவாயு நடக்கும்போதும் சுழுத்தியில் இன்மையானும்

சரக்கிரத்தில் உண்மையானும் அவ்வின்மை உண்மைகட்கு ஏது வாய் சுழுத்தியிற் கருவிகளை ஒடுக்கியும் சாக்கிரத்தில் ஒடுக்காம லும் நிற்பதொன்றுள்ளதல்லவா? அதுவே பிராணவாயுவின் வேறு கிய ஆன்மாவென்பதாம்.

சுழுத்தியில், கருவிகள் ஒடுங்கிநிற்றலால் அநுபவமும் தொழிலும் உடம்புக்கில்லையென்பது பற்றிப் பிராணவாயுவை ஆன்மா வென்பதற்கு இழுக்கு என்னை? யென்று கூறுவதுநோக்கி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணுதே
யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
யுள்ளதா முண்டிவினை யூன்

இ—ள். உடம்பின்கண்ணேகருவிகள் தொழிற்படா தொடுங்கியபோது அநுபவமுந் தொழிலும் உடம்புக்கில்லையாகவும் பிராணவாயு நிலைபெற்றியங்குதலால் அதுவேயிராஞல் அநுபவமும் தொழிலுமில்லாமற் போகவேண்டாம், ஆதலால் விடயங்களைக் கண்டறியும் உரிமையுடைய உயிர் பிராணவாயுவின் வேறுயுண்டு. அவ்வுயிர் ஒடுங்காமல் அவ்வுடம்பிற்பொருந்துமாஞல் அவ்வுடம்பு அநுபவமுந் தொழிலும் உடையதாம். அதனை ஆராய்ந் தறிவாயாக என்பதாம்.

இவ்வதிகரணத்தால் சுழுத்திதுரியங்களில்கழுமியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறும் சார்மாயைநீயல்லை என்றதனை வலியுறுத்தியவாறு.

ஆறுமதிகரணம்.

விஞ்ஞானன்மவாதி, மேற்கூறிய பிராணவாயுமுதலியவை சடங்களாதலால் அவைபோலாகாமல் என்றுஞ்சித்தாயுள்ளபிரமமே ஆன்மா என்று கூறுவதுநோக்கி பிரமத்தின்வேறுய் உயிருண்டெனச்சூத்திரத்தின் ஆறும்பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, உணர்த்த வுணர்தலின் ஆன்மா உளதென்றது.

த்ததும் ஆழுததும் "வேதநெறியும் பிருசைவத்துறையும் பூத பரம்பரையு"மாகிய மூன்றும் பொலியப்பெற்றுச் சைவஉலகம் உய்யச்செய்த திருவருட்செயலேயென்பதுந் தெளிவாமென்க. இதனை, வேதநெறித் திருவிருத்தம் முதலிலே விளக்குகின்றது.

இனித், தேவியாருடன் தீர்த்தக்கரைமேல் வந்தருளிய தோணியப்பர் தேவியாரை நோக்கி, "துணைமுலைகள்—பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன" என்றதில், பொழிகின்ற என்று நிகழ்காலத்தாற் கூறியதனால், அவ்வுமாதேவியார் "இல்லாமுலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபால்—நல்லாயுளவாமால்" தாயிடத்து முன்வெளிப்படாமல் மறைந்துள்ள முலைப்பாலுங்கண்ணீரும் தன்பிள்ளையைக்கண்டவுடன் வெளிப்படப்பொழிந்து விளங்குமென்றுகூறுஞ் சுருதிமுறையை விளக்குவாராய்த், தமதுஇளையபிள்ளையாகியஞானசம்பந்தரைக் கண்டவுடன் திருமுலைகளிற் பால்பொழிந்துகொண்டுநின்றதாதலால் நாயகர் பொழிகின்ற பாலை வள்ளத்துவாங்கி ஊட்டுவா யென்றருளினர். இதனாலும்இப்பிள்ளையார் உமையம்மையின் பாலுண்டற்குரியசுப்பிரமணியரேயென்பது தெளிவாமென்க.

"ஈறில் பெருந்தவ முன்செய்து தாதை யெனப்பெற்றார்" என்றதில் தீர்த்தக்கரையில் சோதிமயசிசுவாயிருப்பக்கண்ட சிவபாதவிருதயர் தமது தவத்துக்கிரங்கித் தோணியப்பர் தந்தருளிய சிசுவெனக்கொண்டஅவ்வளவேயாதலால், அப்பெருந்தவத்தால் அச்சிசுவுக்கு இவர் தாதையென்றுலகர்கூறும் பாக்கியம் பெற்றார் என்று விளக்குதலாலும் அப்பிள்ளையார் பகவதியார் வயிற்றிற் பிறந்தவரல்லரென்பது தெளிவாம்.

"தவமுதல்வர் சம்பந்தர்" என்றதில் தமது பக்தர்கள்செய்யுந்தவங்களுக்குவந்து அருளுகின்ற சுப்பிரமணியமுதல்வராகிய சம்பந்தரென்றுண்மைவிளக்குதலுங் காண்க.

இப்படியே பெரியபுராணத்தில் அனேகவாக்கியங்கள் விளக்குகின்றன. மேலுஞ் சிவகுமாரனென்றே எங்கெங்குங் கூறுகின்றன. அவையெல்லாம் எடுத்துக்காட்டப் புகில்விரியும். இம்மட்டிலேயே சுப்பிரமணியரே ஞானசம்பந்தரென்பதும், அவர்,

பக்வதியார் வயிற்றிற் பிறந்தவரல்லரென்பதும் செவ்வே தெளியலாம்.

இப்பெரியபுராணத்தின் திருத்தொண்டத்தொகை முதனூலாகிய தமிழ்வேதமும், "எம்பிரான் சம்பந்தன்" என்பது முதலாகப் பல அரியவாக்குக்களால் விளக்குகின்றது. வைகநூலாகிய திருவந்தாதியும் "வையமகிழ யாம்வாழ வமணர் வலிதொலைய" சமணர்முதலிய புறமதவலிதொலையவும் உலகம் சைவநெறியிலுறைத்துநின்றுய்யவும் அதுகண்டு நாமெல்லாம் வாழவுமே வந்தவதரித்தருளினரென்று விளக்குகின்றது.

இனித், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருவருட்பூர்த்திபெற்று அத்திருவந்தாதிபாடியருளியசிவாநுபூதிப்பெருஞ்செல்வராகிய நம்பியாண்டார் நம்பிகள் "மயிலேந்திய வள்ளலன்னியளிப்ப மதிபுணர்ந்த—வெயிலேந்திய சண்பைநாதன்" என்று தெளிய விளக்கியருளினர். (மயிலேந்தியவள்ளல் சுப்பிரமணியரே என்பதும் (சண்பைநாதன்) என்றது சம்பந்தரையே யென்பதும் நிராக்ஷேபமே.

சுத்தாத்துவிதசித்தாந்தசைவராகியசிற்றம்பலநாடிகள் திருச்செந்தூரகவலில் சுப்பிரமணியர் மகிமை கூறுமிடத்து "சைவம் வளர்க்குஞ்சம்பந்தன்" என்பது முதலாகப் பலவாக்கியங்கள் கூறி அவை விசேஷமகிமை என்பது விளக்கியருளினர்,

சூரியனார்கோவில் ஆதீனம் ஸ்ரீசிவாக்கரயோகீந்திரஞான சிவாசாரியசுவாமிகள் அருளிச்செய்த—சிவநெறிப்பிரகாசத்தில்.

திருவாச ரகத்தியர்நற் கவுதமர்சொற் றதீசி
தாநெறியாஞ் சைவசம யக்குரவர் பதங்கள்

திரமாக வுளத்தினிலும் சிரத்தினிலுந் தரித்தே
சிவனருள்சேர் மதலையாய்த் திருவவதாரஞ்செய்த

கரவாத திருஞான சம்பந்தர் பதமுங்
கண்மிதப்பாய் வந்தோர்தங் கழலிணையுங் கருதி

அரனுரைத் தூதேவு மவர்பதமு மற்று
மரனுர்தம் மடியார்தம் மடிமலரும் நினைவாம்.

என்றதிருப்பாசுரம் சிவகுமாரராய்த்திருவவதரித்தருளிக்கர வாமல்விளங்கியருளுந்திருஞானசம்பந்தர்என்றுவிளக்குகின்றது

இதுவரை கூறியவெல்லாம் உண்மைமேயென்பதை ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானே.

"கோலமாய நீண்மதிற்கூடலால வாயிலாய்
பாலனை தொண்டுசெய்து பண்டுமின்று மூன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலுஞ்
சீலமாய சிந்தையிற் றேர்வதில்லை தேவரே, என்று

செவ்வேவிளக்கியருளினர். இதில் ஞானசம்பந்தர் தமது பிதர் வைநோக்கி நீலகண்டனே நான்சுப்பிரமணியநாமங் கொண்டு மூற்காலத்திலும் ஞானசம்பந்தநாமங்கொண்டு இக்காலத்திலும் எனக்குப் பிதாவாகிய உன்னையேநோக்கித் தினந்தோறும் பால னுக்குரியதாய தொண்டுசெய்து அவ்வொழுக்கமேநிலைந்ததாகிய என்சிந்தையினுல் நின்னையன்றி வேறு தேவர்களை நோக்குவது மில்லையென்பது தெளிவாயது.

இனிசுப்பிரமணியர்மகிமைகளையே விளக்கி அவரதுபரத்து வநிரூபணமேசெய்து அதற்கு எவ்வித ஊனமுமின்றென்பதை விளக்கியருளுகின்ற அநுபூதிச்செல்வராகிய அருணகிரிநாதரும் திருவருளால் வெளியிட்டருளிய "திருப்புகழ்" முதலியதிருப்பா டல்களில் ஏகதேசத்திலமையாமல் அனேகஇடங்களில் சுப்பிர மணியரே ஞானசம்பந்தராக வந்தருளினரென்றுகூறி, அது அவ ரதுமகிமைகளில் அதிவிசேஷமகிமையென்பதுகாட்டியருளினர். சுப்பிரமணியரே ஞானசம்பந்தரென்பது அவரதுபரத்துவத்துக் குப்பழுதாமென்று சிலர்கொள்வதுபோல "அருணகிரியார்"கரு த்து இருக்குமாஞல், பரத்துவமே விளக்குகின்ற அவர் அவ் வாறு கூறுவரென்க.

இத்தனை ஆதாரங்களெல்லாமிருக்கவு மிவைகட்குச் சமாதா னமுங்கூறாமல், தாம்பிடித்ததே சாதிக்குங்கருத்தின் வசத்தராய் ஞானசம்பந்தர்சுப்பிரமணியரல்லர், முன் சரியைகிரியாயோகமா த்திரஞ்செய்து ஞானங்கிடைக்கப்பெறாமல், அதுகிடைத்தற்காக வந்துபிறந்தவர் என்றுசிலர்கூறுவது என்னையோ? அங்ஙனம்

கூறுகின்றவர்கள் முன் இன்னார் இன்னதவஞ்செய்து அவரே சம்பந்தராய்வந்தாரென்றுஏதேனும்ஒருபிரமாணமுங்கூறமல்மனம் போனபடிகூறுவதுபயன்படுமா? சுப்பிரமணிபரேசம்பந்தரென்பதுபற்பலபிரமாணங்களுடன்விளக்கமாயிருத்தலைஉடன்படாதுஒருஆன்மாவென்றுகூறுதலால்வரும்பலன் பின்அனுபவத்துக்குவரும்போதேனுமுண்மைதெளிவாராக.

சரியைகிரியாயோகஞானமென்னும் நான்கும் உபாயச்சரியைகிரியாயோகஞானம், உண்மைச்சரியைகிரியாயோகஞானமெனஎட்டுவிதமாய், அவ்வெட்டும் சரியையிற்சரியை முதலியவாகப்பிரிந்து ஒவ்வொன்று நான்நான்காய்முப்பத்திரண்டுவிதமாகுமென்றும், அவைகள் தத்தமக்குரிய பல்வேறுபலன்களைக்கொடுக்குமென்றும் முடிவில் ஞானத்தில் ஞானமாகியஉண்மைஞானந்தான் திருவடிபிற்கலந்துவாழும் உண்மைச்சாயுச்சியத்தைக் கொடுக்குமென்றும் அவற்றின்உண்மை உணரப்படுமென்க.

மேற் சரியைகிரியா யோகங்களைச்செய்தோர்அவற்றால் ஞானம்பெறுவதெப்படி? யென்பாரைநோக்கி அதனைவிளக்கிஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

தவஞ்செய்தா சென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

இ—ள். சரியைகிரியாயோகங்களைச்செய்தவர்கள், ஒவ்வோர்காலங்களில் அழிந்துபோகும் சுவர்க்காதிபதங்கள்போலாகாத சிவசாலோக சிவசாமீப சிவசாரூபங்களைபடைந்து அவ்வின்பங்களைஅனுபவித்தபின் அவர்கள்முன்னுடம்பு இறக்கும்போது கர்மசேஷமிருந்தால் அதனால்வரும்விடயப்பற்றினைமீண்டும் பிறந்துஅனுபவித்துநீக்கிக்கொள்ளும்பொருட்டுப்பூமியில் சரியாதிவிசேஷதவஞ்செய்தற்குரிய உயர்குலத்தில்வந்துதித்து அப்பற்றுத்தவக்குறையால்மேலும்முறுகிவிளையாமல்வேரறக்களைந்து உண்மைஞானத்தையடைவர். இறக்கும்போது அப்பற்றுமுற்றுமற்றிருவருளையே பற்றிச்சென்றோர் அச்சிவசாலோகாதி பதங்களி

லிருந்தபடியே சிவஞானம்கைவரப்பெற்றுத் திருவடியிற் கலந்து வாழ்வர். இதனை வீட்டுநூலுணர்ந்த நுண்ணறிவுடையார் உண்மைகண்டுகூறுவதொன்பதாம்.

இதனை, ஈசனியோகக்கிரியா சரியையினின்றே ரூனமிலா முத்திபதம் பெற்றுலகமெல்லா—மொடுங்கும்போதான்மு னிலா தொழிபினுற்பவித்து—ஞானநெறிபடைந்தடைவர் சிவனபங்கு காதனே முன்னிற்கினனுகுவர் நற்றுளே, என்னுஞ் சித்தியா ராலுங்காண்க.

பிறர், யாகாதிகள்செய்தல் பஞ்சாக்கினிமத்திபினிற்றல் முதலியவற்றுற் சரீராதிகளை வருத்திவருகிறதவங்க ளெல்லாம் பிறருக்குப் பெருந்தவம்போலக் காணப்படினும் அவ்வப்பயன் களை அனுபவித்துமுடிந்த அளவில் ஒழிந்துபோவனவன்றித் தொடர்ந்து நிற்பனவல்ல என்பதனை, "ஸ்வர்க்க காமோயஜேத்" என்றவேதவசனமுதலியன விளக்கும். (இ—ள். சுவர்க்கத்தை விரும்பினவன் (சோதிஷ்டாதி) யாகங்களைச்செய்க என்பதாம்.) இச்சுவர்க்காதிபதவிகள் அசுராதியராற் பற்பலமுறை பெருந் துன்புற்று வருந்துநிலையனவே என்பது புராணங்களால் விளக்கமாம்.

"தான மியாகந் தீர்த்தமாச் சிரமந்தவங்கள் சாந்தி விரதங் சுன்ம யோகங்கள் சரித்தோ—ரீனமிலாச்சுவர்க்கம்பெற்றிமைப் பளவின் மீள்வர்" என்றசித்தியாரும் விளக்கும்.

"நற்சார்பில்வந்துதித்து ஞானத்தைநண்ணுதல்" என்ற அருத்தாபத்தியால் இழிகுலத்தோர் உண்மைஞானத்துக்குரிய ரல்லரென்பது பெறப்பட்டது.

மேற்கூறிய யாகாதிகள் அற்பப் பயனுகியசுவர்க்காதி இன் பந்தந்து ஒழிந்துபோய்விடுமென்னுமுண்மைநோக்கி அவற்றில் வெறுப்படையாமல், மேலுமேலும் அவற்றைச்செய்கின்றவர் கள் அந்த யாகாதிகளும் மற்றைத் தீவினைகள்போலச் சிவஞா னம் நிகழவிடாமற்றடைப்படித்தலால் அந்நல்வினை தீவினை இ ரண்டும் தடைசெய்வதில் பொன்விலங்கும் இருப்புவிலங்கும் போ லத் தம்மூளொத்தனவே யென்பதை யுணர்வாராக.

பாட்டாசாரியன், சரியாதி தவங்களே தத்துவஞானத்தைத் தருமெனவற்புறுத்துவதென்னை? வேதத்துட்கூறும் யாகாதிகளுந்தருமென்பதை நோக்கி ஈதுவைவலியுறுத்தும் உதாரணம்.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினைபி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து.

இ—ள். ஒருநல்வினையைச் செய்யத்தொடங்கிநூலை ஆராயும் போதே அதன்பயனும் அது அனுபவிக்கப்பட்டொழிபும் எல்லையும்உடன்கூறிக்கொண்டேவருகின்றயாகாதிசாமானிய புண்ணியவினையால் வருபின்பம், பசித்துண்டவன் அப்பொழுது இன்புறினும் பின்னும்பசித்துன்ப முறுவானன்றிவேறில்லை ஆதலால் அவன் அப்பொழுதுற்ற இன்பத்தையேஒக்கும். அவ்வாறுதம் பலனைக்கொடுத்து ஒழிந்துபோகின்ற யாகாதிபுண்ணியவினைகள் அம்மட்டினுமன்றித்தீவினைபோல ஞானம்நிகழவிடாமல் தடுத்தலுஞ்செய்யும், அதுஒருவனை இருப்புவிலங்கையன்றிப்பொன்விலங்கும் தடைப்படுத்தல்போலாம். ஆதலால் இப்பொன்விலங்கொத்த யாகாதிநல்வினைகளும் இருப்புவிலங்கொத்த மற்றைத் தீவினைகளும்போல அனுபவ மாத்திரையி னொழிந்துபோதலின்றி, மேலுமேலுமுறுதி வளர்வனவாகிய சரியாதிதவ விசேடத்தால் அவ்விருவினைகளின் ஓப்பு நேர்ந்தபோது அத்தவமுதிர்ச்சியால் சற்குருவைத்தேடியடைந்துஉண்மைஞானத்தைப்பெறுவனென்பதாம்.

பலன்முடிவுசொல்லிக்கொண்டுவரும்யாகாதிகளில் வருமின்பம், "பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்"என்றதனால் யாகாதிகள்போல அனுபவித்த அளவிலொழியாது வளரும் சரியாதிதவங்களாலடையப்பெறும் ஞானம் பசித்துண்டு பின்னும் பசித்தலில்லாதஅமுத உண்டியால்வரும்பயனை ஒக்குமென்பதும் விளக்கமாம். ஆகவேஅவ்வமுதஉண்டி நாதிநிமூப்பின்றிநிலை பெறுதலாகிய பெரும்பயனைத் தருவதுடன் பசி நீக்கமாகிய (இடையில்வரும்) அவாந்தரப்பலனையும் தருதல்போல அழிவில்லாத சரியாதிதவம் உண்மைஞானத்தைத்தருவதுடன் சாலோ

காதி பதமுத்தியாகிய (இடையில்வரும்) அவாந்தரப்பலனையும் தருமென்பது தெளிவாமென்க.

இரண்டாமதிகரணம்

சாங்கியர் தார்க்கிகர்முதலியோர் நம்மவரிலொருவராய்க் கலைஞானங்களையுணர்த்திய ஆசிரியரே சிவஞானத்தையும் உணர்த்துவரென்பதை நோக்கிச் சூத்திரத்தின்இரண்டாம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இவ்வான்மாக்களுக்குத் தமதுமுதற்றனேகுருவுமாய் உணர்த்து மென்றது.

இ—ள். சரீரத்துள்ளிருக்கும் ஆன்மாவைப் பற்றியமல நோயை அவ்வான்மாவினுள்ளிருக்கும் அந்தரியாமியாகிய சிவபிரான் அறிந்து சிவஞானமருந்தால் மாற்றுலன்றி "அகத்து றுநோய்க் குள்ளின ரன்றியதனைச்—சகத்தவருங் காண்பரோ தான்" என்றுதிருவருட்பயன்கூறியபடிபுறத்தேநிற்கும் சகத்தவ ரால்அந்நோய் இன்னதென்றுகண்டுஅம்மருந்துதயிமாற்றமுடியா தாதலால், சரியாதிமூன்றும்முற்றுப்பெற்றுஅதனுல்மலபரிபாக சத்திநிபாதனிலக்கம்வாய்ந்து சிவஞானத்தைஅவாவு முயிர்க்கு, இதுவரை உள்நின்றுஉணர்த்திவந்தசிவபிரானே, அப்பக்குவந் தெரிந்துகுருமூர்த்தமாயெழுந்தருளிவந்து அதனை அறிவித்தரு ளுவனென்பதாம்.

அழிவில்லாத அருள்வடிவனுகிய முதல்வன் அழிவுள்ள மாயா சரீரமாகிய குருவடிவங்கொள்ளான்; கொள்ளின் எம்மவரில் ஒரு வனுய்முடியுமாதலால், அக்குருவடிவை இடமாக்கொண்டுநின்று ணர்த்துவனென்றுபொதுவகையான் அதிஷ்டானபக்கங் கூறி வாரைநோக்கிச் சிறப்புவகையான் ஆசேபபக்கமுணர்த்திமேற் கோள் வலியுறுத்தும் ஏது.

அவன், அந்நியமின்றிச் சுதந்தன்னியசொரூபியாய்நிற்றலான்;

இ—ள். சிவபிரான் சரியாதிகள்செய்துமுற்றுப்பெற்ற பக்கு வான்மாவுக்குணர்த்தவரும் ஞானகுருவடிவம் அழிவுள்ளமாயா சரீரமன்று, நீர்கூறியபடிகுருவடிவை இடமாக்கொண்டுணர்த்துவ

னென்று பொதுவாக்கொண்டால், அங்கு முதல்வன் பாலின் நெய்போல மறைந்து வேறுபடாதிருப்பினும், அது எல்லாஇடங் களிலுந்தங்கிநிற்கும், பொதுவகையான அதிஷ்டானபக்கமாய் மற்றைச்சரியாதி குருவர்களிடத்துஞ்சென்று இங்குணர்த்தவந்த துசரியையகிரியாயோகமுடிவிற்கூறும்; ஞானமேஎன்றதற்குவிரோ தமாம் ஆதலால், அப்படியின்றிச் சிவபிரான் மலமூற்றுநீங்கிச் சிவமாய்விளங்குங் குருவினது சுத்தான்ம சைதன்னியமே தன க்குத் திருமேனியாகக்கொண்டு தயிரினிடத்துள்ளநெய் மறை ந்துவேறுபடாமல் அத் தபிரேயாய்விளங்குதல்போலச் சிறப்பு வகையான ※ஆவேசபக்ஷமாய் விளங்கிநிற்பனுதலால் அச்சிவபி ரான் தானே குருவாய்வந்துணர்த்துவனென மேற்கொண்ட தென்பதாம்.

முதல்வன் குருவினது சுத்தான்மாவில் ஆவேசபக்ஷமாய் விளங்கி நிற்றலால் சிவமேஆகிய அவ்வான்மாதங்கியிருக்கு முடம்பும் அருண்மயமேயாமென்க.

ஓவ்வோரிடங்களிற்குருவாய்வந்துணர்த்துதலின்றியும்ஞான ம்விளங்குவதென்னை? யென்பாரைநோக்கி அதனை விளக்கி வலி யுறுத்தும்உதாரணம்.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

இ—ள். ஆன்மாக்கள் ஆணவமலமாத்திர முள்ளவிஞ்ஞானகலர் மலமுங்கன்மமு முள்ளபிரளயாகலர், மலங்கன்மம்மாயை மூன்று முள்ள சகலரென மூன்றுவகையினராதலால், முதல்வன் அவர

※ஆவேசபக்ஷம்--பேய்பிடியுண்டவன் அப்பேயாய் விளங்குதல் போலச் சிவமாந்தன்மைபெற்ற சுத்தான்மாவிடத்துச் சிவன் விளங்கிநிற்றலாம். இது சிறப்புவகையான அதிஷ்டானபக்ஷ மாம். அதிஷ்டானபக்ஷமென்பது-- இடமாக்கொண்டு நிற்றலாம். அதுமறைந்துநிற்பதாகிய பொதுவும், விளங்கிநிற்பதாகிய சிறப்பு மென்றிரண்டுவிதமாம்.

வர் பக்குவத்துக்குத்தக்கபடிவேறுவேறுவிதமாயுணர்த்துவன். அவைவிஞ்ஞானகலர்க்கு உள்ளேநின்றவாறேதத்துவஞானத்தை விளைவிப்பதாகிய தன்மையும், பிரளயாகலர்க்கு மூக்கண்ணும் நாற்றேளுங்கறைமிடறுமுதலிய அங்கங்களேயுடைய தன்இயற் கைவடிவே குருவடிவாய்க்காட்டிமுன்னின்றுபதேசித்துணர்த்து வதாகிய முன்னிலையும், சகலர்க்குஅவர்வடிவுபோலும் வடிவு டைய குருவாகிப் பின்னின்றுணர்த்துவதாகிய படர்க்கையு மாம். இவ்வாறுமுதல்வன் மூவிதமாயுணர்த்தும் வேறுபாட்டை யறிவாயாக என்பதாம்.

உள்நின்றுணர்த்துதலே நோக்காமையாற் குருவாய்வந்து ணர்த்துதலின்றியும், ஞானம்விளங்குவதென்னென்று நீகூறிய தன்றிவேறில்லை என்க.

இம்மூன்றில் தன்மைமுன்னிலையிரண்டும்நிராகாரம்; படர்க் கைசாதாரமென்றறிக.

இம்மூவகையினர்க்கும் ஓரேபடித்தாயுணர்த்தாமல் மூவிதமா யுணர்த்துவதெதற்கென்பாரைநோக்கிக்காரணங்காட்டி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

அறிவிக்க வன்றி யறியா வளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

இ—ள், உயிரெல்லாம் தம் பக்குவங்கட்கேற்றபடி முறை யாக முதல்வனறிவிக்க அறியுமன்றி ஒன்றுபோலறியுமியல்பின வல்ல; ஆதலால் அவ்வறிவாற் குறைவில்லாத இயற்கையறிவின ஞகிய சகக்கடவுளது உபதேசத்தாலறியுமியல்பினராகிய பிரள யாகலர்சகலருக்குஅறிவித்தாலறிதலாகிய குறைகள்(இன்றியமை யாமை)முன்னிலை பின்னிலைகளின்நிகழும். குறைவின்மையுடையஉப தேசமொழிகொண்டுணரவேண்டாத விஞ்ஞானகலருக்கு உண் ணின்றுணர்த்தும் முதல்வனுற்கொள்ளப்படும் (பவத்தின்) தன் னுண்மைமாத்திரையே வீடுறுதற்குரிய ஞானமுண்டாமென்றறி வாயாக என்பதாம்.

தன்மைமுன்னிலையின் விஞ்ஞானகலர் பிரளையாகலர்க்குணர்த்தலேயுண்மையாம். குருவின் ஆன்மாவில்நின்று சகலர்க்குணர்த்தலே முதல்வனே குருவாய்வந்துணர்த்துவானென்றது உபசாரமேயென்பாரைநோக்கி அதுவுமுண்மையாதலே உவமையால் வலியுறுத்தும் உதாரணம்,

இல்லா மூலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றவீ யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றுனே லுற்று.

இ—ள். நீரினுள்ளே மீன்முதலியன சஞ்சரித்தற்கிடங்கொடுத்துள்ள வெளியாகிய நிழல்அந்நீரினிடத்து வேறின்றிக்கலந்து வெளிப்படத்தோன்றுமல் நிற்றல்போல, ஆன்மாக்களிடத்து வேறின்றிக்கலந்து வெளிப்படத் தோன்றுமல் அருவாகிநிற்கும் முதல்வன் மாதாவுக்குத் தன்பிள்ளையிடத்துள்ள அருவாகிய அன்பைப் பிறரறியக்காட்டுகின்ற அவ்வன்புருவாகிய மூலைப்பாலுங் கண்ணீரும், அத்தாயின் சரீரத்துள்ளே வேறின்றியெங்குங்கலந்திருந்தும் அப்பிள்ளையைக் கண்டபோது வெளிப்பட்டும் காணுதபோது மறைந்தும் நிற்றல்போல, அவ்வான்மாக்களிடத்துப் பக்குவங்கண்டபோது வெளிப்பட்டுநின்றருளுவன். காணுதபோது மறைந்துநிற்பன். அவ்வாறு தானே வெளிப்பட்டுவந்தருளாதுகில் வேறுயார் அவனைத்தாமாக அறியவல்லார்? ஒருவருமில்லையாதலால் அவனே குருவாய்வந்துணர்த்துவானென்றதே தெளிவென்பதாம்.

மூலைப்பாலுங் கண்ணீரும் அன்புண்மை விளக்குதலே
திருக்களிற்றுப்படியார்.

சுரந்த திருமூலைக்கே துய்ய சிவஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு. என்றதனாலும்,

திருக்குறள்.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்

புன்கணீர் பூச லுரும். என்றதனாலுங் காண்க.

இனிச், சிவசங்கிராந்தவாதசைவர் விடயஞானத்தை விளக்கும் ஐம்பொறிகளே தத்துவஞானத்தையும் விளக்கும். முதல்வன் குருவாய்வருதல் வேண்டாமென்பது நோக்கிச் சூத்திரத்தின் மூன்றும்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இவ்வான்மாக்கள் ஐ்புணர்வுகளான் மயங்கித்தம்மை யுணரா வென்றது.

இ—ள். உணர்த்த உணரும்இயல்புடைய உயிர்கள் ஐம்பொறிகளால் மயங்கித்தமதுசொரூபத்தை அறியாவென்பதாம்.

அறிவைவிளக்கும் கருவியால் மயக்கமுறுதல்எப்படி? என் பாரைநோக்கி மேற்கோளாச்சாதிக்கும் ஏது.

அவைதாம் பளிங்கிலிட்டவண்ணம்போற் காட்டிற்றைக்காட்டி கிற்றலான்.

இ—ள். பளிங்கில்வைத்த பலநிறங்கள், அப் பளிங்கொளி யைக் கீழ்படுத்தித் தம்மியல்பையே விளக்குதல்போல், ஆன்மா வினிடத்துக் கருவியாயுள்ள ஐம்பொறிகள் அவ்வான்மசொரூப பத்தைக் கீழ்ப்படுத்தித் தம்விடயங்களையே காட்டிநிற்கும். அது வும்ஒன்று மற்றொன்றைக் காட்டமாட்டாது. தத்தமக்குரிய ஒவ் வொன்றையேகாட்டிநிற்குமாதலால் அப்பொறிகள் தத்துவஞான த்தைவிளக்கா. அவற்றால் மயங்கிநிற்கும் ஆன்மாக்களும் தமது சொரூபத்தை அறியாவாம். ஆகவே முதல்வன்குருவாய்வந்துணர்த்தவேண்டுமென்றதே தெளிவெண்பதாம்.

அவ்வாறுகாட்டியதையேகாட்டிநிற்குமேல் அவற்றால் மயங் கிநிற்கும் ஆன்மா அப்பொறிகளுடனிருக்கும்போது முதல்வன் குருவாய்வந்துணர்த்தினும் உணரமாட்டா கருவிகளை நீங்கிநிற் கினும் அது அறிவின்றிக்கிடக்குங்கேவலாவத்தையாக முடியும் போலுமென்பானைநோக்கி உணர்தற்குபாயங்கூறி அதனைவலி யுறுத்தும் உதாரணம்.

பன்னிறங் காட்டும் படிகம்போலிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்

பொய்ப்புலனே வேறுணர்ந்து பொய்பொய்யாமெய்கண்டா
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு. [ன்

இ—ள். தன்னில்வைக்கப்பட்ட பலநிறங்களினியல்பையே தன்னிடத்துக்காட்டிப் பொதுவினிற்கும்பளிங்குபோல, ஆன்மா தன்னுற்சாரப்பட்டஇந்திரியங்களினியல்பையே சார்ந்ததன்வண்ணமாய்த் தன்னிடத்து விளக்கிநிற்குந் தனது பொதுவியல்பை முன்னர் ஆராய்ந்தறிந்து அந்நிறங்கள்படிகத்துக்குவேறென்றறிதல்போல, அவ்வான்மாபின்பு அப்பொறிகளின்மயங்கிநிற்கும் பொதுவியல்பின்நீங்கி அப்பொறிகளைத்தன்னின்வே றெனத்தெளிந்து அப்பொதுவியல்பு பொய்யாயொழியத் தனது சிறப்பியல்பினுண்மையை அறிந்தாலுகில், அவ்வறிவுதன்னிடத்தில் சிவசத்தினியல்பை விளக்குமாதலால் அவ்வான்மா அச்சிவசத்துக்கு அடிமையாய்விடுவனென்பதாம்.

நான்காமதிகரணம்

பேதவாதசைவர்முதலியோர்,பொறிகளுடன்மயங்கிநிற்கும் பொதுவியல்பினீங்கித் தனது சிறப்பியல்புகண்ட ஆன்மாவுக்குக் காண்டலேபோதியதாம். கருவிகளைவிட்டுத்தனித்துநிற்கும் போதுஒருமுயற்சியும் நிகழாதாதலால் அப்போது அவ்வான்மா திருவடியை அடைந்து சிவசத்துக்குஅடிமையாதல்செல்லாதென்பதுநோக்கிச்சூத்திரத்தின் நான்காம்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும்மேற்கோள்.

இனி, இவ்வான்மா தன்னை இந்திரியத்தின்வேறுவான்காணவே தமது முதல்வன்சீபாதத்தையணையுமென்றது.

இ—ள்.பொறிகளான்மயங்கித்தன்னையறியாதென்றஆன்மாசித்தாய் வியாபகமாயுள்ள தன்னியல்பை, சடமாய் ஏகதேசமாயுள்ள பொறிகளின்வேறென்றறியும் வியாபகஅறிவிற்கு, அவ்வாறுவேறென்றுகழிக்கப்பட்ட இந்திரியங்களால் ஆகக்கூடியது ஒன்றுமில்லையாதலால் சற்குருவால்வேறென்றுகண்ட அளவிலே வேறுகாரணம்வேண்டாமல் முதல்வனது திருவடியை அணையுமென்பதாம்.

பொறிகளினீங்கியபோது கேவலத்திலுறுதலுமுண்டாதலால் அதனை நீக்குதற்கேவேறுகளன்றுமாத்திரங்கூறுது "வேறுவான்காணவே" என்றருளியது. திருவடி அணைதற்கு அவ்வாறுகாண்டலேபோதியதென் பதைத்தேற்றேகாரத்தால்விளக்கியதுகாண்க.

அவ்வாறுகாண்டலேபோதுமென்பதெப்படி? யென்பாரை நோக்கி உவமையின்வைத்துமேற்கோளெச்சாதிக்கும்எது:

ஊசல் கயிறற்றுற் றுப் தரையாந்துணையான்.

இ—ள். ஒருவனிருந்தாடும் ஊசல்கயிறற்றுல் அவனுக்கு உற்றுழிஉதவுந்தாய்போல ஆதாரமாய்த்தாங்கி நிற்பது தரையேயன்றிவேறில்லை என்னும் ஒப்புமையால், ஆன்மாஇந்திரியங்களினீங்கித்தன்னை அச்சடங்களின்வேறுகிய வியாபகசித்தெனக்கண்டவளவிலேயே தமது முதல்வனது திருவடிஅணையுமெனமேற்கொண்டதென்பதாம்.

ஆன்மாவியாபகப்பொருளாதலால் அது, கருவிகளினீங்கி நிற்குமெனில்வியாபகத்துக்குப் பழுதாம். ஆதலால் அவ்வான்மா தன்னை வியாபகசித்தென்றும் அக்கருவிகளோச்சடமென்றுங்காணும்ஞானவிசேடமே நீக்கமாம். ஆகவே அதற்கு ஊசல் கயிறறுதல்உவமையாயிற்று.

கருவிகளினீங்கினபின்வேறுய் நில்லாமற் சிவத்தை யணையுமானுல்கருவிநீங்கிக்கேவலாவஸ்தையையடைந்தஉயிர்கள் மீண்டுவருதல்போல, இவ்வான்மாவும் மீண்டுவரும்போதுமென்பாரை நோக்கிமீண்டுவருவதின்றெனக்கூறிஉவமைமுகத்தால் விளக்கும் உதாரணம்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற்றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

இ—ள். அணைபோட்டுத் தடைசெய்யப்பட்டு அதனுள் அடங்கிக்கிடந்த ஆற்றுநீர்போல்கருவிகளாலையபாசஞானந்தனதுவியா

பகத்தைத்தடைசெய்ய அதனுள்ஏகதேசமாயடங்கித் தடையுண்டுநின்ற உயிர், அணையுடைந்தபோது மிகவிரைந்துகடலையடைந்தடங்கி அந்நீரேயாய் மீளாது நிற்கும்ஆறுபோல், அப்பாசத்தடை நீங்கியபோது அழிவில்லாதசிவனடியை அடைந்துஅத்திருவடிநிறைவி லடங்கி அந்நிறைவேயாய் மீளாதிருக்குமென்பதாம்.

மலசத்திக்கு அழிவுண்மையால் மலத்தைச்சார்ந்த ஆன்மா அதனைவிட்டு மீளுமென்பதும், சிவசத்திக்கு அழிவின்மையால் சிவத்தைச்சார்ந்தஆன்மாமீளாதென்பதும்விளங்க "உலைவிலரன் பாத" மென்றார்.

சிவாத்துவிதசைவர், மீளாதென்றுகூறவேண்டாம்எல்லாஞ் சிவமாக்கண்டவர்கள் மீண்டாலென்மீளாவிடி லென்னென்பது நோக்கி அதுவிடையன்றெனக்கூறி மீளாமையை மீட்டும்வலியுறுத்தும்உதாரணம்.

எவ்வுருவுந் தானென்னி லெய்துவா ரில்லைதா
னிவ்வுருவின்வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

இ—ள். திருவடியடைந்தமையால் சிவத்தையே அறியும் ஆன்மஅறிவு சிவமாதலேஅன்றி விடயங்களை அறியும்பாச அறிவுஞ் சிவமேயாமாயின், அப்பாசஞானத்தைக்காட்டிலும்பதிஞானத்துக்குவிசேடமின்மையால்புலன்வழிச்செல்லும்சகலநிலையைவிட்டுத் திருவடியடைய முயலவேண்டாம். ஆதலால் அதனைஅடைவார் ஒருவருமில்லையாய்ப் "பாசத்தைப்பசுக்கள் விட்டுப்பதியினையடையமுத்தி" பசுக்கள்பாசத்தைநீங்கிப்பதியையடைவது முத்தியென்று கூறும்வேதசிவாகமங்கள் போலியாய்முடியும். அதுநோக்கி முதல்வன் பாசஅறிவுடனியையபின்றிவேறுய்கிற்பனெனில்? பாசஅறிவுக்கு அவனுதவிவேண்டியதில்லைஎன்பதுடன் அப்பாசத்துக்கு அவன்இறைவனல்ல னென்றுகி அவனதுசர்வவியாபகமுதன்மைக்கிழுக்காய் முடியும். ஆனல் அதனியல்பென்னையோவெனில்? ஆன்மஅறிவுசிவமாய் விளங்குதல்போல, அக்கருவிகளினறிவும் முதல்வன்கலப்பினுற் சிவமாயினும் இரண்டும் தம்

மூல்ஒப்பனவல்ல. ஆன்மா, ஐம்பொறிகளிலுங்கலந்து நிற்பினும் அவற்றுள்ளே கண்ஒளியுள்ளதாதலால், தூரித்தபொருளையும் ஆன்மஅறிவுடன்சென்று வியாபித்தறிதலும் மெய்வாய்மூக்குச் செவி நான்கும் தம்மிடத்துவந்ததைமாத்திரம் ஏகதேசமாயறிதலுமாகிய, வேற்றுமை காணப்படுதல்போல, முதல்வன் ஆன்மாவினும் பாசத்தினும் வியாபித்திருப்பினும், ஆன்மாவியாபித்தறிதலும் பாசம்ஏகதேசமாயறிதலுமுடைபனவேயாம். கண்ணுக்குச்சென்றறியுமேன்மையுண்டென்பதை, மாசுபடர்ந்தகண்தூரித்தபொருளைக்காணமாட்டாது மாசுநீங்கியபின்பு காண்டலால் அறியலாம். அதுபோல உயிருக்கு வியாபித்தறியுமேன்மையுண்டென்பதை, வியாபக அறிவிழந்த பசுத்துவமுடையாரிடத்தறியமுடியாதாயினும் அவரது பசுத்துவநீங்கிய சிவத்துவப்பேற்றின்கண் அறியலாம். ஆகவே திருவடியடைந்தவியாபகஅறிவாய்விளகுகின்றஆன்மாவின் கருவிகளுடன்கூடி ஏகதேசமாயறிந்ததானும்ஏகதேசமாகும்படி மீண்டுவாராதென்பதாம்.

ஆறு அணையுடைந்தவுடன் கடலிற்சென்றடங்குதல் மாத்திரமன்றி, " ஆற்றுலகுகடற்கேபாய்ந்தநீர் அவ்வாற்றான்" மறித்தலும் (திரும்புதலும்) உண்டாம். அதுபோல் திருவடிஅடைந்த ஆன்மா அத்திருவடியிலடங்குதலன்றி ஒருசமயந் திரும்பிஐம்பொறியாதிகளைச் சார்தலுமுண்டாதலால், ஒருகாலத்தும் மீளாதென்றல்பொருந்தாதென்பாரைநோக்கி மீளுதற்குக்காரணமும் அதனைநீங்குமுபாயமுங்கூறிவலியுறுத்தும் உதாரணம்.

ஐம்பொறியி னல்லையெனுமந்த தரசிவனை
ஐம்பொறியை விட்டங் கணைசகல—னம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமலகன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து.

இ—ள். ஐம்பொறிகள்போல ஏகதேச அறிவுடையையல்லையென்றுபதேசிக்கப்பெறுஞ் சித்தாந்தமகாவாக்கியத்தை யுடைய மாணவனே? அணைஉடைந்து கடலிற்சென்றடங்கும் ஆறுபோலெனமேற்கூறியபடி, துக்கமயமாகியஉலகப்பொருளையறியும்ஏகதேசஅறிவினீங்கி வியாபக அறிவினஞ்ஆனந்தமயமா

கிய திருவடி அடைந்தின்புறுகின்ற ஆன்மா, அப்பொறிகளால் அத்திருவடியைவிட்டுநீங்குவதில்லை கல்லைஎறிந்தபோது நீங்கிய நீர்ப்பாசிபின்புமூடிக்கொள்ளுதல்போலத், திருவடியணைந்தபோ துவிட்டுநீங்கியமலகன்மமாயைகள்முந்தியவாசனைவசத்தால்வரு கின்ற மறதிகாரணமாக அவ்வான்மாவைஒருவாறுவந்துகூடுமா யின், அப்போது அவ்வான்மா அப்பொறிவழியின் மீளாமல் அவ்வாசனைதாக்கும்போதுந் தன்னைவிட்டுநீங்கா துபகரித்து நிற்கும்முதல்வனை இனிக்கூறப்படும்பஞ்சாக்ஷரசெபமுதலிய உபா யங்களினின்று சிந்தித்துஅவைகளைநீக்கிக்கொள்ளுமாதலால், மூன்மீளாதென்றதேதுணிபென்பதாம்.

"மலகன்மம்வரின்" என்றதனால் பூர்வவாசனைவந்தாற்றான் வருமென்பதும் அஃதில்லையேல் வாராதென்பதும் விளக்கமாம்.

இம்மூன்றுதாரணங்களும், வியாபக அறிவாகியசிவஞானம் பெற்ற ஆன்மா, ஏகதேச அறிவாகிய பாசஞானத்தில் மீளுவ தில்லை யென்பதும், மீளுதல்குற்றமென்பதும், ஒருவாறு வாசனை வசத்தால் மீளவருமாயின் பஞ்சாக்ஷரசெபமுறையில் மீளாதபடி செய்துகொள்ளற்பாலதென்பதுங்கூறி, ஏதுவில் "தாய்தரையே" என்றதேற்றேகாரத்தைவலியுறுத்தி மேற்கோளில் "சீபாதத்தை" அணையும்என்றஒரேபொருளில் வந்தனகாண்க.

இச்சூத்திரம், மூன்சூத்திரத்தில் சத்தும் அசத்துமாகிய இருதிறனறிவுளதென்ற ஆன்மா, ஐம்புலவேடரைச்சார்ந்துதன் னையுந்தலைவனையும் அறியாதுமயங்கிநிற்றல்நோக்கி முதல்வனே குருவாய்வந்துஉபதேசிக்குஞ் சிவஞானத்தால் ஐம்புலவேடரி னீங்கிமுதல்வன்றிருவடியைஅடையுமென்பதும், அச்சிவஞான விளக்கத்துக்குச் சரியை கிரியாயோகங்களாகிய தவங்களேகார ணமென்பதும், யாகமுதலியதவங்கள் சுவர்க்கமுதலிய அற்பஇன் பங்களைத்தந்து அம்மட்டில் ஒழிந்துவிடுமென்பதும், மேற்கூறிய உபதேசகுரு நம்மவரிலொருவரே யென்பாரைமறுத்து.

"அகத்துறுநோய்க்குள்ளின ரன்றியதனைச்
சகத்தவருங் காண்பாரோ" தான் என்றபடி;

புறத்தவராகிய நம்மவரிலொருவரால் உயிரினகத்துள்ள மல நோயின்பக்குவமறிந்து நீக்கமுடியாதாகலால், அவ்வுயிர்களுட் கலந்துவியாபித்திருக்கும்முதல்வனே குருவாய்வந்துணர்த்தி அந் நோய்நீக்கியருள்வனென்பதும், உயிர்கள் மூவகையராதலால் தன் மைமுன்னிலை படர்க்கை யெனமூவகையாய்நின்றுணர்த்தியருள் வனென்பதும் அவ்வுயிர்கள் ஒருமலர் இருமலர் மும்மலராய்நிற் றலே அதற்குக்காரணமென்பதும், விடயங்களையறிவிக்கும்பொ றிகளே முதல்வனையுமுணர்த்தும் குருவேண்டாமென்பாரைமறு த்து, ஐம்பொறிகள் மயக்கஞ்செய்யுமன்றி முதல்வனையுணர்த்தா வென்பதும், பொறிகளினீக்கம் அறிவற்றகேவலமாதலால் அப் பொறியுணர்வைப்பொய்யாகக்காணவேண்டுமென்பதும், அவ்வா றுகாண்டலேபோதும் அவ்வுயிர்முதல்வனையடையுமென்பதில்லை யென்பாரைமறுத்து, பொறியுணர்வாகிய பாசஞானம் பொய் யெனக்கண்டவுடனே சிவஞானச்செயலாற் றிருவடியடையுமெ ன்பதும், அடைந்தபின்பொறிவழியில் வாராதென்பதும், வருதல் பழுதென்பதும், ஒருவாறுபழைபவாசனையால் மீளவரின் முதல் வனைநினைந்து அதனைநீக்கிவிடுகவென்பதும் விளக்குதல் காண்க.

ஒன்பதாஞ்சூத்திரம்

சாதனவியல்.

ஊனக்கண் பாசமுணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிக்தை நாடி
யுராத்துணைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழ லாம்பதி விதியெண்ணுமஞ்செழுத்தே.

கருத்துரை. ஆன்மசுத்திபண்ணுமாறுணர்த்துதலுதலிற்று.

இ—ள். ஆன்மாமுதல்வன் குருவுமாயுணர்த்தக்கேட்டு அத னைச்சிந்தித்துணருமுறைகூறி அச்சிந்தனையால் முன்ஐம்புலவேட னின்வளர்ந்த அசுத்தத்தைநீக்கித்தன்னைச்சுத்தப்படுத்துமுறைகூ றுவதென்பதாம்.

சூ—ள். குறைபுணர்வாகிய பசுஞானத்தாலும் பாசஞான த்தாலும் அறியமுடியாதபதியாகிய சிவபிரானை, அவனதுதிரு

வடிஞானத்தால் ஆன்மாதனது அறிவின்கண்ஆராய்ந்தறிக. அவ்வாறு அறியுந்திருவடிஞானத்தால் (நூலுசு)தத்துவங்களாகியபாசக் கூட்டம்கானல்நீர்போலக் கழிவதென்றறிந்து நீங்கினஉடனே அப்பதிஞானம்பிறவித்துன்பவெப்பொழித்தற்குரியகுளிர்நிழலாய்வெளிப்பட்டுவிளங்கும். அவ்வாறு பாசம்நீங்கிப்பதிஞானம்பெற்றுச்சிவனைக்கண்டகாட்சிநழுவாதுநிற்கும்பொருட்டுப்பாசநீங்கிப்பதியைஅடைதலாகிய பொருளைத்தருகின்ற திருவைந்தெழுத்து அவ்வான்மாவினுல் அவ்விதிப்படிஅறிந்து தியான முறையிற் சுத்தமானசமாகச் செபிக்கப்படுமென்பதாம்.

இச்சூத்திரம், "ஊனக்கண்பாசமுணராப்பதியைஞானக்கண்ணினிற் சிந்தைகூடி" எனவும், "உராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவத்தண்ணீழலாம்பதி" எனவும், "ஐந்தெண்ணுமஞ் செழுத்தே" எனவும்மூன்றதிகரணமுள்ளது.

முதலதிகரணம்

சிவசமவாதசைவர், முதல்வன்பாசஞானத்தாலறியப்படானுயினும் பசுஞானத்தாலறியப்படுவனென்றுல் பழுதென்னை? என்பதைநோக்கிச் சூத்திரத்தின் முதற்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும்மேற்கோள்.

ஈண்டு, அம்முதலைஞானக்கண்ணுலேகாண்கவென்றது.

இ—ள். பாசபசுஞானங்களாலறியப்படாத முதல்வனைச்சிவஞானத்தாலே காண்க என்பதாம்.

அதற்குப்பிரமாணமென்னென்பாரைநோக்கிமேற்கோளைச் சாதிக்கும்வது.

அவன், வாக்குமனுதீத கோசரமாய்நிற்றலான்.

இ—ள். அம்முதல்வன், பாசஞானபசுஞானங்கடந்து அதீதனுய்நின்று ஒற்றுமைப்பட்டுணரும்பதிஞானத்திற்கேவிளங்கிக்கோசரிப்பனுதலால்ஞானக்கண்ணுலேகாண்கவென்மேற்கொண்டதென்பதாம்.

பிருதிவிமுதல்(நூலுசு)தத்துவங்களாகியபாசத்தால்ஆன்மாவினிடத்துநிகழ்வதுபாசஞானம். நான்இதனை அறிவேன் செய்வேனை

ன்றகங்கரித்தெழும்பும் பசுபோதமுனைப்பால்ஆன்மாவினிடத்து நிகழ்வது பசுஞானம். பதியருளால்ஆன்மாவினிடத்து நிகழ்வது பதிஞானமாம். இதனால் அறியப்படுமுதல்வன், உடனின்று அறிவிக்குமுபகாரத்தைமறந்து நானேஅறிவேன்என்னும் பசுஞானத்தால் அறியப்படானென்றது தெளிவேயென்க.

பசுஞானம் பசுத்துவநீங்கியபோது பதிஞானத்தைஒக்குமாதலால் அதனால் முதல்வனையறியக்கூடுமென்பாரை நோக்கி ஏதுப்பொருளாவலியுறுத்தும்உதாரணம்.

நாடியோ வெண்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றண்ணலே தன்னையுங் கண்டு தலைக்காணு
மெண்ணு மெனவறிவா ரின்று.

இ—ள். நரம்பு எலும்புமுதலியவைகளுள்ளேநான்யார்?என்னைத்தேடியும்அறிகிலேனென்றுஆராய்கின்றதேர்ச்சியறிவில் இன்னதென்றுதெளிவிப்பதோர் அறிவுவேறுண்டென்று ஆராய்ந்துநோக்கி, அவ்வாறுநாடுமிடத்து விளங்கித்தோன்றும் பதிஞானத்தால், முதல்வனையும் அவனை விட்டுநீங்காமல் அவன்சியாபகத்துளடங்கி நிற்குந் தம்மையும்அறிவர். இவ்வாறு முதல்வனதருளால் அறிதலைச்செய்யாதார் கருவிகள்முற்றும்நீங்கிய முத்திக்காலத்தில் வேறுதேத்தன்மையினரென்றுதம்மை அறியவல்லவராவரென்பதாம்.

முற்பக்கத்துள்ள பொருளைக்கண்டகண்ணே? பிற்பக்கத்துப்பொருளையுந்திரும்பிக்காண்பதுபோல, முன்பு நான் யாரென்றுஆராய்ந்தஆன்மஅறிவே பின்பு தன்னையுந்தலைவனையும் தெளிவாயறியுமென்பானைநோக்கி, அங்ஙனம் அறியமாட்டாமைவிளக்கிஅருளாலேயே அறியவேண்டுமென்றுஅதனை வலியுறுத்தும் உதாரணம்.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தனைக்காணு துள்ளத்தின் கண்ணுய
கள்வன்ரு வுள்ளத்திற் காண்.

இ--ள். ஒருபொருளைக் கண்டகண்தன்னையும் தனக்குக்காட்டிநிற்கும் ஆன்மாவையும்அறியாதவாறுபோல, ஆன்மாதன்னையும் தன்னுள் மறைந்துநின்றுணர்த்தும் முதல்வனையும் அறியமாட்டாது. ஆயினும்கண்போலஆன்மாசடமன்றுதலால் முதல்வன் அறிவிக்க அறியும். அவ்வாறுதான் அறியும்போதும் அத்தோர்ச்சி அறிவின்கண் உடனின்றுபகரிக்குங்கள்வன் அம்முதல்வனேயாதலால், அவனே அவ்வறிவில்வைத்து ஆராய்ந்துதெளிவாயாக ஏண்பதாம்.

உயிர் கண்ணுக்கு மறைந்துநின்றுகாட்டுதலால் அக்கண் தன்னையும் உயிரையும் அறியமாட்டாதவாறுபோல,முதல்வன் இவ்வுயிர்க்கு மறைந்துநின்றுணர்த்தலால்அவ்வுயிர்தன்னையுமுதல்வனையும் அறியமாட்டாதாயிற்றென்னுங்குறிப்புக் கள்வனென்றதனாலுணரப்படும். படவே உள்ளத்திற்காணவல்லார்க்கு, முதல்வன்கள்ளமின்றிவெளிப்பட்டுணர்த்தலால், அவர்கள்தம்மையும்முதல்வனையுங்காண்டல்கூடுமென்பதாம்இக்கருத்துநோக்கியே

"கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற—,, என்றுசித்தாந்த முதற் சூருதி கூறியதென்க.

இரண்டாமதிகரணம்

ஆனல் அம்முதலவனையறிதற்குரிய பதிஞானம்வருவதெப்படி? எனினும அவாய்நிலையைநீக்குமபடி முதலதிகரணத்துக்குப் புறநடையாயெழுந்த இச்சூத்திரததன் இரண்டாம் பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும மேறகோள்.

இனி, அசத்தாயுள்ளவன்னபேதங்களை அசத்தென்றுகாணு உளதாய்நிற்பதுஞானசொரூபமென்றுணரற்பாற்று.

இ—ள். அசத்தாயுள்ள காரியப்பிரபஞ்சங்களை ஒன்றொன்றுநோக்கி இவை நிலையுள்ளனவல்ல வென்றுகழித்துச்சென்றுவிவேகித்து அறிந்தால் அப்போது அவைகள்போலக் கழிக்கப்படாமல் என்றும்உள்ளதாய் அக் கழிக்கப்படும்பொருள்களொன்றையும் பற்றாமல் விளங்கிநிற்பது அச் சிவஞானசொரூபமேயன்றுணரற்பால தென்பதர்ம்.

இச்சூத்திரத்தில், "பாசமொருவத் தண்ணிழலாம்பதி" என்றதொடரில் "பாசம்" என்றது, சத்தாயுள்ள ஆணவ கன்மமாயையல்லவென்று, தோன்றியழியுந்தனுகரண புவனபோகங்களாகிய காரியப்பிரபஞ்சங்களையே என்பதுதோன்ற "அசத்தாயுள்ள" என்றும், "ஒருவ" என்றது நீங்கலென்பதன்று; நீங்குதல் ஆன்மவியாபகத்துக்குப்பழுதாதலால் அப் பிரபஞ்சத்தைஅசத்தெனக் காணும் அறிவின்விசேடமே என்பதுதோன்ற அசத்தென்றொழியவென்னாது "அசத்தென்றுகாண" என்றும், அவ்வறிவின் விசேடமாகிய சிவஞானம், ஆன்மா பிரபஞ்சத்தைப்பற்றிநிற்கும்போது விளங்காமலும், பற்றுவிட்டுநிற்குமபோது விளக்கமாயும் ஆன்மாவைப்பிரியாதுநிற்பதாதலால் அச்சிவஞானம் அவ்வான்மாவுக்குக்குளிர்நிழலைச்செய்வதுபோதென்பதுதோன்ற "உளதாய்நிற்பது"என்றும், "பதி"என்றது ஆகுபெயராய்ப்பதிஞானத்தை விளக்குமென்பதுதோன்ற "ஞானசொரூப" மென்றும், இது அநுபவத்தாலன்றிச்சொல்லளவி லறியமுடியாதென்பதுதோன்ற "உணரற்பாற்று" என்றும் இம்மேற்கோளிற்கூறியதுகாண்க. இம்மேற்கோளுக்கு ஏது வேறுக்கூறிச்சொற்பல்காமல் சுருங்கச் சொல்லல்என்னும அழகுபற்றி ஆவ்வேதுப்பொருளை உடம்பொடுபுணர்த்தலென்னுமுத்தியால் விளக்குவாராய் அசத்தாயுள்ள பிரபஞ்சத்தையென்னுது, அதனைரூபகமுறையில் விளக்கும் "வண்ணபேதங்களை". என்றுகூறினர். வண்ணபேதங்களென்றதே படிகமுதலியனகூறியதுப்பொருள் விளக்குதற்குஇடந்தந்தது காண்க.

இம்மேற்கோள், முதலதிகரணத்து மேற்கோளில் "ஞானக்கண்ணுலேகாண்க" வென்றுகூறியது, அவ்வாறுகாண்பதுஎப்படிஎன்பதைஅவாவிநிற்றலால்அவ்வவாய்நிலையை நீக்கும்பொருட்டு, அவ்வாறுகாணுமுறையைவிளக்கி அதனைஅசையவிடாதுநிறுத்துதலின். அதற்கோர்புறநடையாயுதென்க.

முதலதிகரணத்து ஏது பாசபசுஞானங்களாலறியமுடியாதுசிவஞானத்தாற்றான் அறியலாமென்றதற்குப்பிரமாணங்கூறியதன்றி அறியுமுறையைவிளக்கியதன்றுகலான் அதனைவிளக்குகின்றஇம்மேற்கோள் புறநடையென்பதே தெளிவாம்.

இம்மேற்கோள் ஏதுப்பொருளுந்தன்னுட்பெற நிற்றலால், அதனை மற்றதிகரணங்களிற்போல வெவ்வேறெனக்காணுமுறையில் மேற்கோள்,

இனி, அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்றுகாண உள்ளதாய்நிற்பது ஞானசொரூபமென்றது. என்றும், ஏது,

வேற்றியல்பாகியவன்னபேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பின்உளதாய்நிற்பது படிகசொரூபமாந்தன்மையான். என்றும் வேறுகவைத்துப்பொருள்கொள்க.

இ—ள். படிகநிறத்தைக் காட்டாதுமறைத்துநின்ற வேற்றுநிறங்களை இவைநிலையில்லாதனவென்றுள்ளபடிகண்டுபின்மயங்காமல் நிலைத்துநின்றால், அவ்விடத்துநிலையுள்ள அப்படிகசொரூபமேவிளங்கிநிற்றல்போல, நிலையுள்ளசிவஞானமாகிய தன்சொரூபத்தைக்காட்டாது மறைத்துநிற்கும் பிரபஞ்சத்தை; இவைநிலையில்லாதனவென்றுள்ளபடிகண்டு நிலைத்துநிற்பின் அவ்விடத்து வேறொன்றையும்பற்றாமல் விளங்கிநிற்பது அச்சிவஞானசொரூபமேயென்பதாம்.

அசத்தாகிய பிரபஞ்சத்தை நிலையில்லாதனவென்றுகாண்பதாவது, ஆசாரியன்அறிவித்தஉபதேசத்தில்உறைத்துநின்று, பிரமாதி தேவபதமுதலிய எப்பொருள்களும் காரணசொரூபத்தில் நிலையின்றிஒழிதலால் அவையெல்லாம்வெறும்பொய்யெனநினைந்திருத்தலாம்.

அப்பிரபஞ்சங்களை அசத்தென்றுகண்டுநீங்கியபோதுசூனியந்தோன்றுமன்றி ஞானசொரூபந்தோன்றுதென்பாரை நோக்கி ஞானசொரூபத்தியல்புகூறி மேற்கோளைவலியுறுத்தும் உதாரணம்.

நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியா னந்தனுய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானவறிவா யளவிறந்து தோன்றுமே
வானே முதல்களையின் வந்து.

இ—ள். முதல்வன், மாயாகாரிய அசுத்தப்பிரபஞ்சம்போலமூக்

குணரூபமாயளவிட்டறியப்படாஞய்முக்குணங்களைக் கடந்தசுத்தாசுத்தப்பிரபஞ்சம்போல மலகன்மகாரியரூபமாய்அறியவும்படாஞய், மலகன்மங்களையுங்கடந்தசிவதத்துவரூப சுத்தப்பிரபஞ்சம்போலஅநித்தியானந்தரூபனுயறியப்படாஞமாய், ஐம்மூவகைப்பிரபஞ்சங்களோடுங்கூடிப்பொதுவியல்புபற்றியறியப்படும்சகலர் பிரளயாகலர்விஞ்ஞானகலரென்னும்ஆண்மாக்களைப்போலண்டீத் (தற்பரமாய்) அவ்வான்மாக்களுக்கு மேலாய்நிற்பன்இவ்வாறு பிரபஞ்சங்களையும் ஆண்மாக்களையும் கடந்துநிற்றலால், அவைகளினியல்புபற்றி அறியப்படாதுதனித்துநிற்கும்அம்முதல்வன், ஆகாசமுதலியஅசத்தாகியஅப்பிரபஞ்சங்களைப்பொய்யெனக்கண்டுநீங்கியவிடத்தும் அவற்றோடுபழகி அறிந்துவரும் அவ்வான்மாவின் சுட்டறிவினைக்கடந்துநிற்றலால் இன்னதென்றறியவராதசூனியம்போலத்தோன்றினும்பின்பு சுட்டிறந்தறியும் அவ்வான்மாவின் அறிவினீங்காது நிலைபெறுவதாய்ச், ✕ ''சோதியாயெழுஞ்சோதியுட்சோதியாய்'' விளங்கித்தோன்றுவ னென்பதாம்.

இங்கேமுதல்வனென்றது, ஞானசொரூபத்தையே. அது ஒற்றுமைபற்றிஉபசரித்துக் கூறியவாறுமென்க.

அப் பிரபஞ்சங்களை ஒவ்வொன்றுகக்கழித்து நீங்கியவிடத்து அவ்வாறுதோன்றுவதும் ஞானமன்று; வேறொன்று எனக்கொள்வோம். ஞானசொரூபமே என்றற்குப்பிரமாணமென் னென்பாரை நோக்கி அதனைவலியுறுத்தும் உதாரணம்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத்தானவம்
புணர்ந்ததனற் பொய்விட்டுப் போம்.

இ—ள். ஏகதேசஅறிவாற் சுட்டியறியப்படும் பிரபஞ்சத்தை முன்கூறியபடி ஒன்றொன்றுக்கண்டு அசத்தெனக் கழித்துச் சென்றவிடத்து முடிவிற் செவ்வேதோன்றுவது அவ்வசத்தின் வேறுகிய சத்தேயாம். அதனையறிவாயாக. ஆனல் அவ்வாறு

✕ இத்திருப்பாசுரம், பெரியபுராணம், தடுத்தாட்கொண்டபுராணம் (ककக)

தோன்றுஞ்சத்துஉயிரோயாமெனில்? இதுவரை அசத்துடன் கூடிச் சுட்டியறிந்துவந்த நீ அவ்வசத்துடன் கூடாமல் எப்போதும் அதனின்வேறுய்ச் சுட்டிறந்துநின்று அவ்வாறுதோன்றுஞ் சத்தாவாயல்லை. அப்படியானல்இச்சுட்டுணர்வுஎனக்குநீங்காதோவெனில்? அசத்தின்வசப்பட்டுச் சுட்டியறிந்துவந்த நீ அதனை ஒழிந்து அவ்வொழிவின்கட் செவ்வேதோன்றுஞ் சத்தின்வசப்பட்டு அதனைச்சேர்ந்தால் அச்சேர்க்கையினுற் சுட்டறிவாகிய பொதுவியல்பு உன்னைவிட்டு நீங்குமென்பதாம்.

அசத்தை அசத்தெனக்கண்டு நீங்குமுறையும், நீங்கியவிடத்து சத்தாகிய சிவத்தை அதனடிமையாகிய ஆன்மா இரண்டறக்கலக்குமுறையும், கலந்தகனல் அவ்வசத்து முற்றும்விட்டொழியுமுறையும் எப்படி? என்பாரை நோக்கி அவற்றை விளக்கி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
ஞானத்தைத் தான்விடுமா றுத்தமனி ணெண்கருட
சானத்திற் றீர்விடம்போற் ருன்.

இ—ள். சுட்டியறியப்படும்பிரபஞ்சத்தை இதுசத்தன்றென ஒவ்வொன்றுகக் கண்டுஅவையாவும்அசத்தென்றொழித்துச் சென்ற ஆன்மாதன்னறிவில் சுட்டறிவின்றிநின்றகடவுளை ஆராய்ந்து அவனேநானென்று பாவித்தால், அப்பாவனையால் அவ்வறிவில் அத்துவித மாய் விளங்கித் தோன்று முதல்வனுல், அநாதியேதன்னைக்கூடிநின்று பொதுத் தன்மைப்படுத்திய ஆணவமலப்பற்று முற்றும் விட்டு நீங்கும். இதுகருடபாவனையால் விளங்கும்மந்திரதைவிக கருடனுல் விடம்நீங்குதல் போலுமென்பதாம்,

இக்கருடன்மூன்று விதமாம். உலகிற்காணப்படுவது ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாகிய மந்திரம் ஆதிதைவிக கருடன். மந்திரத்தை இடமாக்கொண்டு(அதிட்டி-த்து)நின்று அம்மாந்திரகனுக்குப் பலனைக்கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடனென்க.

மூன்றுமதிகரணம்.

ஆன்மா ஐம்புலவேடசார்ச்சார்ந்த அசுத்தநீங்கிச்சுத்தமாதற் கூப்பாசம் நீங்கின வுடனே தண்ணிழலாய்ப் பிரகாசிக்கின்ற ஞானசொரூபமொன்றே போதும். மேலும் பஞ்சாக்ஷர செபமெதற்கென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் மூன்றும் பாகத்தைப்பகுத்துப்பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி, இவ்விடத்துஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்கவென்றது.

இ—ள். பாசநீங்கியவுடனே தண்ணிழலாய்ப் பிரகாசிக்கின்ற ஞானக்கண்ணால் ஆன்மா பதியை நாடியபின்னரும் திருவைந்தெழுத்தையும் விதிப்படி செபிக்குக என்பதாம்.

ஞானக்கண்ணால் பஞ்சாக்ஷரஞ்செபிப்பது அத்தாங்கவழிபாடாதலால், இது, அசிந்திதனுபின்றபதியைச் சிந்திதனுகக்கண்டுவழிபடும்அத்தாங்கவழிபாடுனர்த்தும் (கடம்) சூத்திரத்திற் கூறுவதாயிருக்க ஈண்டுக்கூறுதல், பின்சிந்திப்பதையே இங்குங் கூறியசித்தசாதனதோஷமாதலால் இங்குக்கூறியதனதற்கென்பாரைநோக்கி, மேற்கோளைச் சாதிக்கும் ஏது.

இவ்வான்மாக்களுக்குஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தைவேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கெனக்கொள்க.

இ—ள். நெடுநாள் வேம்புதின்ற புழு, அதனைவிட்டுக் கரும்புதின்று அச்சுவை தெரிந்தனுபவிக்கும்போதும், முற்பழக்கமிகுதியால் அவ்வேம்பைநோக்கிநிற்றல்போல, பிரபஞ்சம் அசத்தெனக்கண்டுவிட்டுநீங்கியஆன்மாவுக்கு அதனல்ஞானம்விளங்கிச்சிவத்தைக்காணப்பெற்றபோதும், அவ்வான்மா பழக்கமிகுதியால் முன்பு சார்ந்துநின்ற பிரபஞ்சங்களைநோக்கிநிற்குமாதலால் அவ்வாதனைநீக்கும்பொருட்டு வேண்டப்படுதலால் பஞ்சாக்ஷரத்தை இவ்விடத்து விதிப்படிசெபிக்கவென மேற்கொண்டெடுத்தோதிக்கொள்க என்பதாம்.

இவ்விடத்து என்றதனுல் அணைந்தோர் தன்மையைச் சாரவைத்துமேற்கோடற்குரிய "பஞ்சாக்ஷரத்தை" என வருவித்துக் கொள்க. என்கனன்னுது "எனக்கொள்க" என்று உடம்படுப்பித்ததும் அதுபற்றியே. இதுநோக்கியே உமாபதிசிவம் "அஞ்செழுத்தருணிலையை ஆன்மலாபத்தின்பின் அணைந்தோர்தன்மையைச் சாரவைத்தருளியதென்க. அதுநீக்குதற்கெனக் கொள்க என்றதனுல் சித்தசாதனதோஷமாகாதென்பது பெறப்பட்டது.

இப் பஞ்சாக்ஷரஜெபம் அப் பழக்கவாசனையை நீக்குதற்குச்சாதனமாவதெப்படி என்பாரைநோக்கி அதனுண்மைவிளக்கி ஏதுவைவலியுறுத்தும் உதாரணம்.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

இ—ள். ஆன்மா தான் சிவனுக்குடைமைப்பொருளென்பதை அம்முத்திபஞ்சாக்கரப்பொருள் சிவனும் அருளுந் அடிமையாகிய ஆன்மாவுமென்பது தெரிந்துச்சரிக்குமுறையிற் கண்டு புறத்தே ஞானபூசைசெய்யுங்கால் காலையில் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை; மலர்களெட்டும் மற்றைக்காலங்களில் வெவ்வேறு, எட்டுமலர்களுமாகவிதிக்கப்பட்ட அஷ்டபுஷ்பங்களாற்பூசித்தல்போல, அகத்தே இருதயம் பூசைத்தானம் உந்தி ஓமத்தானம் புருவநடு தியானத்தான மாக்கொண்டு இருதயத்தில்அம்மந்திரத்திருமேனியனுய்முதல்வனைப்பாவிததுக்,கொல்லாமை,ஐம்பொறியடக்கல், பொறுமை,இரக்கம்அறிவு,சத்தியம், தவம், அன்பாகிய அஷ்டபுஷ்பங்கொண்டு அம்மந்திரத்தாற்பூசித்துக்,குண்டலிசத்தித்தானமாகிய உந்தியிலேஞானுக்கினியைப்பிரானவாயுவினுலெழுப்பி, அவ்வக்கினியாற் புருவநடுவினின்றெழுகும்அமுதமாகியநெய்யைச்சுழுமுனைநாடிஇடைநாடிகளாகியசருக்குசருவங்களால்ஓமஞ்செய்து, விந்துத்தானமாகியபுருவநடுவில், சிகர, யகர, வகரங்கள் மூன்றையே(தத்துவமசி)மகாவாக்கியத்துள்ளதத்பதப்பொருளுந்து

வம்பதப்பொருளும்அசிபதப்பொருளுமாகும்முறைதெரிந்து அம் மகாவாக்கிய பஞ்சாக்ஷரப்பொருள் விளக்கத்தால் சிவன் நானென் றுபாவிக்குஞ் சிவோகம் பாவனைபச்செய்வனேல் அப்பாவ னையில் முதல்வன்விளங்கித்தோன்றுவன். அப்பாவனைசெய்தோர் என்அவனுக்கு அடிமையாவ னென்பதாம்-

ஓமம் தியானம் இரண்டையுந் தனக்கு அங்கமாக்கொண்டு தான் அங்கியாய் முதன்மைபெற்றுவிளங்குவது பூசனையேயாம். இவ்வுண்மை நோக்காதசிலர் நாம் தியானஞ்செய்கின்றோம்நமக்கு ப்பூசனைவேண்டுவதில்லை யென்றுமாந்து கூறிக்கண்களைமூடிக் கொண்டு பொழுதுகழிப்பது சிவசாஸ்திரவிரோதமாய் அவ்வள வறியாதபிறரையுமாற்றிப்பொருள்கவரச்செய்யும்வஞ்சனைமார்க்க மாய்முடிவில் நரகத்துக்குஏதுவாய் முடியுமென்றிவேறில்லையென்க

ஆன்மா பிரபஞ்சத்தை அசத்தெனக் கண்டுநீங்கிஞானசொ ரூபத்தாற் பரிபூரணநிலையைப்பெறினும், முற்பழக்க மிகுதியால் ஜீவஏகதேசப்பட்டுப் புறத்தேசெல்லநோக்குங்கால்செல்லவிடாது மடக்கி அகத்தேமுற்கூறிய பூசனையாதியால் ஒருகுறியினிடத்து நிறுத்திமுத்திபஞ்சாக்ஷரத்தை ஒதுமுறையில்வைத்துக்கண்டுகிட் டைகைகூடும்படி சிந்திக்கச் சிந்திக்க, அச்சிந்தனை அப்புறநோக்க த்தை முழுதுங்கெடுத்து ஞானசொரூபத்தை நன்குதெளிய விள க்கிப் பூரணநிலைபிற்கொண்டுபோய் விடுமாதலால் இம் முத்திபஞ் சாக்ஷரம் மேற்கூறிய பழக்கவாசனை நீக்குதற்குச் சிறந்த சாதன மாமென்பதுதெளிக.

அவ்வாறு ஒருகுறியில்வைத்து நோக்கினுலன்றிமுதல்வனைக் காணமுடியாதென்பதும், அம்முறைபினின்றுகண்டவுடன் முதல் வன்விளங்கித்தோன்றுவனென்பதும்தோன்றியவுடன் அவனுக்கு அடிமையாமென்பதும் உவமையில்வைத்து விளக்கி அதனை வலி யுறுத்தும் உதாரணம்.

இந்துவிற் பாதுவிலி ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு — முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாரு மோதஞ் செழுத்து.

இ—ள். நான் இதனை அறிந்தேன் அறிந்திலேன் என்றுகூறும் ஆன்மாவின் அறிவுக்கு இதனை என்றபாசமும் நான்என்றபசுவும் காணப்படுதல்போல, வேறுகாணப்படாத முதல்வனை, ஆகாசத் தில் எழுகிரகங்கள் நேரேதோன்றல்போலக் காணப்படாத ராகு கேதுக்களைக் கிரகணகாலத்தில் சூரியசந்திரர் களிடமாக்கா ணல்போல, ஆன்மா இருதயகமலத்தில் பஞ்சாக்ஷரஜெபதியான னறபில் அத்திருமேனியாகிய ஒருகுறியில்வைத்துக்காணுமாயி ர, விறகிற் கோலை நட்டுக்கடைந்தபோது அக்கினிவிளங்குதல் போல, அறிவுக் கறிவாய் விளங்கிநிற்பன். அப்போது ஆன்மா, அக்கினிசேர்ந்தஇரும்புகறையுங்கடினமுமின்றி அதனுள்ளாய்நிற் றல்போல மலமும் பசுபோதமுமின்றிமுதல்வன்வியாபகத்துள் ளடங்கி அடிமையாய் நிற்குமாதலால் அத் திருவைந்தெழுத்தை நிப்படிசெபிக்குக என்பதாம்.

(கூசு)தத்துவங்களுக்குமேற்பட்டசிவனை இருதயத்திற் கண் டுசிப்பது எப்படி? என்பாரைநோக்கி அவ்விருதயகமலத்தினி புனர்த்தி அதனைவலியுறுத்தும் உதாரணம்.

மண்முத னாமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சதாசிவமூ— ணண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்ரு ணோர்,

இ—ள். அவ்விருதயகமலம் புறத்தே நீர்நிலையிலுள்ளகமலம் போல்வதன்று. பிருதிவிமுதலிய ஆத்துமதத்துவங்கள் (உசம்) நாபியினின்றுதோன்றிய எட்டங்குலநீளமுள்ள (காம்பு) நாளமா கவும், வித்தியாதத்துவம் ஏழும் சுத்தவித்தை ஒன்றுமாகிய எட்டு மெட்டிதழ்களாகவும், மகேசுர சதாசிவதத்துவமிரண்டும்(கூசு) கேசரங்களாகவும், சத்திதத்துவம் பொகுட்டாகவும், சிவதத்துவ மப்பொகுட்டின்மேலுள்ள (நுகபீஜம்) விதைகளாகவுங்கொண் டிருப்பது அத்தன்மையுள்ள அவ்விருதயகமலத்தில்(கூசு)தத்துவங் களுக்குமேலானமாகவுடையசிவனதுசத்திநிலைபெறும். அத்திருவடியை த்திருவைந்தெழுத்தைநற்பூசிப்பாயாக என்பதாம்.

இச்சூத்திரம், முன்முதல்வன் குருவாய்வந்தருளிய உபதேசசிந்தனைக்குஇன்றியமையாதஆண்மசுத்திகூறுமுறையில் பாச பசுஞானங்களால் அறியமுடியாத சிவனை அருள்ஞானத்தாலறியவேண்டுமென்பதும், அத்திருவடிஞானம் மற்றை நிலையில் பொருள்கனியில்புகண்டு ஒன்றொன்றுக்கழித்தபோது விளங்குமென்பதும், அதனால் அப்பற்றுநீங்கி முதல்வனையறிந்துதுதித்தவிடத்துமுற்பழக்கவாசனை பற்றுதபடி முத்திபஞ்சாக்ஷரம் செபிக்கவேண்டுமென்பதும், சிவசமவாதிகள், பாசம்போற் சடமாகாதசித்தாகிய பசுஞானத்தால் முதல்வன் அறியப்படுவனென்பதைமறுத்து அவன் பாச பசு ஞானங்கடந்துநிற்றலாலும், பசுத்துவநீங்கியவிடத்தும் சமமாதலின்றி அவன் வியாபகத்துளடங்கிநிற்ப அவன் உடனின்றறிவித்தலாலும் பதிஞானத்தாற்றானறியப்படுவனென்பதும், நிலையில் பொருளியல்புகண்டு கழித்தபோது தோன்றுவதும் சூனியமேயென்பாரை மறுத்து, அசித்துமுழுதுங் கழிக்கப்பட்டபோது தோன்றுவது சத்தாகிய ஞானசொரூபமே என்பதும், அங்குத்தோன்றுவதும் அசத்தல்லாத உயிரே என்பதைமறுத்து, அவ்வுயிர்அசத்தைச்சார்ந்து சுட்டியறிவதாதலால் சுட்டியறியப்படாத ஞானசொரூபமாகாதென்பதும், அசத்தைநீங்கிச் சத்தின்வசமாய்நின்று சிவலோகம்பாவனைசெய்யின் அச்சுட்டறிவொழியுமென்பதும், ஆண்மசுத்திக்கு அசத்தாகிய பாசநீக்கத்திற்றானும் ஞானமே போதியதென்பாரைமறுத்து, பழக்கவாசனை தாக்காதபடி ஸ்ரீபஞ்சாக்ஷரமும் அறிவாற் செபிக்கவேண்டுமென்பதும், அப்பஞ்சாக்ஷரசொரூபமுதல்வனை அதனால் இருதயகமலத்தில் ஒருகுறியில்வைத்துப் பூசித்தால் அவ்வாசனை பற்றறநீங்குமென்பதும், ஓமதியானங்கள் அப்பூசனைக்கு அங்கமென்பதும், காணப்படாத சாகுகேதுக்கள் சூரியசந்திரர்களிடத்துக் காணப்படல்போல மறைந்தெங்கும் வியாபித்துள்ள முதல்வன் அக்கமலத்தின்மேல்விளங்கித் தோன்றுவனென்பதும், அக்கமலம் (கூசு) தத்துவரூபமாதலால் அம்முதல்வன் தத்துவாதீதனென்பதற்கிழுக்கில்லை என்பதும் விளக்குதல் காண்க.

பத்தாஞ்சூத்திரம். பயனியல்.

அனே தானே யாகிய வன்கெறி
யேக ஞெி யிறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடி வல்வினே யின்றே.

கருத்துரை. பாசகூயம் பண்ணுமாறுணர்த்துத னுதலிற்று.

இ—ள். முன் ஏழாஞ்சூத்திரத்தில் சாதனஞ்செய்யும் அதி காரியாகிய ஆன்மாவினியல்புகூறி, எட்டாஞ்சூத்திரத்தில் அச்சா தனத்தால் வரும்பயன் பிரபஞ்சநீக்கத்திற்கூறும் பதிஞான விளக்கமாதலால் பாசம்நீங்கி முதல்வன் திருவடியடைதலாமெ ன்று தொகுத்துக்கூறி, ஒன்பதாஞ்சூத்திரத்தில் அச்சாதனஞ் செய்யுமுறையை வகுத்துவிளக்கினமைபால், முன்தொகுத்துக் கூறிய அப்பயனே இனி மூன்றுசூத்திரங்களால் வகுத்துக்கூறத் தொடங்கிப்பாசநீக்கமும் திருவடியடைதலுமாகிய அப்பயனி ரண்டனுட் பாசநீக்கமாவது, சுட்டிப்பறியப்படும் பிரபஞ்சப்பற் றைமேற்கூறியபடி பஞ்சாக்ஷரசெபத்தால் முற்றும்நீக்கியவிடத் துண்டாகும் ஆன்மசுத்தியின் பயனுதலால், அப்பாசநீக்கத்தைச் செய்துகொள்ளுமுறைபை, மூற்சூத்திரத்தில் சிந்தனைசெய்தபொ ருளை இங்கே தெளிவிக்குமுகத்தாலுணர்த்துவதென்பதாம்.

சூ—ள். பெத்தநிலையில் ஆன்மா பிரபஞ்சப்பொருள்களேஅறி தற்காக முதல்வன்தானும் அப்பொருள்களே அறிந்துகொண்டு அவ்வுயிருடன்பிரிவின்றி உடனுகவேயிருந்தும், அவ்வான்மா தனக்கு அறிவித்தும்அறிந்தும் ஒருமுதல்வன் எப்போதுந்தன்னெடி உடனுபிருக்கின்றானென்றுணரும்வேறுப்க்காணப்படாமல், அவ் வான்மா தானேயறிந்ததாக எண்ணும்படி அவ்வான்மாவுடன் அம்முதல்வன் அத்துவிதஒற்றுமைபால் அவ்வுயிரின்வழியாய் நின் றதுபோல, இம்முத்திநிலையில் ஆன்மா அம்முதல்வனுடனுகநின் றுஅறிந்து இன்பத்தை யனுபவிக்குமிடத்தும், அனுபவிக்கின்ற தன்னேவேறுகக்காணுமல் அம்முதல்வனுடன் ஒற்றுமைப்பட்டு அம்முதல்வனேயாய் அவனருள்வழியொழுகும் இறைபணியில் வழுவாமல் நின்றுல் ஆணவமலம் மாயாமலமிரண்டுடன்வலிய கன்மமலமும் இல்லையா யொழியுமென்பதாம்.

முத்தநிலையில் முதல்வனுடன் ஆன்மா ஒற்றுமைப்பட்டு நிற்பது, சுடமுடைந்தபோது அக்குடாகாசமும் மகாகாசமும் ஒரேபொருளாய் ஒற்றுமைப்படுதலென்பதுமுதற் பலவிதமாகப் பலமதஸ்தர்கள் கூறுவனவற்றைப்போல்வதன்றென்பது விளக்குதற்கே பெத்தநிலையில் அவனே தானேயாய்நின்ற (சிவன் ஆன்மாவேயாய்நின்ற) ஒற்றுமைபோலென்று உவமைசுட்டுக்காட்டினர், காட்டியதனால் முத்தநிலையில் ஆன்மாசிவமேயாய்நிற்கும் ஒற்றுமையே ஈண்டுக்கூறியதன்பது தெளிவாயது. இவ்வொற்றுமையின் சம்பந்தம் அத்துவிதசம்பந்தமென்பதாம். இது வருகின்ற சூத்திரத்தில் விளக்கப்படும்.

இச்சூத்திரம், "அவனே தானேயாகிய அந்நெறி ஏகனஞ்சி" எனவும், 'இறைபணிநிற்க மலமாயைதன்னொடு வல்வினையின்றே' எனவும் இரண்டதிகரணமுள்ளது.

முதலதிகரணம்

சிவசமவாதசைவர்முதலியர், பதிஞானம்விளங்கி முதல்வனைக் காண்டல்மாத்திரமே வீடுபெறுதற்குப் போதியதாதலால் ஏகனஞ்சியிறைபணிவில் நிற்கவேண்டாம் என்பதைநோக்கிச் சூத்திரத்தின்முதற்பாகத்தைப் பதப்பிரித்துரைக்கும் மேற்கோள்.

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய்நின்றமுறைமையான் அவனிடத்தேதகனஞ்சிநிற்கவென்றது.

இ—ள். பெத்தநிலையில் முதல்வன் உயிரினுடனுய்நின்றதனியும், வேறுப்க் காணப்படாமல் நானே அறிந்தேனென்னும்படி அவ்வுயிரேயாய் ஒற்றுமைப்பட்டு நின்றதுபோல், இம்முத்திநிலையில் உயிர் முதல்வனோடு உடனுய்நின்றறியினும் அவ்வுயிர் முதல்வனின் வேறுகக் காணப்படாமல் அவனுடன் ஒற்றுமைப்பட்டு நிற்க என்பதாம்.

முதல்வனைக் காண்டலேபோதும் ஒற்றுமை எதற்கென்பாரைநோக்கி மேற்கோளைச்சாதிக்கும் ஏது.

அவ்வாறு நிற்கவே யானெனதென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தையணையுமாகலான்.

இ—ள். அப்படி ஒற்றுமைப்பட்டு நின்றுற்றுன் யான் என்னும் எனதென்னும் பசுத்தறியும் மயக்கவறிவைவிலக்கின்றமலம்நீக்கித் திருவடியாகிய சிவானந்தம்பெறலாமாதலால், அச்செருக்குநீங்குதற்குக் காரணமாதல்பற்றிப் பரமேசுரன் பெத்தநிலையில் ஆன்மாவாய்நின்ற முறைபோல இம்முத்திநிலையில் ஆன்மா அவனிடத்து ஏகனாகிநிற்கவென மேற்கொண்டதென்பதாம்.

ஒற்றுமைப்படாவிடில் மலமறாது. அறிவிடில் பாதத்தை யணையமுடியாதென்பது தோன்ற "நிற்கவே" என்று தேற்றே காரத்தாற் கூறினர். யான் என்பது (ஞாதிரு) பொருள்களை அறிகின்ற ஆன்மாவாம். எனதென்பது (ஞானமும் ஞேயமும்) அவ்வயிரின் அறிவும் அறியப்படும் பொருளுமாம்.

அவ்வாறு ஞானஞேயங்களைப்பகுத்துணருமுணர்வை மயக்கவுணர்வென்றதென்னென்பாரைநோக்கி ஏதுவைவலியுறுத்தும் உதாரணம்.

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
லுனனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானு மிறை.

இ—ள். முதல்வனில்லை நானேயுண்டெனநிற்பார்க்குப்போலத், தனித்துநில்லாத ஆன்மாவாகிய தன்னை நானென்றும் தன்னில் வேறுபட்டுநில்லாத முதல்வனை அவனென்றும் பகுத்துணர்வார்க்கும் அவ்வாறுணருமயக்கவுணர்வாகிய ஆன்மபோதமுனைத்தூநிற்குமாதலால் அப்போதுமம்முதல்வன் தானொருமுதலாக அறியப்படுதலின்றி அவ்வயிரின் உணர்வேயாய்கிற்பன். இனி முதல்வனின்வேறாய் யானென்றொருபொருள் தனித்துக்காணப்படுமாறில்லையென்றுணர்ந்து முழுதுஞ் சிவனேயென்று காணுந் தெளிவுடையாரையே முதல்வன் தனது திருவடிவியாபகத்துளடங்கிநிற்கச்செய்து அவ்வாறே எல்லாமாய் நிற்பனென்பதாம்.

இரண்டாமதிகரணம்

சுத்தசைவரீருயிரும், உடம்புள்ளவரை பிராரத்தவினையும் அதனை அநுபவிக்கும்போது நிகழும் ஆகாமியவினையும் எவ்வித

த்தானும் நீங்காவாதலால், எகனுகிநிற்றற்குத் தடையாமன்றே வெல்பதைநோக்கிச் சூத்திரத்தின் இரண்டாம்பாகத்தைப் பதம் பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனி இறைபணி வழுவாது நிற்கவென்றது.

இ—ள். அம்முதல்வன் அருள்வழிச் சலியாமல் நிற்க என் பதாம்.

எகனுகிநிற்றலே போதுமாதலால் இறைபணிநிற்றலெதற்கென்யாரைநோக்கி மேற்கே லோச்சரதிக்கும் எது.

அவன் அருளாலல்லது ஏன்றையுஞ் செய்யானுகலே அஞ் ஞானகன்மம் பிரவேசியாவாகலான்.

இ—ள். முதல்வன் தானுஞ்செய்துடனின்று செய்வித்தாலன் றித் தானுக ஒன்றையுஞ் செய்யமாட்டாத ஆன்மாக்கள் செய்வ னவெல்லாம் தற்போதமுனைப்பற்றுச் சிவனருள்வழிநின்றே செ ய்யுமாறால், மாயாகாரியமயக்கத்தால் வருமுயற்சியாகிய ஆகாமி யமும் (மாயேயமும்) கன்மமலகாரியமாகிய இன்பதுன்பப்பயன் களும் (பிராரத்தமும்) எகனுய்நிற்றற்குத் தடையாய்வந்து தாக்க மாட்டாவாதலால் அதன்பொருட்டுச் செய்யவேண்டிய உபாய மாதல்பற்றி இறைபணிவழுவாது நிற்கவென மேற்கொண்டதென் பதாம்.

மலமின்மைமேற்கூறியதனுல், இங்கே அஞ்ஞானமென்றது மாயாகாரிய மயக்கத்தையேயன்க. மாயேயமும் அக்கன்மமும் உடனுள்ளவரையுள்ளனவாதலால் அவைகள் அற்றுப்போமென் னுது பிரவேசியாவென்றருளிற்றென்க.

உடம்பொடுகூடிய ஆன்மாவுக்குப் பிராரத்தமும் அதுபற்றி ஏறும் ஆகாமியமும் நிச்சயமாயிருக்க, இறைபணிநிற்றலால் அவைதாக்காவென்பதெப்படி? என்பாரைநோக்கி ஏதுவை வலி யுறுத்தும் உதாரணம்.

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமும் மரனுடைமை—யாமென்னி
லெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லவினை
முற்செய்வினை யுந்தருவான் மூன்.

இ—ள். அவ்வினைகளே துகர்தற்கும் ஈட்டுதற்குங் கருவியாகிய இந்திரியங்கள் மாயாகாரியமேயன்றி நாமல்ல; அவை தொழிற் படுதலும் முதல்வன்வசத்தாலன்றி நம்வசப்பட்டல்ல. அத்தொழில்நிகழ்தற்குவாயிலாகிய விடயாதிகளும் மாயாகாரியமே; நாமல்ல. அவைதொழிற்படுதலும்முதல்வன்வசத்தானன்றிநம்வசத்தானல்ல. அவற்றோடுகூடி வினைகளீட்டுதருமினைமுதலாகிய நாமும் முதல்வனருள்ஞானவிளக்கம்பெறலால் அம்முதல்வன்வசத்தாலன்றிச் சுதந்தரரல்லேம்.என்றிவ்வாறுபசுபாசங்களினியல்பையறிந்துஅவனருள் வழிநின்றேயாவுஞ் செய்தலெக்கண்டுகொண்டிருப்பராலில்இவ்வடிமைத்திறத்தினர் எவ்வுடம்பினின் றெவ்வினை செய்யினும்அவ்வாகாமியவினை யவர்களைப்பந்தப்படுத்துதலில்லை. அவ்வாகாமியத்தை இன்றியமையாதுடன்கொண்டுவரும் பிராரத்தவினைப்பயனுகிய சுகதுக்கங்கள், அவற்றைக் கூட்டுவிக்கும் முதல்வனருளால் உயிரைப்பற்றுமல் உடம்பின் அநுபவமாயொழியுமென்பதாம்.

சஞ்சிதவினை தீக்கை யளவிலேயேயியிற்பட்ட விதைபோலொழிதலால் ஈண்டு "மூற்செய்வினை" என்றது ஏற்புழிக்கோடன் முறையாற் பிராரத்தவினையே யென்க.

இறைபணிநிற்பவரைப் பிராரத்தவினைதாக்கவிடாது முன்னின்றருளும்முதல்வன்மற்றையரைத்தாக்கச்செய்தலால்பக்ஷபாதமுள்ளவனன்றேவென்பாரைநோக்கி அஃதுண்மைகூறி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச்—சார்ந்தடியார்
தாந்தானுச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

இ—ள். தம்மையே புகலிடமாக்கொண்டி அடைக்கலம்புகுந்தார்க்கு ஆதரவாய்நின்றுகாத்தல் தலைவர்கடமையாதலால்முதல்வன் பிறரைநீக்கித்தன்னையடைந்தாரையே காக்கின்றவனுகியும் அதுபற்றிப்பக்ஷபாதமில்லாதவனுய்ந், தன்னைச்சார்ந்துபணிசெய்வார் தன்போல ஆகாமியத்தொடர்பிலராகச்செய்து பிறர்க்கு

வரும் அவ்வினையை அவர்க்குக்கொடுப்பதுதலால், அவ்விருவகையினரிடத்தும் நுணுகிவந்து கூடுவதாய பிராரத்தவினையும் அவ்வாறேசெய்கின்றவர் வினைக்குத்தக்க பயனை அவ்விருவகைப்படச்செய்வனென்பதாம்.

"இறைபணிபார்க்கில்லைவினை,—மூற்செய்வினையுந்தருவான் முன்." என்றதுபற்றிப் பிறர்க்கு கியதிசெய்தூட்டி இறை பணிசெய்வார்க்கு வினையின்றுக்குதல் முதல்வனுக்கு நடுவுநிலை யன்றென்றதைஉடன்பட்டே அதற்குஅமதிகூறுவாராய் "சார்ந்தாரைக் காத்த றலைவர் கடன்"னென்னும் பழமொழியெடுத்துக்காட்டி, இஃது அவ்வாறு நடுவன்மையு மன்றெனவலியுறுத்துவார் "சார்ந்தடியார், தாந்தாஞ்செய்து பிறர்தங்கள்வினை தான்கொடுத்த" லென வேறுவமைஎடுத்துக்காட்டினர்.

"திணைத்துணை யேனும்பொறேன்றுயராக்கையின்றிண்வலியே" என்ற திருவாசகமுதலியனவேஇறைபணிநிற்பாரைப்பிராரத்தவினைதாக்குமெனவிளக்குதலால், அஃது அவர்க்குஉடலனுபவமாயொழியுமென்றதுபொருந்தாதாதலால் அப்பிராரத்தமுளதாக அவ்வனுபவத்தில் நிகழும் ஆகாமியமும்பிறவிக்குக்காரணமாய்நிலைபெறுமென்பாரைநோக்கிபிராரத்த வினைதாக்குதற்கு ஏதுக்கூறிஅதனல்செய்கைப்பயனுயுடலனுபவமாயொழிதற்கிழுக்கில்லையென வலியுறுத்தும்உதாரணம்.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயைபுடனில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
யாயவத னலுணரு மச்சு.

இ—ள். தன்பால்வைத்திதடுக்கப்பட்ட பெருங்காயத்தின்வாசத்தைவாங்கிக்கொள்ளும்பாத்திரத்தில் அவ்வாசனைமங்கி மெலிதாய்மணத்தல்போல; இறைபணிநிற்குந் தத்துவஞானியிடத்து மலவலிதிருவருளால் விடுபட்டபின்னும், முன்னைப்பழக்கமிருதியால்ஒருசமயம்உடம்புமுதலியவற்றைநானன்றென்றெண்ணுதலு மூண்டாதலின் அதனல் பிராரத்தவினையும் அதற்கிடமாகிய உடம்புமுதலிய மாயாகாரியங்களும் மங்கிமிகமெலிதாய்வர்துழி

ளுமாயினும் அத் தத்துவஞானி சிவமேயாய்நிற்றலால் ஒருவாறு அவ்வாசனைபற்றிப்பிறழுவரினும் பிறழ ஒட்டாதச்சிவனையேநோக்கிநிற்பனுதலால் அவ்வுடல்பற்றிவரும் ஆகாமியவினை மேலும் பிறவியைக்கொடுத்தற்குக்காரணமாய் முறுகிவளராமல் அவ்வுடம்போடு கெட்டொழிபுமென்பதாம்.

இறைபணிநிற்பார்பிராரத்த சுகதுக்கங்களும் தனுகரணுதி மாயேயமும் மூண்டுவரினும் சலியாமற் சிவனையே நோக்கிநிற்பதெப்படி? என்பாரைநோக்கி உவமானமுகத்தால் மேற்கூறிய தைவலியுறுத்தும் உதாரணம்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடியோர்பவ ரம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு.

இ—ள். அக்கினிஸ்தம்பனஞ்செய்யவல்லநற்றவர், அதில்முழுகிக்கிடந்தாலும், தமதுவல்லபத்திற்சலியாமல்நிற்றல்போலவும், குதிரைநடாத்தும்பாகனுல் வல்லவர், அதனகத்திலிகப்படினும்தமது வல்லபங்குறையாதிருத்தல்போலவும், புலன்வழிச்செல்லாமைக்கு பாயமிதுவேயென்றெண்ணிமுதல்வன்றிருவடியேநோக்கிநிற்பார். ஒருசமயம் பிராரத்தமாயேயமூட்டியால் அவ்வழிச்செல்லினும் தமதுநிலையினீங்கிப்பந்தப்படமாட்டாரென்பதாம்.

சார்ந்ததன்வண்ணமாய்ச் சதசத்தெனப்படுஞ்சீவர் அரனடியை ஓர்ந்துநிற்பினும் ஐம்புலனிற்செல்லும்போது அவற்றிற்பந்தப்படாவலியினராதலெப்படி? என்பாரைநோக்கிஅரனடிச்சார்பின் விசேடங்கூறி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
விதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கெரிகதிரின் மூன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ராங்கு.

இ—ள். சத்து அசத்து இரண்டினுஞ்சார்ந்து அதுவதுவாய்நிற்றல்பற்றி நாம்சதசத்தெனப் பெற்றனமென்று தன்உண்மை

யுணர்ந்தவன், சத்தாகிய சிவனருளாலன்றி ஒன்றையுங்காணுமல் அருள்வழிநின்றே காண்பனுயின், அப்போது அசத்தாகிய பாசத்தில் (இதஞ்செய்தல்)பற்றுதலின்மையால், சத்தாகிய முதல் வனைச்சார்ந்துநிற்போர், ஒளிமுன் இருள்போலச்சத்தெதிர்தோன் றுதஅசத்தாகியபுலன்களிற் பந்தப்படாரென்பதாம்.

இதமித்தல்—பெயரடியாகவந்ததொழிற்பெயர். இதம்—ஈண் டுப்பற்று. ஏகனுகிநிற்றலால் மலமின்மையும், இறைபணிநிற்ற லால் மாயை கன்மங்களின்மையும் பெறப்பட்டன.

இச்சூத்திரம், பெத்தநிலையில் உயிருடன் முதல்வன்ஒற்று மையாய் நின்றதுபோல, இம்முத்திநிலையில் ஆன்மாமுதல்வனு டன் ஏகனுகிநிற்றலால் மலமும், இறைபணியினிற்றலால் மாயை கன்மமும் நீங்குமென்றும், ஞானம்பெற்று முதல்வனைக் காண் டலேவீடுபெறுதற்கு அமையுமெனச் சிவசமவாதி முதலியோர் கூறுதல் நோக்கிமுதல்வனைக் கண்டபோதும் நான்கண்டே னென்பதுமுதலிய மயக்கவுணர்வு நீங்குதற்கு ஏகனுகிநிற்றல் வேண்டுமென்றும், உடலுள்ளவரை பிராரத்தம் ஆகாமியம் நீங் காமையால் ஏகனுகிநிற்றல் எவ்வாறு கூடுமெனச் சுத்தசைவர் முதலியர்கூறுதல்நோக்கித் திருவருளினின்றி ஒருசெயலுமின்றெ ன்பதறிந்துஎல்லாமும்அருட்செயலாகக்காணும்இறைபணிபினிற் பார்க்குப் பிராரத்தம் தாக்காமல்உடலுழாய்க்கழியும். ஆகா மியம் வறுத்தவித்தாபொழிபுமென்றும், அவ்வினைகளை அவர் க்கு அவ்வாறுநீக்கிப் பிறர்க்குக்கூட்டுதல் பக்ஷபாத மென்பா தைநோக்கிச் சார்ந்தாரைக்காத்தல் தலைமைபற்றிநீக்குதலும், சாராதாரைச் சார்விக்கும் உரிமைபற்றிக் கூட்டுதலுஞ்செய்தலா லதுபக்ஷபாதமன்றென்றும், இறைபணிநிற்பார் உண்மைஞா னத்தாற் சிவமாய் நிற்றலின் பிராரத்தவினை ஏகதேசந் தாக்கும் பழக்கவாசனைபற்றி ஆகாமியம் ஏறுதென்றும், அந்தஞானநிலை பிறழுதென்றும் அதற்குஏது சத்தாகிய சிவத்தின்முன் அசத்து மூனைத்துத்தோன்றுமைபே என்றும் விளக்கியவாறு காண்க,

பதிற்றைம்சூத்திரம்.

பயனியல்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முலம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னையா வன்பி னடைன்சுழல் செலுமே.

கருத்துரை. பரமேசுரனது சீபாதங்களை யணையுமாறுணர்த்தி துதனுதவிற்று.

இ—ள், அகத்தே சிவனோடு ஒற்றித்து ஏகனாய்நிற்றலும், புறத்தே பிரபஞ்சத்தினைத்தாக்காதபடி இறைபணிபினிற்றலுமுடையார்க்குத், தாமாக ஒன்றை அறிதலும் விரும்புதலும் செய்தலுமாகிய அறிவு இச்சை செயல்கள் அங்கின்மையால் அவர்களால் விடயிக்கப்படும் பொருளும் அங்கு ஒன்றுமில்லை போலுமென்பாரைநோக்கி, அச்சொல்லால் அங்குச் சிவப்பொருளில்லை யென்றுகி, அவ்வின்மைபுத்தர்கூறும் ஆலய விஞ்ஞானம்போலச் சூனிய மென்றுகி, அறிவிச்சை செயல்களாகிய குணஞ்சூனியமாகவே அதனையுடைய குணியாகிய ஆன்மாவுஞ் சூனியமாய் முத்திநிலையில் ஆன்மாவில்லை யென்றுமுடிபுமாதலால், அம்முத்தியில் முதல்வனுடன் கலந்துநிற்கும் அவ்வான்மாவின் அறிவிச்சை செயல்கள் முதல்வனருளாற் றொழிற்படுமென்பதுணர்த்துமுறையில், பாசநீக்கஞ் சிவப்பேறு என்னுமிரண்டனுள், முன், பாசநீக்கத்தினியல்புகூறப்பட்டதனை நின்ற சிவப்பேறு கூறுதலாகியநிஷ்டையினியல் புணர்த்துவதென்பதாம்,

சூ—ள். தானுகக் காணமாட்டாது காட்டினுற்காணுமியல்புடைய கண்ணுக்கு அதனுடன் கலந்துநின்று உருவங்களைக் காட்டித்தானும் கண்டுகொண்டுநிற்கின்ற ஆன்மாவைப்போலத், தானுக அறியமாட்டாமல் அறிவித்தாலறியும் இயல்புடைய அவ்வான்மாவுக்கு, அதனுடன் கலந்துநின்று முதல்வன்விடயங்களை அறிவிப்பதுமன்றித் தானும் அறிந்துகொண்டுநிற்கும் பேருபகாரமாகிய அத்துவிதநிலையைமறவாது கடைப்பிடித்துப் பற்றிநிற்கும் அன்பினுலே அவ்வான்மா அம்முதல்வன்றிருவடியாகிய சிவானந்தானுபூதியைப் பெற்று வாழுமென்பதாம்.

மறவாமை அறிவின் நிகழ்ச்சியும், அன்பு இச்சையின் நிகழ்ச்சியும், திருவடியடைந்துவாழுதல், செய்கையின் நிகழ்ச்சியுமாய் முறையே காரணகாரியங்களாய், ஏகனுகி இறைபணிநிற்கும் முத்தான்மாக்களிடத்து ஒருங்குநிகழுமென்பதுபற்றி "அயரா அன்பின் அரன்கழல்செலுமே" என்றார். ஆகவே ஆன்மாக்களிடத்து எப்போதும் இச்சாஞானக்கிரியா சத்திகளுண்டென்பது விளக்கமாயது.

இதனுல், முதல்வன் ஆன்மாக்களிடத்துப்பிரிவின்றி அத்துவிதமாய்க்கலந்துநின்றே காட்டுதலும், தானும் கண்டுகொண்டு நிற்றலும், மலவழுக்கு நீங்கிச் சுத்தமாய்நிற்குமுத்திநிலையில் மாத்திரமன்றிப் பெத்தநிலையிலும் அவ்வான்மா அவ்வழுக்குடன்சார்ந்து அதுவேயாய்த்தத்தம்வினைக்கீடாகப் பற்பல யோனிகளிற்புகுந்து நரகாதிகளிற்கிடந்து ழலும்போதும் விட்டுநீங்காமல் அவ்வான்மாவுட்கலந்து நின்றே காட்டியுங்கண்டும் உபகரிக்கின்றுணுதலால், இவ்வுபகாரம், நமக்கினியரென்று நினைக்கப்பட்ட தாய் தந்தை மனைவிமக்கள் முதலியபந்து மித்திரராலாவது மற்றைமனிதர் முனிவர் மேலைத்தேவராலாவது நினைக்கவுமுடியாத ஓர் அரியபெரிய உபகாரமன்றேவென்றுள்ளபடி அறிந்து அதனை உள்ளிட்டு நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அம்முதல்வனைப்பற்றிமேலெழுகின்றஇச்சையாகிய பேரன்பு அணைகடந்தவெள்ளம்போல அம்முதல்வன்றிருவடியிற்செல்லுமாதலால், அப்போது அவ்வன்பேதானுய்விளங்கித்தோன்றும் பேரானந்தத்தையனுபவிக்கப்படுமென அவ்வறிவுஇச்சைசெயல்களுன்றும்கண்டுசிவனேயேபற்றிநிற்றலுணர்த்தி அதீதநிலையினியல்புகூறியவாறுகாண்க.

அத்துவிதமென்பது, சையோகமுதலிய மற்றையசம்பந்தப் பொருள்படாமற் சிற்றறிவுமுற்றறிவு முதலியவேற்றுமையுள்ள சிவன் சிவன் என்னும் இரண்டுபொருள்கள் தம்முட்பிரிவின்றி அபேதமாய் விளங்குதற்குரிய சம்பந்த விசேடமாம், இதனை உமாபதிசிவம், "அறிவொளிபோற்பிறிவரும் அத்துவிதம்" என்று விளக்கியது "அங்கியுமொன்றிற்றங்கி நின்றல்லது—தன்றொழினடத்தா" மைபோலமுதல்வன் உயிரையதிட்டித்து நின்றே எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க.

ஆன்மா, தன்னுட்கலந்துகிற்குப்முதல்வன் அறிவித்தமட்டில் அறியமாட்டாது. அறிவித்ததை அவனும் அறிந்துகொண்டுடனின்றுற்றுன் அறியுமென்பதை, "தொண்டனே னினையுமாறினையே" "விரும்புமா விரும்பே" தொடருமாதொடரே" நுகருமா நுகரே" என்பனவாதியாசமுத்திரிலேவிளக்கியருளியதி, ருவாக்குக்களாலுங்காணலாம். இவ்வுண்மைநோக்கியே, "அறிவானுந்தானே யறிவிப்பான்றனே" என்றருளிய அம்மையார், "அறிவாயறிகின்றுன்றனே" என்று மேலும் அருளிச்செய்தாரென்க.

அறிவானுமென்றது அறிவித்தற்காக அறிதல். அறிவாயறிகின்றனென்றது விஷயங்களில் அழுந்துவித்தற்காக அறிதலென்க.

இச்சூத்திரம், காணுங்கண்ணுக்குக்காட்டுமூளம் போற்காணவுள்ளத்தைக்காட்டிக்காண்டல்" எனவும், அதனை "அபராஅன்பின்அரன்கழல்செலுமே" எனவுமிரண்டதிகரணமுள்ளது.

முதலதிகரணம்

முதல்வனிடத்து உயிர்க்கு அறிவிக்கும் உபகாரம் ஒன்றுதானுள்ளதென்பாரைநோக்கி அறிந்து உடனிற்கும் உபகாரமுமாகிய அத்துவிதநிலை யுணர்த்தற்கெடுத்துக்கொண்ட இச்சூத்திரத்தின்முதற்பாகத்தைப் பதம்பிரித்துரைக்கும்மேற்கோள்.

ஈண்டு அவனும் ஆவற்றது விடயத்தையுணருமென்றது.

இ—ள். முதல்வன் அறிவிக்க அறியும்உயிர்களாலறியப்படும் விடயத்தை அவ்வுயிர்களறிதலேயன்றி அவனும் உடனின்றறிவனென்பதாம்.

மூன், "அவையேதானேயாய்" என்றும், "தாந்தமுணர்வின்றமியருள்" என்றும்பொதுவகையாக் கூறியஅத்துவிதநிலையை ஈண்டுக் காணும்உபகாரத்தில்வைத்துஇனிதுவிளக்கியதுகாண்க.

கண்சடம் அதனுற்காணப்படும்பிரயோசனம் உயிர்க்கேஆதலால் கண்காணும்போது உயிர் அக்கண்ணுடனின்று காணவேண்டியதேயாம். உயிர் அறிவுடையது. அறியும்பயன் முதல்வனுக்

கன்றுஉயிர்க்கேயாம். ஆதலால் முதல்வன் அறிவித்தல் மட்டிலமை யாது அவனும் உடனின்று அறிவனென்பதுபொருந்தா தென் பாரைநோக்கி மேற்கோளைச் சாதிக்கும்வது.

இவ்வான்மாக்கள் அவனியின்றியமைந்து ஒன்றையும் விட யியாவாகலான்.

இ—ள். கண்ணுக்குப் பொருளைக்காட்டும்விளக்கொளியானது அக்கண்ணெளியினும் அதனுற்காண்பப்டும்பொருளினுங்கலந்து நின்றுற்றன், கண்பொருளைக்காணும். அப்படியின்றிவிளக்கொளி கண்ணெடுமாத்திரங்கலந்து, காணவேண்டியபொருளிருக்குமிட த்துச்சென்றுகலவாமல் அப்பொருள் இருட்டிலிருந்தால், அப் போது, அக்கண் தன்னிடத்துவிளக்கொளிகலத்தலாகிய காட்டு முபகாரத்தைப்பெற்றிருந்தும் அப்பொருளைக் காணமாட்டாத ன்றே? அதுபோல, அறிவிக்க அறியுமுயிர்களும், முதல்வன றிவு தம்மொடுகலந்து தாம்அறியவேண்டிய பொருளினுந்தம் மொடுகூடவேசென்றுகலந்துநின்றுற்றன் அறிவு விளங்கப்பெற் றுஅப்பொருளை யறியுமன்றித்தனித்துநின்று அறியவுமாட்டா அனுபவிக்கவுமாட்டாவாதலால், முதல்வன் உயிர்க்குஅறிவுவிள ங்கும்படி அறிவித்தலாகியகாட்டுதல் மாத்திர மன்றி அவ்வுயிர் கள் விஷயங்களிற்பற்றிநின்றனுபவிக்கும்படி உடனின்று அறித லாகிய காணுதலும் அவசியம் வேண்டப்படுதலால் ஈண்டுஅவனு மவற்றதுவிடயத்தை யுணருமெனமேற்கொண்டதென்பதாம்.

முதல்வனும்உயிருடனின்றுஅறிவனேல் அவன்அறிதற்கும் உயிர்அறிதற்கும் வேற்றுமையில்லையாய், அறியுமுயிர் பந்தமுறல் போலமுதல்வனும் பந்தமுறுவனென்பதாமாதலால் உடனின்று அறிவனென்பது பொருந்தாதென்பாரைநோக்கி வேற்றுமையுங் காட்டிஅவனும் அவற்றது விடயத்தையுணருமென்றதை வலியுறு த்தும் உதாரணம்.

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றென்றுப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றென்றுப் பார்க்கு முணர்ந்து.

இ—ள். ஐம்பொறிகள் ஐம்புலன்களில்ஏவ்வொன்றைமாத்திரம் அறிதல் போல, ஆன்மாவும் விஷயங்களில் அது அதுவாய் ஒற்றித்துநின்று அறியவேண்டியஒன்றையே அறியுந்தன்மைத் தாதலால், அவ்வைம்புலன்களையும் ஒருசேரஅறியமாட்டாது, ஒவ்வொன்றுயறிந்தனுபவிப்பதாம். அதுபோல சார்ந்ததன்வண்ணமாய்ப்பலதிறப்படுதலின்றி எப்போதும் ஒரேபடித்தாயுள்ள சிவம், எல்லாவுயிர்களு மறியும்எல்லாவிஷயங்களையும் அவ்வுபிர்களிற்கலந்துநிற்றலால், பொதுவகையாலொருசேரவறிந்துடனுய்நிற்றலாற் சிறப்பாகவும் அறிவனென்பதாம்.

இதனுல், உயிரின்அறிவுக்கும் முதல்வன்அறிவுக்கும்வேற்றுமையுண்டென்பதும் அதனுல் பந்தப்படானென்பதுந்தெளியப்படுமென்க.

முதல்வன், அறிவிப்பது மன்றித் தானுமறிவனென்றல், பெத்தநிலையில் தனக்கு வேறுகிய உலகப்பொருளையறிவதாதலால்அதுபொருந்தும்; முத்திநிலையிலுந் தன்னை அறிவிப்பதுடன் தானும் அறிவனென்றல் அப்போதுதன்னைத்தானறிதலாகியகுற்றம் (ஆன்மாச்சியதோஷம்) வருமாதலால், தானும்அறிவனென்பது முத்தியிற்செல்லாதென்பாரைநோக்கி அங்ஙும் அவ்வாறு அறிவனென்பதுணர்த்தி அதனைவலியுறுத்தும் உதாரணம்.

ஏகமாய் நின்றே யிணையடிகளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினு—னேகமா
யுள்ளத்தின் கண்ணுனு ளுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனே வுற்று.

இ—ள். பெத்தநிலையில் மலத்தைச்சார்ந்து மலமேபாய்ப்பொறிவழியிற்பலவேறுயறிவது போலன்றி ஆன்மா; முத்திநிலையிற் சிவத்தைச்சார்ந்து சிவமேயாய் ஒரேபடித்தாயறியுஞ் சிவனருளின்வழியாகத் திருவடிகளையேஒரேமுகமாயுணரவே, அவ்வான்மாவுக்குஅம்முதல்வன்பரபோகமாய் மேலும்மேலும்புதிது புதிதாய் விளையும் பொலிவுடையனுதலாலும், அவ்வாறுணருமிடத்து அம்முதல்வன் அவ்வான்மாவின் அறிவை விட்டுநீங்காதவனுதலாலும்

கருதுவார் கருதிய பொருளாகிய தன்னை அவ்வான்மவறிவுடன் கூடிநின்றறிவனென்பதாம்.

இவ்வெண்பாவில், "உள்ளத்தான்" என்றதிலுள்ள "ஆன்" உருபுடனிகழ்ச்சிப்பொருட்டாதலால் "அவரறிவுடன்" என்று உரையருளிற்றென்க. இந் நூலாசிரியர் "உள்குவாருள்கிற்றை" என்று ஸ்ரீவாகீசசுருதிபைத்தமது வெண்பாவிலமைத்தருளியது, முன்னோர் மொழியையும் பொன்னேபோற் பேணிக்கொள்ளவேண்டியது பின்னோர்க்குரியகடப்பாடென்பதை எம்மனோர்க்குந் தெரிவித்தருளுந்திருவுளக் கருத்தாமென்க. அச்சுருதி [போக்கித்

கள்ளமனன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்
தெள்ளியே ஞகின்று தேடினே னுடிக் கண்டே
னுள்குவா ருள்கிற் றெல்லாமுடனிருந்தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே.

என்பதாம். இதன்முதல்வரியிற் பெத்தநிலையும் அடுத்தவரியில் முத்திநிலையும் விளக்கி, நிற்பவர் நிற்பனயாவையும்அவரறிவைவிட்டுநீங்காமலுடனிருந்துமுதல்வனுகியரீ யேஅறிகின்றுயென்பதுநோக்கி,நான்கண்டேனென்றுமுன்கூறியதனல்வெட்கத்தையடைந்தேனென்றுநம்மனோர்க்காகநமதுவாகீசசிவம்தன்மேல்வைத்தருளிய அருமைப்பாட்டைஉற்றுநோக்கி உண்மைதெளிக. இம்மட்டோ அச்சுருதி, "வேண்டுவார்வேண்டுவதேயீவான், என்பதில் வேண்டுவதை அவரறிவினுடனிருந்தறிந்து ஈவானென்னும் பொருடந்துமேலும் விளக்குகின்றது.

எவ்விடத்துஞ் செல்லுதற்கே, "வேண்டுவார் வேண்டுவதேயீவான்" என்றதுபோல, பெத்தரென்றுவது முத்தரென்றுவது பிரித்துக்கூறுமல், "உள்குவாருள்கிற்றை" என்று பொதுப்படக்கூறியருளினர். அதனல், முதல்வன் பெத்தநிலையில் உலகப் பொருளையும் முத்திநிலையிற் சிவமாகிய தன்னையும் அவ்வான்ம அறிவிற்கலந்துடனின் றறிவனென்றவாறுயிற்று. ஆகவே ஆன்மா முதல்வனையறியும்போது, அவன்உள்குவாருள்கிய பொருளாதலால் அவ்வாறு அறியப்படுகின்ற அவனும் அவ்வறிவுடனின்று தன்னையறிவனென்க.

மேலிவெண்பாவிலுள்ள ஐம்பொறிபோலென்று அநுமானங் காட்டுவாராய் "உள்குவாருள்கிற்றை உள்ளத்தான் உற்றுக்காணுனே" என்றும், உள்குவாருள்கிய பொருளாதல் இரண்டிடத்தும் ஒக்குமென்பாராய், "ஏகமாய்நின்றே யிணையடிகளொன்றுணரப் போகமாய்த் தான்விளைந்தபொற்பினன், என விடயித்தலினுகுமியல்பும், ஏகமாயுள்ளத்தின்கண்ணுனன்" என அறிவுவிளங்குதலினுகுமியல்பும் எடுத்தோதினர்.

பரபோகமாய் என்னுமல் "போகமாய்" என்று பொதுப்படக்கூறியதும், பெத்தநிலையில் விடயபோகமும் முத்திநிலையிற் சிவபோகமுமாகியஇரண்டுக்கும்பொருந்தும்பொருட்டாமென்க.

நிலத்தியல்பு வன்மையாயினும் இளகிய சேற்றுநிலத்திற் சென்றவன் பின்பு வலியநிலத்திற் செல்லுமிடத்து அவனுக்கு அவ்வன்மை செயற்கையாய்த்தோன்றல்போல, விடயபோகத்திற் சென்றவன் அதைக்கடந்து சிவபோகத்திற்செல்லுமிடத்து அது செயற்கைபோலத்தோன்றுமாதலாற், போகம் என்றமட்டில மையாது "ஆய்" என்றுஆக்கச்சொற்புணர்த்தியும்அப்போக நுகர்ச்சிக்குக்காரணம்உணர்ச்சியே ஆதலால் "உணர" என்று அக்காரணத்தைமுன்வைத்தும் விளக்கியருளினர். இணையடிகளுணருந்தோறும் போகம் மேலும் மேலும் புதிதாய்விளைதலை, "புணர்ந்தாற் புணருந்தொறும்பெரும்போகம் பின்னும்புதிதாய்" என்ற திருவாக்காலுங்காண்க. தணிவுபற்றி "விளைந்த" என்றருளியதென்க.

மேற்கூறிய ஐம்பொறிகள், விஷயங்களே ஆன்மாவின்பொருட்டே அதனைவிகலந்துடனின்றறிதல்போல, முதல்வன்தன்னை அவ்வான்மாவின்பொருட்டே அதனைவிகலந்துடனின்றறிவன். அப்படியறிவது, கண், கண்ணுடியினின்றுந்தன்னைக் காண்பதுபோல், முதல்வன் ஆன்மாவினறிவுடனின்று தன்னைக்காண்பதாமாதலால் இதுபோன்ற வற்றிற்குத் தன்னைத்தான் காண்பதென்னுங்குற்றம் (ஆன்மாச்சிரயதோஷம்) சேராதென்க.

கண், கண்ணுடியில் பிரதி விம்பத்தைக்கண்டதாதலால் தன்னைக் கண்டதாகாதெனில்? அப்படியன்று. அக்கண் தன்னிடத்

துள்ளகுணதோஷந் தெரிதற்காகக்கண்ணுடியைப்பார்ப்பதன்றிப் பிரதிவிம்பத்தைபார்த்தற்கன்று; பிரதிவிம்பம்போலத் தோன்றுவது விம்பமேயன்றி வேறன்றென்பது சிவாகம நூற்றுணிபாதலால், கண் தன்னையே கண்டதென்க.

ஆன்மா அறிவதைமுதல்வனும் உடனின்றறிவனென்று அறிவு மாத்திரம் பற்றிக்கூறினும், "எத்திறஞானமுள்ளதத்திறமிச்சைசெய்தி" என்பதுநோக்கி, ஆன்மாவின்இச்சைப்படிதானும்இச்சித்து அதன்செய்கைப்படி தானுஞ்செய்து அவ்வான்மாக்களின் அறிவிச்சைசெயல்கள்தொழிற்படுத்தற்குத் தன் அறிவிச்சைசெயல்களைத் தொழிற்படுத்துவனென்பதும், பெத்தத்தில் (அவன் இவனுய்) முதல்வன் ஆன்மாவாய் முற்பட்டுநின்றுவிஷயங்களைப்பற்றுதலால் அதனால்வரும் சுகதுக்கங்கள் முதல்வனைச் சாராமல் ஆன்மாவையே சாருமென்பதும், முத்தியில் (இவன் அவனுய்) ஆன்மாமுதல்வனுய்நின்று விஷயங்களைப்பற்றுதலால் முதல்வனையொழிந்தவிஷயங்கள் ஆன்மாவைச் சாராமல் முதல்வனை அவற்றையென்று கொள்வானென்பதும் இனிதுவிளங்கும்.

அவன் இவனுய், இவன் அவனுய் நிற்றல்;
அவனிவனுன தவனருளாலல்ல
திவனவ னுகானென் றுந்தீபற
வென்று மிவனேயென் றுந்தீபற என்றுந்திருவுந்தி

யாரும், அதனைவிளக்கி

அவனிவனுய் நின்ற தவனருளா லல்ல
தெவனவ னுய்நின்ற தேழா—யெவனிதனிற்
றேறுன்றுமாப் புல்லாரி தொல்லுலகி லம்மமா
யீன்றிடுமோ சொல்லா யிது. என்றுகூறுந்திருக்களிற்றுப்

படியாரும் கூறியவற்றையுங்காண்க.

இவ்வுண்மைநோக்கியே உலகத்தில் ஒன்றை ஈவாரும் ஏற்பாரும் சிவார்ப்பணமென்று கருதியே செய்யவேண்டும். அப்படிக்கருதாமல் தாமேகொடுத்ததாகவும்தாமேவாங்கியதாகவும் நினைப்பதுகுற்றமாமென்றுசிவாகமங்கள்கூறியதும், சித்தியார், "யாதொ

ருதெய்வங்கொண்டூரத்தெய்வமாகியாங்கே— மாதொரு பாகனுர் தாங்வருவர்" என்றதும், அவ்வுண்மை அறிந்தவிடத்து எல்லாஞ் சிவமாகவேகண்டு அனுபவிப்பார்க்கு வினைப்பயன்தாக்காது யாவுஞ் சிவானந்த மாகவே விளங்குமென்னுங்கருத்தால் இந்நூலில் "எத்தனுவினின்றுமிறைபணிபார்க்கில்லைவினை"--"மூற்செய்வினையுந்தருவான்முன்" என்றும், திருவுந்தியார். "பெற்றசிற்றின்பமே பேரின்பமாய்" என்றும், திருக்களிற்றுப்படியார். "உடம்புடையயோகிகடா மூற்றசிற் றின்ப—மடங்கத்தம் பேரின்பத்தாக்கி," என்றும், திருவாசகம் "காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப்—பேணுமடியார்"—என்றும், எல்லாஞ் சிவமாயிருந்ததே" என்றும் இவ்வாறு அருளியதுமாமென்க.

இரண்டாமதிகரணம்

முதல்வனுடன் ஏகமாய்நின்றுர்க்கு அறிவிச்சைசெயல்கள் அம்முதல்வனுபகாரத்தையறிதலும், அன்பு கூர்தலும் திருவடி சேர்தலும் எப்படிநிகழும்? மெய்ப்பாரைநோக்கி, நிட்டையினியல் புணர்த்துதற்கு எடுத்துக்கொண்ட இச்சூத்திரத்தின் இரண்டாம் பாகத்தைப்பதம்பிரித்துரைக்கும்மேற்கோள்.

இனிப்பத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தையணையுமென்றது.

இ—ள். கலந்துடனின் றறிவித்தும் அறிந்தும் வருமுபகாரமாகிய அத்துவிதநிலையை மறவாதுகடைப்பிடித்துநிற்கும்பேரன்பினுற் றமக்கு முதல்வனையின்றித் தனித்தொருசெயலுமில்லை எல்லாம் முதல்வன் செயலே யென்னுமுண்மைபற்றி அவனருள்வழி நிற்றலாகிய நிஷ்டையினுலே திருவடியாகிய சிவானந்தானுபூதியைப் பெறுவரென்பதாம்.

எனவே, எல்லாமுதல்வன்செயலேயென்னு முண்மைபற்றி அவனருள்வழிநிற்றலே நிஷ்டையென்பது தெளியப்படும்.

சூத்தியினுல் மறவாதேத்தினும் சீபாதத்தையணைதல்பரமுத்தியினன்றியாதென்பாரைநோக்கி மேற்கோளெச்சாதிக்கும் எனல.

அவன் ஆங்கியமின்றிச் செய்வோர்செய்திப்பயன்விளைத்து நிற்றலான்.

இ—ள். முதல்வன் உயிர்களின்வேறுகதில்லாமல் அவ்வுயிர்களின்செயலையறிந்து தன்னருள்வழிநிற்கும் நிஷ்டையாகிய அச்செயல் இடையீடின்றித்தொடர்ந்துநிகழுமாயின் அச்சிவானந்தானுபூதிப்பயனே அப்பொழுதே விளைத்தும், இடைவிட்டுநிகழுமாயின் அது மேலுமேலுமுதிர்ந்து இடைவிடாமல் நிகழுநிலை வந்தவுடன் விளைவித்தும் உடனின்றருளுவனுதலால் அவ்வாறு மேற்கொண்டதென்பதாம்.

முதல்வன்றிருவடியடைதல், உடம்பு நீங்கியபின்னன்றிஉடம்புள்ளபொழுதாகாது. ஆதலின் மேல் சூரியனெளிபோலப்பக்கத்துள்ளார்க்குந் தெரியவேண்டுமென்பாரை நோக்கி, அதுகூடாமையும் கூடுமாறும் உவமையாலுணர்த்தி ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணுர்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கிச—னருட்கண்ணுற்
பாசத்தைநீக்கும் பகலவர்த்துந் தாமரையோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

இ—ள். சூரியனெளி எல்லாருக்கும்சமமாகநிற்பினும், ஒளியுள்ள கண்களுக்கன்றி குருட்டுக்கண்ணுக்குவிளங்கார்மலிருளாகவே நிற்றல்போல, முதல்வன் எவ்விடத்தும் சமமாகநிற்பினும் மலநீங்கிய முத்தர்க்கன்றி மலபரத்தருக்கு அம்மலமாகவே நிற்பன். ஆதலால் சிவன் முத்தர்கள் அம்முதல்வனது திருவடிச்சிவானந்தமனுபவிப்பது மற்றவர்க்குத் தெரியமுடியாதென்க. ஆனால் அச்சிவன்முத்தரும் உடம்புடனிருத்தலாற் பாசமுடையரேயாவரெனில்? ஒருகுளத்திற் பலதாமரை அரும்புகளிருப்பினும், அவைகளில் பக்குவப்படாத சிற்றரும்புகளை நீக்கிவிட்டு மலரும்பக்குவமுள்ள பேரரும்புகளைமாத்திர மலரச்செய்யும் சூரியன்போல, முதல்வன், யாவரு முடம்புடையராயிருப்பினும், அவருள்ளே பக்குவமில்லாதபெத்தரை நீக்கிவிட்டுத் தன்னை மறவாதன்பினை யுணர்ந்து அருள்வழிநிற்கும்பக்குவமுள்ளசிவன் முத்தரிக்குத்

திருவருட்பார்வையாற் பாசநீக்கி அவரறிவைமலரச்செய்வன். ஆதலால் அவர்கள் உடம்புடனிருப்பினும் பாசமுள்ளவரல்ல ரென்பதாம்.

சீவன்முத்தர்க்கும் பரமுத்தியிலன்றிப் பாசநீக்கிஅறிவை மல ர்த்துவதில்லையன்று மேலும்மாறுபட்டுக்கூறுவாரை நோக்கி, நீக் கல் மலர்த்த லிரண்டின்முறை இவ்வாறென்றுணர்த்தி அதனை வலியுறுத்தும் உதாரணம்.

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனை மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றன்.

இ—ள். உயிரைத் தானுக்கிக்கொள்ளுமிச்சை மிகுதியால் அவ் வுயிருடன் அநாதியே அத்துவிதமாய்க்கலந்துள்ள முதல்வன் பிறைமதிகண்களினிலுபெறும் இருளைநாளடைவிலே லேசுலே சாக நீக்கிவந்து பௌர்ணமையில் முழுது நீக்கிவிடுதல்போல. அவ்வுயிரிடத்துள்ள மலவலியை லேசு லேசாய்ப்பக்குவநோக்கிப் படிமுறையாக நீக்கிவந்தூழிவில் முழுதும் ஒழியச்செய்து, காந் தம்இரும்பைத் தன்வசமாக்கல்போல. மலவலியை லேசு லேசா ய்நீக்கும்தோறும் அவ்வப் பக்குவத்துக்குரிய அருட்சத்திபதியச் செய்து அவ்வுயிரைத் தன்வசமாக்கிவருஞ் செய்கையினால் அவ னுக்கு ஒருகாலத்துஞ் சலிப்பில்லை அதனால்காந்தம்போலச் சந் நிதி மாத்திரையிற் செய்யும் அம்முதல்வன் விகாரப்படுவா னல்லன் என்பதாம்.

மலவலியைப்படிமுறையால்நீக்கி அம்முறையே அருட்சத்தி பதிவித்தலாற்றன் அம்முறையே சத்திநிபாதஞ் சரியாதி சிவபுண் ணியமுதலாயின நால்வகையாய் அவைகளும் ஓவ்வொன்று நன் னன்காய் மேலும்பலவகையாய் விரிந்தனவென்க.

பாஷாண வாதசைவர், உயிருக்குக் குணம்போல அநாதி யாயுள்ள மலம்அவ்வுயிரின்வேறுப்பிரிக்கப்படாதாதலால் அத னை முதல்வன் நீக்குவான் (மலந்துரந்து) என்று முற்கூறியது

பெர்ருந்தாதென்பது நோக்கி, அருத்தாபத்தியால் அதனைவலி யுறுத்தும் உதாரணம்.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்

இ—ள். திருவடியடையும்போது, உயிர்தான் கெட்டுப்போ யடையுமெனில்? கெட்டது அடைவதில்லை. கெடாமலடையுமெ னில்? அப்போதும் மூதல்வனில்வேறுய் நிற்பதன்றி அடைவ தில்லை. ஆதலால்இவ்விரண்டுக்கும்வேறுயொன்றுண்டென்றுகொ ள்ளும் அருத்தாபத்தியால் நோக்குமிடத்து உப்பானதுநீரை அ டையும் போது தன் கடினத்தன்மை நீங்கியடைதல்போல, உயிர் களும் மலவலி நீங்கப்பெற்றே முதல்வனையடைந்து அடிமையாய் விளங்கும். அவ்வுயிர்கள் பின்வேறுபட்டு மீள்வதில்லை யென்ப தாம்.

மூன்,“ அவையுடைமை யாளாநா மங்கு;” என்றுஇரண்டா ஞ்சூத்திரத்திற்கூறியது எல்லாப்பசுக்கள் பாசங்களுக்கும் பொ துவாகியஉடைமைஅடிமைத்தன்மைகளாம். இங்குக்கூறியதனிற ப்பாகிய அடிமைத்தன்மை யாதலால் இதனைஅப்பொதுவின்வே றாக எடுத்தோதினர். இங்குமூத்திகிலகூறிமுடிந்தமையால் முடி வில் “கப்புஇன்றும்” என்று, மீளாமைவிளக்கி யருளினர். கப்பு —பிளவு.

மூன்(ச)ஞ் சூத்திரம்” ஆன்மா,மலத்துடன்கூடிக்கேவலாவஸ் தையும்,(நி)ஞ் சூத்திரம் கருவிகளுடன் கூடிக் சகலாவஸ்தையும் (சு)ஞ் சூத்திர முதல்இதுவரை அருளுடன்கூடி அம்மலவலியுங் கருவிகளும் நீங்கப்பெற்றுச் சுத்தாவஸ்தையும்பொருந்துமென்ற அம்மூன்றுநிலையினும் அவ்வான்மாதன்னியல்பு கெடாமல் நிற் குமென்பது உவமையால் விளக்கிமேற்கூறியதனைவலியுறுத்தும் உதாரணம்.

பொன்வாண்முன் கொண்டூவிற் புக்கொடுங்கிப் போயகலத் தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்

மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

இ—ள். சூரியன் காலைப்பொழுதில் மேகத்துள் மறைந்து, அம் மேகஞ்சிறுகாற்றுற் சிறிது நீங்கியபோது ஏகதேசமாய்த் தன் ஒளி ஒடுங்கித்தோன்றி, அம்மேகம் பெருங்காற்றுன்மூழுதுநீங்கி யபோது, எங்குந் தன்னொளியேயாய்த்தோன்றுந்தன்மைபோல, ஆன்மா அநாதியே தன்னறிவு மூலமலத்துள் மறைப்புண்டு கேவ லாவஸ்தைப்பட்டுப், பின்பு கலியாதிகருவிகளுடன்கூடி ஏகதேச மாயறிவுவிளங்கிச் சகலாவஸ்தையினின்று உலகப்பொருளை யறி ந்தனுபவிக்கும். அதன்பின்பு முதல்வனருளால் மும்மலம்முழுது நீங்கப்பெற்று வியாபகஅறிவுவிளங்கப்பெற்று அவனதுசீபாதத் தையுணர்ந்து சுத்தாவஸ்தையிற் பேரின்புற்றுவாழுமென்பதாம்.

சூரியன்ஒளி மேகத்தால் மறைந்திருந்ததன்றிக் கெட்டொழி ந்ததில்லை. கெட்டதானால் பின்பு தோன்றுது. அதுபோலஆன்ம அறிவின்றன்மை மலத்தால் மறைவுற்றதன்றிக் கெட்டொழிந்த தில்லை யாதலால் ஆன்மாவுக்கு மூன்றவஸ்தையிலும் அறிவுதன் மை யுள்ளதே என்க.

இச் சூத்திரம், மூற்கூறிய சாதனத்தாலெய்தும் பயனுகிய பாசநீக்கம் சிவப்பேறுஎன்னு மிரண்டிற் பத்தாஞ்சூத்திரங்கூறிய படி பாசநீக்கம்பெற்றஆன்மா, தன்னுடன் முதல்வன் எப்பொ ழுதும் பிரிவின்றி அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும்பேருப காரத்தை மறவாது நினைக்குந்தோறுமேன்மேல்முறுகி வளர்ந் தெழும் பேரன்பால் அவனது திருவடியடைந்துசிவானந்தம் பெ ற்றுவாழுதலே சிவப்பேறென்பதும், முதல்வன் காட்டுதல் மாத் திரமன்றிக் காணுதலின்றென்பாரை மறுத்து, அம்முதல்வன் ஆன்மாவுடன் எக்காலத்தும் பிரிவின்றி நிற்கும் அத்துவித நிலை யை நன்கு விளக்கிக் காணுதலுஞ் செய்வனென்பதும், முத்தியி லும் காணும் உபகாரஞ் செய்வனேல்அதுதன்னைக்காண்டலாகிய குற்றமா மென்பாரை மறுத்து, அக்காண்டல் ஆன்மாவின் பொருட்டாதலாலும் கண் கண்ணுடியிற் றன்னைக் காண்டல்போ லு மாதலாலும் அதுகுற்றமாகாதென்பதும், பாசநீங்கி ஏகமாய் நின்றார்க்கு, மறவாமை, அன்புசெய்தல், திருவடியடைதல் எப்ப

டி? என்பாரைநோக்கி, மறவாமல் அன்புடன் அவனருள்வழி நிற்றலாற்றிருவடியடைதலேஏகமாய்நிற்கும்சிவானந்தானுபூதியா மென்பதும், திருவடியடைதல் பரமுத்தியிலன்றிக் கூடாதென் பாரைநோக்கி, முதல்வன்வேறின்றி அவரவர்செய்கைக்குரியபய னளிஈவித்து நிற்றலால் அது கூடுமென்பதும், அதுஉடம்புள்ள போது கூடாதென்பாரைநோக்கி, உடம்புள்ளபோதும் சீவன் முத்தரைப் பாசம்பற்றுமைபால் அது கூடுமென்பதும், அச் சீவ ன்முத்தர்க்குப் பாசநீக்கிஅறிவைவிளக்குதல் பரமுத்தியிலன்றி இல்லை யென்பாரைநோக்கி, இருளைப்பிறைமதிரத்தல்போல அவர்களுக்கு முதல்வன்பாசநீக்கி அறிவைவிளக்கி, இரும்பைக் காந்த மிழுத்தல்போலத் தன்வசமாக்கிக் கொள்வனென்பதும், அப்பாசம் ஆன்மாவின்குணம்போல அநாதியாதலால் நீங்காதெ ன்பாரைநோக்கி, நீரிற்சேர்ந்த உப்புத் தன்கடினம் நீங்கிவிடு தல்போல திருவடியடைந்த ஆன்மாவின்பாசவலிநீங்கிவிடுமென் பதும், சூரியனொளி மேகத்தின்மறைதல் சிறிதுவிளங்கல் முழு தும் விளங்கல்போல ஆன்மாவுக்குக் கேவல சகலசுத்தாவஸ்தை களிற் றன்னறிவி னியல்பு கெடாதென்பதும் விளக்கியவாறு காண்க.

பன்னிரண்டாஞ்சூத்திரம்

—பயனியல்.—

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ அன்பொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந்தானு மரனெனத் தொழுமே.

கருத்துரை. அநித்தனுக்கின்ற பதியைச் சித்தனுக்கண்டு வழிபடுமாறுணர்த்துதனுதலிற்று.

இ—ள். அபராஅன்பின் அரன்கழல்சென்றமூத்தர்க்குச் சீவன்முத்திநிலையில், அவ்வயாத அறிவும் (அன்பு) இச்சையும் அரன்கழலிற்செல்லுஞ் செயலு மாகியமூன்றும் பிறழாதுநிலைத் துள்ளனவேயாம். ஒருவாறுபுறஞ்செல்லுமேல் அவைசெல்லு மிடம் இவை என்றுணர்த்துமுறையில், வாக்குமனங்களுக்குஅதீ

தமாய் அன்பினுல் மறவாதேத்தமுன்னின்றருளு முதல்வனே, வாக்குமனங்களுக்கு (க்கோசரமாகும்படி) அதீதமாகாதபடி தெளிய க்கண்டு வழிபடுமுறையுணர்த்துவதென்பதாம்.

சூ—ள். அயரா அன்பின் அரன்கழலணைந்த சிவன்முத்தன், முதல்வனது, செந்தாமரைமலர்போலவிரிந்து விளங்கி எவற்றை யுந்தாங்கும் ஆதாரமாகிய திருவடிகளை அணையஞ்சிட்டாமல்மறத் தலைச்செய்யு மியல்புடைய மும்மல அழுக்கைஞானநீராற் கழுவி, அம்மட்டிலொழியாமல், அயரா அன்பினுல் அவ்வாறுகழுவி வழு வாதுநின்ற மெஞ்ஞானிகளுடன்கலந்துகூடி, மலமயக்கம் பற்றற நீக்குதலால் அன்பிற்கிறந்த அவரது திருவேடத்தையும் சிவாலய த்தையும் சிவனெனவே கண்டு வழிபாடுசெய்து வாழ்வனென்ப தாம்.

நோன்றல் = தாங்குதல். "மலங்கழிஇ" என்றதனுல் அறிவு செல்லுமிடமும், "அன்பரொடுமரீஇ" என்றதனுல் இச்சைசெல்லு மிடமும், "தொழும்" என்றதனுல் செயல்செல்லுமிடமும் விளக் கியவாறுபிற்று. ஆகவீசன்முத்தரின் அறிவு இச்சைசெயல்கள் புறஞ்செல்லினும்வேறிடங்களிற்செல்லாமல்இவ்விடங்களிலேய செல்லுமென்பதுதெளிவாமென்க. இம்மூன்றும் பிரிவின்றிமுதல் வனைப்பற்றியொரேஇடத்தில் ஒருங்குகிழ்தலால், அச்சிவனமுத் தர்க்கு வேறிடங்களைப்பற்றும் விடயவேற்றுமையின்றென்க. தொழுக. என்னது, தொழும். என்றதனுல் இது சிவன்முத்தரி யற்கை என்பது விளக்கமாயது.

இச்சூத்திரம், "செம்மலர்நோன்றுள் சேரலொட்டா அம்ம லங்கழிஇ" எனவும், "அன்பரொடுமரீஇ" எனவும், "மாலறநேய மலிந்தவர்வேடமும் ஆலயந்தானும் அரனெனத்தொழுமே" என வும் மூன்றதிகரணமுள்ளது.

முதலதிகரணம்.

சிவன்முத்தர்க்குஒரேதுணிவாக முதலிற்செய்யவேண்டிய கடமை இதுவென்றுணர்த்துவாராய் இச்சூத்திரத்தின் முதற்பா கத்தைப்பதம்பிரித்துரைக்கும் மேற்கோள்.

ஈண்டு ஆணவம் மாயை கான்மியமென்னுமலங்களைக்களைக வென்றது.

இ—ள். இங்கு ஆணவம் மாயை கான்மியமென்னும் மும் மலங்களைநீக்குக என்பதாம்.

கன்மமலம் தன்மூலத்தைநோக்கிக்கான்மியம்எனவும்படும். கன்மசம்பந்தம் கான்மியம் என்றுரும். ஆகவேகன்மம் இருவித மென்பதாம். அவற்றுட்கான்மியமலம்கேவலாவத்தையினீங்கிஉடம்புகொண்டுவெளிவரும் ஆன்மாவைப்பற்றிநிகழ்வதாம். அதுதன்மை தீமைஎன்றிரண்டாய்ச் சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியமென முத்திறத்துப் பலவகையாய் விரிந்துள்ளது. கன்மம் அக்கான்மியமலத்துக்குமூலமாயுள்ளது. இதனை, "கன்மமூலங்காட்டி" என்னுஞ் சித்தியார் முதலிய நூல்கள் விளக்குகின்றன.

கேவலாவத்தையில் ஆன்மாவுக்குக் கான்மியமலமில்லையாதலால் அங்குநின்றுவெளிவருதற்குரியஉடம்பைக்கொடுப்பது அம்மூலகன்மமேயாம், அது ஆன்மாவின் இச்சாசத்தியின் கார்யமாகிய விருப்பு வெறுப்புக்களேயாம். இம்மேற்கோளிற் கான்மியம் என்றதை காமியமெனப்பாடமோதி ஆகாமியம் முதற்குறையாயதென்பாருமுளர்.

மூன், பத்தாஞ்சூத்திரத்திற் கூறியபடி, பாசம் நீங்கிப் பதினொன்றிற்கூறியபடிமெய்யுணர்ந்து நிஷ்டைகூடியபின், இம்மேற்கோளில் "மலங்களைக" என்றதனால் களைதற்கு அம்மலங்கள் இங்கும் உள்ளனவாதல் எப்படி? என்பாரைநோக்கி, "தாள்சேரலொட்டாவம்மலம்என்று" உடம்பொடுபுணர்த்தோதியபொருளை விளக்கி மேற்கோளைச்சாதிக்கும் ஏது.

அவைதாம் ஞானத்தைஉணர்த்தாது அஞ்ஞானத்தையுணர்த்து மாகலான்.

இ—ள். அம்மலமூன்றும் நிஷ்டைகூடினரிடத்தும்ஏதேனும் ஒருவழியால் நுழைந்து மெய்யறிவைக்கிழ்ப்படுத்திப் பிறவிக்குவித்தாகிய பழையவிபரீதவறிவைமேற்படுத்தும். அவர்க்கு அச்செயல் ஆகாமையால் ஈண்டுமலங்களைக் களைகளன்றுமேற்கொண்டதென்பதாம்.

அம்மலங்கள்வந்துநுழையுமாறும் அது மெய்ஞ்ஞானிக்கு ஆகாமையுந்தெரிவித்து ஏதுவை வலியுறுத்தும் உதாரணம்.

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ்வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

இ—ள். புண்ணியபாவப்பயனுகிய இன்பதுன்பமாயும் அப்புண்ணியபாவ காரணமாகிய நல்வினை தீவினையாயும் பொருந்துகின்ற கன்மமலமும், பிருதுவிமுதல்மாயை ஈருகக்காணப்படுகின்ற மாயாமலமும் சுட்டியறிவதாகிய விபரீத அறிவைத் தருகின்ற ஆணவமலமுமாகிய இம்மூன்றும் மெய்ஞ்ஞானியாகிய உனக்கு ஆகாமையால், அவற்றைவிட்டொழிவாயாக என்பதாம்.

மலமூற்றும் நீக்கி மெய்யுணர்ந்து நிஷ்டைகூடினுர்க்கும் உடம்புள்ளவரைபிராரத்தம் உடலைப்பற்றிநிற்றலால், ஒருசமயம் அதுமுற்பழக்கத்தால்வந்ததாகும். அதனை அனுபவிக்கும்போது "பிற்செயாதனுபவிப்பதின்று" என்றுசித்தியார்கூறியபடி பின்னுஞ்செயல்நிகழாது அனுபவிப்பதில்லையாதலால் அவ்வினையின் சார்பாக விருப்பு வெறுப்புளவாகிக்கன்மமலம் வந்துதுழையும் அதனல் எங்குஞ் சிவமேஎன்ற வியாபகநோக்க மூள்ளார்க்கும் பிரபஞ்சப்பொருள்களாகிய ஏகதேசப்பொருள்கள்காணப்பட்டு மாயாமலம்வந்து துழையும். அதனல் அப்பொருள்களைச் சுட்டி அறியும் விபரீத அறிவுமேற்பட மெய்யறிவைக்கீழ்ப்படுத்திப்பிறவிக்கு வித்தாய் ஆணவமலம்வந்து துழையும். இம்மூன்றும் இம்முறையாக(அறிவற்றம்)அறிவுசேர்ந்தசமயம்பார்த்துவந்துகூடுமென்றுகாட்டுதற்கே,இவ்வெண்பாவில்ஆணவமாயைகன்மம்என்னுமுறையைவிட்டுக் கன்மமாயை ஆணவமெனவைத்து அதனதன்காரியங்களைச் சுட்டுடன்கூறினுர். இங்கு மாயை என்றது (ஈகாரவகரம்) தத்துவமென்க. இதுவிடாத ஆகுபெயராய்த் தன்கீழுள்ள தத்துவங்களையுந் தழுவிநின்றது. இம்மூன்றுமலமும், சிவபோகப் பெருவாழ்வை யிழப்பித்தலால் அப்பெருவாழ்வுடையார்க்கு ஆகாவாயின. சமயம்பார்த்து நுணுகிவந்துநுழைந்த மட்டினில்லாமல் மேன்மேன்முறுகிவளர்வனவாதலால் அவைகள் துழையும்போதே நீக்காவிட்டால்,

"இனிதாக முண்மரங் கொல்க களிகுரர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து"

என்றபடி முறுகிவளர்ந்தபின் நீக்கமுடியாதென்னும் அவசரம் பற்றி முன் மேற்கோளிற் "களிக" என்றமட்டில் ஒழியாமல் இங்கும் "விடு"என்று வற்புறுத்தியருளிற்று.

விடுதலாவது, அம்மலங்கள் அம்முறையாக வந்தபோதே இவ்விபரீதஞானம் ஏகதேச அறிவால் வந்தது. அது, விருப்பு வெறுப்பால் வந்தது. அது பிராரத்ததுகர்ச்சியிற்சென்றதற்போ தத்தால்வந்ததென்றறிந்து, அத்தற்போதம்முளையாமல் நீக்கிச் சிவஞானத்துளடங்கிச் சிவாநுபவஞ் சுவாநுபூதியாகும்படி அச் சிவஞானநிலையில்-உறைத்துநிற்றலாம்.

ஏதுவில், மும்மலங்களும் அஞ்ஞானத்தையுணர்த்துமெனக் கூறினும் அம்மூன்றில் மாயையுங் கன்மமும் அஞ்ஞானங்காட்டு தல் ஆணவத்தின் சார்பாலாகிய செயற்கையேயன்றி இயற்கை யன்றென்பதுணர்த்துதற்கே இவ்வெண்பாவில், "அஞ்ஞானங் காட்டுமாணவமென்று" மாயைகன்மங்களைப்பிரித்து அஞ்ஞான ங்காட்டுதல் ஆணவத்திற்கு மாத்திரஞ்சிறந்தெடுத்தோதினார்.

இரண்டாமதிகரணம்

மேற்கூறியபடி மலங்கழுவிய சீவன்முத்தர்க்கு அதன்பின் னுஞ்செய்யக்கடவது இன்னதென்று விளக்குவாராய்ச் சூத்திரத் தில் "அன்பரொடுமரீஇ" என்ற இரண்டாம்பாகத்தைப் பதம் பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனிச் சிவபத்தர்களோ டிணங்குகவென்றது.

இ—ள். (ககக) சூத்திரங்கூறியபடிமுதல்வன் அத்துவிதமாய்நின் றுபகரித்தலை மறவாதுகடைப்பிடித்துச்செய்யும் அன்பினுல் அவ னருள்வழிநின்ற சீவன்முத்தர்களுடன் நட்புச்செய்க என்பதாம்.

பத்தரோடிணங்குக என்றதனுல் மற்றையருடன் இணங்கா தொழிக என்றவாறு மாயிற்று.

இவர்உறவர்இவர்பகைவரென்னும்நோக்கமேயில்லாதமெய்ஞ் ஞானிகள், சிலரிடத்து நட்புஞ் சிலரிடத்து அஃதின்மையுமுடை

யராதல் பொருத்தமன்றென்பாரைநோக்கி மேற்கோளேச்சாதிக்கும்வது.

அல்லாதார் அஞ்ஞானத்தையுணர்த்துவராகலான்.

இ—ள். அன்பிலுல் மறவாதேத்திமுதல்வன்பாதத்தையணையாத பாசத்தார், சுட்டியறியும் விபரீதவறிவைவிளேப்பராதலால் சிவபத்தருடன் இணங்குக எனமேற்கொண்டதென்பதாம்.

சிவபத்தரல்லாதார் விபரீதவறிவைவிளேப்பதெப்படி? யெனில்.

"தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி
முனிவிலாததோர் பொருளதுகருதலு
மாறுகோடி மாயாசத்திகள்
வேறுவேறுதம் மாயைக டொடங்கின
வாத்தமாலு ரயலவர்கூடி
நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர்
சுற்றமென்னுந்தொல்பசுக்குழாங்கள்
பற்றியழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பர மாகவேதியருஞ்
சரதமாகவே சாத்திரங்காட்டினர்
சமயவாதிக டத்தமதங்களே
யமைவதாக வரற்றி மலிந்தனர்

என்பனவாதியதிருவாக்குகளாலறிக.

மும்மலங்கள் விபரீதவறிவை விளேப்பது அறிவுசேர்ந்த சமயம் வாய்த்தபோதேயாம். அதுவும் அதற்குரதுவாய் நிற்றல் மாத்திரமேயாம். சிவபத்தரல்லாதார் அப்படியன்றி அதுவாய்க் காதபோதும் வாய்க்கப்பண்ணிக்கொண்டு • பலவகையுபாயங்களாலும் தம்மைப்போல விபரீதஅறிவைச் செலுத்தியே விடுவாதலால் அம்மலங்களினுங்கொடியராகிய அவர்களே அவற்றினு மிகப்பயந்து விட்டொழிதலே மெய்ஞ்ஞானிகளுக்குப்பொருந்துமென்பதாம்.

விபரீதஅறிவை விளைப்பவனோடிணங்காமையேபோதும், பத்தருடன் இணங்குவதுஎதற்கென்பாரைநோக்கி, நிஷ்டைகூடியஞானிகள் பிரார்த்தாநுபவத்தில் எதிர்ப்படுபொருளைப் பற்றும் படிநேரும்.முன்னரேசிவபத்தர்சேர்க்கையிருந்தாற்றான்எதிர்ப்படுபொருள் சிவபத்தரேயாய் அவருடன் இணங்குதல்கூடும். அச்சேர்க்கையில்லையெல்மற்றையருடன் இணங்குதல்நேரும். அதனாற்சுட்டியறியும் விபரீதஅறிவுவந்துதழைக்கும். அவ்வறிவாகியகள்வரால்முன்கைவந்தமெய்ஞ்ஞானப் பொருள் அபகரிக்கப்படும். அவ்வாறுகாமற் சிவபத்தருடன் இணங்கவேண்டியது அவசியமென்றுகூறிமேற்கோளாவலியுறுத்தும் உதாரணம்.

மறப்பித்துத் தம்மை மலங்களின்—வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னலுணரு
மெய்த்தவரை மேவா வினை.

இ—ள். முதல்வன்காட்டியுங்கண்டும்உபகரித்துடனிற்கும்அத்துவிதநிலையைமறவாதுகடைப்பிடித்துநிற்றற்குஏதுவாகியமெய்ஞ்ஞானத்தை மறப்பித்துவசப்படுத்தித் தீநெறியிற்செலுத்தும் மலங்களால் வரும்பிறவிக்குழியில்விழுத்தித்துன்புறுத்துபவராகியஅன்பில்லார் பகுதியிலேயே பன்னெடுங்காலம்பழகிவந்த சேர்க்கைநீங்கும்படி, அம்மறத்தலைநீக்கிஞானக்கண்ணையுதவிப் பிறவிக்குழியினின்றும்எடுத்து நன்னெறியிற்செலுத்தி வாழ்விக்கும்பரன்பாலராகிய சிவபத்தர்திருக்கூட்டத்திலேயேபரன்புடையராய் அதனால் விளங்குஞ் சிவஞானக்கண்ணால் அல்வத்துவிதநிலையையேஇறுகப்பற்றிநின்றுணரப்பெற்ற மெய்த்தவரை, எல்லாஅநர்த்தங்கட்கும்மூலமாய்வந்து அன்பில்லார்கூட்டத்திற் சேர்ப்பிக்கும் பிராரத்தவினை வாதிக்கமாட்டாதென்பதாம்,

முன்னதுவில் அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவரென்றுகூறியதையே இவ்வெண்பாவில், "மறப்பித்துத்தம்மைமலங்களில் வீழ்க்குஞ்—சிறப்பில்லார்" என்றுமேலும் அநுவாதமாகவிரித்துக்கூறியது, அவ்விரிவின்எதிர்மறைமுகத்தாற் சிவபத்தர்மகிமை விளக்குதற்கென்க. ஏனையாகாதி தவங்களெல்லாம் பலன்மூடில் அழியும்பொய்யாய் மலகாடையாய்ப்போதலானும், சிவ

ஞானத்தவம்ஒன்றே மெய்யாய் மலமின்றி நிற்றலாலும் ''பரனுணர்வினுணருமெய்த்தவரை'' யென்று விளக்கியருளினர்.

சிவபத்தரிடத்து முக்கரணங்களையுஞ்செலுத்தி யுறைத்து நிற்கும் மெய்யன்பர்க்கு, உலகியலுணர்வுமாறிச்சிவானுபவஞான மேம்பட்டுநிகழும். அது நிகழுவேஉடம்புபற்றிவரும்பிராரத்த வினை அனுபவமாக வந்துவாதிக்கமாட்டாது. ஆகவே அவ்வினை பற்றி நிகழும் சிறப்பில்லார்சேர்க்கை பற்றறக்கெடும். என்னுமுறைவிளக்குவராய், ''சேர்வை யறப்பித்துப்-பத்தரினத்தராய்ப் பரனுணர்வினுணரு—மெய்த் தவரைமேவாவினை'' என்றருளினர். எனவே வீட்டுணர்வைத்தளரவிடாது நிலைபெறச்செய்யுஞ் சிவபத்தருடன் இணங்கினுலன்றி வினைபற்றித்தொன்றுதொட்டு வந்த சிறப்பில்லாரிணக்கம் நீங்காததலால் அவ்விணக்கம் உறுதியாகவேண்டுமெனவலியுறுத்திய வாறுயிற்று.

மூன்றுமதிகரணம்

சிவபத்தருடன்இணங்கிற்பார்க்கு அவ்விணக்கம் நழுவாமல் நிலைபெறச் செய்தற்கு அதன்பின்பு செய்யக்கடவது இது வென விளக்குவாராய்ச், சூத்திரத்தின் மூன்றும்பாகத்தைப்பதம் பிரித்துரைக்கும் மேற்கோள்.

இனிப்பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும்பரமே சுரனெனக்கண்டுவழிபடுகவென்றது.

இ—ள். அயராஅன்பின் அரன்கழலேத்தும் மெய்யன்பரது திருவேடமும் சிவாலயமும் சிவனெனவே ஐயமின்றித்தெளிந்து வழிபடுக என்பதாம்.

காமுகரால் விரும்பப்படும்பெண்கள்வடிவில் ஆடையாபரணாதிகள் பார்வைமாத்திரத்தில்அவரைவசித்தின்புறுத்தல்போல மெய்ஞ்ஞானிகளைப் பார்வைமாத்திரத்தில் வசித்தின்புறுத்தலால்திருவேடத்தையும் சிவாலயத்தையும் என்றுஉபசரித்துக்கூறினர். இதனை,

''சேலுங்கயலுந்திலைக்குங் கண்ணிரண்டுங்கொங்கையிற் செங்குங்குமம்—போலும் பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்

போற்றிசைப்ப" என்றதிருவாக்காலுங்காண்க. வேடத்தையும் ஆலயத்தையுங் கூறவே அவ்வேடமுடையாரையும் ஆலயத்துள்ள திருவுருவங்களையுஞ் சிவனெனக்கண்டுவழிபடுதல் கூறுமேயமையுமென்க அத்திருவேடத்தினியல்பும் அதனைச் சிவனெனக்கண்டு வழிபடுதலும்.

ஞாயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந்தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார்புகுந்தனர் வீதியுள்ளே.

வாக்கின் பெருவிறன் மன்னர் வந்தணைந் தாரெனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ் புகலிப் பெருந்தகை யாரு
மாக்கிய நல்வினை போலென் றன்பர்கு ழாத்தொடு மெய்தி
ஏற்கும் பெருமிருப் போடுமெதிர்கொள வெய்தும் பொழுதில்

"சிந்தையிடையறு வன்புந் திருமேனி தன்னி லசைவுஞ்
கந்தை மிகையாங் கருத்துங் கையுழ வாரப் படைப்பும்
வந்திழி கண்ணீர் மழைபும் வடிவிற் பொலிதிரு நீறு
மந்தமி லாத்திரு வேடத் தரசு மெதிர்வந் தணைய"

"கண்ட கவுணிப் கன்றுங் கருத்திற் பாவுமெய்க் காதற்
றொண்டர் திருவேட மேரே தோன்றிய தென்று தொழுதே
யண்டரும் போற்ற வணைந்தங் கரசு மெதிர்வந் திறைஞ்ச
மண்டிய வார்வம் பெருக மதுர மொழிபருள் செய்தார்

என்பனவாதிய திருவாக்குக்களாலுங் காண்க.

மெய்ஞ்ஞானிகளுக்குத்திருவேடம் சிவாலயமென்ற பகுப்பின்றி எங்குஞ்சிவமெனக் காண்டலே பொருத்த மாதலாலும், பின்ற திருத்தாண்டகம்முதலியன அவ்வாறேகூறுதலாலும், ஸ்ரீருத்திரம்பகுப்பின்றியிருள்ளனஉயிரில்லனஎல்லாப்பொருளுந்தனித்தனி நமாந்தமாகஎடுத்தோதி வழிபடுதலாலும்இம்மேற்கோளில் திருவேடம் சிவாலயமிரண்டைமாத்திரம் சிவனெனக் கண்டு வழிபடுக என்றது என்னென்பாரைநோக்கி மேற்கோளோச்சாதிக்கும் எனல.

அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

இ—ள். முதல்வன் எங்கும்வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டிடத்து மாத்திரம் தயிரின்நெய்போல விளங்கிநின்று மற்றெவ்விடங்களினும் பாலின் நெய்போல மறைந்து நிற்றலால் அவ்வாறு மேற்கொண்டதென்பதாம்.

எப்பொருளிலுமிறைவன்கலந்திருத்தல் தெரிதற்கேஸ்ரீருத்திரம் அவ்வாறுரைத்தியதென்க.

திருவேடத்தில் முதல்வன் பிரகாசமாய்நிற்றலெப்படி? என்பாரைநோக்கி ஏதுவைவலியுறுத்தும் உதாரணம்.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தார்த் தம்பா னிகழுந் தயிர்நெய்போற்
பாசத்தார்க்கின்றும் பதி.

இ—ள். சிந்தனைக் கெட்டாதபரம்பொருள் உலகர்தன்னை அறிதற்காகத் திருநீறு கண்டிகைமுதலிய திருவேடமாகிய தனது திருவுருவை அன்பர்க்குக்கொடுத்தலாலும், அவர்கள் தன்னைச் சிவோகம்பாவனையாலறியச்செய்தலாலும், அவ்வாறுதன்னையொருகுறியினின்று அறியும் அவர்களைத்தனது வியாபகத்துளிருத்துதலாலும், பின்பு அக்குறியும் நழுவித்தன்னையுள்ளபடியறியும் அவரிடத்துத் தயிரின்நெய்போலவிளங்கித்தோன்றும். அவ்வியல்பில்லாத பாசத்தாரிடத்துப் பாலின் நெய்போல மறைந்து நிற்குமென்பதாம்.

கொடுத்துச் செய்து இருத்தலால் நிகழும் (விளங்கித்தோன்றும்) என்றியையும்.

சிவபத்தர்க்குத்திருவேடங்கொடுத்துச் சிவோகம்பாவனையாலறியச்செய்து வியாபகத்துள்ளிருத்துதலால், உள்ளபடிஅறியும் அவரிடத்து விளங்கித்தோன்றுமென்றது சரி, அவ்வியல்பில்லாத சிவலிங்காதி தாவரவடிவில் மந்திரசாந்நித்தியமுள்ளபோதன்றி விளங்கித்தோன்றுதலில்லை. இதற்கே இப்படியாகவும் இவ்

வடிவங்களிருக்குமிடமாகிய சிவாலயத்தைபுஞ் சிவனெனைக்கண்டு வழிபடுக என்றதுளவ்வாறு பொருந்துமென்பாரைநோக்கி, அச் சிவாலயத்திலும் முதல்வன்பிரகாசமாய் நிற்றலேவலியுறுத்தும் உதாரணம்.

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
⁂ ணுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவருத்
தானதுவாயன்றுணு முனதுவாய்த் தோன்றுனே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

இ—ள். விறகில் அக்கினிகடைந்தபோது வேறுப் விளங்கிக் கடையாதபோது விளங்காமனிற்றல்போல, உயிர்க்குப் புத்தி முத்திகொடுத்தற்பொருட்டுக் காணப்பட்ட தாவரவடிவில் கலப் பினுல்அதுவேயாய் பொருட்டன்மையால் வேறுமாய்நிற்கு முதல்வன், அதுவேதானுகக்காணமாட்டாதார்க்குஅவராலறியப்பட்டதொருமந்திரசாந்நித்தியமில்லாதபோது அவ்வடிவில் விளங்காமனின்று அஃதுள்ளபோது விளங்கித்தோன்றுவன். அப்படியன்றி அவ்வடிவே அவனுகக் காணப்பெறும் மெய்த்தவ முடையார்க்கு அவ்வடிவமேதானுக விளங்கித்தோன்றுனே என்பதாம்.

முதல்வன் தாவரவடிவில் கலப்பினுல் அதுவேயாயும் பொருட்டன்மையால் வேறுயுள்நிற்றல், சங்கமவடிவுக்கும் ஒக்குமேனும், இவ்விடத்துத் தாவரவடிவைப்பற்றி வந்த வினுவாதலால் அவ்வினுவை விடுத்தற்கு இங்குக் கூறினர்

இரண்டுக்கும் ஒக்குமென்பது பின்விளக்கப்படும்.

நான்காவது ஒழிபு அதிகரணம்

மூன்மூன்றதிகரணங்களிற் கூறியமலங்களுதல்சிவபத்தருடனிணங்குதல் திருவேடங்கள் சிவாலயங்களே வழிபடுதல் மூன்று மலமுஞ்சிவன்முத்தர்க்குத் தாமேயுளவாகின்ற இலக்கணமாதலால், களவர் இணங்குவர் வழிபடுவரென அதுவாதமாகக் கூறவேண்டியஇம்மூன்றையும் முறையே களகஇணங்குக வழிபடுக என்று விதியாகக்கூறியது எதற்கெனபாரைநோக்கி, அதனை முற்கூறிய அம்மூன்றன் ஒழிபாகக்கொண்டு சாதிக்கும் மேற்கோள்.

⁂உண்டல் = உண்டாதல்.

இனி, இவ்விடங்களின்வழிபடுக வென்றது.

இ—ள். மேற்கூறிய திருவேடங்கள் சிவாலயங்களின் வழி பாடுசெய்க என்பதாம்.

எடுத்தலோசையால் அதுவதித்துணர்த்துலே போதுமென் பாரை நோக்கி, முன்மூன்றுமதிகரணத்தில் வழிபடுகளன்று படி த்தலோசையால் விதித்ததையே இங்கும் எடுத்தலோசையால் வலியுறுத்தலால், இது கூறியதுகூறலன்றென்க.

இதனைவலியுறுத்தலே இனம்பற்றி முதலாமிரண்டா மதிக ரணங்களில் கலிக இணங்குக என்றவிதியையும் வலியுறுத்தி யவாறுமிற்று.

வழிபாடுமுதலியவற்றை முன்விதித்திருக்கவும் மேலும்விதி த்தல் பயனற்றதாமென்பாரைநோக்கி, மேற்கோளைச் சாதிக் கும் ஏது.

நரம்பு நாடிமுதலானவற்றைத் தானதுவாய் வரும்புருடன் அவையாகாவாறு அப்புருடனுமாகலான்.

இ—ள். உடம்பிலுள்ள நரம்பு முதலியதாதுக்களில் வேற் றுமையின்றி அதுவதுவேதானுய்கின்று வருகின்ற உயிர், நரம் நாடியோனென்போ நரம்புசிக் கோழையோ என்றிவ்வா றுபை மறியாகப் பார்ப்பார்க்கு, அந்நாடி நரம்பு முதலியனவாகாமல் அவற்றின்வேறுமானற்போல, உயிர்க்குயிராகிய(அப்புருடனும்) முதல்வனும், உயிர்ப்பொருள் உயிரில்பொருள் எவற்றினும் கல ப்பினுல் அதுவதுவாகியும் பொருட்டன்மையால் வேறுகியும் நிற் பனுதலால், அம்முதல்வன் அதுவதுவாய் நிற்றல் நோக்கிஎல்லா ஞ்சிவமெனக்காணும் அகமுகவழிபாடு, அவன்வேறுய் நிற்றல் நோக்குமிடத்துத் திருவேடஞ் சிவாலயங்களிற்றனித்துப் புற முகத்துச் செல்லாதாதலால் அவ்விடத்தும்வழிபாடுகிழ்விக்க வேண்டியே "இனிஇவ்விடங்களின்வழிபடுக" வெனவிதித்தலே மேற்கொண்டதென்பதாம்.

முதல்வன், அதுவதுவாயும் வேறுயுநிற்குபியல்பு எங்குமுள் ளதாகவும் திருவேடஞ் சிவாயங்களின்மட்டும்வழி பாடு விதித் ததென் னென்பாரைநோக்கி, அதனைவலியுறுத்தும் உதாரணம்.

அதுவிது வென்ற தறுவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமூந் தைவமே
அத்துவித னியம்பிற் றொழு.

இ—ள். அத்துவிதசித்தாந்தம் பெற்றுண்டானே, முதல்வன் எப்பொருளினும் நிற்குநிலை அறியப்பெற்றவர்க்கு, கண்ணும் அருக்கனும்போல அதுவும் இதுவுமென்று பக்கிசைக்கப்பட்ட பேதநிலை, உடலுயிர்போல அதுவேவென்று தொக்கிசைக்கப் பட்ட அபேதநிலை, குணகுணிபோல அதுவாய்இதுவென்று பக் கிசையாத பேதாபேதநிலையாகிய இம்மூன்றில் தனியாக ஒன்று மாத்திரமுடையனல்லனாய், உயிரின் அறிவும் கண்ணின் ஒளியும் கலப்பினால் அபேதமாயும் பொருட்டன்மையாற் பேதமாயும் உடன்செல்லுதலாற் பேதாபேதமாயும் மூன்றையும் ஒருங்கே கொண்டுநிற்றல்போல, அம்மூன்றற்கும் பொதுவாகிய அத்து விதநிலையனுய் நிற்றலால் எல்லாப்பொருளும் (தைவமே) அவன் வடிவே யாயினும், அவற்றுள்ளும் அன்புவிளையுமிடம் திரு வேடமுஞ் சிவாலயமுமேயாதலால் இவ்விடங்களில் வழிபடுவா யாக என்பதாம்.

பசுவின்பால் உடலெங்குமுளதாயினும் மூலையிலேயே விம் மிவெளிவருதல்போல, முதல்வன்எங்குமுளனாயினும் திருக்கோ யிலில் திருமேனியில் வெளிநின்றருளுவன். அவ்விடத்திற்ருன் அடிப்பட்டுவரும் அன்பு விளையும். ஆதலால் அங்குச் செய்யும் வழிபாடுதான் அத்துவித ஞானத்தைநிலைபெறுத்தும்பயனுடைய தென்னுங்கருத்தால், "அத்துவிதமாதலால் அகண்டமூந் தைவ மே" என்று அறுவதித்து அத்துவிதனியம்பிற்றொழுவென்ருர் அத்துவிதினென்று அண்மையின் விளித்த உரிமை அத்துவிதசித் தாந்தமாகிய பயனுடையானேனென்னுங்குறிப்புப்பெயராய் முன் வழிபடுகளென்ற விதிக்கு அனுபவம்நிலைபெறுதலாகிய பயன் கூறி யவாறு மாயிற்று.

பிரபஞ்சம் அசத்தெனக் கண்டு நீங்கினஉடனே ஞானமுள தாய் அத்துவிதனுபவமுணர்த்துமாதலால், அதனைநிலைபெறுத்த

ற்குவழிபாடு வேறுவிதித்தல் எதற்கென்பாரைநோக்கி, அதனை வலியுறுத்தும் உதாரணம்.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றொழு.

இ—ள். உடலைப்பற்றிய பிராரத்தவினையால் வரும்வாசனாபு யிரைத்தாக்குவதாயுள்ள வரையும் அதனுல்வரும் விருப்புவெறுப்பும் அவைபற்றிநேர்படும் பிருதுவியாதி தத்துவங்களும் அவைபற்றி நிகழும் விபரீத அறிவுமாகிய அசத்துக்கள் ஞானத்தால் நீங்கினும் முற்கூறியவழிபாடில்லையேற் பின்னும்வந்துகூடிமேம்படுமாதலால், அவைக்கெல்லாமூலமாகிய பிராரத்தவாசனை பற்றறக்கழிந்தாலன்றி அவற்றைக் கீழ்ப்படுத்து மெய்புணர்வுமேம்படாது. அவ்வாசனைபற்றறநீங்குதற்கு மெய்ஞ்ஞானிகளை நாடி வழிபடின் அவ்வினைநீங்கி மெய்புணர்வுமேம்படும். ஆதலால் அவரைஅன்பினுல் வழிபாடு செய்வாயாக என்பதாம்.

அசத்துநீங்கியபின் உளதாகிய மெய்ஞ்ஞானம் அவ்வசத்து வினைதற்குமூலமாகிய பிராரத்த வினைநீங்கினற்றன் நிலைபெறுமாதலால், அவ்வேவரை முற்றுங்கழிந்து அம்மெய்யறிவைநிலை பெறுத்தற்குநில பெறுத்தினரை வழிபடுதல் அவசியமே என்பதாம். ஆனல்அதற்குவிதிப்படிபஞ்சாக்ஷரம்செபிக்கவென்றதே போதுமெனில்? அது சரி அதற்கும் பிராரத்தவினைதாக்காதிருத்தல்வேண்டுமாதலால் அதன்பொருட்டு அச்செபமும் இவ்வழிபாட்டையின்றி அமையாதென்க. இது பற்றியேமுன் (சுகம்சூத்திரத்தில்) பஞ்சாக்ஷரசெபங்கூறியமட்டிலமையாமல், "அஞ்செழுத்தாலுள்ள மலனுடைமை" "என்றும், "மண்முதல் நாளம்" என்றும் அகத்துவழிபாடும் உடன்கூறியதென்க.

இவ்வழிபாடு அனுபவஞானம் நிலைபெறும் பயன்குறித்துச் செய்வதாதலால் சுவர்க்காதிபயன் குறித்தயாகாதிகள், அப்பயனில் விருப்பின்மையினுலாவது பின்புசெய்வோமென்னும் பா

முகத்தினாலாவது ஒருசமயம் செய்யாதொழிதல்போல, இவ் வழிபாடும் ஒருசமயம் செய்யாதொழிதலுங்கூடுமோ? வென்பா ரைநோக்கிச், செய்யாவிடில் குற்றமாமென்பதும் தவறாது நியம மாகச்செய்யவேண்டுமென்பதும் உணர்த்திமேல்விதித்ததைவலி யுறுத்தும் உதாரணம்.

தன்னை யறிவித்துத் தான்முனைச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னுச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.

இ—ள். முதல்வன் தன்னுண்மை யறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்கு இரங்கிக்குருவாகிவந்து சாதன வகைகளாற் பலவழியானும் அவ்வுண்மைதெளியவிளக்கி, எவ்வளவினும்எளி யஅவ்வுயிரை எவ்வளவினும் அரியதானுகும்படிசெய்து காத்தரு ளிய பெரியதோ ருதவியை,அதன்பின் மறந்தால்அக்குற்றம்முன் அறியாக்காலத்துமறந்தகுற்றம்போலத்தீர்வுடையதன்றுகலாலும், முதல்வன் அவ்வுயிரைஇப்போது தானுகும்படிசெய்யினும், இது வரை சுதந்தரமின்றி முதல்வனுதவியை யின்றியமையாது அடி மையாகிய அவ்வுயிர் அப்படியே எப்போதும் அடிமையேயாத லானும், அவ்வாறுதான்முனைச்செய்து காத்தருளிய அப்பெரி யோனை என்றும் வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலியென்பதாம்.

முதல்வனே குருவாதலால் "தானுகச்செய்தானை"என்றும், முன்மறந்த குற்றம் அறியாமையாற் செய்ததால் நீக்கப்படும் அறிவிக்க அறிந்தபின்செய்யுமிது நீக்கப்படா தாதலால், "பின் னைமறத்தல் பிழை" என்றுங்கூறினர். இதனை,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. "என்றதனுலுந்தெளிக.

தான்முனைச்செய்தலாவது, எதனைஎதனைப்பற்றினும்அதுஅதுவா யழுந்துமுயிர்,சிவமாகியதன்னையறிந்தபின் தனதுளண்குணங்களைப் பெற்று வியாபித்துத் தன் வண்ணமாய் நிற்கச்செய்தலாம். அவ்வாறு செய்த பின்னும், "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றி னுக்கே யுரித்து" என்னுங் கருத்தால், "தைவமென்றுந் தைவ

மே'' என்றார். ''தான்தானைச்செய்தானை'' என்றதனுண்மைமேற் கூறியபடி, தான்—உயிரை, சிவமாகிய தானைச் செய்தானை என் பதே இந்நூலாசிரியர்கருத்தென்பதும், இந்நூல்—வேதசாரமாய்ப்பதி பசு பாசநித்தியமூதலியனவிளக்குஞ்சிவாகமங்களின்நிர்ணயார்த்தம் இதுவேயென்று ஆதிதொடுத்து முன்பின்மலிவின்றி வாதிகளே நியாயமுகமாகமறுத்து, உயிர்படிமுறையாகப்பரிபாகமுற்றுஅருளாற்சிவமாகி வாழ்தலே விதந்துகூறுங்கொள்கையினதே என்பதும் உற்றுநோக்கியுண்மைதெளியுமுரனில்லாதமாயாவாதிகள், தான்தானு'' என்றிதுபோன்றவாக்கியங்கண்டளவேயோசனையின்றித் தங்கள் பக்கத்தினைக்கொண்டுதானேதானுக (பிரமமேபிரமமாக)எனப்பொருள்கூறிமுருக்கங்கொப்பைப்பற்றினர்கதியையடைந்திடர்ப்படுவர்யாதொரு குறையுமின்றி இயற்கையாகவே எல்லாநிறைந்தென்றுமுள்ளபிரமம் இனிச் செயற்கையாற் பிரமமாகவேண்டியதில்லை. பிர்மத்தைப் பிரமமாகச்செய்தான் எனில்பிரமம் உள்ளபடிபிரமந்தானே அதனைபிரமமாகச்செய்தானென்பதுபயித்தியமன்றி? வேறுருமா இது அன்றியும் சிறுவர்க்கும்நகையினைப்பதேயாம். அன்றியும் அவ்வாறு செய்ய அப்பிரமத்தின்மேம்பட்டஒருபுருடன் வேண்டும் அவனைத் தேடிபிடித்தலெப்படி பிடிக்கினும் பிரமம் அவனிற்றழ்ந்ததென்றும் விளக்கின் அத்தனையும் பழுதேயாம் இவையொன்றும்நோக்காமல் மேனுமவர்கள்,பிரமம்அஞ்ஞானத்தால் (அவிச்சையால்)சீவனுகிச் சரீராதிகளிற்புகுந்து பந்தப்பட்டுஅவிச்சைநீங்கியபோதுள்ளபடிபிரம மாகியதென்று முன் சொன்ன ஒருபொய்யைப் பின்னும் பற்பலபொய்கள் சொல்லி ஒட்டிவைப்பார்கள். வைப்பினும் பொய்பொய்யேயன்றி மெய்யாவதில்லை, பிரமம்எப்போதும் மெஞ்ஞானசொரூபவியல்பினதே அஞ்ஞானத்தாற் சீவனுதல் எக்காலத்துமில்லை.இதனை,மனம்நடுங்காதுவாய்நடுங்காதுகூறத்துணிந்தஅவர்கள் இனிஎந்தப்பாதகத்துக்குநடுங்கிவிலகுவார்கள். அஞ்ஞானத்தால் வினைகளைச்செய்து அவ்வினைப்போகங்களை அனுபவிக்கின்ற சீவனுமில்லை உயிர்க்கேயாம். அச்சீவனையே பிரமமென்றுகொண்டு அம்மட்டினிற்கின்ற அவர்கள் சீவப்பிரமவாதிகளேயாதினை, ''காதலினுல்ஞான்பிரமமென்னுஞானங்கருதுபசுஞானம்'' என்றநிந்தாந்தகருநிமுதலியவற்றுற்காண்க.

இவ்வுதாரணங்கள் மூன்றுலும் சிவலிங்கம் சிவபத்தர்சிவதே சிகர்களை வழிபாடுசெய்யவேண்டியது அவசியமென்றுகூறி அவ் வழிபாடுஞ் சிவாலயம் திருவேடமுதலிய இடங்களிற்றான்செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியவாறுயிற்று. விபூதிருத்திராக்ஷாதி சிவவேடம் சிவதீக்ஷை சிவபூஜைமுதலிய சிவசமஸ்காரங்களின்றி உலகரை மோகிக்கச்செய்கின்ற அற்பவசிய முதலியனமேற் கொண்டு யோகிஞானியென்றுமாந்துதிரிகின்ற வஞ்சகர்களை மேற்கூறியசிவசமஸ்காரம் பெற்றவர்களிலு மிகவிசேடமுடைய ரெனநம்பித் தம்பொருளைப்பாழாக்கிறைக்கின்ற சிலர் மேற்கூறிய திருவேடமுதலிய இடவிசேடங்கண்டே உள்ளபடிநம்பிவழிபாடு செய்துய்வாராக.

மேற்கூறிப்போந்தவாறு சிவாகமத்துள்ள சரியைகிரியா யோகம் ஞானம் நான்கனுள்ஞானபாதப்பொருள் எல்லாவற்றை யும்தொகுத்துப் பொது உண்மை எனவகுத்துப்பிரமாணம் இல க்கணம் சாதனம் பயன்என விரித்தோதித்துமிச் சிவஞானபோத த்தைப்போதித்தற்குரிய சற்குரு முகமாகச் சிவதீக்ஷாதிபக்கு வம்வாய்ந்து கேட்டுத்தெளிதற்குரிய அதிகாரிகள் இத்தன்மை யினரென்பதை விளக்குந்திருவெண்பா.

சிவமென்னு மந்தரச சிந்தைநேர் நோக்கப்
பவமின்றுங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்றுமிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூல் மும்மை மலர்க்கு

இ—ள். தான் ருஞ்செய்யப்பெற்றதனாற் சிவனென்னுந் தன் மையற்றுச் சிவமாந்தன்மைப்பெருவாழ்வுபெற்று வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தமுற்றுள்ள மாணவகனே? ஒருமலத்தரா கிய விஞ்ஞானகலர்க்கு அவர் அறிவினின்று அருட்பார்வையால் நோக்குதலாலும். இருமலத்தராகிய பிரளயாகலர்க்குத்தவகுரு வாய்முன்னின்றுசெய்யுந் (திருநோக்கம்) சட்சுதீக்ஷை பரிச தீக்ஷை வாசகதீக்ஷைகளாலும் சீவத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்குமாதலால், இந்நூல் அவ்விருதிறத்தார்க்கு வந்ததன்று

அவரின்வேறுய் மும்மலத்தராகிய சகலர்க்கே இவ்வுலகிலுள்ள ஜீவர்முடைய அசற்குருவரால் உபதேசிக்கத்தக்கதென்பதாம்.

அந்தம்—வேதாந்தம். அந்ததரம்—சித்தாந்தமாம். ஆதலால்அதனைப்பெற்றுரதுபெருமைவிளக்குவாராய்ச் "சிவமென்னுமந்ததர" என்றுர். இந்நூல்சிவாதுபவம்சுவாநுபூதியாகப்பெற்ற சிவாசாரியனலன்றி விளங்காதென்னுங் கருத்தால் "ஒண்குருவால்" என்றுர்.

இச்சூத்திரம், முன்கூறியபடி அபராஅன்பினுல் அரன்கழலடைந்த சீவன்முத்தருடைய அறிவுஇச்சைசெயல்கள்ஒருவாறு புறஞ்செல்லுமேல், அயர்த்தலே (மறத்தலே)ச்செய்து அரன்கழல் செல்லவொட்டாத மலங்களைப் பற்றற நீக்கி, அவ்வாறுநீக்கிய அன்பருடன்இணங்கி அவரதுதிருவேடத்தையும் சிவாலயத்தையுஞ் சிவனெனவே வழிபடுதலேச்செய்யின், அம்மலநீக்கத்தில் அறிவும் இணங்குதலில் இச்சையும், வழிபடுதலிற்செயலும் செல்லுமாதலால் அம்மூன்றும் புறஞ்செல்லாமல் அவ்வழியில்நிற்குமென்பதும், (க) அம்மூன்றில்முன்னர்ச்செய்யவேண்டியது மலங்களேதலே என்பதும், (உ) அது நிலைபெறுதற்கு அதன்பின்னர்ச் சிவபத்தருடன்இணங்க வேண்டுமென்பதும், (ங) அவ்வினக்கம் நிலைபெறுதற்கு அதன்பின்னர்த்திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் வழிபடவேண்டுமென்பதும் (ஒழிபு)இம்மூன்றுஞ் சீவன்முத்தர்க்கியல்பாதலால் அதனை இங்கு விதியாகக்கூறியது எதற்சென்பாரை நோக்கி, முதல்வன் "ஒன்றும்நீயல்லை அன்றிஒன்றில்லை" என்றபடிகலப்பினுல் எல்லாமாயும் பொருட்டன்மையால் வேருயும் நிற்பவனுதலால்,சீவன்முத்தர்எல்லாஞ்சிவமாய்க்கண்டு அம்மட்டில் அகத்தேசெய்யும்வழிபாடுதிருவேடத்துஞ்சிவாலயத்துஞ்செல்லாதாதலால் புறத்தும் இவ்விடங்களிற் செய்யவேண்டியது அவசியமென்பதும், முதல்வன் எங்கும் வியாபித்துநிற்பினும் அன்புவிளையுமிடங்களாகிய இவ்விரண்டிடத்தும் வழிபடவேண்டியது அவசியமே என்பதும், அசத்தைவிட்டுநீங்கின உடனேஞானம்கைவந்து அத்துவிதநிலையைவிளக்குமாதலால்மேலும் வழிபாடு விதிப்பானேன் என்பாரைநோக்கி, விளக்குமாயினும் அது நிலைபெறுதற்குவழிபாடு செய்யவேண்டுமென்பதும், செய்

யாவிடிற் செய்ந்நன்றிமறந்த பெருங்குற்ற மாதலால் அது நித்த நியமமாய்ச் செய்யவேண்டிய கடமையே யென்பதும், இந்நூல் கேட்டற்கு அதிகாரிகள் சகலவர்க்கத்துச் சிவர்களே என்பதும், இந்நூற்பொருளே உபதேசிக்குந்தகுதியுடைய தேசிகர் சிவாநுபவமுள்ளவர்களே என்பதும் விளக்கியவாறு காண்க.

இந்நூலாசிரியர் பெயர்ச்சிறப்புணர்த்தும் பாயிரம்

எந்தை சனற்குமர னேத்தித் தொழுவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் ருரணியோர் தாமுணர
வேதிருட்டாந்தத்தா லின்று.

இ—ள். எந்தையாகிய சனற்குமரமுனிவர் முதலியர் துதித்து வணங்க ஸ்ரீகண்டதேவர்பாற்கேட்டருளிய நந்திபெருமான், தான் கேட்டமுறையே அவர்க்குஉபதேசித்தருளிய சிவஞான போத மாகிய வடநூலை, ஸ்ரீமெய்கண்டதேவர் தாம்தமதாசிரிய ராகிய பரஞ்சோதிமுனிவர் பாற்கேட்டமுறையே சிந்தித்துத் தமிழுலகர் அறிந்துய்தற்பொருட்டு மேற்கோள் ஏதுஉதாரணங்களுடன் இக்காலத்துமொழிபெயர்த்துஅதற்கு வார்த்திகப்பொழிப் புரையுஞ்செய்தருளினரென்பதாம்.

வேதவே தாந்தம் வாழி விமலசித் தாந்தம் வாழி
மேதகு வாய்மை தேற்று மெய்கண்ட நூல்கள் வாழி
பூதிகண் மணிமுற் சைவ புனிதசா தனங்கள் வாழி
போதசற் குருசந் தானம் பூரிதருத் தொண்டர் வாழி

சிவஞானபோதார்த்தலெகுவசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

	நூற்பெயர்	செய்யுள்
க	வன்றொண்டருலாத்திரட்டு	உ0
உ	நாவலருருவணக்கம்	க0
ங	மெய்யப்பசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி	க00
ச	கற்பகவிநாயகர்பஞ்சகம்	உ0
ஞ	மருதீசர்பதிகம்	க0
ட	வாடாமலர்மங்கைபதிகம்	க0
ண	ஆதிசிதம்பரேசர் பதிகம்	கஎ
அ	சிவகாமியம்மை பதிகம்	கஎ
கூ	திருத்தொண்டர்பதிகம்	கக
கஎ	யெளவனும்பாபதிகம்	கஎ
கக	திருவீங்கோய்நாதர் பதிகம்	கக
கஉ	தில்லைவளாகநடேசர்பதிகம்	கஎ
கங	வளைகுளம் திருநாகேசுரர் பதிகம்	கஎ
கச	சுந்தரவிநாயகர் பதிகம்	கக
கஞ	காரைமீனும்பிகைபதிகம்	கக
கட	திருவுசாத்தானசூதவனபுராணம்	கஞஉ
கண	திருப்புத்தூர்ப்புராணம்	கங_உ
கஅ	பெருந்தோட்டத்து அத்தீச்சுரபுராணம்	எகக
ககூ	சித்தவடமான்மியம்	ங_அ
உ0	திருக்கழுக்குன்றமகிமாசங்கிரகம்	உ0
உக	குன்றைச்சிலேடைவெண்பா	க00
உஉ	காழிச்சிலேடைவெண்பா	க00
உங	தில்லைச்சிலேடைவெண்பா	க00
உச	சம்பந்தமூர்த்திசுவாமிகள்போற்றிக்கலிவெண்பா	சூஉச
உஞ	பசுவந்தணை வெண்பாவந்தாதி	ச00
உட	கற்பகவிநாயகர்பதிற்றுப்பத்தந்தாதி	க00
உண	திருவாரூர்த்திரிபுஅந்தாதி	க00
உஅ	திருவாலவாயமகவந்தாதி	க00
உகூ	சம்பந்தமூர்த்திசுவாமிகள் பிள்ளைத்தமிழ்	கசஉ
ங0	தில்லைசிவகாமியம்மைபிள்ளைத்தமிழ்	ககஎ
ஙக	மயின்மலைச்சந்தவிருத்தம்	ங_எ
ஙஉ	சம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவூசல்	கங_
ஙங	காரைமீனுட்சிசுந்தரேசர்திருவூசல்	கஎ
ஙச	பசுவந்தணைத்திருவூசல்	கக
ஙஞ	சோமசுந்தரமாலை	கஎக
ஙட	சவுந்தரேசதயாநிதிமாலை	க00
ஙண	வடிவழகிரவமணிமாலை	சூ

ஈஅ	வீரசேகரமாமணிமாலை	ஈ0க
ஈக	குமரநாயகமாலை	ஈ0
சஅ	மதுரைசித்திவிநாயகர் திருவிரட்டைமணிமாலை	உ0
சக	சாக்கை திருவிரட்டைமணிமாலை	உ0
சஉ	முத்தலநாயகமும்மணிக்கோவை	ஈ0
சஈ	சபாபதிதுவாதசமஞ்சரி	கஉ
சச	வீரவனதுவாதசமஞ்சரி	கஉ
சடு	வேதவனேசஸ்தவம்	ககக
சசு	யௌவனேசநமகம்	க0அ
சள	தில்லைநடேசசிவாஷ்டகம்	அ
சஅ	பெரியபுராணபிரசங்கவைபம்	ச0
சக	சிவபக்த நாமாவளிக்கண்ணி	ஈசள

ஆக செய்யுள்—எ தூாகூஉ

வசனநூல்கள்

		பக்கம்
நுஅ	உண்மைநாயன்மார்மகிமை	
நுக	சிவசுந்தரசாயாரூபசிவமகிமாசங்கிரகம்	நுச
நுஉ	ஆதிசைவகுலமான்மியம்	
நுஈ	மகுடதனவைசிய மரபுவிளக்கம்	
நுச	மாயாவாதக்கோண்மறுப்பு	
நுடு	வேதாந்தம்	
நுசு	உபதேசசத்திரையம்	
நுள	தூர்வையாசகப்படலம்	
நுஅ	உபதேசப்படலம்	
நுக	தில்லைவளாகஆதிசிதம்பரமான்மியம்	
சு0	திருநாவுக்கரசசிவசரித்திரத்தெளிவு	
சுக	பெய்கண்டசிவசரித்திரம்	
சுஉ	வேதாந்தத்தெளிவு	
சுஈ	சிவஞானபோதார்த்தலெகுவசனம்.	

78520